நோயாளியை விசாரிக்கும்போது உணவுக்கு ஒரு மணிக்குள் இருப்பதாக தெரிந்தால் அப்பொழுது வலி, இரைப்பையில் உணவு தங்குவதால் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணலாம். இதற்கு வாந்தி செய்துவிட முயலுவது தக்க சிகிச்சை. இதற்காக உப்பைத் தண்ணீரில் கலந்து கொடுத்தும் மயில் இறகும் பச்சை தண்ணீர் வரும் வரையில் கரைத்து வயிறு கொள்ளும் மட்டும் குடிக்கச் செய்து தானே வாந்தி வருவது அல்லது விரலை விட்டாகிலும் வாந்தி எடுக்க வைத்தால் வயிறு சுத்தமாகி வலியும் நின்று விடும். இதற்குப் பொடி யிப்பது வெள்ளை சோடா (Sodii bi carb) ஒரு விசம் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். வலி அதிகமிருந்தால் ஒரு தோல வேளை அபின் கொடுத்தால் வலி நின்று விடும். இரண்டு மூன்று நாட்களுக்கு உணவை நிறுத்திப் பால், கஞ்சி முதலியவை கொடுக்க வேண்டும்.

.11 இரைப்புண்ணும் குடல்புண்ணும் 269

(1.) வயிற்றில் எரிச்சலோடு வலி முதுகு பக்கமும் பாயும்

(2.) வலி அதிகமாகி வாந்தியெடுத்துச் சற்றுக் குறையும்

(3.) சமிக்கக் கடினமாக இருக்கும். உணவை உட்கொண்டால் வலி அதிகரிக்கும். லேசான கஞ்சி, பால் முதலிய உணவினால் வலி குறையும்.

(4.) உணவு இரைப்பையில் சென்றவுடன் வலி உண்டானால் புண் இரைப்பையில் இருக்கும்

(5) உணவருந்திய பிறகு மூன்று நான்கு மணி நேரம் கழித்து வலி வருமானால் புண் சிறுகுடலில் இருக்கும்

(6.) இந்த வலி பல நாட்களும், மாதங்களும் விட்டுவிட்டு இருக்கும்.

பித்தப்பையில் கற்களினால் உண்டாகும் வலி 270

குறிகள்:— (1) திடீரென வலியும், வாந்தியால் குறையும்

(2) வலி வருமுன் உடல் குளிர்ப்பும் நடுக்கமும்

(3) வேர்வை, முகவெளுப்பு, குமட்டல், வாந்தி, (4) மலச்சிக்கல்

சில சமயங்களில் வலி திடீரென நின்று விடும். மற்றும் சில சமயங்களில் அடுத்து அடுத்து நின்று திரும்பவும் வரும்.

வலது விலாப் புறத்திலும், வலது மார்புக் கூட்டு ஓரமாகவும் பொறுக்க முடியாத வலியாக இருக்கும். இது கற்கள் பித்தப்பையில் உண்டாகி, பித்தக்குழாய் வழியாகச் சிறுகுடலுக்கு வரும் பொழுது வலி உண்டாகிறது. ஒரு சமயத்தில் பித்தப் பையில் மிளகுப் பருமனுள்ள நூறு கற்களுக்கு மேலாக இருக்கும். அடிக்கடி வலி வரும் பொழுது ஒவ்வொன்றாகப் பித்தக் குழாயின் வழியாகக் குடலுக்கு இறங்கும். நடுவில் ஒன்று சிக்கிக் கொண்டால் வலி விடாமல் பல நாட்களுக்கு இருக்கும்.

12 270 சிறுநீர்ப் பிண்டிக் கல் வலி Renal Colic

இந்த வலி மிகவும் கடுமையானது. சிறு கற்கள் சிறுநீர்ப் பிண்டியில் உண்டாகி அங்கிருந்து சிறுநீர்க்குழாய்களின் வழியாக வரும் பொழுது குழாய் அடைத்துக் கொண்டு வலி எடுக்கிறது. வண்டி, ரயில் இவைகளில் போகும் பொழுது குதிரைச் சவாரி செய்யும் பொழுதும் ஏற்படலாம்.

குறிகள்:— (1) விலாப்புறங்களிலும், அடி வயிறு, அரை, தொடை இவைகளிலும் கத்தியால் குத்துவது போல் வலி எடுக்கும்.

(2) வலி பொறுக்க முடியாமல் நோயாளி முழங்கால் மண்டி போட்டு முழங்கைகளைத் தாங்கி இருப்பான். இருகைகள் வயிற்றை ~~கைகள்~~ சேர்த்து அழுத்த வலி பொறுக்கக் கூடியதாக இருக்கும்.

(3) அடிக்கடி நீர் இறங்க வேண்டும் போலக் கடுப்பு எடுக்கும்.

(4) நீர் சொட்டுச் சொட்டாக விழும். சில சமயங்களில் இரத்தம் கலந்தும் இருக்கும். கல் மூத்திரப் பைக்கு இறங்கி விட்டால் வலி நின்று போகும்.

13 271 குடல் வால் வலி (Appendicular Colic)

குடல் வால் அழற்சியில் வலி ஏற்படுகிறது. குடல் வாலின் துவாரம் அடைபட்டு அதற்குள் இருக்கும் மலம் வெளிவர முடியாமல் வலி உண்டாகிறது. அடிவயிற்றின் வலது பாகத்தில் தொப்புளுக்கும் இடை எலும்பின் முனைக்கும் மத்தியில் பொறுக்க முடியாத வலி இருக்கும். படுக்கையில் நோயாளி

இருமல் இருமுவதற்கு கூட முடியாத வலியால் உடல் அசையாமல் இருக்க வேண்டி வரும். வலது விலாப்புறத்திலும் 27

குறிகள்:- (1) பொறுக்க முடியாத வலி (2) வயிறு உப்புசம் வலிக்கும் (3) அடிவயிற்றில் வலது பக்கத்தில் கனம் (4) காய்ச்சல் (5) மலச்சிக்கல் (6) வாந்தி (7) அபான வாயு வெளிவராமல் தடைப்படுதல்

14 ## குடல் அடைப்பு வலி 271

செரிக்கக் கூடாதவைத் தின்பதினாலாவது, குடல் ஒன்றுக்குள் ஒன்று செருகிக் கொள்வதாலாவது முறுக்கிக் கொண்டிருப்பதால் அடைபடுவதாலாவது, சதை வெளியாவ தெருக்கிடு வளர்ந்து மலம் போக வொட்டாமல் தடுப்பதாலாவது மலம் கீழே செல்லாமல் அடைபட்டால் வலி உண்டாகும்.

(1) வலி அதிகமாகவும், பொறுக்க முடியாமலும் நோயாளி உடலை மடக்கிக் கொண்டும் இருப்பான்.

(2) வலி விடாமல் இருக்கும். வயிறு முழுவதும் இருக்கும்

(3) முதலில் விட்டு வலி போல ஆரம்பித்துப் பின்பு விடாது விட்டு வலிக்கும்

(4) முதலில் ஆகாரம் மட்டும் வாந்தி எடுக்கும். பிறகு தான் குடித்த நீரும் மலமும் வாந்தியாகும்.

(5) அபான வாயு வெளிப்படாமல் அடைப்பட்டு, வயிறு உப்புசமாகி, கர்ப்பிணைத்த பை போலக் காணப்படும்

(6) பூரண மல அடைப்பு

(7) நோயாளி களைத்து, கவிழ்ந்து, வெளுத்து வேர்த்து விடுவான்

சிகிச்சைகள்

குடல் வலிக்குவலி:- சிகிச்சை:- திடீரென வரும் இந்த வலி கண்டவுடன் இரைப்பையைக் காலி செய்ய வேண்டும் உப்புத் தண்ணீரில் ஆகிகம் கரைத்து வயிறு நிறையும்

கீரையும் வரையில் ஊற்றக் கைத்துப் புறட்டாமல் போரால் வாந்தி எடுக்கத் தொண்டைக்குள் விட்டோ வாந்தி எடுக்கும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்வதில் வாந்தி ஆகாவிட்டால் மயில் இறகு அல்லது துணியைத் தண்ணீரைக் கொடுத்து வெளியாக்க வேண்டும் இன்றும் தெரியாவிட்டால் ரப்பர்க் குழாய் மூலம் இரைப் பையைக் கழுவி விட வேண்டும்.

இவர் கழிவுகள் மலத்தை வெளியாக்க வேண்டும். ஒரு தடவையில் அடக்கப்படாவிட்டால் இரண்டு அல்லது மூன்று தடவை வேண்டுமானாலும் இவர் கழுவியை உபயோகிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு தெல்லை உள்ள அபின் வலி அதிகமாக இருந்தால் கொடுக்கலாம். அல்லது மார்பிய Morphia ஊசியில் ஏற்றிக் கொடுக்கலாம். வயிற்றின் மேல் ஊமத்தை இலையையும் அபினையும் கலந்து பசை போலச் செய்து பற்றுப் போட்டால் வலி குறையும். கலோரியல், சோடா இரண்டும் கலந்து கலந்து பொட்டலம் செய்து கொடுத்தால் வயிற்றுப் புளிப்பையும் உப்புசத்தையும் குறைக்கும். ஒரு தேக்கரண்டி பிரான்டி கொடுக்க வேண்டும். தூக்கத்துக்குப் பொட்டாசியம் புரோமைட் (Pottasium Bromide) மூன்று தெல்லை முதல் நான்கு மணிக்கு ஒருதரம் கொடுத்தால் வலி குறையும். பாலில் சுண்ணாம்புத் தண்ணீர் Lime water கலந்து கொடுக்க வேண்டும். தேகத்துக்கு சத்துள்ள கஞ்சியைக் கொடுக்க வேண்டும். தேயிலை கொசுப்பூச்சி காக்கைப் பூச்சி முதலியவைகளுக்கு ஸாண்டோநயின் (Satonine) ஒரு கிரெய்ன் முதல் மூன்று கிரெய்ன் வரையில் வயதிற்கு தக்கபடி போல இரவில் படுக்கப் போகும் சமயத்தில் சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுத்து விட்டு மறுநாள் காலையில் சாராயம்

அக பேதிக்குக் கொடுக்க வேண்டும். பேதி உப்பு (Magnesium Sulphate) கொடுத்தால் போதுமானது. ஆகாரத்தின் பக்குவம் கவனமாக இருக்க வேண்டும் மேலும் கஞ்சியும் சில நாட்களுக்குக் கொடுத்து வர வேண்டும்.

[illegible] அஜீரணத்தினால் வயிற்றில் வலி ஏற்படும். தாய்ப்பாலின் ஜாதம் மாறிவிட்டாலும் அல்லது பசுவின் பாலினாலும் ஏற்படலாம். ஈரக்களிமண்ணைப் பசைப்போலச் செய்து லேசாக வயிற்றின் மேல் போட வேண்டும். சிறுமணக்கெண்ணெயைக் குழந்தையின் வயிற்றின் மேல் தடவினால் மலச்சிக்கல் நீங்கி வலியைக் குறைக்கும்.

சோடா மூன்று கிரெய்ன் விதம் ஒரு வயதுக் குழந்தைக்கு ஒருவேளைக்கு நான்கு வேளை கொடுக்க வேண்டும். பால் கொடுக்கும் தாய்க்கு உணவை மாற்றி, லேசான ஆகாரம் கொடுக்க வேண்டும். வழக்கமாகக் கொடுத்து வரும் மாட்டுப்பாலையும் மாற்றி வேறு மாட்டுப்பாலையும் கொடுக்க வேண்டும்.

சிகிச்சை முறை மயில் துத்தம் 5-10 கிரெய்ன், நான்கு அவுன்ஸ் தண்ணீர் சேர்த்து கொடுத்து வாந்தி எடுக்கச் செய்யப் பிறகு வெதும் தண்ணீரும் வயிறு நிறையக் கொடுக்க வேண்டும் அப்பொழுது தான் வாந்தி நன்றாக வரும். வயிறு குடல் எல்லாம் சுத்தம் செய்து வலி நிற்காவிட்டால் அபின் ஒரு கிரெய்னை கொடுக்கலாம்

கலோமெல் 1/4 கிரெய்ன் சோடா 30 கிரெய்ன் ஒரு பொட்டலம். நான்கு மணிக்கொருமுறை பொட்டலம் வகையில் ஒருவேளை கொடுக்கலாம்

நுண்ணங்களை அழிப்பதற்கு ஒதமல் 1/4 கிரெய்ன், கிரியசோட் ஒரு சொட்டு, உள்ளிப்பூண்டு ரசம் 30 சொட்டு மூன்றும் தனித்தனியாகவோ அல்லது சேர்த்தோ, சோடா உப்புடனும் கொடுக்கலாம். பொட்டாசியம் புரோமைட் (Potassium Bromide

30

14 15-30 வரையில் ஒரு நாளைக்கு மூன்று வேளை.

273. மலச்சிக்கல் (Constipation)

இது ஒரு நோய் என்பதாகக் கருத முடியாது. என்றும் சிலர்கள் மலபந்தத்தால் கஷ்டப்படுகிறார்கள். பலவிதக் காரணங்கள் காரணங்களால் மலச்சிக்கல் ஏற்படலாம். உணவு மலமாகிப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் வெளியாக வேண்டும். உணவிற்குத் தக்கபடி மலமும் இருக்க வேண்டும். தினசரி இரண்டு தரம் மலம் கழிய வேண்டும். ஒரு வேளைக்குக் குறையக் கூடாது. அப்படி இல்லாமல் இரண்டு மூன்று நாள் மலம் கழியாமல் நின்று விட்டால் அதை மலச்சிக்கல் என்பார்கள்.

வெளியாக வேண்டிய மலம் அதிக நேரம் பெருங்குடலில் தங்கி விட்டால் உடலில் சோர்வு கூடுதலையும், நோய் உண்டாவதையும் பலவுமான பலவித விஷங்கள் ரத்தத்தில் கலந்து விடுகின்றன. மேலும் மலம் பெருங்குடலில் தங்கி இறுகிக் கட்டியாகி விட்டால் வயிற்றில் கனம், அதிலிருந்து தலைவலி, தலைசுற்றல் இவை எல்லாம் ஏற்படுகின்றன. உடலைக் கெடுக்கக்கூடிய மலம் வெளியாகாமல் அதனால் உண்டாகும் கஷ்டத்தைக் கவனிக்கும் பொழுது மலச்சிக்கல் எவ்வளவு உபத்திரவத்தை உண்டு பண்ணுகிறது என்பது நன்கு விளங்கும்.

அநேகமாய் உணவுக் கோளாறினாலேயே இது ஏற்படுகிறது. சுலபமாய்ச் சமிக்கக் கூடியதும் மலம் அதிகம் இல்லாததுமான உணவை உட்கொள்ளுவது, தேவையான தண்ணீர் குடிக்காமல் இருப்பது, இம்மாதிரியான காரணங்களால் மலம் இறுகிக் குடல் வெளியே தள்ள முயன்றும் கூட வெளிவராமல் நின்று விடுகிறது. பெருங்குடலில் மலம் சேர்ந்து உலர்ந்து இறுகிப் பிடிப்பட்ட காலங்களில் அம்முடைய தன்மையையும் உருவத்தையும் கொண்டு வெளிவருகிறது. சேர்த்து வைக்கும் மலத்தை வெளியே தள்ளுவதற்கு

காமும் முயற்சி செய்வதோடு, பெருங்குடலின் தசைகளும் உள்ளிருந்து குடல் தொளையைச் சுருக்கி மலத்தை வெளிவரும்படி செய்கின்றன. குடல் தசைக்குப் பலவீனம் ஏற்பட்டால் மலத்தைத் தள்ளச் சக்தி குறைந்து விடுகிறது.

சிகிச்சை:- செய்வதற்கு முன்பு உணவையும், மலம் கழியும் விவரத்தையும் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும். மலம் கழியும் நேரம் குறிப்பிட்டக் காலத்தில் இருக்க வேண்டும். மலத்தை வெளிவராமல் அடக்கும் பழக்கம் கெடுதி விளைவிக்கும். வருத்தத்தினாலோ அல்லது வேலைத் தொல்லையாலோ, மற்ற எந்த காரணங்களைக் கொண்டும் மலம் போவதை அடக்கக் கூடாது. மலம் சரியானபடி கழிவதற்கு அதிகமாக இறுகாமல் இருக்க வேண்டும். மரக்கறி, கீரை, பழவகைகளை உணவில் சேர்த்தால் மலம் இறுகாமல் இருக்கும். சரியான அளவு தண்ணீரும் குடிக்க வேண்டும். ஒருநாளைக்கு இரண்டு படி தண்ணீராவது குடிக்க வேண்டும்

ஏற்படுகின்ற லக்ஷணங்கள்:- வாயில் அரோசகம், நாக்கில் அழுக்குப் படிதல், அஜீர்ணம், வயிற்று உப்புசம், மூச்சு அடைப்பு, சோகை, தலைவலி, முகத்தில் சுரப்பு, வாயில் புண், தூக்கமின்மை. இவைகளாம்

சிகிச்சை:- மருந்தை உட்கொண்டு மலச்சிக்கலை நீக்கலாம். ஆனால் எப்பொழுதும் மருந்துண்டு மலம் கழிக்கும் வழக்கம் ஏற்பட்டு விடும். இந்த வழக்கம் உண்டாவது விரும்பத்தக்கதல்ல. உடலுக்கும் நன்மை அல்ல. இதைக் காட்டிலும் குடல் கழுவியைக் கொண்டு தண்ணீர், அல்லது சோப்பும் தண்ணீரும் கலந்து, அதையாவது அல்லது உப்புத் தண்ணீரையாவது உபயோகப்படுத்தி மலத்தை வெளியாக்குவது இரேசக மருந்து உண்பதைக் காட்டிலும் மேலானது. மலம் இறுகிப் போவது வழக்கமாக இருந்தால் அதை இளக்கும் பொருட்டு இஸப்கோல் விதையும், வில்வப் பழமும், பேராம் பழமும் சாப்பிடுவது நல்லது

சிற்றாமணக்கெண்ணெயைத் தினந்தோறும் படுக்கப் போகும் போது, வெதுவெதுப்பான பாலில் விட்டுப் பிறகு பருக்க வேண்டும் அல்லது கடுக்காயும் இரைச்சி சாப்பிடலாம். எல்லாவற்றைக் காட்டிலும் வயிற்றைப் பிடித்து விடுவதும், வயிற்றுத் தசைகளுக்குப் பயிற்சி கொடுப்பதும் மேலானவை. உணவில் பழம், கீரை, மரக்கறி இவைகள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள(வேண்டும்) வத்தல், மாங்காய் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும். வாழைப்பழம், மாம்பழம் திராட்சைப்பழம், வில்வப்பழம், பப்பாளிப்பழம் இவைகள் மற்றப் பழங்களைக் காட்டிலும் மலச்சிக்கலுக்கு ஏற்றவை.

மருந்து முறை:- கடுக்காய் 3 அல்லது 4 படுக்கப் போகும் பொழுது, கவளமென் 1-3 கின்னை கொடுத்துப் பிறகு பேதி உப்பும் கொடுக்க வேண்டும். சிற்றாமணக்கெண்ணெய் ½ அவுன்ஸ் வரையில்.

அகட்டுப்பால்:- உணவு இரைப்பையைத் தாண்டிச் சிறுகுடலிற் செல்லும் போது அங்கே பித்த நீரும் (Bile) கணைய நீரும் Pancreatic Juice அதனுடன் சேர்ந்து பால்போலாகிறது. அதற்கு அகட்டுப்பால் Chyle என்று பெயர்.

15 பேதி - மல - இளக்கம் 275 தி

குறிப்பிட்ட நேரத்தை விடச் சீக்கிரமாக, உடம்பு திரும்ப மாறிமாறி வெளிப்பட்டால் பேதி அல்லது மல இளக்கம் என்று சொல்லுவார்கள். அநேகமாய் இது குடல் அழற்சியினால் உண்டாகிறது. ஜீரணமாகாத உணவு, அழுக்கியதால் உண்டாகும் சளி, ஊளை இவைகள் மலத்துடன் கழியும். ஜீரிக்க முடியாத உணவு குடலில் போகும் பொழுது அங்கு வேக்காடு உண்டு பண்ணிவிடுகிறது. தேவைக்கு மேல் மிக்கதாக அதிகம் உணவு உண்டாலும் பேதியாகலாம்.

உணவில் வந்து சேர்கின்ற பித்தநீர் அதிகமாக இருந்தால் அசட்டுப்பாகு chyle அதிகக் காரமாகி (Hyperacidity) வரும் அல்லது மிகக் குறைவாக இருந்தால் அசட்டுப்பாகு (Hyperalkali-nity) அதிகக் காடியாய் வரும். அல்லது மிகக் குறைவாக இருந்தால் பித்தம் Bile அதிகமாக இருந்தால் மலம் மஞ்சள் அல்லது பச்சையாக இருக்கும். பித்தநீர் எப்பொழுதும் காரத்தையும் உள்ளது அப்படி அதிகமான பித்தநீர் எல்லாவற்றிலும் உடலின் காரம் அதிகப்பட்டுக் குடலின் அழற்சி ஏற்பட்டுப் பேதியாகிறது. மலத்தில் சிவப்பு (Red litmus) கொஞ்சமாகக் கரைத்து நீலமாகும் பொழுது அது நீலமாக மாறினால் காரம் (Alkali) அதிகம் என்றும் [illegible] நீலத்தை (Blue litmus) சிவப்பாக மாறினால் காடி (Acid) அதிகம் என்றும் முடிவு செய்யலாம் மருத்துவமுறை இன்னதென்று முடிவு செய்வதற்கு இந்தப் பரிசோதனை செய்வது அவசியம். பித்தம் குறைவாக இருந்தால் அதற்குக் காரமும் மருந்தாகக் கொடுக்க வேண்டும். பித்தம் அதிகமானால் அதற்குக் காடியும் கொடுக்க வேண்டும். நெடுநேரம் மலம் குடலில் தங்கினால் அது இறுகிக் கடினமாகி விடும். இறுகின மலம் குடலில் செல்லும் பொழுது சளி ஜவ்வில் உராய்ந்து அழற்சி உண்டுபண்ணுவதோடு அது நாளங்களை அடைக்கச் செய்து அதனின்று நச்சு அறிகுறிகளும் பல வித்தியாசங்களை உண்டுபண்ணுகிறது. உணவில் உ.க்கள் உட்கார்வதனால் தொந்தி உண்டாகி உட்சென்று உபத்திரவத்தைச் செய்கிறது. சமவெளிகளில் வசிப்பவர்கள் மலைகளுக்குச் சென்றால் அஜீரணமும் ஏற்பட்டுப் பேதி ஆரம்பிக்கும். பேதிக்குமுன்பு பசியின்மை, வாந்தி, வயிற்று உப்புசம் இவைகள் இருக்கும். மலம் பச்சை நிறமாக இருக்கும். உணவில் கொழுப்பு அதிகம் இருந்தால்

மலம் வழுவழுப்பாகவும் வெள்ளையாகவும் இருக்கும்
இந்த பேதிக்குப் பட்டினி போடுவது நல்ல மருத்துவ முறை
இல்லையானால் பேதி நிற்கப்பட்டால் காய்ச்சல் அதிகம் இருக்கு
பலவீனம் சீக்கிரம் ஏற்படும். இதற்குப் பட்டினி போடுவதால்
பயன் இராது வயிற்றில் வலி இருக்கும். இரண்டு தரம் மேல்
இருபது தடவை வரையில் பேதியாகக் கூடும். அப்பொழுது உடனீர்
அதிகம் வெளியாகி, ரத்தம் கெட்டு, அடக்க முடியாத தாகம், இழுப்
பு (Cramps) முதலியவை ஏற்படும்.

சிகிச்சை:- முதல் உணவை கவனிக்க வேண்டும். முற்றும் உணவை
நிறுத்தி தாகத்திற்கு மட்டும் தண்ணீர் கொதித்துக் கொண்டு குளிர்ந்த நீர்
கொடுக்க வேண்டும். வயிற்றுப் போக்கு அதிகம் இல்லாவிட்டால் லேசான
உணவு, கஞ்சி, மோர், பழரசம், இளநீர் முதலியவைக் கஞ்சி, பார்லித் தண்
ணீர், பால் நீக்கிய தண்ணீர் இவைகளைக் கொடுக்க வேண்டும். குடலில்
சேர்ந்திருக்கும் மலம், கிருமிகள், முதலியவற்றை வெளிப்படுத்த வேண்டும்
கலோமெல், கடுக்காய் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். மேலும்
குடலைக் கழுவுவதற்குக் கிருமி நாசினி உபயோகப் படுத்த வேண்டும்
மலத்தில் ரத்தம் அதிகமாக இருந்தால் எமெடின் ஊசி மூலம் கொடுக்க
வேண்டும். மலத்தில் பித்தம் குறைவாக இருந்து, மலம் நாற்றமாக
இருந்தால் அப்பச் சோடா, சுண்ணாம்புத் தண்ணீர் போன்ற காரம்
(Alkalies) கொடுக்க வேண்டும்.

கலோமெல் வயிற்றுப் போக்கிற்கு உயர்ந்த மருந்து. குடலில்
நோய்க் கிருமிகளைக் (Bacteria) கொல்வதற்கும், சுத்தப் படுத்துவதற்கும்
நல்லது. 1/4 கிரெய்ன் அரைமணிக்கு ஒருதரம், நாள் ஒன்றுக்கு
எட்டு அல்லது பன்னிரண்டு தடவை கொடுக்க வேண்டும். குறைந்த
அளவில் கொடுக்க வேண்டும் நோய் உண்டாவதில் கலோமெல்

கலோமெல் போன்ற மருந்து இல்லை என்று சொல்லலாம். சில சமயத்தில் மேற் கூறிய வாறு நோயிருந்தால் வாந்திபேதி (Cholera) காலராவைக் கூடக் குறிக்க கூடும். இந் நோய்க்கு உபயோகிப்பதற்கு பிஸ்மத் (Bismuth) சிறந்ததாகும். மலம் துர்நாற்றம் அதிகமாக இருந்தால், அதற்குப் பிஸ்மத் ஸாலிஸிலேட் (Bismuth Salicylate) கொடுக்க வேண்டும். ஒரு வேளைக்கு 20 முதல் 60 கிரெய்ன் வரையில் மூன்று வேளை, அதாவது நாள் ஒன்றுக்கு 180 கிரெய்ன் வரையில் கொடுக்கலாம். இது குழந்தைகளுக்குக் கூடக் கலோமெல் (Calomel) உபயோகப்படுத்தலாம் 1/20 கிரெய்ன் நாள் ஒன்றுக்கு மூன்று மணிக்கு ஒருதரம் எட்டுத் தடவை கொடுக்கலாம். குழந்தைகளுக்குப் பச்சை மலமாக பேதியானால் அதற்குப் புளித்த தயிர் தாராளமாகக் கொடுக்கலாம். நெடுநாளாக உள்ள வயிற்றுப் போக்கிற்கு மருந்துக் கொடுப்பதும் சமிப்பு சக்திக்கு தக்கபடி உணவை மாற்றுவது அவசியம். மற்ற நோய்களின் காரணமாகப் பேதியானால் அந்த வியாதியைக் கவனிக்க வேண்டும். சில சமயம் வயிற்றுக் கடுப்புடன் பேதியும் சேர்ந்திருக்கும். அப்பொழுது இரண்டு நோய்களுக்கும் சேர்ந்து மருத்துவம் செய்ய வேண்டும்.

மருந்து முறை:

(1) கலோமெல் 1/4 கிரெய்ன், சோடா 5 கிரெய்ன் } ஒரு பொட்டலம் 6 முதல் 8 பொட்டலம், எட்டு மணிக்கு ஒரு முறை வியாதியின் கடுமைக்குத் தக்கபடி கொடுக்க வேண்டும்.

(2) அபின் 1/2 கிரெய்ன், பிஸ்மத் ஸாலிஸிலேட் 5 கிரெய்ன் } ஒரு பொட்டலம். ஒரு நாளைக்கு மூன்று முதல் ஆறு தரம் வரையில்

(3) சோடா 5 கிரெய்ன், ரூபாப் 1/2 கிரெய்ன் } ஒரு பொட்டலம் நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவை

சீதபேதி - வயிற்றுக்கடுப்பு (Dysentery 278)

பெருங்குடலின் சளி ஜவ்வின் அழற்சி ஏற்பட்டுப் புண்ணாகி விடுவதால் சீதபேதி உண்டாகிறது உண்டாகிறது. இது நோயணுக்களால் உண்டாகும் தொற்று நோய். உணவு தண்ணீர் இவை மூலம் நோயணுக்கள் உட்செல்கின்றன. ஈ, எறும்பு இவைகள் மூலம் தொற்று ஏற்படுகிறது. கால் கழுவாமல் வீட்டிற்குள் நுழைந்து சமையற் கட்டிற்குள் செல்வதால் பாதங்களின் மூலமாகவும் தொற்றுச் சீதபேதி ஏற்படுகிறது. நெடுநாள் சீதபேதி நோயாளிகள் உள்ள ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு மலத்தில் இந்த நுண்ணுயிர்கள் இருந்த போதிலும் அவர்களுக்கு நோய்க் காண்பதில்லை அடிக்கடி இந்த நோயுள்ளவர்களிடத்தில் பழகிப் பழகி இந்த நோய்க்கு அவர்களுக்கு அபயம் (immunity) ஏற்பட்டு விடுகிறது ஆனால் இவர்களுக்கு நோய் இல்லாமற் போன போதிலும் மற்றவர்களுக்கு இவர்களால் நோய் உண்டாகும். இந்தக் கடுமையில் தீவிரமானதாகவோ (acute) நாள் பட்டிருக்கக்கூடியதாகவோ (Chronic) இருக்கும்.

தீவிரமான அறிகுறிகள்:— காய்ச்சல் வயிற்று வலி. இலேசாக ரத்தமும் சீதமும் கலந்த பேதியுடன் ஆரம்பிக்கும். குடல் புண்ணாகி சளி ஜவ்வு துண்டு துண்டாகி மலத்துடன் வெளிப்படும். ரத்தமும் ஊளை அடிக்கடி வெளியாகும். வயிற்றுக் கடுப்பினால் மலம் வெளியாகாமற் போனாலும் சிறிது சிறிது சொட்டு ரத்தமும் சீதமும் மட்டுமே போகும், மலம் போக வேண்டும் என்கிற உணர்ச்சியும் பயத்தையும் விடாது இருந்து கொண்டிருக்கும். நோய் அதிகரிக்க, ரத்தமும் அதிகரிக்கும். அதனால், குடலின் சளி ஜவ்வும் கரைந்து குடல் புண் பெரிதாகி விடும். ரத்தத்துடன் சீழ் வெளிப்பட்டு துர்நாற்றமும் அதிகரிக்கும். பசியின்மை, உணவின் அருவருப்பு, வாந்தி

வெட்டை, தாகம் இவைகள் இருக்கும். உமிழ் நீரும், வேர்வை முதலான சுரப்புகளிலிருந்து ஊறும் நீரும் வேறு மாதிரி இருக்கும். உமிழ் நீர் எப்பொழுதும் காரமாக (Alkaline) உள்ளது. காரம் acid ஆக மாறிவிடும். வேர்வையும் உண்டாகும் காரநீர் காடியாக மாறும். மேலும் அணுக்களால் உண்டாக்கப்படும் விஷமும் ரத்தத்தில் கலக்கும்.

நாட்பட்ட நிலைமை:- முதலில் தீவிரமாக ஆரம்பித்து வேகம் அடையாமல் நீட்சமாகிறது Chronic. மலச்சிக்கலுண்டாவதாயும், ரத்தம் கலந்ததாகவும் இருக்கும். சில சமயம் பேதியும், சில சமயம் மலச்சிக்கலும் மாறி மாறி உண்டாகும், அதுச் சீக்கிரமாகும் சுரத்தின் காய்ச்சலும் உண்டாகும்.

சிகிச்சை:- மூன்று வகையில் செய்ய வேண்டும்

1 உடலில் உற்பத்தியும் செய்துக் கொண்டிருக்கும் அணுக்களையும் அதனால் உண்டாகும் விஷங்களையும் நீக்குவது

2 கடுப்பு, வலி, காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்தல்

3 குடலில் உண்டாகி இருக்கும் புண்ணை ஆற்றுதல்

வெகு காலமாகக் கையாண்டு வருவதும், பயன்தரக்கூடியதுமான இந்துப்பைக் கொட்டையைக் கோரத்துடன் கலந்து இடித்துப் பால் போன்ற கெட்டிக் குழம்பாகச் செய்து உள்ளுக்கு அடிக்கடி கொடுக்க வேண்டும். நோய் தொடங்கின உடனே இதைக் கொடுக்க வேண்டும். கடுப்புக் குறையவும், வலி குறையவும் பசி செய்யவும் இருந்தியும், உப்புத் தண்ணீரைக் கொண்டு குடல் கருவியினால் குடலைச் சுத்தப்படுத்த வேண்டும். பேதி உப்பு (Magnesium Sulphate) ஒரு டிராம், ஓர் அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து மணிக்கு ஒரு தடவை வீதம் எட்டு மணி நேரம் கொடுக்க வேண்டும். பேதி அதிகமாகும்

சூதில் வலியும் குறையும். கடுப்பு அடங்கும். இரவு படுக்கப்
ப் போகும் பொழுது டோவர்ஸ் பவுடர். Dovers powder 5 கிரெ
யின் கொடுத்து விட்டால் உறக்கம் நன்றாக வரும். உடன் அடங்கி
அடங்கும்.

மலத்தில் ரத்தம் அதிகமாக இருந்தால் எமடீன் (Emetine)
ஊசி மேலும் போட வேண்டும். இப்படித் தினம் ஓர்
ஊசி வீதம் மூன்று நாளைக்குக் குத்தினால் போதுமானது. கடுமையா
கிருமி காணப்பட்டால் பத்து நாளைக்கு இரண்டு ஊசி போட வேண்டி
வரும். வெட்பாலை (Kurchi) பிஸ்மத், வில்வப்பழம் இவை
மூன்றும் சீதத்தை ஆற்றும் தன்மையவை. சிலவேளை வில்வமும்
வெட்பாலை அரிசியும் சேர்த்துக் கொடுத்தால் நாட்பட்ட சீதபேதி
குணமாகும். எமடீன் ஊசி மருந்தும், உள்ளுக்கு வெட்பாலையும்
கொடுத்தும் கூடச் சீதபேதி குணமாகாமலிருந்தால் பேதிப்பு
மருந்து கொடுத்துக் குடலைச் சுத்தம் செய்து கொண்டு பிறகு வெட்பாலை
பிஸ்மத் இரண்டும் கொடுக்க வேண்டும். வாந்தி அதிகமாக இருந்தால்
ஒரு சொட்டு அயோடின் கொடுக்க வேண்டும். 1/4 கிரெயின்
கலோமல் Calomel, 10 கிரெயின் சோடா சேர்த்துக் கொடுத்
தால் வாந்தி நிற்கும். மலத்தில் துர்நாற்றம் அதிகமாக இருந்தால்
அதற்கு உள்ளிப்பூண்டும், கடமாதுளம் கொடுக்க வேண்டும். கடுப்பும்
பேதியும் மேற்கூறிய முறையைக் கையாண்டும் குணப்படாவிட்
டால் கெட்டியாக அரிசிக் கஞ்சியில் மூன்று கிரெயின்
அபின் கலந்து கொடுக்க வேண்டும். மலத்துவாரம் கொதிப்பு
எடுத்துச் சுட்டிருந்தால் அதற்குக் கடுக்காயைத் தேய்த்து ஒரு
கிரெயின் அபினையும் கலந்து தடவ வேண்டும். அடிவயிற்றுக்கு
ஊமத்தையும் அபினும் கலந்து கெளி பற்றுப் போடலாம். அதிக
பேதியாலும், தண்ணீர் தாகத்தாலும், உடல் இளைத்துப் பல

பலவீனப்பட்டுச் சோர்வு அடைகிறான், உப்புநீர் ஊசிமூலம் ஏற்ற வேண்டும்.

பத்தியம் :— அதிகமாய் உணவு இல்லாமல் இருப்பது நலம். சுத்தத் தண்ணீர் மட்டும் ஏராளமாகக் கொடுத்துக் கொண்டு வெண்ணெய் எடுத்த மோர், பால் பிரித்த நீர் (Whey) இவைமட்டும் கொடுத்தால் போதும். பேதி நின்றவுடனே இலைப்போல் விளாக் கஞ்சி, பார்லி அரிசிக் கஞ்சி, ஜவ்வரிசிக் கஞ்சி, மோர், பழரசம், இளநீர் இவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கலாம். பால் கொடுப்பது நன்மை கொடுக்காது. வயிற்றில் கட்டியாகிச் சங்கடக் கடுமையாகி, வலியும் கடுப்பும் அதிகமாகும். நோயாளி படுக்கையிலேயே இருக்க வேண்டும். சாம்பல், மண் முதலியவைகளில் மலத்தைக் கழிக்கச் செய்து, பிறகு அதை எரித்து விட வேண்டும். இல்லாவிட்டால் குடி தண்ணீருக்கு வெகு தூரத்திற்கு அப்பால் ஈர் அடி ஆழம் குழிவெட்டிப் புதைத்து விட வேண்டும்.

மருந்து முறை :— கலோமெல் (Calomel) 1/4 கிரெய்ன் } ஒரு பொட்டலம்
சோடா 10 கிரெய்ன்

நாள் ஒன்றுக்கு நான்கு வேளை. சிற்றாமணக்கெண்ணெய் 1/2-1 டிராம் கொஞ்சம் சோற்றுடன் கலந்து கொடுத்து ஒருநாளைக்கு நான்கு வேளை. இதன் பின் இரண்டு நாளைக்குக் கொடுக்க வேண்டும்.

வெட்பாலி 20-30 கிரெய்ன் } ஒரு பொட்டலம்
பிஸ்மத் ஸாலிஸிலேட் 5 கிரெய்ன் } ஒரு நாளைக்கு

நான்கு வேளை. மலம், ரத்தம், சளி இல்லாமல் போகும் வரையில். அயோடின் (Iodine) 17 சொட்டு பத்து C.C. அல்லது 170 சொட்டு சுத்தத் தண்ணீரில் கலந்து சுத்தக் குப்பியில் ஊற்றுவது.

எமடின் 1/2-1 கிரெய்ன் 17 சொட்டுத் தண்ணீரில் தோலுக்கு அடியில் குத்த வேண்டியது. மூன்று நாட்களுக்குக் கொடுக்க வேண்டும்.

இலைப் போல் வரை 1/2 - 2 டிராம் கஷாயமாகச் செய்து கொடுக்க வேண்டும்.

பேதி உப்பு (Magnesium Sulphate) 1 டிராம். இரு மணி அல்லது இரண்டு மணிக்கு ஒரு தடவை. அவசியமானால் பின் 2-3 வெள்ளை பார்லிக் கஞ்சி அல்லது அரிசி மாவு கஞ்சி, இரண்டு அவுன்ஸ் கலந்து மருத்துவரது முடிவாக கொடுக்க வேண்டும்.

17 281. குடல் வால் அழற்சி (Appendicitis)

மனிதனுடைய குடல் நீளம் இருபத்தாறு (26) அடி. அதில் சிறு குடல் இரைப்பையிலிருந்து துவங்கி இருபது (20) அடி நீளமும் பாதி அங்குல அடி அகன்றும், பருத்துள்ள பெருங்குடல், ஆறு அடி நீளமும், ஒன்றரை இரண்டு அங்குல அடி. சிறுகுடல் பெருங்குடலுடன் சேரும் இடத்தில் அடைக்கும் ஓர் வாய் (valve) இருக்கிறது. அது சிறு குடலிலிருந்து மலம் பெருங்குடலுக்குப் போவதற்கேற்ப பெருங்குடலிலிருந்து மலம் சிறு குடலுக்குப் போகாமல் தடுக்கும். சிறு குடலும் பெருங்குடலும் சேரும் இடத்துக்குச் சற்றுக் கீழே பெருங்குடல் வாய் (Caecum) என்ற பெருங்குடல். பெருங்குடல் வாயின் அடிப்பாகத்தில் இருந்து அங்குலம் நீளமும், அரைக்கால் அங்குலம் உள்ள ஒரு தசைக்குழாய் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் குடல்வால் (Appendix) என்று பெயர். இதன் மேல் ஒரு துவாரம் பெருங்குடலின் கீழ்ந்த அடிப்பாகம் மூடப்பட்டிருக்கிறது. அதை எடுத்து விட்டால், யாதொரு கெடுதலும் ஏற்படுவதில்லை. ஆனாலும் உயிருக்கு அபாயமான அழற்சியை உண்டாக்கித் துன்பத்தை விளைவிக்கிறது. குழாய் சிறியதாக இருக்கிறதால் மலம் அதனுள் சென்று வெளி வருகிறது. அதன் உள் துவாரம் சிறியதாக இருப்பதால் அழற்சியால் சிறிது வீங்கி அடைத்து விட்டால்

மூச்சு அவயவங்களும் அதன் வேலையும் நோய்களும்.
(Respiratory organs and their diseases)

ரத்தக் குழாய்களின் மூலம் ரத்தம் உடல் முழுவதும் பரவிச் சுற்றிக்கொண்டிருக்கிறது. பெரிய ரத்தக் குழாய்களான பாய் குழாய்களிலிருந்து பிரிந்து பிரிந்து சிறிய, கடைசியாக மிக மெல்லியவையும், கண்ணுக்குத் தெரியாதவையுமான நுண் புழைகளில் (Capillaries) சென்று, தேகம் முழுமையும் வியாபிக்கிறது. இந்த நுண் புழைகளில் செல்லும் பொழுது ரத்தம் தன்னிடத்துள்ள பிராண வாயுவை (oxygen) திசுக்களின் அணுக்களுக்குக் (tissue cells) கொடுக்கிறது. அதைக் கொடுத்து விட்டுக் கழிந்த பொருள் வஸ்துக்களைக் கரிய மில வாயுவாக (Carbon dioxide) வாங்கிக் கொண்டு வருகிறது. (நாளம்) வழியாக இருதயத்திற்குத் திரும்புகிறது. பிராணவாயுவை எடுத்துச் செல்லும் ரத்தம் சிவப்பாகவும், கரியமில வாயுவைத் திருப்பக் கொண்டு செல்லும் ரத்தம் கறுத்திருப்பாகவும் இருக்கும். இந்தக் கருரத்தம் உபயோகமில்லாமல் போய்விடாதபடி அதில் இருக்கும் கரியமில வாயுவைப் பிராணவாயுவாக மாற்றுவதற்காக நுரையீரலும், மூச்சு அவயவங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கருரத்தம் பெருங் குழாய்களின்று (Venae Cava) இருதயத்தின் வலது பாகத்திலுள்ள மேல் அறை (Auricles) வழியாகத் தள்ளப்பட்டு நுரையீரலுக்குள் வந்து மூச்சிலுள்ள பிராணவாயுவால் சுத்த சிவப்பு ரத்தமாக மாறி, மறுபடியும் இருதயத்தின் இடது புறமுள்ள கீழ் அறை (Ventricles) வழியாகப் பெரும் பாய் குழல் (aorta) மூலம் உடல் முழுதும் பாய்கிறது.

நுரையீரல் கூம்பைப் போல உள்ளது. கடற்பஞ்சு போல மிருதுவானது. இதனுள் மூச்சு போவதற்குப் பல சிறு துவாரங்களும், அதன் முடிவில் திராட்சை போன்ற அநேக சிறு பைகள் உள்ளன. இந்த ஆயிரக்கணக்கான சிறு பைகளைச் சுற்றிலும் ஏராளமான நுண் புழைகளில் கருரத்தம் வந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. அப்படி சுற்றும் பொழுது அதனிடமுள்ள கரியமில வாயுவை வாங்கிக்கொண்டு கொடுத்துவிட்டு மூச்சிலுள்ள பிராணவாயுவை வாங்கிக் கொண்டு சிவப்பு ரத்தமாக மாறி இருதயத்திற்குச் செல்லுகிறது. மூச்சின் மர்மம் இதுதான். மூச்சில் இரண்டு விதமான சம்பவம் நடக்கிறது. சுத்தமான காற்று உட்புகுந்து (inspired air) அங்கே பிராண வாயுவைக் கொடுத்துவிட்டுக் கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு வெளி வருகிறது (expired air). மூச்சு விடுதல் முயற்சியின்றி இயற்கையிலே இயங்குவதால் உள்ளும் புறமும் வந்து போய்க் கொண்டிருக்கிறது. வேண்டுமானால் சிறிது நேரம் மூச்சை அடக்கலாம். ஆனால் அதிக நேரம் அடக்க முடியாது. காற்று மூக்கின் வழியாக உள் புகுகின்றது. மூக்கு இரு வழிகள் கொண்டது. நடுவில் மெல்லிய தகடு போன்ற எலும்பினால் இரண்டு வழியாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துவாரம் இரண்டும் தொண்டையின் மேல் புறத்தில் ஒன்று கூடுகின்றன. ஒவ்வொரு நாசித் துவாரத்திலும் சுருள் போன்ற இரண்டு மூன்று எலும்புகள் இருக்கின்றன. இந்த இரண்டு எலும்புகளும் மூக்கை மூன்று தட்டுகளாகப் பிரிக்கின்றன. மேல் தட்டு வாசனை நுகரும் உணர்ச்சி நரம்புகளால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தட்டின் மேல் வாய் [illegible] எலும்பின் மேல் இருக்கும் பெட்டி போன்ற எலும்புக் கூட்டிற்கு ஒரு சிறிய துவாரத்தின் வழியாகக் காற்றுப் போய்க்கொண்டிருக்கிறது. இதனால் தான் பேசும் பொழுது உண்டாகும் சத்தத்திற்கு உரு உண்டாகிறது. அடிதட்டாகிய மூன்றாவது தட்டு மூச்சுக் காற்று உட்புகுவதற்காக உபயோகப்படுகிறது. இது தவிர வாயின் மூலமாகவும் காற்று உட்புகலாம். மூக்குத் துவாரங்களின் முன் புறத்தில் சிறு மயிர்கள் இருக்கின்றன.

இவை உட்புகும் காற்றிலுள்ள தூசி துப்புகளை வடிகட்டி விடுகின்றன. மூச்சுக் காற்று மூக்கின் பின்புறம் போய்த் தொண்டையில் சென்று அங்கிருந்து குரல்வளைக் (குரல்பெட்டி) (Larynx) கின் புகுந்து மூச்சுக்குழாய்க்குச் செல்லுகிறது (Trachea) காசியின் நடுப் உட்செல்லும் தூசி, தொண்டைச் சளி சவ்வில் ஒட்டிக் கொள்ளுகிறது. மூச்சுக்குழாய் குருத்தெலும்பு (Cartilage) வளையங்களால் மூடிக் கொள்ள முடியாமல் திறந்திருக்கிறது. மூச்சுக்குழாய் மார்பில் இரண்டாகப் பிரிந்து ஒரு நுரையீரலுக்கு ஒன்றாகச் சென்று மறுபடியும் அவ்வேசுவை பல கிளைகளாகப் பிரிந்து சின்னஞ்சிறு குழாய்களாக நுரையீரலின் பரவுகிறது (Bronchiole அண்ணம் அல்லது மேல்வாய் (hard plate) அதற்குப் பின்புறம் மெல்லண்ணம் (Soft plate) என்றும் இரண்டும் சேர்ந்து மூக்கையும் வாயையும் மேல் கீழ், கீழ் கட்டாகப் பிரிக்கின்றன. மெல்லண்ணம் ஒரு மெல்லிய சதை, ஒரு திரை போலத் தொங்கிக் கொண்டு வாய்க்குப் பின்புறம் மேல்பாகத்தில் இருக்கிறது. அதற்கு மத்தியில் சிறிய சதை ஒன்று தொங்குகிறது. அதற்கு உள்நாக்கு என்று பெயர் உட்புகும் மூச்சு, மூச்சுக்குழாய் வழியாகச் சென்று அதன் அப்புறம் இருக்கும். மயிர்த் தசை (cilia) யின் ஆட்டத்தால் சளி, தண்ணீர் இவற்றை மேலே தள்ளி விட்டுச் சுத்தமான காற்றை நுரையீரலுக்குள் போகவிடுகிறது. இந்தப் மயிர்த் தசை மிகவும் சிறிய அணுவைப் போன்று அசையாட்டிக் கொண்டிருக்கும். சிறிய மூச்சுப் பிரிவுகள் முடிவுபட்டதின் ஒரு சிறு காற்று அறை இருக்கிறது. பல காற்று அறைகள் (Air cells) சேர்ந்து நுரையீரல் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் அது கடற்பஞ்சுபோலத் தோன்றுகிறது. காற்றறைகளைச் சுற்றிலும் நுண்புழைகள் (blood capillaries) ரத்தத்தை சுமந்து நிற்கிறது. நுரையீரலைச் சுற்றிலும் ஓர் உறை போன்ற மெல்லிய சவ்வு மூடியிருக்கிறது. இதற்கு நுரையீரலுறை (Pleura) என்று பெயர்.

மார்புக் கூட்டுக்குள் நுரையீரலில் காற்று நிரம்பியிருக்கிறது மார்புக்கூட்டில் இடம் கொடுக்கும் வரையில் நுரையீரலில் காற்று உட்புகுந்து பிறகு வெளியாகும். மார்புக் கூட்டுக்கும் வயிற்றுக்கும் மத்தியில் ஒரு தசைத் திரை இருக்கிறது. அதற்கு உதரவிதானம், இடைத் தடுப்பு (Diaphragm என்று பெயர். இது தட்டையாக இராமல் ஒரு கூடாரம் போன்று மேலே அதன் மத்தியம் உயர்ந்திருக்கிறது.

323. மூச்சின்போது மார்புக் கூட்டில் இருக்கிறது.

மார்பு அகன்று இடம் உண்டானால் உடனே உள்ளிருக்கும் காற்றுக் கனைத்து வெளியேறாது காற்று உட்புகுந்து நுரையீரலை நிரப்புகிறது திரும்பவும் மார்பு பழைய நிலை அடைந்து உட்சென்ற காற்று வெளிவருகிறது மார்புக் கூட்டெலும்புகள் நேராக இராமல் சற்றுச் சாய்வாக இருக்கின்றன சாய்ந்திருக்கும் எலும்புகள் நேராகத் தூக்கப்பட்டால் மார்புக் கூட்டின் இடம் அதிகமாகும். அதோடு இடைத்தடுப்பு (உதரவிதானம்) கீழே இறங்குவதால் மார்புக் கூட்டின் இடம் மேலும் அதிகப்பட்டு மூச்சு நுரையீரலுக்குள் செல்லுகின்றது. திரும்பவும் மார்புக்கூடு சாய்ந்து இடைத்தடுப்பு மேலே உயர்ந்தால் மார்பின் இடம் குறைந்து உட்சென்ற காற்று வெளியாகும். இந்த வேலை எப்பொழுதும் பிறந்தது முதல் இறக்கும் வரையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த வேலையைத் தொடங்குவதும், நடத்துவதும் முகுளம் (முகுளம்) (Medulla oblongata) என்பது மூளையின் அடிப்பாகத்தில் இருக்கும் மூளைத்தண்டில் இருக்கிறது. ஒரு நிமிஷத்திற்குச் சுமார் 17 தடவை

17 தடவை மூச்சு வாங்கி விடுகிறோம். வேலை செய்து ஓடியாடி னால் அதிகமாக விட வேண்டும். இருதயங்கள் வேலை செய்யும் போது பிராண வாயு அதிகம் வேண்டியிருப்பதால் இருதயமும் நுரையீரலும் அதிகம் வேலை செய்ய வேண்டும்.

ஜலதோஷம் — பீனசம் (Cold in the nose) 324

ஜலதோஷம் மூக்குச் சளி நோயணுக்களால் உண்டாகிறது. சில சமயம் மூக்கிலிருக்கும் சளி சவ்வில் அழியும் நோயணுக்களும் சேர்ந்து கூட்டுக் கொண்டு அழற்சியை உண்டு பண்ணுகின்றன. அந்த உடம்பின் மேல் திடீரென்று குளிர்பட்டாலும் சீதோஷ்ண நிலையில் திடீரென்று மாறுதல்கள் ஏற்பட்டாலும் நோயணுக்கள் தீவிரமாக வளர்வதற்குச் சுலபமாக இருக்கும். கைக்குழந்தை இதனால் அடிக்கடி வருவது உண்டு. இந்த நோய் தொத்துள்ளது. ஒட்டுவார் ஒட்டி Contagious ஒரு சமயத்தில் ஒரு வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் ஜலதோஷத்தால் பீடிக்கப்படுவது உண்டு.

அடையாளம்:- முதலில் மூக்கின் உட்புறம் வறண்டது போல இருக்கும். தொண்டை நோத்திருப்பு பிறகு வறட்சி மறைந்து மூக்கிலிருந்து தண்ணீர் வடியும். தலை பாரம், கண்ணில் கனம், தலைவலி, கொஞ்சம் காய்ச்சல். மூக்கிலிருந்து கீழ் அழற்சி குரல்வளைக்கும் Larynx பரவி, பேசும் பொழுது தொண்டை கம்மல் உண்டாகும். தக்க சிகிச்சை உடனே செய்தால் மூன்று நாட்களுக்குள் சுகம் ஆகலாம். இதை லக்ஷியம் செய்யாமல் இருந்தால் குரல்வளையின் கீழ்ப் பரவி அங்கிருந்து மூச்சுக் குழாய்க்குப் பரவும்.

சிகிச்சை:- சீக்கிரம் குணமடைய வேண்டுமானால் படுக்கையில் இருக்க வேண்டும். உடல் வியர்த்து வெளுத்து விட்டுக் கொதி தண்ணீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். 1/4 கிரெய்ன் அபின் கொஞ்சம் சீனிச் சர்க்கரையுடன் கலந்து ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு வேளை கொடுக்க வேண்டும். இரவு படுக்கைக்குப் போகுமுன்னர் 2 கிரெய்ன் கலோமெல் கொடுத்து மறு நாள் காலையில் மூன்று கடுக்காய்த் தூள் கொடுத்தால் நன்கு மலம் கழிந்து விடும். மூக்கில் உள்ளிருக்கும் சளி சவ்வின் மேல் தடவ வெண்ணெயைத் தடவ வேண்டும்.

வருகிற மூக்குச் சளி, சவ்வு, நீர் ஆகியவற்றைக் கலந்து சளியை உண்டாக்கும். மூக்கில் கணமும் அடைப்பும் ஏற்படும். தலைவலி அதிகமாகும். காது மந்தம், காதுவலி, காதில் இரைச்சல் உண்டாகும். தொண்டை விழுங்குவதற்குக் கஷ்டம் ஏற்படும். கொஞ்சம் குளிர், காய்ச்சல், தாகம், உடல் வலி இவை இருக்கும்.

இருபாகங்களையும் கொதி தண்ணீரில் வைத்தால் நல்லது. சோடா. சோடா பென்சோயட் (Soda benzoate) என்கிற மருந்தை உபயோகப்படுத்தலாம். போரோதைமோலின் (Boro thymolin) போன்றவை மூக்கினுள் உறிஞ்சி வெளியிட்டால், உடனே அடைப்பு, தலைபாரம், தலைவலி இவை நீங்கும். கற்பூரத்தைப் பொடி செய்து எண்ணெயில் கலந்து மூக்கில் தடவலாம். உள்ளுக்கும் கொடுக்கலாம்.

மருந்து முறை:- (1)

அபின் 1/4 கிரெய்ன்
சீனிச்சர்க்கரை 5 கிரெய்ன் } ஒரு பொட்டலம் — ஒரு நாளைக்கு மூன்று வேளை

(2) இபிகாக் 2½ கிரெயின் } ஒரு பொட்டலம்
சோடா 3. கிரெயின் } ஒரு நாளைக்கு நான்குவேளை

(3) போரோசா தைமாலின் போலுள்ள நீக்கி அமைப்பதற்கு.
கலோமெல் 2 கிரெயின் } ஒரு பொட்டலம்.
சோடா 10. கிரெயின் }

பரிசோதனைக்குப் போகுமுன் முதல்நாள் காலையில் ஒன்று கழிக்காய் எண்ணெய் உப்பு அவுன்ஸ். [illegible] கால்மணி நேரம் வைப்பது. [illegible]

குரல்வளை அழற்சி. (Laryngitis) 326.

இது [illegible] போன்றது. [illegible] காரணம் இருக்கும். [illegible] குழந்தைகளுக்கு இந்த நோய் வருமானால் [illegible] மூச்சுவிடுவதற்குக் கஷ்டப்படும். அதற்கு குரல்வளையின் மேல் அயோடின் தடவ வேண்டும். சளி வெளிப்பட்டால் மூச்சுவிடுவது சுலபமாக இருக்கும். இதற்கு 1/12 கிரெயின் முதல் 1/8 கிரெயின் டார்டர் எமெடிக் (Tartar emetic) கொடுப்பது நலம். வாந்தி எடுக்கச் செய்யும் கபத்தை வெளிப் படுத்தியும் மலச்சிக்கலை நீக்க வேண்டும். [illegible] வேண்டிய முறைகளையே இருக்கும் செய்ய வேண்டும்.

மருந்து முறை:- அயோடின் (Tr. Iodine) (1 : 40) 1 டிராம் முதல் ½ டிராம். இரண்டும் கலந்து தொண்டைக்கு வெளிப்புறத்தில் தடவுக.

குழந்தைகளின் குரல்வளை இழுப்பு சீறல் நோய். 326
(Croup Spasmodic Laryngitis)

அழற்சி இல்லாத நோய் ஒன்றும் இல்லாமலே குரல்வளைக்குள் இழுக்கும் தசைகளில் இழுப்பு உண்டாகலாம். [illegible] உறங்கும் குழந்தை பாதி இரவிலாவது விடியற்காலையிலாவது திடீரென மூச்சுவிட முடியாமல் சத்தம் போட்டு விழித்துவிடும். [illegible] இருக்கும். [illegible] சுவாசம் [illegible] கவலைக்கிடமாக இருக்கும். [illegible] மூச்சு நின்றுவிடும் போல இருக்கும். [illegible] மூச்சு [illegible] விடும். அப்பொழுது [illegible] செய்வித்து வாந்தி எடுக்கும்படி செய்து [illegible] வேண்டும். ஒரு நாள் வயிற்றில் அஜீரணம் இருந்தாலும் இந்த வியாதியால் [illegible]

மூச்சுக்குழாய் அழற்சி. (Bronchitis) 326.

காசநோயுடன் போகும் மூச்சுக்குழாயின் உட்புறத்துள்ள சளி ஜவ்வின் அழற்சி

இதன் [illegible] பாலவாகடம் 155 பக்கம் பார்க்கவும்.

சுவாச காசம் (இளைப்பு (Asthma)) 330.

மூச்சுப் பிடி நோய்களில் ஒன்று. மூச்சை இழுத்து விடும் பொழுது [illegible] வெளிப்படும் காற்றைச் சுலபமாகச் செல்லும்படி செய்வதும்

இதனுடைய வேலை. சுவாசகாசம் என்கிற நோய் இந்தத் தசை சுருங்கி சிறு மூச்சுக் குழாய்களை அடைத்து விடுவதால் ஏற்படுகிறது. இந்தச் சுருக்கம் மூச்சுக் குழாய் அழற்சியில் ஏற்படலாம். மலச்சிக்கல் — வயிற்று உப்புசம் — அஜீரணம், உடலின் பூச்சி, இவைகளால் எதிர்த்தாக்கம் (reaction) நரம்பின் மண்டலங்களில் உண்டாவதால் ஏற்படக் கூடும்.

இளைப்பு திடீரென்று உண்டாகும். அநேகமாய் விடியற்கால நேரத்தில் இரண்டு மணி முதல் நான்கு மணிக்குள்ளாக வரும். இரவு படுத்திருப்பதால் மூச்சுக் குழாயின் சுற்று ரத்தக் குறைவும், ஈரக்கசிவும் ஏற்படுவதால் விடியற்கால நேரத்தில் இளைப்பு உண்டாகிறது. மூச்சுத் தடைப்படுவதால் ரோகி படுக்கையின் எழுந்து உட்கார்ந்து இருந்து மூச்சுவிட வேண்டியிருக்கும். சில சமயங்களில் இளைப்பு திடீரென வருகிறதில்லை. தலைவலி — வயிற்றுப்புசம் — அஜீரணம் — களைப்பு — மலச்சிக்கல் — இவைகளை முன்னிட்டுக் கொண்டு ஆரம்பிக்கும். சிலருக்கு இளைப்பு இளைப்பு வருவதற்கு முன்பு தெளிவான மூத்திரம் ஏராளமாக இருக்கும்.

அடையாளங்கள்:— மூச்சு விடும் சத்தம் வெகு சீக்கிரம் அதிகரிக்கும். நோயாளிகள் படுக்கையின் தலையணைகளை அடுக்கி வைத்துக் கொண்டு அதன் மேல் சாய்ந்து கொண்டு இருப்பார்கள். மூச்சை கஷ்டப்பட்டு இழுத்து விட வேண்டி வரும். கைகால் குளிர்ந்து, முகம் வேர்த்து வெளுத்திருக்கும். மார்பு காற்றினால் அடைப்பட்டு அழுத்துவது போல இருக்கும். இருமல் நிற்பதற்கு முன்பு வெள்ளைக் கபம் கெட்டியாக வெளியாகும். இந்த இளைப்பு ஒரு சமயம் வந்தால் இரண்டு மணி நேரம் முதல் ஆறு நேரம் வரை இருக்கும். அதற்குப் பிறகு நோயாளி அயர்ந்து நித்திரை செய்வான். சில சமயங்களில் இளைப்பு விட்டும் விடாததுமாக நான்கைந்து நாட்கள் வரையில் தொடர்ச்சியாக இருந்து மிகவும் அசௌகரியமான (?) பலக்குறைவு உண்டாகும்.

சிகிச்சை:— மார்பியா (Morphine Hydrochloride) ஊசி மூலம் கொடுக்க வேண்டும். கொடுத்தவுடன் மூச்சுப் பிடிப்பு நின்று விடும். மார்பியா இல்லாவிட்டால் 2 அவுன்ஸ் அளவு அபின் கொடுக்கலாம். இருதயப் பிணி நோய் இருக்குமானால் மார்பியா கொடுக்கக் கூடாது. அபாயகரமானது. மோர்ந்துக் கொள்ளும் மருந்துகளால் இளைப்பு நிற்கலாம். போதை உண்டாகும். உ. குளோரோபாரம் (Chloroform) போன்றது நல்லது. ஆனால் தொடர்ந்து மோந்து (?) இளைப்பு நிறுத்தலாம். இடைவிடாது அதிக நேரம் மோந்து பார்க்கவும் கூடாது. கிராமங்களில் இந்த மருந்து கிடைக்காது.

ஊமத்தை இலை கிராமங்களில் கிடைக்கும். இலைகளைக் காய வைத்துப் பொடியாகச் செய்து காகிதத்தில் வைத்துச் சுருட்டிச் சிகரெட்டுகள் போலச் செய்து புகையை இழுக்கும்படி செய்யலாம். இப்படிச் சிகரெட்டாகக் கொடுக்க முடியாவிட்டால் படுக்கையின் பக்கத்தில் தட்டை (?) அதற்குள் நெருப்புத்துண்டுகளை ஒரு சட்டியில் வைத்து அதன் ஊமத்தை இலைத் தூளை சோடியம் நைட்ரேட் (Sodium Nitrate) கலந்து புகையும்படி வைத்து நோயாளியை அதை சுவாசிக்கும்படி வைத்தால், மூச்சடைப்பு சீக்கிரம் நீங்கும். இதையே உள்ளுக்கு மருந்தாகக் கொடுக்கலாம். ஆனால் அளவுக்கு மிஞ்சி ஊமத்தை அதிகம் உபயோகப்படுத்தக் கூடாது. ஆஸ்த்துமா வியாதியானது பொதுப்படையாயும் (?) உபயோகப் படுத்த வேண்டும்.

உள்ளிப்பூண்டு ரத்த அழுத்தத்தைக் (blood pressure) குறைக்கும். மூச்சுக் கொள்ளுங்கூட. பெருமருந்துப்பட்டை கூறையாக இருந்த (?) மூச்சுக் குழாய்

நெஞ்சுக் கோளாறுகளைத் தாக்கும் ... இனம் உண்டு. இதனின்று எபிடிரின் (Ephedrine) என்னும் சத்து எடுக்கப்பட்டுச் சிறு மாத்திரைகளாக விற்கப்படுகின்றது. இதை ஊசியின் மூலம் கொடுத்தால் இளைப்பை நிறுத்தி விடும். ஆடாதோடை நீண்ட காலமாகக் கொடுத்து வந்தால் இளைப்பு வராமல் தடுக்கும். பாதாளகந்தி இலையைத் தினம் ... உண்டாகிச் ... தடுக்கும்.

கூட் (Kut) இளைப்பு வருவதற்கு முன்பாகவே இரவில் வாயில் அடக்கிக் கொண்டு படுத்தால் அதை வராமல் தடை செய்யும். பொட்டாஸியம் ஐயோடைட் (Pottasium Iodide) இரண்டு கிரெய்ன் முதல் 5 கிரெய்ன் வரையில் தினம் மூன்று அல்லது நான்கு வேளை கொடுக்க வேண்டும். ஸ்டிரிக்னின் (Strychnin) வெள்ளைப் பாஷாணமும் (Arsenic) இரண்டும் இளைப்பு இல்லாத சமயங்களில் கொடுத்து வந்தால் அடிக்கடி இளைப்பு வராமல் தடுக்கும். எட்டிக் கொட்டைத் தூள் இரண்டு கிரெய்ன் ஸ்டிரிக்னினுக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம்.

தேகத்தில் தசை வளர்ந்திருந்தாலும், மூக்கில் சதை அடிக்கடி நோய்வாய்ப்பட்டிருந்தாலும் இளைப்பு வரலாம். அவைகளுக்குத் தக்க சிகிச்சை செய்ய வேண்டும். வயிற்றில் கிருமி நோய்கள் இருந்தாலும் இளைப்பு வரக்கூடும். நோயாளியே பக்குவத்திற்கு ஏற்ற உணவு எதுவென்று தெரிந்து கொண்டிருப்பான். அதன்படி அனுசரிக்க வேண்டும். உணவு அளவாகவும் இரவில் சீக்கிரத்தில் சமைக்கக் கூடியதாயும் இருக்க வேண்டும்.

மலம் சுத்தமாக வெளியாக வேண்டும். பலவித பேதி மருந்துகளை அடிக்கடி உபயோகிக்காமல் எனிமாவைக் கொண்டு குடல் சுத்தம் செய்து கொள்வது மிகவும் நல்லது. கலோமல் (Kalomel) கடுக்காய் முதலியவை சில சமயங்களில் நிற்கும். ஜீரணக் கோளாறும் இந்த நோய்க்குக் காரணமாகும். மூக்கு, தொண்டை, பல் இவைகள் இருந்தால் இளைப்பு உண்டாகிறதில்லை. இளைப்பு வரும் கிராமவாசிகள் பட்டணங்களுக்கு வந்தால் இளைப்பு நின்று விடுகிறது. ஊர் விட்டு ஊர் மாறுவதாலும் இளைப்பு நின்று விடுகிறது.

மருந்து முறை:— தேகப் பயிற்சி, உணவில் நியமம், வெயிலில் உட்கார்ந்து காய வைத்தல், ..., மனக் கவலை நீக்கல் முதலியவற்றைக் கவனிக்க வேண்டும்.

சுத்த அட்ரினலின் ... 'உள்ளிப்பூண்டு ரசம்' ½ டிராம் அல்லது 30 சொட்டு. தினம் நாலு வேளை. பால் மோரில் கலந்து கொடுக்கலாம்.

இளைக்கும் போது ஊமத்தைப் புகை பிடிப்பது ... பத்திரத்தை நோயாளியின் கைக் கட்டையின் மேல் ... பார்க்கச் செய்வது.

சுத்த அக்கரகாரம் - பொட்டாஸியம் ... 10 கிரெய்ன் ஒரு நாளைக்கு மூன்று வேளை.

எபிடிரின் (Ephedrine) ½ கிரெய்ன் மாத்திரை. இல்லாவிட்டால் ஊசியின் மூலம் 15 சொட்டு. இதனால் கபம் வெளியாகி மூச்சுப் பழுவைத் தடுக்கும். ஆடாதோடை 30 கிரெய்ன். தினம் நாளைக்கு மூன்று வேளை.

பொட்டாஸியம் அயோடைட் (Pottassium Iodide) 5-10 கிரெய்ன்
ஒரு நாளைக்கு மூன்று வேளை

பலவீனத்தைத் தடுப்பதற்கு:-

எட்டிக் கொட்டை 2 கிரெய்ன் } ஒரு பொட்டலம்
வெள்ளைப் பாஷாணம் 1/20 கிரெய்ன் }

ஒரு நாளைக்கு மூன்று வேளை. மேற்கூறிய விசேஷமான மருந்து முறைகள் மட்டும் போதா. உணவு - மலபந்தம் இவைகளை அவசியம் கவனிக்க வேண்டும். இடம் விட்டு இடம் மாறுதல், உணவை மாற்றுதல், மனச் சஞ்சலம் நீக்கல், தேகப் பயிற்சி இவையெல்லாம் ஒழுங்காகச் செய்து கொண்டு மருந்துகளை உபயோகித்தால் நல்ல பலன் உண்டு

334 கபவாதஜ்வரம் (Pneumonia) (சளிக்காய்ச்சல்)

நுரையீரல் அழற்சிக்குச் சளிக்காய்ச்சல் என்று பெயர். மூச்சுக் குழாய் ~~மூச்~~ப் பிரிவுகளாகப் பிரிந்த பின்னர் அதற்கு மூச்சுக் குழல் அழற்சி (Bronchitis) என்றும் அப்படியின்றி சாதாரணமான சிறிய காற்றுப் பைகளிலும் அழற்சிப் பரவினால் அதற்குச் சளிக்காய்ச்சல் என்று பெயர். இந்தக் காய்ச்சலுக்கு முக்கிய காரணம் நோய் அணுக்கள். இந்த அணுக்கள் வாயிலும், பல் இடுக்குகளிலும் தொண்டையிலும் சாதாரணமாக எப்பொழுதும் இருக்கும். ஆனால் அப்பொழுது நோய் உண்டாவதில்லை. குளிர் காலத்தில் மழை, அல்லது, ஈரத்துணிகளை அணிந்து கொண்டு, அதிக நேரம் இல்லாமல் படுத்து உறங்கி, திடீரென்று ஈரமான ~~இடத்தில்~~லோ இருந்து காற்றுக் குளிர் வாடை. உடல் பலம் குறைந்திருந்தால் இந்தக் காய்ச்சல் வரும். அப்பொழுது உடல் பலவீனப்பட்டிருந்தால் நோய் உடனே தொற்றும். நோயாளிகளின் கபத்தில் ஏராளமான நோய் அணுக்களைப் பூதக் கண்ணாடி மூலம் காணலாம். இந்த அழற்சி இரு பக்கமும் வரும், அல்லது இரண்டு நுரையீரல்களிலும் ஒரே சமயத்தில் ஏற்படலாம் சில சமயங்களில், நுரையீரலின் ஒரு சில பாகங்களில் மட்டும் ஏற்படலாம். இது குழந்தைகளுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் அடிக்கடி உண்டாகும்.

குறிகள்:- நோய் திடீரென்று குளிருடன் ஆரம்பமாகும். உடல் அனல் வெகு சீக்கிரம் அதிகமாகும். கண்களில் படபடப்பு, கவலை கொண்ட முகம், பசியின்மை, தாகம், நாக்கில் ஈரமற்றதனம், அடிக்கடி இருமல், தலைவலி, கை கால்வலி ஆகிய இவை தோன்றும். காய்ச்சல் அனல் மானியில் 104°-105° வரையில் போகும். கடுமையான நோயில் இன்னும் அதிகமாகலாம். மார்பு வலி, பெருமூச்சு விட முடியாமலும், மூச்சு விடுவதற்குக் கூட முடியாமலும், இருக்கும். வலியின் காரணத்தாலும், நோயின் விளைவாலும், இரத்தம் அதிகமாக ஏற்பட்டு விடுவதாலும், மூச்சு அடிக்கடி இழுத்து விட வேண்டியிருக்கும். மூச்சுக்கும் நாடிக்குமுள்ள முறை தவறிவிடும். நாடி நான்கிற்கு ஒருதரம் மூச்சு விடுவதானது, இரண்டிற்கு ஒருதரமாக விட வேண்டியிருக்கும். சாதாரணமாக ஒரு நிமிஷத்திற்கு 17 தடவை விடும் மூச்சானது 40 முதல் 60 வரை விட வேண்டியதாகும். நாடியும் 100 முதல் 130 வரை அடிக்கும். இரத்தம் சுத்தப்படாததால் உதடு நீலநிறமாகக் காணப்படும். மூச்சு உள்ளிழுக்கும் பொழுது, நாசித்துவாரம் விரிந்து, மூச்சு வெளி விடும் பொழுது சுருங்கும். இருமல் உண்டாகும். கபம் முதலில் அதிகம் இராது. பிறகு சகஜமாக.

இருமிச் சுலபமாக வெளிவர மாட்டாது. அப்படி வந்தாலும், ரத்தம் கலந்து துருப்பிடித்த இரும்பு நிறமாக இருக்கும். இது குழந்தைகளுக்கு, இருமல், கபம் இரண்டும் இரா. சிலர்களில் தொண்டை வீக்கம், சளி ஜவ்வு சார்ந்த இரு நுரையீரல் குழாய்கள் அடைப்பட்டுக் கொள்ளப் போல்க கெட்டியாக வரும். தூக்கமின்மை, மூளைமயக்கம் (delerium), வாய் உளறல் - இவை இருக்கும். நல்ல உடல்கட்டுள்ள வாலிபர்களுக்கு காய்ச்சல் 106° டிகிரி வரையில் போகும். பைத்தியம் பிடித்தவர்கள் போல அடக்க முடியாத பல வித நடுக்கங்கள் உண்டாகலாம். சிலர் சிறு சிறு பாகங்களில் மட்டும் அடைப்பு உண்டாகியிருந்தால், காய்ச்சல் தீவிரமாக இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாக ஜுரம் இறங்கி, இருமல், கோழை இவைகளுடன் இரண்டு மூன்று வாரங்கள் கழியலாம்.

இருதயத் தீங்கு:-

இந்த நோயின் பலவீனம் அதிகம். இருதயத் தசை தளர்வுற்று அசந்து விடலாம். அப்படி ஆகிவிட்டால் ஆபத்தாக முடியும். ரத்த ஓட்டம் குறைவுபட்டு வருகிறபோது நாளங்களில் ரத்தம் உறைந்து விடும். உறைந்த கட்டிகள் உடனே அசைந்து புறப்பட்டால் பெயர்ந்து இருதயம் சென்று அங்கே அடைப்பு உண்டாக்கலாம் அல்லது பெரிய ரத்தக்குழாய்களில் சென்று அடைப்பு உண்டாக்கலாம். அப்படி வந்துவிட்டால் உடனே இறப்பது நிச்சயம். இதிலிருந்தும் எவ்வளவு கவலையுடனும் ஜாக்கிரதையுடனும் இந்த நோயாளியைக் காப்பாற்ற வேண்டும் என்பதன் அவசியம் நன்கு புலப்படும்.

சிகிச்சை:- செய்ய வேண்டிய முறை:-

1 நோயணுக்களின் சக்தியைக் குறைப்பது

2. காய்ச்சல் அதிகம் இருந்தால் அதைக் குறைப்பது.

3 அவ்வப்பொழுது உண்டாகும் குறிகளுக்குத் தக்கது செய்தல்

4. நோயாளியின் பலத்தையும் இருதய பலத்தையும் காப்பாற்றுவது.

நோயணுக்களின் தன்மையைக் கொல்லுவதற்கு அயோடினைக் கொடுத்தல் வேண்டும். வாரத்திற்கு இரு முறையாகிலும் செய்ய வேண்டும். வாய் வழியாக ஒரு சொட்டு அயோடினை ஒரு நாளைக்கு நான்கு வேளை கொடுக்கலாம். உள்ளிப்பூண்டு சாறு ஒரு டிராம் முதல் இரண்டு டிராம் வரையில் தினசரி கொடுக்க வேண்டும். கொயினாவும் சின்கோனாவும் நச்சுக்கொல்லியாக வேலை செய்யும். 2.5 கெல்லை வரையில் தினசரி கொடுத்து வர வேண்டும். சூடான ஆளிவிதைக் களி கிண்டி மார்பில் போட்டால் மார்புவலி குறையும். அடிக்கடி இது போடுவதற்கு முடியாவிட்டால் கற்பூரத்தைலத்தை மார்பின் மேல் தடவிப் பஞ்சு கட்ட வேண்டும். விழுதாலி, ஊமத்தை கொண்டையும் அரைத்துப் பசைபோல் காய பவுடருடன் சேர்த்து மார்பின் பற்றுப் போட்டால் வலி குறையும்.

கதவு, ஜன்னல் இவைகளைப் பகல், இரவு இரண்டு வேளையும் நன்கு திறந்து வைக்க வேண்டும். நோயாளியை அறைகளில் போடாமல் திறந்த கூடங்களில் படுக்க வைப்பது நலம். மூளைமயக்கம், உளறல் இவைகளுக்குப்

உதறல் இவைகளுக்குப் பொட்டாஸியம் புரோமைட் (Pottassium bromide) கொடுக்க வேண்டும். ஆனால் அதிகம் உபயோகிக்கக் கூடாது. கபம் இருமி, இருமல் அதிகமாக இருந்தால் அது நிற்கும் படி மருந்துகள் கொடுக்க வேண்டும். சோடாவைப் ஆடா தொண்டையும் இருந்த நல்லவை. இதயச் சோர்வுக்கு வெள்ளை மருதப்பட்டைச் சூரணம் கொடுக்க வேண்டும்.

உணவு நீர்மையமாக இருக்க வேண்டும். மோர், பால், பார்லி கஞ்சி, பழரசம், பால் கலந்த நீர், காப்பி, டீ இவை கொடுக்க வேண்டும். காய்ச்சல் விடும் அளவு இருக்கும் பொழுது உடல் உஷ்ணம் உள்ளதற்குக் குறையாமல் பாதுகாக்க வேண்டும். சூடான தண்ணீர்ப் புட்டிகள் படுக்கையில் வைக்க வேண்டும். இருதயத்தைப் பலப்படுத்துவதற்கு 5-10 C.C. பழச் சர்க்கரைத் தண்ணீரில் (12½ %) கலந்து நரம்பில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் செலுத்தி வர வேண்டும். மலச்சிக்கல் நீக்க வேண்டும். உடல் சுத்தம், காய்ச்சல் கவனிக்கும் முறைகள். டைபாய்ட் காய்ச்சலுக்குச் சொல்லியிருப்பது போலச் செய்ய வேண்டும்.

மருந்து முறை :-

உள்ளிப் பூண்டு ரசம் ½ டிராம் ஒரு வேளைக்கு. முதல் முதலில் மருத்துவம் ஆரம்பிக்கும் பொழுது ஒரு வேளை கொடுத்து விட வேண்டும். அவசியம் இருந்தால் மறுபடி கொடுக்கலாம்.

ஆடாதொடைத் தூள் 1 டிராம் ஒரு வேளைக்குத் தேன் கலந்து கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு வேளை கொடுக்க வேண்டும்.

நுரையீரல் உறை அழற்சி (Pleurisy) 337

மார்பு கூட்டின் உட்புறமும், நுரையீரலின் வெளிப்புறமும் ஒரு மெல்லிய உறையால் மூடப்பட்டிருக்கிறது. மூச்சு விடும் பொழுது நுரையீரல் நிறைந்து மார்புக் கூட்டோடு உராயும். நுரையீரலின் உறையிலிருந்து எப்பொழுதும் சுரந்து கொண்டிருக்கும் பசை உராயும் பக்கங்களை வழுவழுப்பாக்கும். நுரையீரல் உறை அழற்சி ஏற்பட்டால் அது சுரந்து நீர் வெளிப்படாமல் நின்று விடும். மூச்சு விடும் பொழுது நீர் இல்லாமல் இருக்கும் இவ்விரண்டால் மார்புக் கூட்டுடன் உராயும் பொறுக்க முடியாத வலி உண்டாகும். சில நாட்களுக்குப் பிறகு நீர் சுரப்பு உண்டாகும். அப்பொழுது வலி நின்று விடும். ஆனால் நீர் அதிகம் சேர்ந்து [illegible] பல வித கஷ்டங்கள் ஏற்படும்.

இந்த அழற்சிக்கு முக்கியமான காரணம் நோய் அணுக்கள். சளிக்காய்ச்சல் உண்டு பண்ணும் நோயணுக்கள் இந்த அழற்சியையும் உண்டாக்குகின்றன. இரட்டைக் குழவிகளான அணுக்களும் இந்த நோயை உண்டு பண்ணும். நுரையீரல் அழற்சியின் ஆரம்பத்தில் அதைப் போல் மேலாக குழவிகளாக நோய் அணுக்களை [illegible] உண்டாகிறது.

சளிக் காய்ச்சலைப் போலவே குளிர் வாடை பட்டால் அதனிலிருந்தும் அழற்சி ஏற்படுகிறது. நுரையீரல் உறை அழற்சியைச் சளிக் காய்ச்சலிலிருந்து தனியாகப் பிரித்துச் சொல்வது முதலில் முடியாது. இரண்டிலும் சில இடங்கள் வலியும் பொறுக்க முடியாமல் இருக்கும். ஆனால் நுரையீரல் அழற்சியின் வலி அதிகம் இருக்கும். ரத்தம் கலந்த கபம் வெளிவராது. குளிருடன் காய்ச்சல் மார்புவலி ஏற்பட்டு இருமலும் இருக்கும். ஆனால் கபம் இராது. திடீரென்று ஏழு நாட்களில் தொடர்ந்து விடாது.

சிகிச்சை :— மலச்சிக்கலை நீக்க வேண்டும். அடுத்தடுத்துக் கொண்டு உடம்பை சுத்தம் செய்து துடைக்க வேண்டும். அயோடின் (Tc. Iodine) நாளைக்கு இரண்டு மூன்று தடவை தடவ வேண்டும். பொட்டாசியம் அயோடைட் (Pottassium iodide) கொடுக்க வேண்டும். வலியுள்ள இடத்தில் அயோடினும் தடவ வேண்டும். ஆனால் அடிக்கடி தடவித் தோல் கொப்புளித்து விடும்படி செய்யக் கூடாது. வெள்ளைத் துணியை ஒரு வேளை தடவ வேண்டும். ஒத்தடம் காட்டுதலும் ஆளிவிதைக் களி தடவிக் கட்டுவது நல்லது. அந்தக் களியில் கற்பூரத் தைலம் (oil of Turpen-tine) கலந்து போட்டுக் கட்டுவது தைலத்தைத் தனியாகத் தடவி வருவதைக் காட்டிலும் மேலானது. மூட்டையில் உள்ளே நீர் சேர்ந்து விட்டால் தகுதி மருத்துவர்களைக் கொண்டு நீரை எடுத்து விட வேண்டும். சில வேளைகளில் இந்த நீர் சீழாகி விடும். அதற்கும் தகுதி மருத்துவர்களைக் கொண்டே மருத்துவம் செய்ய வேண்டும். வலிக்குத் தகுந்த ப்ளாஸ்திரி போடலாம். ஆனால் பல இடங்களில் வலி இருக்குமானால் அந்த அந்த இடங்களில் சிறியதாகப் போட வேண்டும். மார்பு முழுதும் போட்டுவிடக்கூடாது. மலச்சிக்கலை நீக்க கலோமெல் (Calomel) சுத்தமாய் இவை கொடுக்கலாம். வலி இருக்கும் வரையில் அதன் 1/4 டிராம் எடை, சோடிச்சாலிசிலேட்டுடன் கலந்து ஒரு நாளைக்கு ஒரு வேளை அல்லது இரண்டு வேளை கொடுக்க வேண்டும். நோய் தீர்ந்து உடம்பு தேறும் காலத்தில் வெட்டுக்கொட்டைத் தூள், நோயின் இலை சில நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். நோயின் அடையாளங்கள் மறைந்து விட்டாலும், இருதயக் கோளாறான குறிகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டு கவனித்து வர வேண்டும். மருத்துமுறை சளிக்காய்ச்சலுக்குச் செய்வது போன்றதே. பொட்டாசியம் அயோடைட் (Pottassium Iodide) மட்டிலும் கொடுத்து வர வேண்டும்.

338. சி. உருக்கிநோயம் — ராஜயக்ஷ்மா (Tuberculosis)

இந்த நோய் உருக்கி நுண்ணணுக்களால் (கிருமி) உண்டாகிறது. இந்த நுண்ணணுக்கள் மனிதனிடத்திலும், பசுமாடுகளிடத்திலும் காணப்படுகின்றன. இந்த நோயுள்ள பசுக்களின் பாலில் இவை காணப்படும். சரியாகக் காய்ச்சாத பாலைக் குழந்தைகள் குடித்தால் அவர்களுக்கு இந்த நோய் உண்டாகலாம். ஆனால் பெரும்பாலும் இந்த நோய் மனிதனுக்கு மனிதன் மூலமாகவே பரவுகிறது. கிராமவாசிகளைக் காட்டிலும் பட்டணவாசிகளுக்கு இந்த நோய் அதிகம். நகரங்களில் சுமார் நூற்றுக்குப் பத்துப் பேர்கள் இந்த நோயால் மாய்கிறார்கள்.

உட்புகும் வழி :— மூச்சு உள் இழுக்கும் பொழுது காற்றில் கலந்திருக்கும் நுண்ணணுக்கள் ஈரலுக்குள் செல்லுகின்றன. சிறு குடலில் சென்று ரத்தத்தில் சேர்ந்து நுரையீரலுக்கு வரக் கூடும். மேலும் தொண்டை, தொண்டைச் சதை இவைகளின் மூலமாகவும் உட்புகலாம்.

இம்மாதிரி உட்புகும் நுண்ணணுக்கள் ~~சக்தியுடன் உடல் காப்பாளர்களை~~ உடனே நோயை உண்டாக்குவதில்லை. நுரையீரலிலோ அல்லது உடலின் மற்ற எந்த இடத்திலோ நுண்ணணுக்கள் சக்தியுடன் உடல் காப்பாளர்களை ரத்தத்தில் சஞ்சரிக்கின்ற சிறு திரளுக்கள் (வெண்ணணுக்கள்) இவற்றைச் சுற்றிக் கொள்ளுகின்றன. இவ்விரண்டிற்கும் பெரிய போர் நடக்கிறது. இப்போரில் நுண்ணணுக்கள் சிறு திரளுக்களைக் கொன்று ஜயமடைந்தால் நோய் பரவி அதிகரித்து வெளிப்படுகிறது. அந்த வெண்ணணுக்கள் ஜயமடைந்தால் நுண்ணணுக்கள் இறந்து நோய் அழிந்து விடுகிறது. இரண்டும் சமபலன் உள்ளவையாக இருந்தால் நோய் வெடிக்கும், எந்தச் சமயத்தில் உடல் இளைத்து சக்திகுறைவு ஏற்பட்டு வெண்ணணுக்களின் பலமும் குறைகையும்

பலரும் நோயையும் தோற்கடித்துவிடுமோ, அப்பொழுது வியாதி வெளிப்படுகிறது. பட்டணவாசிகளின் நுரையீரலில் இறந்த பின் பரிசோதித்துப் பார்த்ததில் நூற்றுக்கு நாற்பத்தைந்து பெயர்களின் நுரையீரல்களில் இந்நுண்மம் கிடந்து, வெள்ளணுக்கள் வெற்றியடைந்து, அதும் வேதி இருப்பதைப் பார்த்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் உயிருடன் இருந்த காலத்தில் இவர்களுக்கு க்ஷய ரோகம் இருந்ததாகத் தெரியவில்லை. வெள்ளணுக்கள் பாதுகாப்பின் சக்தியினால் இவர்கள் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். இந்த சண்டை நடக்கும் பொழுதே உடலில் இந்த நோயை வெல்வதற்கான நச்சுக் கொல்லிகள் (antitoxins) தயாராகின்றன. நச்சுக்கொல்லிகள் வேண்டிய அளவு உண்டானால், நுண்மங்களும் அவற்றின் நச்சுகளும் மடிந்துவிடுகின்றன.

நுண்மங்களும் அதன் தோற்றமும்:—

உருக்கு நுண்மங்கள் சூடு உடல் உஷ்ணத்தில் நன்கு வளரக்கூடியவை. உஷ்ணம் 82 டிகிரிக்கு குறைந்தாலும் 107 டிகிரிக்கு அதிகமானாலும் இறந்துவிடும். சூரிய வெப்பத்தில் கொஞ்ச நேரம் இருந்தாலும் இறந்து போகும். இருட்டிலும் ஈரத்திலும் நன்கு வளரும். கொதிக்கும் தண்ணீரில் இறந்து விடும். நோயாளி துப்பும் சளியின் கோழைகளாக வெளிவரும். சாதாரணமாக மூச்சு விடும் காற்றிலும் பேசும் காற்றிலும் இருமலினால் வரும் கபங்களின் மூலம் வெளிவந்து சமீபத்திலுள்ளவர்கள் உடலிலும் உடையிலும் படிந்து விடுகின்றன. ஆனால் இவை கண்களுக்குத் தெரியா. தரையிலும், சுவரிலும் படிந்து காய்ந்த காற்றில் கலந்து மூச்சின் வழியாக உடலினுள் செல்லும். தெருவில் நடக்கும் உருக்கு நோயாளி தெருவில் கபத்தைத் துப்பினால் அது மண்ணுடன் கலந்து தூசியாக மேலே கிளம்பி மூச்சுடன் கலந்து உட்புகும். ஒரு சிறு கபத்துளி அநேகருக்கு நோயை உண்டு பண்ணும். இந்தக் கபத்தைக் காலால் மிதித்து நடந்தால் அது காலில் ஒட்டிக்கொண்டு வீட்டிற்குள் கொண்டு வரப்படுகிறது. தரையில் விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தை சுபாவமாகக் கையை மண்ணோ வாயால் சுவைக்கும்; அல்லது விரலைச் சொட்டு வாயில் வைத்துக் கொள்ளும். இவ்விதம் நுண்மங்கள் உடலுக்குள் பரவலாம்.

இருட்டு அறைகளில் கதவை அடைத்துக்கொண்டு, ஈரமானவும் இருக்கும் இடங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஏழைகள். அவர்களுக்கு நோயைத் தடுக்கக்கூடிய சக்தி மிகவும் குறைவு. அவர்களுக்கு இந்த நோய் சீக்கிரம் தொற்றுகிறது. நோய் ஆரம்பத்தில் நுரையீரலின் எல்லாப் பாகத்தையும் பிடிக்கிறதில்லை. சில சில பாகங்களைத் தொற்றிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகப் பரவுகிறது. பெரும்பாகம் நுரையீரல் அழிந்து போனாலும் உயிருக்கு மோசமில்லை. நுரையீரலின் பன்னிரண்டு (12) பாகத்தில் ஒரு பாகம் மிச்சம் இருக்குமானால் கூட உயிர் வாழ முடியும். எந்த எந்த நிலைகளில் உருக்கு நுண்மங்கள் அதிகப்படும் அல்லது குறையும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து அதை முறைப்படுத்தி இந்த நோயைத் தடுப்பதற்கான வழிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நுண்மங்களை நேரில் நுரையீரலில் பரிசோதித்து கொல்ல முடியாவிட்டாலும் உடலின் இயற்கைப் பாதுகாப்பை அதிகரித்துத் தடுக்கவும் நோயின் பலத்தைக் குறைக்கவும் முடியும்.

நோய் பரவும் முறை:—

நுண்மங்கள் உடலில் எங்கே சென்று தங்கினாலும், உடனே அங்கு ரத்தத்தில் இருக்கும் வெள்ளணுக்கள் சென்று அவற்றைச் சுற்றிக் கொண்டு விடும்.

இந்தப் போர் நடந்து கொண்டிருக்கும் இடம் சுற்றுக் கணுக்கட்டுப் பகுதிகள் போன்று காணப்படும். நுண்ணங்கள் அதிகம் இல்லாமல் பலக்குறைவாக இருந்தாலும், அவை வெள்ளையணுக்களால் கொல்லப்பட்டு, அந்தப் போர்க்களம் சுணம் ஆகி, இறும்பாகிச் சுருங்கி விடும். அதற்கு நுண்ணங்கள் அதிகப் பலமுள்ளவையாய், வெள்ளையணுக்கள் சக்தி குறைவாக இருந்தால் நோய் அதிகரித்து, அந்த இடங்கள் புண்ணாகி, சீழாக மாறி விடுகிறது. நுரையீரலில் இருக்கும் இது ரத்தக் குழாய்களில் நுண்ணங்கள் தங்கினால் அங்கு புண் உண்டாகித் துவாரம் ஏற்பட்டுவிடும். அப்பொழுது ரத்தம் நுரையீரலினின்று வெளிவரும். நுரையீரலின் இழையங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து வர வர, சிறுத்துப் பைகள் ஒன்றோடொன்று சேர்ந்து பெரும் பைகளாக மாறி, ஈரல் சல்லடைக் கண் போல ஆகி விடும். நுண்ணங்கள் ஈரலில் இருந்து விஷத்தோடு மட்டும் நிற்பதில்லை. நச்சு உண்டாக்கிக் கொண்டும் இருக்கிறது. இந்த நச்சு உடலில் பரவிப் பலவிதமான குறிகளை வெளிப்படுத்துகிறது. காய்ச்சல், வேர்வை, உடல் இளைத்தல், பலக்குறைவு, பசியின்மை இவையெல்லாவற்றுக்கும் இந்த நச்சு காரணம். சில சமயங்களில் நோய் நல்ல காய்ச்சலுடன் ஆரம்பிக்கும். மற்றும் சில வேளைகளில் நுரையீரலின் ரத்தப் பெருக்கு, நுரையீரல் உறை அழற்சி, சுக்கிலான் இருமல் இவைகளுடன் துவக்கும். ஒரு குறைகளையும் காண்பிக்காமல் உள்ளூர இருந்துக் கொண்டு, மிகவும் அதிகரித்து கடைசியாகக் கண்டுபிடிக்க முடியாத பொழுது முடிந்தாலும் வெளியாகக் கூடும்.

குறிகள்: காய்ச்சல், தூங்கும் பொழுது வேர்வை, அசதி, பசியின்மை, பலக்குறைவு, உடல் எடை குறைதல், தொண்டைக் கம்மல், நெஞ்சுக் கரகரப்பு, இருமல், வயிற்றுவலி இவையாவை காணப்படும்.

நுரையீரலினின்றும் ரத்தம் பெருகுதல்:—

இது முக்கியமான ஒரு குறி. ஆதியில் நோய் ஆரம்பத்திலும், மத்தியிலும் கடைசியிலும் வரலாம். நோய் ஆரம்பத்தில் இந்த அடையாளம் தோன்றுவது நோயாளிக்கு நலம். சீக்கிரம் சிகிச்சை ஆரம்பிக்க முடியும். அவ்வளவுக்கு அவ்வளவு நோய் குணமடையும். கபத்தில் கலந்து வரும் ரத்தம் ஒரு துளியிலிருந்து அரைக்கால் அல்லது கால் படி அளவில் வரலாம். நுரையுள்ளதாயும் நல்ல சிவப்பாயும் இருக்கும். ரத்தம் ஒரு தடவையோடு நின்று விடுவதில்லை. இரண்டு மூன்று நாட்கள் வரை இருமும் பொழுதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கும். சிவப்பாய் நுரையுடன் கலந்திருப்பது ஈரலிலிருந்து வருவதின் அடையாளம்.

நுரையீரல் உறை அழற்சி:—

ஆரம்பத்தில் முப்பது சதவீத நோயாளிகளுக்கு நுரையீரல் அழற்சியுடன் இந்த நோய் ஆரம்பிக்கிறது. நுரையீரல் அழற்சி கண்டவுடன் இது டி.பி. நோய்க்கு ஆரம்பமாக இருக்கலாம் என்பதை மறக்கக் கூடாது. பெரும்பாலும் உறைக்குள் நீர் பல நாட்களுக்கு வெளியில் தெரியாமல் இருக்கலாம். அதனால் பலவீனமும் பசியின்மையும் இருக்கும். மாலை சாயங்கால நேரத்தில் உடல் சற்றுச் சூடாக இருக்கும். இதைக் காய்ச்சல் என்று சொல்லுவது வழக்கம். லேசான இருமல் காலையிலாவது மாலையிலாவது இருக்கலாம். இருந்தாலும் நோயாளி கவனிக்கக் கூடிய அளவு இருக்க மாட்டாது. உடல் இளைத்து வரும்.

இருமல்:— சாதாரணமான ஓர் அடையாளம். ஆரம்பத்தில் கபம் வரமாட்டாது. சில நாட்களுக்குப் பிறகு காலை நேரத்தில் சுத்தக் கபம் வரும். பிறகு நோய் அதிகரிக்க அதிகரிக்க, கபம் ஏராளமாக வரும். அதில் இரத்தமும் உண்டாகும். மூச்சு விடுவதில் சிறிது கஷ்டம் ஏற்படும். வேகமாக நடந்தாலும் வேலை செய்தாலும் மூச்சு விடுவது அதிகக் கஷ்டமாகும். இந்த நோய் குரல்வளைக்குப் பரவினால் தொண்டைக் கம்மல் உண்டாகும். மார்வலி தோன்றுகிறது. பல நாள் சென்ற பிறகு நுரையீரல் உறை மார்புடன் ஒட்டிக் கொண்டு மூச்சு விடும் பொழுது வலி உண்டாகும். ஆனால் வலி அதிகம் இராது.

காய்ச்சல்:— தினசரி சாயங்கால வேளைகளில் 100° டிகிரி வரையில் உடல் உஷ்ணம் ஏறும். இந்தக் காய்ச்சல் நாட்பட்ட நோய்களில் தான் இருக்கும். நோய் தீவிரமானதாக இருந்தால் காய்ச்சல் அதிகம் இருக்கும்.

342 உடல் உருக்குதல்

நாளுக்கு நாள் உடல் இளைத்துக் கொண்டும், எடை குறைந்து கொண்டும் போகும். இரவில் படுத்தாலும், பகலில் படுத்தாலும், தூக்கத்தில் வேர்வை கொட்டி அடித்தாலும், சும்மாக இருந்தாலும் வேர்வை ஏராளமாக உண்டாகும். உருக்கு நோய் நுரையீரலில் மட்டும் வரலாம், அல்லது மற்ற அவயவங்களிலும் காணப்படலாம். குடல்களிலும், முழங்கால், இடை, மணிக்கட்டு, முதுகெலும்பு இவைகளிலும் ஏற்படலாம். முதுகுத்தண்டு எலும்பு, உடல் இணைப்புகளிலும் உண்டாகக் கூடும். இனி, இந்த உருக்கு நோய் இரு விதமாக இருக்கலாம் என்று தெரிந்து கொள்ளலாம்

(1) தீவிரமான உருக்கு (acute) (2) நாட்பட்ட உருக்கு (chronic)

(1) தீவிரமான உருக்கு:— திடீரென்று ஏற்படும். மற்ற இடங்களில் நாட்பட்ட உருக்கு நோய் உண்டாகி, அதனின்றும் நுண்ணணுக்கள் ரத்தத்தில் கலந்து நுரையீரல் முழுவதும் பரவி விடும். அநேகமாய் இதனின்று நோயாளி தப்பிப் பிழைக்கிறதில்லை. நான்கு ஐந்து வாரங்களுக்கு மேல் உடல் தாங்குகிறதில்லை

குறிகள்:— ஒரு முறைக்கும் கட்டுப்படாத அதிகமான காய்ச்சல், நாடி வேகம் அதிகரித்தல், அதிகமான பலக்குறைவு, நீலம் பாரித்த முகம் இவை காணப்படும். மூச்சு நிமிஷத்திற்கு 60-70 வரையில் விடுவார்கள். இருமல் அதிகம். கபம் குறைவு, சில சமயங்களில் ரத்தம் கபம் கலந்திருக்கும். டைபாயிடு (Typhoid) காய்ச்சல், குலாய்ச் சளிக் காய்ச்சல் இவைகளோ என்கிற சந்தேகம் உண்டாகலாம்

(2) நாட்பட்ட உருக்கு:— பெரும்பான்மையான உருக்கு நோய் இந்த வகையைச் சேர்ந்தது. சிறுகச் சிறுக ஒன்றன் பின் ஒன்றாக் குறிகள் வெளிப்படும். காங்கை, சோர்வு, உடல் இளைப்பு, எடை குறைவு, இருமல், ரத்தம் வெளிப்படுதல், அணுக்களின் நச்சுக் கலப்பினால் அதிகக் காய்ச்சல், கபம், தொண்டைக் கம்மல், பசியின்மை, பேதி, இவைகளெல்லாம் படிப்படியாக வந்து உடலின் எதிர்ப்பு சக்தி குன்றத் தசைகள் மெலிந்து உயிர் போய் விடும்.

நோயின் போக்கு:— இந்த நோய் குணப்படுத்தக் கூடியது. ஆகையால் இந்த நோயின் குறிகளைக் கண்டவுடன் தாமதித்து விட வேண்டியதில்லை

சிகிச்சைக்குள்ள பேர்வழிகளை உத்ஸாகத்துடனும் அன்பு உண்டாகும்படியும் பொறுமையுடனும் நடத்த வேண்டும். செய்து வரும் தொழிலை, சிறுப்பான வேலைகளை, ஒன்று அல்லது இரண்டு வருஷத்திற்கு மாற்றும் திருத்த வேண்டும். திரையிலில் பெரும்பாகம் விட்டாலும் ஓய்வடைந்த பிறகு தொழில் செய்ய முடியும். நோயாளிகளைச் சோதனை செய்து கணக்கெடுத்த பொழுது (மருத்துவம் செய்துக் கொண்டவர்கள், கொள்ளாதவர்கள் இரண்டும் சேர்த்து) நூற்றுக்கு 29 பெயர்கள் இரண்டு வருஷங்களுக்குள் இறந்து விட்டார்கள். நூற்றுக்கு எட்டுப் பெயர்கள் பத்து வருஷத்திற்கு அப்புறம் உயிருடன் இருந்தார்கள். இந்த நோய் இள வயதுக்குள்ளவர்களுக்கு வந்தால் அதிகக் கெடுதலைச் செய்யும். வயது முதிர்ந்தவர்களுக்கு அதிகம் வருவதில்லை. வந்தாலும் அதிகக் கெடுதலை உண்டு பண்ணுகிறதில்லை. காய்ச்சல் அதிகம் இருந்தால் நோய் கடுமையாக இருக்கும். அதிகக் காய்ச்சலாகவும், உள்ள சூட்டுக்குக் குறைவாகவும் நாடி மாறி மாறி இருக்குமானால் அது நிச்சயம் மரணம் ஏற்படுவதற்கு அறிகுறி. நாடி உள்ளதற்கு மேல் வேகமாகவே அடித்துக் கொண்டிருந்தாலும் கெடுதல். மருத்துவம் செய்தும் சரியான குணம் இல்லாவிட்டால் நோய்க்குச் சிகிச்சை செய்வதால் பிரயோஜனம் இல்லை.

344. நோயினின்று அபயம் (Immunity)

நாகரிகமற்றவர்கள் என்று சொல்லப்படுகிற காட்டு மனிதர்களுக்கும், மலைகளின் உச்சியில் வசிப்பவர்களுக்கும், இந்த நோய் வருகிறதில்லை. இந்த வெளியும், சுத்தமான காற்றும், கவலையற்ற வாழ்வும் பெற்றிருக்கும் அந்த ஜாதியார்களுக்கு அவர்கள் வாழ்வு இயற்கையோடு இணைந்து அமைந்திருப்பதால் இந்த நோய் வருகிறதில்லை. அவர்களிடமும் சிலருக்கு உருக்கி நோய் துண்ணங்கள் காணப்படலாம். ஆனால் அவை நோய் உண்டு பண்ணச் சக்தியற்றவையாக இருக்கும்.

பட்டணவாசிகளைக் காட்டிலும் கிராமவாசிகளுக்கு இந்த நோய் குறைவு. கிராமத்தில் இருக்கும் சுத்தமான காற்றும், வெளிச்சமும், தேக உழைப்பும், வாழ்வில் போட்டியிட்டுப் பெருகிவிட்டும் கவலை அதிகம் இல்லாமலிருப்பதும் காரணமாகும். இந்த கிராமவாசிகள் பட்டணங்களில் வந்து இந்த நோய் கண்டால் பட்டணவாசிகளைக் காட்டிலும் சீக்கிரமாக மரித்து விடுகிறார்கள்.

பட்டணவாசிகளுக்கு உருக்கி நோய் துண்ணங்கள் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக உடலில் சென்று அவை எதிர்ப்பதற்காக உடலில் ரத்தக் கொல்லிகள் உண்டாகி உண்டாகி ஒரு பாதுகாப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பாதுகாப்பானது கிராமவாசிகளிடத்தும் மலைவாசிகளிடத்தும் இல்லை ஆகையால் இவர்கள் நோயை எதிர்த்துப் போராட முடியாமல் இருக்கிறார்கள். பட்டணங்களில் சுகவாழ்விற்கு உரிய வசதிகளுடன் வசிக்கும் பொருள் படைத்தவர்கள் இந்த உருக்கி நோயை எதிர்க்கச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். கஷ்டம் கஷ்டமாக வறுமையில் ஈடுபட்டு, கஷ்ட வாழ்வில் நெருக்கடியான இருக்கைகளிலும், சிறிய இருட்டறைகளிலும் வசிப்பவர்களைக் காட்டிலும் கூடத் தாங்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

முடிவில் இதனின்றும் நாம் அறிந்து கொள்ளக் கூடியது என்னவென்றால் உருக்கி நோய் பரவியிருக்கும் இடத்தில் வசித்து, அதை எதிர்த்து நோய்

நோய் வராமல் சுகமாக இருப்பவர்களுக்கு இந்த நோயைத் தாங்குவதற்கு அதிகச் சக்தி இருக்கிறது என்பதுதான். இயற்கை வாழ்வின் வளர்ந்து வரும் மனிதர்களிடத்து உருக்கி நுண்ணங்கள் செயலற்றவையாகி விடுகின்றன. இயற்கைக்கு விரோதமான முறைகளில் வாழ்வு நடத்த வேண்டிய பட்டணவாசிகளிடத்தில் இந்த நுண்ணங்கள் நோயை உண்டு பண்ணுகின்றன. இவற்றின் வேகத்தைக் குறைத்து நோயைக் குணப்படுத்தும் முறைகளில் இயற்கை வாழ்வைத் திரும்பவும் அளிப்பதுதான் சரியான முறை என்பது இதனின்று நன்குப் புலப்படும். கவலையால் மன அமைதியற்றுக் கவலை கொண்டவர்களுக்கு இந்த நோய் சீக்கிரம் தொற்றுகிறது. இந்த நோயைக் குணப்படுத்துவதற்காவது, தடுப்பதற்காவது சாந்தமான மன அமைதி ஏற்படுவது அவசியம். ஆனால் தற்காலம் சமூக அமைப்பு இருக்கும் நிலையில் இது முடியுமா என்பதுதான் யோசனை. எனினும் வேறு வழி இல்லாததால் கூடிய மட்டும் மன அமைதியை மதக் கொள்கையினாலோ தெய்வபக்தியினாலோ அல்லது புத்தியினாலோ தேடிக் கொள்வது இந்த நோயைத் தடுப்பதற்கு ஒரு முக்கிய சாதனம்.

நோயைத் தடுக்கும் முறை:— இது தொற்றுநோய் என்று முன்பே கூறியுள்ளோம். அதற்காக மற்றத் தொற்று நோய்களைப் போல உடனே நோயாளியை அப்புறப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. வீட்டிலேயே நோயாளி இருக்க வேண்டுமானால் அதற்குத் தகுந்த பாதுகாப்புடன் அவனை வைத்திருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் இந்த நோயும் பரம்பரையாகத் தொடர்ந்து வருவதாக நினைக்கிறார்கள். இது தவறு. ஒவ்வொருவரும் தனித்தனியாகவே இந்த நோயைச் சம்பாதிக்கிறார்கள். இது தாயின் கர்ப்பத்தைத் தொட்டு வருவதில்லை. ஆனால் உருக்கி நோயுள்ள தாய் குழந்தைகளைக் கையாண்டு வருவாளேயானால் அந்தக் குழந்தைகளுக்கு அந்தத் தாயினின்றும் நோய் பரவலாம்.

(1) நோயாளிகளைத் தனியாக வைக்க வேண்டும்.

(2.) குடிக்கும் பசுவின் பாலைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும். காய்ச்சாத பாலில் உருக்கி நுண்ணங்கள் நிறைய உயிருடன் இருக்கும். அதைக் குடிக்கக் கூடாது. காய்ச்சினால் நுண்ணங்கள் இறந்து விடுகின்றன.

(3.) நோயை எதிர்க்கக் கூடிய உடலின் சக்தியை அதிகரிக்க வேண்டும். அதாவது நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில் வசிக்க வேண்டும். சூரிய வெப்பத்திலும், வெளிச்சமுள்ள இடத்திலும் இந்த நுண்ணங்கள் விருத்தியடைவதில்லை.

(4) தூசி பரவும் தொழில் செய்கிறவர்களுக்கு நல்ல பாதுகாப்பு வேண்டும். கரிச் சுரங்கங்களில் வேலை செய்பவர்கள், கல்வெட்டுதல், உலோகங்களை வெட்டித் தேய்த்தல் - இம்மாதிரியான தொழிலாளர்களின் ஈரல்களில் நுண்ணங்கள் சீக்கிரம் வளரும். இந்த வேலைக்காரர்களுக்கு நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள இடங்களில் வேலை செய்ய வசதி வேண்டும்.

(5) தரமானதும், சத்து இல்லாததுமான உணவை நாள்பட்டு உண்பதால், நுண்ணங்களை எதிர்ப்பதற்கான சக்தி உடலில் இல்லாமல் போய் விடுகிறது

இதை மருத்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

(6.) உடலின் பலத்தைக் குறைத்துப் பல வகை நோய்கள் வந்து சேரலாம். உடலின் எதிர்ப்புச் சக்தி குறைந்திருக்கும் காலத்தில் இந்த உபத்திரவங்கள் பலவாம். கட்டம்மை, கக்குவான் இரண்டும் நுரையீரலைத் தாக்கிப் பலத்தைக் குறைத்து விடும். இதை ஒட்டி உபத்திரவங்கள் தோன்றும். சளிக்காய்ச்சல், நிமோனியா, க்ஷயரோகம் இவைகள் பல தீமைகளை உண்டாக்கும். இவற்றைத் தனித்துக் கவனிக்க வேண்டும்.

(7.) உபத்தி நோயுள்ளவனிடத்தினின்று வெளிப்படும் கபத்தில் நோய்க்குக் காரண அணுக்கள் நிறைந்திருக்கின்றன. அந்தக் கபத்தினால் மற்றவர்களுக்கு நோய் அணுகாமல் தடுக்க வேண்டும். படுக்கையில் இருக்கும் நோயாளியின் கோழையை மூடியுள்ள சிறு பாத்திரத்திலாவது அல்லது மூடியுள்ள சட்டியிலாவது துப்பும்படி செய்ய வேண்டும். கோழையில் ஈக்கள் மொய்க்காமல் தடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் சேரும் கோழையை உமியுடன் கலந்து எரித்து விட வேண்டும். நோயாளிகள் படுக்கையிலில்லாமல் நடமாடிக் கொண்டிருந்தால் அவர்கள் கோழையை ஒரு சிறு காகிதத்தில் துப்பி அதை மடித்து ஒரு காகிதப் பையில் போட்டுக் கொண்டு, சேரும் காகிதத் துண்டுகளைக் காகிதப் பையுடன் எரித்து விட வேண்டும். இந்தச் சட்டியிலோ பாத்திரங்களிலோ துப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அப்பொழுது அந்தப் பாத்திரத்தில் கொதிக்கும் நச்சுக் கொல்லியை (பினைல் [illegible]) தண்ணீரில் சமமாகக் கரைத்து வைத்து அதில் துப்ப வேண்டும். தினந்தோறும் அதை ஆழமாகக் குழிவெட்டி மூடிவிட வேண்டும்

(8) நோயாளியின் தேகம், வாய், பற்கள் இவைகளைச் சுத்தமாக வைக்க வேண்டும்.

(9) நோயாளியின் அறையில் காற்றோட்டமும் வெளிச்சமும் வேண்டும். வீட்டில் அறைகள் இல்லாவிட்டால் வெளித் திண்ணையில் படுப்பது நலம். படுத்திருக்கும் இடத்தில் சூரிய வெளிச்சம் கொஞ்ச நேரம் பட வேண்டும். தரையைக் களிமண்ணையும் அடுப்புக் கரித் தூளையும் கலந்து தினசரி மெழுக வேண்டும்

(10) நோயாளியின் பாத்திரம், உண்ணும் தட்டு, உடுக்கும் உடை இவற்றைத் தனியாக வைக்க வேண்டும். தினந்தோறும் தண்ணீரில் கழுவித் துவைத்து ஒரு மணி நேரமாவது நல்ல வெயிலில் காய வைக்க வேண்டும்.

சிகிச்சை:— அநேகமாய் நோயைத் தடுக்கும் பாதுகாப்புகள் சிகிச்சைக்கும் வேண்டும். இயற்கை வாழ்விற்கு எவ்வளவு அளவு ஒத்திருக்க முடியுமோ அவ்வளவு பின்பற்ற வேண்டும். நோயாளி படுக்கும் இடத்தில் சூரிய வெளிச்சம் பரவ வேண்டும். நல்ல காற்று இருக்க வேண்டும். சத்துள்ளவையும் சுலபமாகச் செரிக்கக் கூடியவையுமான பால், கோழி முட்டை, பழவகைகள், கீரை, மோர், வெண்ணெய், நெய் முதலியவற்றை உணவாகக் கொடுக்க வேண்டும்.

குளிர்க்காற்று படக் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைக்கக் கூடாது. நோயாளியின் உடலை மூடினாலும் மூடலாம். காற்றையும் நோயாளியின் முகத்தையும் மூடக் கூடாது.

நோயாளிக்கு ஓய்வு அவசியம். ஓய்வு கொடுத்தால் காய்ச்சல், காங்கை இவை குறையும். உடலுக்கு ஓய்வு போலவே மன அமைதியும் இருக்க வேண்டும்.

உறக்கம்:— இந்த நோய் நல்ல பலனைக் கொடுக்கும். பகலிலும் இரவிலும் எவ்வளவு நேரம் தூக்கம் உண்டாகுமோ அவ்வளவு தூங்க வேண்டும். காய்ச்சல் குறைந்து உணவு சமிக்கச் சக்தி வந்த பிறகு தினந்தோறும் தேகப்பயிற்சி நோயாளியின் சக்திக்கு தக்கபடி செய்ய வேண்டும்.

இதற்கு தினசரி நடப்பது தான் நல்ல முறை. நடந்த பிறகு காங்கை அதிகப் படக்கூடாது. தினந்தோறும் நடக்கும் தூரமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க வேண்டும்

சீதோஷ்ண நிலை:— உலர்ந்து காய்ந்திருக்கும் பூமி நல்லது. ஆனால் எல்லோரும் சுகவாசத்திற்காக வேறு இடம் போக முடியாது. அப்படி போக இடம் இல்லாதவர்கள் இருக்கும் இடத்தை ஈரம் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் இந்த நோயைத் தீர்ப்பதற்கு தனி மருந்து ஒன்றும் இல்லை. நோயாளியின் பலத்தை அதிகரித்து, அவன் உடலின் சக்தியின் தன்மைகளைக் கொள்ள வேண்டும்

348. மருந்துகளும் அவற்றின் முறைகளும்

நெஞ்சிலும் தொண்டையிலும் இந்த நோய் பரவுதலால் இந்த இரண்டு இடங்களிலும் சஞ்சரிக்கும் தன்மைகளை நீக்க வேண்டும். நச்சுக் கொல்லிகளை நோயாளியின் மூலம் மூச்சில் கலந்து உள்ளுக்கு இழுத்து விட வேண்டும். கிரியசோட் யூகலிப்டஸ் தைலம் இவற்றில் ஒன்றைக் கொதிக்கும் தண்ணீரில் கொஞ்சம் போட்டு அந்த ஆவியை மோர்ந்துப் பார்க்க வேண்டும். இரிய துணிகளில் இவற்றை நனைத்து நோயாளியின் அறையில் கயிற்றில் கட்டி தொங்க விட்டு வைக்க வேண்டும். அயோடினும் நல்ல பயன் கொடுக்கும். வாயால் இதை முறை செய்து வர வேண்டும் கிரியசோட் (Creasote) தைலத்தை ஒரு சொட்டுத் தண்ணீரில் போட்டு ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வேண்டும். வாரந்தோறும் ஒரு சொட்டு அதிகப்படுத்தி ஒரு வேளைக்கு 5-10 சொட்டு வரையில் கொடுக்கலாம். வெள்ளைப் பாஷாணம் 1/60 கிரெயின் ஒரு நாளைக்கு இரண்டு வேளை ஆகாரத்திற்குப் பிறகு கொடுக்க வேண்டும்.

காய்ச்சல்:— இந்த நோய் தலைமை அடையாளம் காய்ச்சல் குறைய வேண்டும். மருந்துகள் குணம் செய்கின்றனவா இல்லையா என்பதைக் கூட காய்ச்சல் குறைவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால் மாலையில் Thermometer நாக்கின் அடியில் வைத்துப் பார்க்க வேண்டும். இல்லையேல் மலத்துவாரத்தில் வைத்துப் பார்க்கலாம். அக்குளில் வைத்துப் பார்த்தால் சரியான சூட்டைக் காண்பிக்காது. கொயினா இரண்டு கிரெயின் தினசரி இரண்டு வேளை கொடுத்து வந்தால் காய்ச்சலுக்கு நல்லது

தூக்கத்தில் வேர்வை நீங்க:— நல்ல காற்றில் படுத்திருக்கும் நோயாளிக்கு வேர்வை அதிகம் இராது. வேர்க்கும் உடலைத் தினசரி கடுகெண்ணெய் வைத்துத் தேய்த்துத் துடைத்து, உடுக்கும் உடைகளை நன்கு துவைத்து வெயிலில் காய வைத்து உடுக்க வேண்டும். உள்ளுக்கு ஊமத்தை இலைத்தூள் இரண்டு கிரெயின் கொடுத்தால் வேர்வையை அடக்கும். இதைக் காட்டிலும் நல்ல காற்றில் படுத்து உறங்குவது மேலானது.

கட இருக்கிறவர்களை மற்றொரு புறத்தில் தனித்து இருந்து இரண்டு நாட்களும் [illegible] கவனித்து வர வேண்டும். [illegible] கொல்லிகள் [illegible] புகைப்படம் எண்ணிக்கையைப் பற்றின் [illegible] மோதிர பார்க்கவும் வேண்டும்.

சிகிச்சை:— வெளிச்சம் கண்களைக் கடும். ஆகையால் வெளிச்சம் இல்லாமல், நல்ல காற்று ஓட்டம் [illegible] நோயாளி இருக்க வேண்டும். [illegible] வேளை நல்ல [illegible] கொண்டு [illegible] வேண்டும். நல்ல வைத்தியர்களைக் கொண்டு [illegible] அதிகமான [illegible] செய்ய வேண்டும். [illegible] மருந்து (மூளைக் காய்ச்சல் — Antimeningitis Serum) அதை [illegible] மூலம் செலுத்த வேண்டும். [illegible] பொட்டாசியம் புரோமைட் கொடுக்க வேண்டும். [illegible] [illegible] பற்றிக் கூறுக

353. [illegible] உணவின் [illegible] நோய் [illegible].

இந்த [illegible] நோய் [illegible] காய்ச்சல் 101° - 103° டிகிரி வரை [illegible]. [illegible] உணவு. [illegible] பல் [illegible] கொண்டு இருப்பார்கள். [illegible] நல்ல [illegible] கொடாமல் [illegible]. [illegible] ஒரு புதிய [illegible].

சிகிச்சை:— பொட்டாசியம் [illegible] அதிகமான [illegible] கொடுக்க வேண்டும். [illegible] உணவு [illegible] செய்வது போன்றவை.

355. இருதயமும் அதன் வேலையும் நோய்களும். (அத்தியாயம் 13)

இருதயம் மெதுவான சவ்வினால் மூடப்பட்டிருக்கிறது. அதற்கு இருதய உறை (Pericardium) என்று பெயர். இருதயம் ஒரு நீர் இறைக்கும் (water pump) போன்ற அவயவம். அதில் [illegible] (piston) [illegible]. இரண்டு [illegible] கட்டப்பட்டிருக்கின்றன. வலது புறத்தின் இரண்டு பாகங்களுக்கும் ஒரு [illegible] பிரிக்கப்பட்டிருக்கிறது. வலது புறம் மேல் உள்ள அறைக்கு வலது மேல் அறை (auricles) என்றும் அடியில் உள்ள அறைக்கு வலது கீழறை (Ventricles) என்றும் பெயர். இந்த இரண்டு அறைகளுக்கும் நடுவில் [illegible] ஒரு வால்வு (Valve) இருக்கிறது. வலது பக்கத்தின் [illegible] அமைப்பிலும் இருக்கின்றன [illegible] இடது பக்கத்தில், இடது மேலறை [illegible] (auricle) இடது கீழறை ~~(left auricle)~~ (left Ventricle) இரண்டுக்கும் மத்தியில் ஈரிதழ் வால்வு இவை இருக்கின்றன.

உடலின் அசுத்த இரத்தம் பெரு நாளங்களின் (பெரு வழி நாளம்) மூலம் வலது மேலறை (மேலறை) யில் வந்து [illegible]. அது போலவே இடது [illegible] நுரையீரலிலிருந்து சுத்தமான [illegible] இரத்தம் [illegible] நாளத்தின் (நுரையீரல் நாளத்தின்) வழியாக வந்து [illegible]. இருதயம் [illegible] இரண்டு [illegible] இரத்தம் வலது இடது [illegible] (auricles) வந்து [illegible] ~~[illegible]~~ இருதயத்தின் [illegible] இரத்தம் [illegible] (valves) [illegible] போகாமல் [illegible]. [illegible] வலது [illegible] புகப்படும். [illegible] மூன்று [illegible] வால்வு (Tricuspid valves) [illegible] இரத்தம் [illegible]. அதே சமயத்தில் இடது [illegible] பெரு நாடியின் (aorta) [illegible]. [illegible] அதனுள் [illegible] பரவுகிறது. [illegible] இரத்தம் வலது [illegible]. அது போலவே இடது [illegible] நுரையீரலிலிருந்து சுத்தமான [illegible] இரத்தம், நுரையீரல் [illegible] மூலம் வந்து [illegible]. இருதயம் [illegible] [illegible] வந்து [illegible].

அடிப்பாகம் சுருங்கும் பொழுது மேல் பாகம் தள்ளித் தொடங்கிறது. அப்படித் தள்ளித் தொடங்கும் பொழுது சத்தம் வந்து கேட்கிறது. சுருங்கும் பொழுது மேலறையிலிருந்து கீழறைக்கும் கீழறைகளிலிருந்து பெருநாடிகளுக்கும் ரத்தம் பாய்கிறது.

இருதயம் துடித்த வண்ணமுள்ளது. அதன் நுனி இடது மார்புக் காம்புக்குக் கீழ் வந்து முட்டுகிறது. அதற்கு இருதய முட்டுதல் (Heart Impulse) என்று பெயர். இது ஐந்தாவது ஆறாவது விலா எலும்புகளுக்கு மத்தியில் இருக்கக் காணப்படும். காதை வைத்துப் பார்த்தாலும் அல்லது (இருதய சோதினி) (Stethoscope) வைத்துப் பார்த்தாலும் இரண்டு சத்தம் கேட்கும். இந்தச் சத்தமும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து [illegible] ஓய்வுடன் இருக்கும். முதல் நீளமான சத்தம் [illegible] சுருங்குதலில் ஏற்படுகிறது. இரண்டாவது சத்தம் [illegible] இரு வழியடைப்பு மூடிக்கொள்வதால் உண்டாகிறது. பெரும்பாய் நாடிகள் மூலம் ரத்தம் எப்பொழுதும் இருதயத்திலிருந்து உடல் முழுவதும் இருக்கும் நாடிகளைப் [illegible] பாய்கிறது. பாய் [illegible] சிரைகளின் மூலம் [illegible] இருக்கும். சிரைகளின் மூலம் ரத்தம் இருதயத்திற்குத் திரும்பி வருகிறது. சிரைகள் [illegible] போல [illegible]. [illegible] ரத்தம் [illegible] இருக்கும். ரத்தம் இருதயத்தை நோக்கியே செல்லவேண்டிய அவசியம் இருப்பதாலும், கால் முதலிய அவயவங்களிலிருந்து உடலின் மேலே [illegible] வேண்டி இருப்பதாலும் இந்த நாளங்களில் அதற்கு உதவியாக இரு வழியடைப்புகள் (valves) இருக்கின்றன.

357. தொற்று நோய்கள் — (Infectious Diseases) (அத்தியாயம் 14)

பெருவாரிக் காய்ச்சல் — (Influenza)

சாதாரண சளியோடும் போன்ற (சளிக் கப்பு) தொற்று நோயாகும். வெகு சீக்கிரம் மற்றவர்களுக்கும், ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கும் இது பட்டணம் முழுவதும் பரவும்.

குறிகள்:— தொற்றுக் குறைவாக இருப்பின் தலைவலி, மூக்கொழுகல், தும்மல் முதலிய ஜலதோஷக் குறிகள் இருக்கும். தொற்றுக் கடுமையாக இருந்தால் மேல் கூறிய குறிகளோடு மூக்கும் தொண்டையும் அடைத்து விடும். தொண்டைக் கரகரப்பு, [illegible] உண்டாகும். தொண்டையிலிருந்து நெஞ்சுவலி, மூச்சுக் குழாய்கள், நுரையீரல் முதலிய இடங்களுக்கும் பரவி, ஆங்காங்கு அழற்சி உண்டாக்கிக் கவலைக்கிடமான நிலைக்குக் கொண்டு வந்து விடும். உடலெல்லாம் பொறுக்க முடியாத வலி, வேதனையுடன் காய்ச்சலும் 100 டிகிரி முதல் 102 அல்லது 104 டிகிரி வரையிலும் கூட இருக்கும். நாடி அதிக வேகமாக ஓட வேண்டியிருப்பதால் பலக் குறைவாகவும் இருக்கும். மூச்சும் அதிக வேகமாக விட வேண்டியிருக்கும். உடலில் உஷ்ணம், வறட்சி இவை அதிகப்படும். நாவின் [illegible] வறட்சி இருக்கும், மஞ்சள் கபம் [illegible] வெளி வரும். தொண்டைச் சதை அழற்சி, சில வேளைகளில் வயிற்றுப் போக்கு இவை இருக்கும். மூன்று அல்லது நான்கு நாட்களில் காய்ச்சல் இவை ஆரம்பித்து நாலாவது நாள் விட்டு விடும். சிலருக்கு ஏழு அல்லது பத்து நாட்கள் ஆனாலும் ஆகலாம். அநேகர் இறந்தும் விடுகிறார்கள்.

மருத்துவம்:— நச்சுக் கொல்லிகளை உபயோகப்படுத்தி, இருதயத்தைப் பலப்படுத்தி நோய்க் கண்டவுடனே காலதாமதம் செய்யாமல் மருத்துவம் செய்ய வேண்டும். அதுவும் கண்ட பொழுதே [illegible] மூக்கில் இருந்து வாய் வழியாக வெளியாக்கி மூக்கிலும் [illegible]. அப்படி [illegible], வாயைக் கொப்பளிக்கச் செய்து, மருந்து கலந்த வெந்நீரில் [illegible] மூக்கில் [illegible] வேண்டும்.

தைமால் (Thymol)	1/4	கிரெய்ன்	தண்ணீர் இரண்டு அவுன்ஸ்
போராக்ஸ் (Borax)	3	கிரெய்ன்	
சோடா உப்பு. (Sodii bicarb)	5	கிரெய்ன்	

மூக்கில் இருக்கும் பொழுது, வாயைக் கொப்பளிக்கும் பொழுதும் மருந்தைக் கொஞ்சம் விழுங்கி விட்டாலும் பாதகமில்லை. இதை மணிக்கு ஒரு தடவை செய்ய வேண்டும். அதுவன்றி [illegible] மருந்தையும் [illegible] மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுத்து வர வேண்டும்.

சிங்கோனா	Chinchona	1 1/2	கிரெய்ன்
சோடா பென்சோ	Soda benzoate	2	கிரெய்ன்

அம்மோனியம் குளோரைட்	Ammonium chloride	2 கிரெயின்
தைமால்	Thymol	1/2 கிரெயின்

இதன் சேர்த்து மருந்தை ஒன்று இரண்டு மணிக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும்.

இந்த முறை சொன்னபடியும் நோய் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தொடங்கிவிட்டால் மேற்சொன்ன [illegible] நீங்கி விடும். உடம்பின் வலிக்குச் சோடா ஸாலிஸிலேட்டும் (Soda Salycylate) சின்கோனாவும் (Chinchona) சேர்த்து 5-10 கிரெயின் வரையில் ஒரு வேளைக்கு நான்கு வேளை கொடுத்தால் வலி குறைந்து விடும். அம்மோனியம் குளோரைட்டும் (Ammonium chloride). சோடியம் பென்சோவேட்டும் (Sodium Benzoate) கபத்தை இளக்கி சுலபமாக வெளிப்படுத்தும். தலைவலி பொறுக்க முடியாவிட்டால் காபி ஆஸ்பிரின் (Cafiaspirin) நான்கைந்து மாத்திரை ஒன்றிரண்டு வேளை கொடுக்கலாம். மலச்சிக்கலுக்குக் கலோமெல் (Calomel) [illegible] கொடுக்க வேண்டும். நோயாளி படுக்கையிலே இருக்க வேண்டும். இந்த நோய் [illegible] பல [illegible] கொடுக்கும். [illegible] [illegible] [illegible] சிகிச்சையை செய்ய வேண்டும். [illegible] 30 கிரெயின் ஒரு வேளைக்கு மூன்று வேளை கொடுத்து வர வேண்டும். [illegible] [illegible] உள்ளிப்பூண்டு [illegible] (ulat kambal) [illegible]. [illegible] 1 மணிக்கு 60 [illegible] ஒரு வேளைக்கு இரண்டு வேளைக்குக் [illegible] கொடுக்க வேண்டும். [illegible] நாக்கின் [illegible] வேண்டும். நோயின் [illegible] சின்கோனாவையும் (Cinchona) அதிகமாகக் கொடுக்க வேண்டும். [illegible] [illegible] [illegible] கொடுக்க வேண்டும். உணவுக்குப் பால், கஞ்சி, காபி இவை கொடுக்கலாம்.

மூக்கு ஒழுகத் தொடங்கியதும் நோயாளியைத் தனிப்படுத்தி, காற்றோட்டமுள்ள அறையில் வைக்க வேண்டும். நோய்க்காப்பாளரைத் தவிர மற்றவர்கள் அருகில் நெருங்கக் கூடாது. அவர்கள் மூக்கிலும், வாயிலும், [illegible], [illegible] [illegible] பட்டால் நோய் தொற்றிக் கொள்ளக் கூடும்.

உலகம் முழுவதும் ஒரு தடவை இந்த நோய் பரவியிருக்கும் பொழுது. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. வாய், மூக்கு, [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] வாய்க்கும், மூக்குக்கும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible].

359. டிப்திரியா (Diphtheria)

தொண்டையில் உண்டாகும் தொத்து வியாதி. முக்கியமாகத் தொண்டை, மூக்கு [illegible] குழந்தைகளின் [illegible] பாதிக்கிறது. [illegible] [illegible] நோய்க் கிருமிகள் [illegible] [illegible] [illegible] [illegible] வெள்ளை நிறமான மெல்லிய [illegible] [illegible], தொண்டையில் படர்ந்து கொண்டிருக்கும். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இரத்தத்தில் கலந்து உடலில் நோயின் [illegible] உண்டு பண்ணுகிறது. [illegible] [illegible], பலவீனம், [illegible], [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] உண்டு பண்ணுகிறது. காய்ச்சல் 103 டிகிரிக்கு மேலும் இருக்கும். [illegible] காய்ச்சல் இல்லாமலே இந்த நோய் வருவதும் உண்டு.

ஒரு நோயாளியிடமிருந்து மற்றவர்களுக்கு [illegible], [illegible], கபம், [illegible], வாய்நீர் [illegible] [illegible] [illegible] மற்றவர்களுக்குப் பரவுகிறது. இந்த நோய்க்குத் [illegible] [illegible]. [illegible] [illegible], நாய், பூனைகளின் [illegible] [illegible] [illegible] [illegible]. தொண்டை [illegible], [illegible], தொண்டைச் [illegible] [illegible]

சொத்தைப் பற்கள் உள்ள இருப்பவர்களுக்கும் இந்த நோய் சீக்கிரம் பரவுகிறது. குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும், இந்த நோய் அதிகமாகப் பரவுகிறது. இரண்டு வயது முதல் ஆறு வயது வரையில் உள்ளவர்களில் மரணம் அதிகம்.

குறிகள்:— விழுங்கக் கஷ்டமாக இருப்பதுதான் முதல் குறி. பிறகு தொண்டையைப் பார்த்தால் சிவந்து இருக்கும். தொண்டைச் சதையின் மேல் வெள்ளை சவ்வு படர்ந்திருக்கும். முதலில் இந்த வெள்ளை சவ்வு, உள்நாக்கு தொண்டையின் இருபுறம் டான்ஸில்களில் படரும். இந்த வெள்ளை சவ்வும் ஒன்றிரண்டு நாளில் அழுக்கு மஞ்சள் நிறமாக மாறிவிடும். இந்த சவ்வை எடுத்து விட்டால் அந்த இடத்தில் ரத்தம் கசியும். பிறகு சில நாட்களில் மறுபடியும் சவ்வு உண்டாகிவிடும். இந்த சவ்வு மூக்கிலும் தொண்டையிலும் பரவும். தொண்டையின் பக்கங்களில் அதிக வீக்கம் காணப்படும். அதிலிருந்து மூச்சுக்குழாய்க்குப் பரவி மூச்சு விடுவது கஷ்டமாகி விடும். நிணநீர்க் கட்டிகள் வீங்கி உடல் வலியை அதிகமாக்கி விடும். நிணநீர்க்கட்டிகளின் விஷம் இருதயம் சிறுநீரகங்களுக்கு இந்த சவ்வு நாளடைவில் இருமியோ தும்மியோ வெளியாகிவிடும். நோயாளியும் சீக்கிரம் குணமடைந்து விடுவான். அப்படி இல்லாமல் நோய் கடுமையாக இருக்குமானால் இருதயம் தசை நார்ச்சிதைவு அடைந்து ஆபத்தான நிலைமைக்கு வந்து விடும். அல்லது பிறகு கடைசி நாட்களுக்கு அப்புறம் மென் அண்ணம் (Soft palate) செயலிழந்து விடும். நோயாளி மூக்கினால் பேசுவது போல இருக்கும். உணவு விழுங்க முடியாது. மூக்கின் வழியாகக் கடைசியாக உணவு வெளிவரும்.

சிகிச்சை:— இந்த நோய்க்கு மருத்துவம் தொண்டையில் செய்ய வேண்டும்.

1. டான்ஸில்களை அப்படியே மூட வைத்து வெள்ளை சவ்வையும் கரைக்க வேண்டும்.

2. உடல் வலுவைக் காப்பாற்ற வேண்டும்

3. மற்றவர்க்கு நோய் (தொற்று) பரவாமல் தடுக்க வேண்டும்.

எவ்வளவுக்கு எவ்வளவு நோயைச் சீக்கிரம் கண்டு பிடித்து மருத்துவம் செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்ல பலனுண்டாகும். வெள்ளை சவ்வைக் கரைப்பதற்குப் பப்பாளி பழரசம் மிகவும் நல்லது. முதலில் வாயை நன்றாகக் கொப்பளிக்க வேண்டும். கொப்பளிக்கும் மருந்து இங்கு சொல்லியபடி தயாரிக்க வேண்டும்

போரக்ஸ்	(பொரிகாரம்)	4 டிராம் (½ அவுன்ஸ்)	கொதிநீர் 1 பைண்ட்
தேன்		4 டிராம் (½ அ.)	20 அவுன்ஸ்

நன்றாகக் கரைத்த பிறகு ஆறவைத்து இதில் கொஞ்சம் தடவ கொப்புளிக்க பிறகு பப்பாளி ரசம் 15 சொட்டு தேன் 2 டிராம் - 120 சொட்டு - கலந்து வெள்ளை சவ்வின் மேல் ஒரு நாளைக்கு நான்கு தடவை தடவ வேண்டும். ஒவ்வொரு தடவையிலும் வாய்க் கொப்புளித்த பிறகு தான் மருந்து தடவ வேண்டும். ~~இந்த மருந்தில் பதிலாக~~ பப்பாளி ரசம் தடவிய பிறகு உள்ளிப்பூண்டு ரசமும் தடவ வேண்டும். இதை ரசத்தில் 1 டிராம் (60 சொட்டு) உள்ளுக்குக் குடிக்கக் கொடுக்க வேண்டும். உள்ளிப்பூண்டு ரசம் மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை 1 டிராம் வீதம் கொடுக்க வேண்டும். நோயாளியைப் படுக்கையில் விட்டு தொண்டையைச் சுற்றிலும் கட்டி விட்டு வெளியில் தண்ணீரில் யூகாலிப்டஸ் தைலம் (oil of Eucalyptus) கால் அவுன்ஸ் சேர்த்துக் கொதிக்கும் பொழுது வரும் ஆவியை ஒரு ரப்பர் குழாய் மூலம் அந்தக் கொதிக்கும் வாசனை போக விட்டு நோயாளியை மோக்கும் படி செய்ய வேண்டும். மூக்கிலும் அடித்தொண்டையிலும் சவ்வு படர்ந்திருந்தால் அதற்கும் மேற்கூறியபடி பப்பாளி ரசம் தடவ வேண்டும். கொடலை எண்ணெயில் லவங்க 10 சொட்டு விதம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வேண்டும்..

படுக்கையை விட்டு யாதொரு காரணத்திலும் எழுந்திருக்கக் கூடாது. இருதய பார்ச்சிசுக்கு இரு வேளை வெள்ளை மருந்து மணத்தை தான் மூன்று வேளை கொடுக்க வேண்டும்.

நோய் மென்மேலும் அதிகரித்து மூச்சடைப்பு ஏற்பட்டால் உடனே உதவி மருத்துவர்கள் தொண்டை மூச்சுக் குழாயைக் [illegible] கிழித்து, மூச்சு விடும்படி செய்ய வேண்டும்.

இந்த தொற்று நோய்க்கு நோயாளியின் ரத்தத்திலிருந்து தயாரிக்கப்பட்ட [illegible] (Antidiphtheria) ஊசியின் மூலம் செலுத்துகிறார்கள். இது இந்நோயின் கடுமையைக் குறைக்கிறது. இதைவிட மேலான சிகிச்சை இதைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை. இதற்கு ஆன்டி டிப்தீரிடிக் சீரம் (Antidiphtheritic serum) என்று பெயர்.

நோயின் இன்னல்களை மறைக்க மூலிகை கூட மருத்துவம் [illegible] செய்ய வேண்டும். காய்ச்சலையும் வேதனையையும் உண்டாக்கலாம். [illegible], கை, கால், [illegible] போன்ற உறுப்புகள் காய்ந்து வேலை செய்யாமல் போகலாம், அல்லது நின்று விடும். ஆதலால் [illegible] எளிய சத்துள்ள உணவுகள், பலத்தைக் கொடுக்கக் கூடிய மருந்துகள் கொடுக்க வேண்டும். எட்டிக் கொட்டை, வெள்ளைப் பாஷாணம், இன்கொதி, இவைகள் பலம் கொடுக்கக் கூடியவை. உடல் உறுப்புகளுக்குப் [illegible] பலத்தைக் கொடுக்கும்.

உணவு எளிதில் செரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பால், காபி, பார்லிக் கஞ்சி, பழச் சாறுகள் பானமாக இவை கொடுக்க வேண்டும். விழுங்குவதற்குக் கஷ்டமாக இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி கொடுக்க வேண்டும்.

நோய் பரவாமல் தடுப்பதற்காக :— நோயாளியை தனித்து வைக்க வேண்டும். சுத்தமான காற்றுள்ள இடத்தில் படுக்க வைத்து, கபம், எச்சில், மூக்கு, வாய், இவைகளிலிருந்து வரும் கழிவுத் துண்டுகள் [illegible] செய்து அதைத் தூய்மை செய்ய வேண்டும். நோயாளியின் உடைகளையும், படுக்கைப் பாய் முதலியவைகளையும், வெந்நீரில் வேக வைத்து, வெயிலில் நன்றாகக் காய வைக்க வேண்டும். எச்சில், சளி, இவைகளை நெருப்பில் போட்டுக் கொளுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் ஆழமான குழி வெட்டிப் புதைத்து விட வேண்டும். நோயாளி இருந்த அறையை நன்றாகக் கழுவி வெயில் உள்ளே படும்படி செய்து, சுண்ணாம்பு வெள்ளை அடித்து வீட்டை, கொஞ்ச காலத்திற்குக் காலியாக வைக்க வேண்டும்.

சிறு குழந்தைகளுக்கு குரல்வளையில் :— மாத்திரம் இந்த நோய் வருவதுண்டு. தொண்டை கம்மல், வறட்டு இருமல் இவைகளுடன் ஆரம்பித்து நாள் கழித்து [illegible] மூச்சு விடுவதற்குக் கஷ்டம் ஏற்படும். இந்த மூச்சடைப்பு விட்டு விட்டு இரவில் வரும். [illegible] ஜவ்வுத் துண்டுகள் கபம் போல வெளியாகும். காய்ச்சல் அதிகமாக இராது. தொண்டையைப் பார்த்தால் ஜவ்வு படர்ந்திருப்பது தெரியும். மருத்துவம் மேலே கூறியபடி செய்ய வேண்டும்.

மருந்து முறை :— [illegible] 15 சொட்டு, நீருடன் கலந்து தொண்டையில் தடவ வேண்டும். [illegible] தொண்டையில் தடவ வேண்டும்.

1/2 - 1 வயதுக்குக் [illegible] மூன்று வேளை கொடுக்க வேண்டும்

எட்டிக் கொட்டைத்தூள்	1/2	கிரெய்ன்
இன்கொதி	1 1/2	கிரெய்ன் ஒருவேளைக்கு — [illegible] மூன்று வேளை
வெள்ளைப் பாஷாணம்	1/60	

[illegible] காட்டியுள்ள அளவு வயது வந்தவர்களுக்கு மாத்திரம். குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வயதுக்குத் தக்கபடி குறைத்துக் கொடுக்க வேண்டும். இந்த மருந்தை உணவுக்குப் பின் கொடுப்பது நலம்.

363. கக்குவான் இருமல் (Whooping Cough)

இந்த நோய் பத்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு உண்டாகும் தொற்று நோய். பனிக்காலத்தில் இது அதிகமாக வரும். இந்த இருமல் ஆரம்பிக்கும் முன் [illegible]

[illegible]

இந்த நோயுள்ள ஒருவர் இருமிய பின்பு காலையோ அல்லது இரவோ குனிந்தோ மூச்சுப் பிடித்துக் கொண்டு இருமல் ஆரம்பிக்கும். இருமலுக்கு இடையில் அடிக்கடி இருமிக் கொண்டிருக்கும். மூச்சுத் தொண்டையில் அடைத்துக் கொண்டிருக்கும். கடைசியில் சிறிது கபம் வெளியாகும். அத்துடன் வாந்தியும் உண்டாகி இரைப்பையில் இருக்கும் உணவு முழுவதும் வந்தால் அதுவும் வாந்தி எடுத்து வரும். இப்படிப் பலமுறை இருந்தால் மெலிந்து மூச்சுத் திணறல் ஏற்பட்டு விடும்.

நோயின் வேகத்திற்குத் தக்கபடி இருமலும் இருக்கும். ஒரு நாளைக்கு நான்கு முறை முதல் அறுபது தடவை வரையில் வரும். வந்த இருமல் நிற்க முடியாது. இருமல் நிற்க விடாமல் இருப்பதால், முகம் சிவந்து, கண் முட்டுவது போல வெள்ளை விழிகளில் ரத்த நாளங்கள் சிவந்தும், சில சமயங்களில் வெடித்துச் சிவப்பாகவும் இருக்கும். மூக்கிலிருந்தும் காதிலிருந்தும் ரத்தம் வெளியாகலாம். நுரையீரலில் இருக்கும் மெல்லிய குழாய்கள் அடைத்து, அதனால் காய்ச்சல் முதலிய நோய்களை உண்டாக்கும். இது வயதில் மரணத்தைக் கொடுக்கக் கூடிய நோய்களில் இதுவும் ஒன்று. ஒரு தடவை வந்துப் போய் விட்டால் திரும்பவும் வருவதில்லை.

இந்த நோய்க்குத் தொற்றும் சக்தி அதிகம். நோயுற்றவர்களின் துணி, படுக்கையில் விழும் கபம், எச்சில், வாந்தி இவைகளால் தொற்றிப் பரவும். குழந்தைகளுடன் பிறரை விளையாடச் செய்வதால் ... பள்ளிக்கூடங்களிலும், தொற்றுக் கூடப் பரவும். தட்டம்மை (measles)க்குப் பிறகும், சாதாரண ஜலதோஷம், சளிக் காய்ச்சலுக்குப் பிறகும் வரக்கூடும். இந்த நோயில் காய்ச்சல் இராது. அப்படி இருந்தாலும் கொஞ்சமாகத் தான் இருக்கும்.

மருத்துவம்:- முக்கியமாக மூச்சுப் போய் வரும் வழிகளில் தொற்றுக் கிருமிகள் இல்லாதபடி செய்ய வேண்டும். நோயின் தொற்று நீங்கும். மருந்துகளைக் கலந்து ஆவி பிடிப்பது நல்ல முறை. இளஞ்சூடாக மூக்கு, வாய், தொண்டை இவைகளை அடிக்கடி சுத்தக் கொள்ளிகள் கலந்த தண்ணீரில் சுத்தம் செய்வது ஒரு கிருமிகளின் தொற்றுதலைக் குறைக்க வேண்டும். அதிகமான கிருமிகள் சுலபமாக வெளிவரும்படி செய்ய வேண்டும். குழந்தையின் பலத்தையும் காப்பாற்றி வர வேண்டும்.

ஒரு சிறு துண்டில் கிரியசோட் (oil of creasote) கொஞ்சம் தடவிக் கொண்டு அதைத் தட்டில் காய்ச்சி அந்தப் புகையை நோயாளி இருக்கும் அறையில் விட வேண்டும். இந்தப் புகையை நோயாளி மோந்தால் மூச்சுக் குழாய்களில் இருக்கும் கிருமிகளின் சக்தி குறைந்து அவைகளைக் கொன்று விடும். முன்பு டிப்திரியாவின் மருத்துவத்தில் சொல்லிய படி வாய்க் கொப்புளித்து, தொண்டை ஓரங்களில் மருந்து தடவ வேண்டும். நெஞ்சின் மேல் மார்பில் சூடாக இருந்தால் கிரியசோட் மருந்துவத்தை நிறுத்தி விட வேண்டும்.

உள்ளிப்பூண்டு சாறு அரைத் தேக்கரண்டி கலந்து தொண்டையில் தடவ வேண்டும். பச்சைச் சொட்டுக்குக் குறையாமல் தினம் மூன்று வேளைக் கொடுக்க வேண்டும். பெரியவர் ஒரு தேக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வேண்டும். குழந்தை இரண்டு வயதுக்கு, சோடியம் பென்சோவேட் Sodium Benzoate 2 கிரேன், ஆடா தோடை - 5 கிரேன், பொட்டாசியம் அயோடைட் 1/2 கிரேன் மூன்றும் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று வேளை. இருமல் கடுமையாகப் பொறுக்கமுடியாமல் இருந்தால் குளோரல் பாரம், கற்பூரத் தைலம் கொஞ்சம் சேர்த்து ஒரு துணியில் நனைத்து மூக்கில் மோந்தால் இருமலின் கொடுமை குறையும். சளிக் காய்ச்சல், மூச்சுக் குழாய் அழற்சி இவைகளுக்குத் தேவையான முறைகளை அந்த அந்த வியாதிகளுக்குச் சொல்லியிருக்கிறபடி செய்ய வேண்டும்.

உணவு:- சத்துக் கொஞ்சம் பப்பாளிப் பழச் சத்துக் கலந்து கலந்து கொடுக்க வேண்டும்.

இப்படிச் செய்தால் உணவு இரைப்பையில் தங்கும். வாந்தி எடுப்பதற்குள் இரைப்பையை விட்டு வெளி நீங்கி விடும். ஒரு தரம் இருமல் வந்து விட்டுப் போனவுடன் உணவு கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் உணவு இரைப்பையில் தங்கி உடலுக்குத் தேவையான சத்தினை அளிக்க இருமல், வாந்தி வருவதற்குள் ஜீரணிக்கும். நோயாளியைத் தனியாக நல்லக் காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில் படுக்க வைக்க வேண்டும். சளியை வெந்நீரால் உடலைச் சுத்தம் செய்ய வேண்டும். நோய் போன பிறகு உடம்பைப் பலப்படுத்த வேண்டும்.

365

அக்கினிப் படுவன் - (Erysipelas - cellulitis)

இது ஒரு சிறிய நோயணுவினால் உண்டாகும் தொற்று அழற்சி. இரணம் காயமோ அல்லது தோலில் ஒரு சிறு கீறலோ, தோல் சிராய்வு புண்பட்டிருந்தாலும் அதன் மூலமாகத் தொற்று ஏற்பட்டுவிடும்

107

இந்த நோய் தோலின் மேற்புறம் பரவினால் அதற்கு அக்கிப் படுவன் (Erysipelas) என்று சொல்வது. தோலுக்கு அடியிலுள்ள திசு, தசை இவைகளிலும் பரவுமானால் அதற்கு சதை அழற்சி (திசு அழற்சி – cellulitis) என்று பெயர். இந்த நோயானது இரத்தத்தில் பரவி விட்டால் அது விஷக்காய்ச்சலாக (Septicaemia) மாறி விடுகிறது.

குறிகள்:— அக்கிப் படுவன் தோலின் தீவிரமான அழற்சி நோய்களில், உடல் வலி, உடல் முன்பு தலைவலி, குளிர், நடுக்கம், காய்ச்சல், வாந்தி, முதுகு, மூட்டுகளில் வலி இவைகளுடன் ஆரம்பிக்கும். நோய்க்கு உட்பட்டிருக்கும் இடம் சிவந்து, வீங்கி வலி உண்டாகும். நிணநீர்க் குழாய்களின் மேல் இந்தக் கொப்புளம் சம்பந்தத்தில் இருந்தால் அருகிலுள்ள [illegible] களும் தடித்துப் பருத்து வலி உண்டாகும். தோலில் உண்டாகும் சிவப்பு நிறம் மற்றப் பாகத்திலிருந்து நன்கு வகுக்கப்பட்ட ஓரங்களிலும் தோல் தடிப்பிலும் தெளிவாகப் புலப்படும். வீங்கியிருக்கும் இடம் தொடமுடியாத வலியோடு, அதிகச் சூடாகவும், பளபளப்பாகவும் இருக்கும். இந்தக் கொப்புளம் முகத்தில் வந்தால் முகம் முழுவதும் வீங்கி அடையாளமே தெரியாமல் போகும். கண்ணிமை பருத்துக் கண்கள் மூடிவிடும். உதடும் அப்படியே. ஆரம்பத்தில் இந்த சிவப்பு அடங்கி அழற்சி குறையக்குறைய இடங்களில் இந்த அழற்சி பரவிக் கொண்டே போகும். ஓர் இடத்தில் வந்த அழற்சி அடங்கி வடுக்கட்ட அல்லது பத்து நாட்கள் ஆகும். காய்ச்சல் இல்லாமலே இந்த நோய் வரலாம். தோலிலிருந்து வாய், தொண்டை இவைகளுக்கும் இது பரவலாம். கொப்புளங்கள் மூச்சு விடுவதற்கும், உணவு விழுங்குவதற்கும் அதிகக் கஷ்டமாக இருக்கும். பசி மிகக் குறைந்து விடும். இந்த நோயின் காரணமாக இன்னும் பலவிதமான அதிகத் தொந்தரவுகள் ஏற்படும். இருதய அழற்சியும், மூத்த நோய்களும், நுரையீரல், வாய், மூளை இவைகளிலும் அழற்சி ஏற்படக்கூடும்.

மருத்துவம்:— ஒரு நாள் விட்டு ஒரு நாள் பதினைந்து சொட்டு உப்பாயக் கரையம் ஆறு சொட்டை கொதிக்க வைத்த தண்ணீரில் கலந்து உணவின் முன்பாக காலையில் ஏறக்குறைய இந்த [illegible] சக்தி குறைந்து விடும். இது தவிர இரண்டு சொட்டு உப்பாயக் கரையத்தை ஒரு அவுன்ஸ் போட்டு ஒரு நாளைக்கு நான்கு வேளை கொடுக்க வேண்டும். வீக்கம் வருவதற்குப் பேதி உப்பைத் தெவிட்டிய கரையமாகச் செய்து (Saturated solution) அதனை வெள்ளைத் துணியை நான்கு மடித்து அதில் நனைத்துப் பிழியாமல் அப்படியே வீக்கத்தின் மேல் போட்டு [illegible] காயாமல் இந்தக் கரையத்தால் நனைத்துக் கொண்டு வர வேண்டும். இவ்வொரு தடவை நனைக்கும் பொழுதும் கட்டை அவிழ்த்து விட்டுத் திரும்பவும் கட்டி வைக்க வேண்டும். நான்கு நாளைக்கு ½ டிராம் வீதம் மூன்று அல்லது நான்கு வேளை கொடுத்து வர வேண்டும். மலச்சிக்கல் நீக்க வேண்டும். உணவுக்கு கஞ்சி, பால், காபி முதலியவை கொடுக்கலாம். நோயாளியைத் தனியறையில் வைக்க வேண்டும். படுக்கை, துணி இவைகளைச் சுத்தப் படுத்தி வெயிலில் ஒரு நாள் முழுவதும் காய வைக்க வேண்டும். நோயாளி உபயோகிக்கும் பாத்திரம், தட்டு முதலியவைகளைத் தண்ணீரில் அரை மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். நோயாளி இருந்த அறையைச் சுத்தமாகத் துடைத்துக் கொள்ளி மருந்தினைக் கொண்டு கழுவ வேண்டும். கந்தகத்தை அனலில் போட்டு அந்த அறையில் புகைக்க வேண்டும். நோயாளிக்கு நல்ல ஓய்வும், நோய் நீங்க ஒரு பலவீனம் இருக்கும் [illegible] விடுதிக்கும் மருத்துவம் செய்ய வேண்டும்.

அழற்சியான [illegible] இடம் வீக்கத்தை விரைவில் அகற்ற தகுந்த படி கவனித்து [illegible] நாம் செய்ய வேண்டும்

மருந்து முறை:— உப்பாயக் கரையம் நாளத்தின் வழியாக ஊசி மூலமாகவும் வாய் வழியாகவும்; நான்கு நாளைக்கு ½ டிராம் அல்லது இருபது சொட்டு ஒரு நாளைக்கு நான்கு வேளை.

பேதி உப்பு (Magnesium Sulphate) தெவிட்டிய கரையமாகச் செய்து சுத்தமான துணியை அதில் நனைத்து வீக்கத்தின் மேல் போட்டுக் காயக் காய மருந்துக் கரைசலில் மறுபடி நனைத்து வைக்க வேண்டும்

மலச்சிக்கல் நீக்க:— பேதி உப்பு, சென்னா இலை முதலியன

373. **முடக்குக் காய்ச்சல் (டெங்கு - Dengue)** 108

இந்தத் தொத்து நோய் கொசுக்களால் ஒரு நோயாளியிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகிறது. குளிர் காய்ச்சலோடு ஆரம்பமாகும். காய்ச்சல் ஏழு நாட்களுக்கு மேல் இராது. ஆரம்பம் முதல் மூன்று நாட்களுக்கு அடுத்து ஒருநாள் அல்லது இரண்டு நாட்களுக்குக் குறைந்து மறுபடியும் அதிகப்பட்டு, நான்காவது ஆறாவது நாள் விட்டு விடும். உயிருக்கு அபாய ஆபத்து இல்லை. காய்ச்சலின் காலத்தும், [illegible] இடுப்புவலியும், மூட்டுகளில் வலியும். நிற்க, நடக்க முடியாமலும், படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமலும் இருக்கும். காய்ச்சல் உண்டாகி நாலாவது அல்லது ஐந்தாவது நாளில் உடலில் சிவப்புச் செம்பாகப் பெரும் தடிப்பு உண்டாகும். இவை ஒன்றிரண்டு நாட்களில் மறைந்து விடும். இச்சமயம் உடலில் ஏற்படும் தடிப்பு அதிகம் இல்லாமலும் [illegible] உடலின் [illegible] பரவும் இருந்தும் மறைந்தும் மறைந்து விடும். அநேகமாய் ஒரு தரம் வந்து விட்டால் மறுமுறை வருகிறதில்லை. சில ஊர்களில் சதாகாலமும் இந்த நோய் இருந்து கொண்டே இருக்கும். அங்கு சில காலங்களில் அநேகமாக எல்லோருக்கும் இவ்வாறு பரவும்.

காய்ச்சல், தலைவலி, உடம்பு வலி இவைகளுடன் திடீரென வரும். 103° அல்லது 104° வரையில் போகும். தலைவலியும், இடுப்புவலியும் பொறுக்க முடியா. கை, கழுத்து, மார்பு, இந்த இடங்கள் கனத்துச் சிவந்து இருக்கும். காய்ச்சலுடன் குளிரும் வரும். காய்ச்சலுக்குத் தக்கவாறு, இடுப்புவலியும், மூட்டுகள் வலியும் அதிகப்பட்டோ அல்லது குறைந்தோ இருக்கும். வயது சென்றவர்களுக்கு இந்த நோய் வந்தால் கஷ்டம் அதிகமாக இருக்கும். வலியின் கடுமையால் படுக்கையில் திரும்புவதுகூட முடியாது. சிலசமயம் கனின் காய்ச்சல் விட்ட பிறகு கூட வலி விடாமல் மூட்டுகளில் சில நாட்களுக்குத் தங்கியிருக்கும். உடலில் பலவீனத்தைத் தவிர மற்ற நோய்களை உண்டாக்குவதில்லை.

மருத்துவம். இதற்குச் சரியான மருந்து ஒன்றுமில்லை. இதற்கு ஒருவாரத்திற்கு மேல் நோய் தங்குவதில்லை. மருத்துவம் செய்யாமலே குணமாகும். இருந்த போதிலும் பொறுக்க முடியாத வலிக்குக் காசின் அஸ்பிரின் கொடுக்க வேண்டும் அல்லது சோடா ஸாலிஸிலேட் பதினைந்து குறைவின் விதம் ஒரு நாளைக்கு நான்கு வேளையாகிலும் கொடுக்க வேண்டும். மலச்சிக்கலுக்குப் பேதி மருந்து கொடுக்கக் கூடாது. சொல்லப்போனால் நோயாளி கால், கை, படுக்க முடியாத நிலைமையில் அதிக கஷ்டம் உண்டாகும். எனிமா கொடுத்துக் குடலைச் சுத்தம் செய்ய வேண்டும். பொட்டாசியம் புரோமைட் (Pottassium Bromide) வலியைக் கொடுத்துத் தூக்கத்தை உண்டு பண்ணும். கஞ்சி, திரவம் மெல்லத் தக்க கொடுக்க வேண்டும். இதனின் உணவுக்கு கஞ்சி, பால், காபி, முதலிய நீர் ஆகாரம் கொடுக்க வேண்டும். இதனின் நோயாளியின் உடம்பைத் துடைத்துச் சுத்தம் செய்து விட வேண்டும். உடல் பலவீனத்திற்கு எட்டிக்கொட்டை டிஞ்சர், வெள்ளைப் பாஷாணம் இவை இரண்டும் நோய் நீங்கிய பின் இரண்டு வாரத்திற்கு கொடுக்க வேண்டும்.

375 **குளிர் காய்ச்சல் (முறைக் காய்ச்சல் - Malaria)**

இந்தக் காய்ச்சல் நமது நாட்டில் அநேக இடங்களில் பரவியிருக்கிறது. மலையடிவாரம், தண்ணீர் தேங்கி நிற்கும் இடம், சதுப்பு நிலங்கள் இவைகள் இருக்கும் பிரதேசங்களில் அதிகம். இந்தக் காய்ச்சலை உண்டு பண்ணும் நோய்க் கிருமிகள் ரத்தத்தில் ஒருவகைப் பரப்பி நோயை [illegible] கொசுக்களின் மூலம். இந்த நோயாளிகள் மனிதர்களுக்கும், கொசுக்களுக்கும் இடையே இருக்கின்றன. மனிதனுக்குக் காய்ச்சலை உண்டு பண்ணினாலும் கொசுவுக்கு நோய் உண்டு பண்ணுவதில்லை. அனோபிலிஸ் என்ற ஒரு ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் (Anopheles) பெண் கொசு கடித்து ரத்தத்தை உறிஞ்சிக் கொள்கிறது. இக்கிருமிகள் வளர்ந்து ஏராளமான கிருமிகளாகக் கொசுவின் உமிழ்நீர் சுரப்பியில் தங்கி, மறுபடியும் கொசுக்கள் மற்ற மனிதனுக்கும் காய்ச்சலைக் கொடுக்கிறது. கொசு கடித்து ரத்தத்தை உள்ளே உறிஞ்சுவதற்கு முன்பாக தன் எச்சிலை உமிழ்நீரைக் கக்குகிறது. இந்த உமிழ்நீர் மனிதன் ரத்தத்தில் சேரும் நோய் பெருகிப் பின் ரத்தத்தை அடைகிறது. தான் செல்லும் போகும் ரத்தம் சுத்தப்படுத்துவதற்காக காடிப் போகும் ஈரலுக்குள் போகும் தங்கும் வழியாக

தம்மினத்தை வழியாகத்தான் பெருக்கிக் கொள்வதற்காக அப்படிச் செய்கிறது. அப்படிச் செய்யும் பொழுது இந்த நோய்க் கிருமிகளின் முட்டைகள் மனிதன் ரத்தத்தில் கலந்து செவ்வுடலிகளில் சென்று அதில் இருக்கும் சத்துக்களை உண்டு பெருத்துச் செவ்வுடலியை உடைத்துக் கொண்டு வெளி வந்து மற்றச் செவ்வுடலிகளைத் தாக்கி அதனுள் புகுந்து கொள்கின்றன. மறுபடியும் மறுபடியும் இம்மாதிரிச் செய்து ரத்தத்தில் அதன் கூட்டத்தைக் கொழுத்துக் கொழுப்பதற்காக வெகு சீக்கிரத்தில் அதிகரித்து விடுகின்றன. செவ்வுடலிகள் உடைந்து இந்தக் கிருமிகள் ஏராளமாக ரத்தத்தில் கலக்கும் பொழுது தான் குளிரும் காய்ச்சலும் உண்டாகின்றன. சில ஜாதியான இந்தக் கிருமிகள் சில நாழிகை உடைந்து ஒரே நேரமும் தினம் காய்ச்சலை உண்டு பண்ணுகின்றன. சில ஒரு நாள் செவ்வுடலியிலிருந்து வெளியாகின்றன. அப்பொழுது காய்ச்சலும் குளிரும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரும். இன்னும் ஒரு ஜாதிக் கிருமிகள் இரண்டு நாட்கள் விட்டு விட்டுச் செவ்வுடலிகளினின்றும் வெளியாகும். அப்பொழுது காய்ச்சல் முறை இரண்டு நாட்கள் விட்டு விட்டுத் திரும்ப வரும். இன்னும் ஒரு ஜாதிக் கிருமிகள் கொடுமையாக சத்துள்ள செவ்வுடலிகள் ஏராளமாக அழிந்து போய் உடல் இளைத்து வெளுத்துப் பலவீனம் ஏற்பட்டு அதனால் இன்னும் பல நோய்களும் அபாயமாக வருவதற்குக் காரணம் ஏற்படுகிறது.

இந்தக் கொசுக்கள் பகலில் கடிப்பதில்லை. இருட்டும் சமயத்தில் வெளிவந்து, சாயங்காலம் இரவு, வேளைகளில் கடித்து விடுவதற்கு முன்பாக இருட்டான இடங்களைத் தேடிப் போய் விடும். எங்கெங்கே தண்ணீர் ஓட்டம் இல்லாமல் தங்கியிருக்கிறதோ அங்கே கொசு முட்டை இடுகிறது. இரண்டொரு நாட்களுக்குள் வால் போன்ற இது புழுவாகத் தண்ணீரின் மேலும் கீழும் ஓடி விளையாடி தண்ணீர் மேல் மிதந்து இறக்கை முளைத்துப் பறந்து கொசுவாக ஓடி விடும். குளம், குட்டை கழனிகள், சாக்கடை, தேங்கி நிற்கும் தண்ணீர், உடைந்த சட்டி, கொட்டாங்கச்சி, டின்கள் இவைகளில் தேங்கி நிற்கும் நீர் எல்லாவற்றிலும் கொசு உற்பத்தியாகிறது.

மலேரியாக் கிருமிகள் மனிதன் உடலிலும் கொசுவின் உடலிலும் தன் வாழ்வை நடத்துகிறது. இந்த உண்டாவதற்குச் சில முக்கியமான அம்சங்கள் தேவை.

(1) காய்ச்சல் கிருமிகளையோ அதன் முட்டைகளையோ, ரத்தத்தில் கொண்ட மனிதர்கள் தேவை.

(2) அனாபிலிஸ் ஜாதிப் பெண் கொசு இருக்க வேண்டும்.

(3) இந்தக் கொசு இவனைக் கடித்துப் பிறகு தன் வயிற்றில் கிருமியை வளர்க்கும் வரையில் உயிருடன் வாழ வேண்டும்.

(4) இந்த நோயைத் தாங்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உடல் வாகுள்ள மனிதர்களை இந்தக் கொசு கடிக்க வேண்டும்.

இந்தக் காய்ச்சலை ஊரிலிருந்து விட்டு ஒழிக்க வேண்டுமானால் கொசு வளர்ப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது. கொசுக்கள் அதிக ஆழமான தண்ணீரில் முட்டை இடுவதில்லை. நன்றாக ஓடும் தண்ணீரிலும் முட்டை இடா. தண்ணீர் தேக்கம் இல்லாமல் செய்து விட்டால் அந்தக் காய்ச்சல் ஒழிந்து விடும்.

மேலும் சில புழுக்கள் வால் முளைத்துத் தண்ணீரில் கீழும் மேலும் ஓடுவதற்குக் காரணம் அவை மூச்சு விடுவதற்காக அடிக்கடி நீர் மட்டத்திற்கு வந்து அங்கிருந்து காற்றை உட்கொள்ள வேண்டும். அப்படி மேல் நோக்கி வரும் பொழுது எங்கே மண்ணெண்ணெய் தெளிக்கப்பட்ட நீர் மட்டத்தை தொட்டு விட்டால் முட்டைகள் மூச்சு விட முடியாமல் இறந்து விடும். கொஞ்சம் மண்ணெண்ணெயைத் தண்ணீரில் விட்டால் கொஞ்சம் தண்ணீரின் மேல் படலம் மூடி விடும். இது கொசுக்களின் புழு முட்டைகள் மூச்சு விட முடியாமல் இறந்து விடும். இது கொசுக்களின் புழு முட்டைகள் இறந்து விடும். ஆகையால் சில நாட்களுக்குள் மண்ணெண்ணெயும் ஆயிலாக தெளிக்க. பெரிய கிடங்குகளை அடிக்கடி உபயோகப்படுத்தி நீடித்த பலன் இராது.

இதற்காகக் கொசு முட்டைகளைத் தின்று ஜீவிக்கும் மீன் குஞ்சுகளைக் குளங்களில் விட்டு விட்டால் இந்த முட்டைகளை விழுங்கி விடும். ஆகவே இந்த மீன்களை உணவாக உபயோகப்படுத்துகிறது.

இவ்விதிருக்கும் தண்ணீரை வடிய விடவேண்டும். கால்வாய், நீர் நிலைகளில் வேகமாக நீர் ஓடும்படி செய்தால் கொசு உற்பத்தியாகாமல் இருக்கும். ஆனால் இந்த வேலைகள் கிராமங்களில் இருக்கும் ஏழைத் தொழிலாளிகள் செய்ய முடியாது. இந்த வேலைகளைத் தனி மனிதன் இவன் கொசுக்களையும் அதனுடன் வரும் முறைக்காய்ச்சலையும் தடுக்கக் கூடிய முறைகள் வருமாறு

(1) அருகே பிட்டையோ, தேங்கையையோ அகற்றும் இருக்கும் தண்ணீர்த் தேங்குதலைக் கொசு ப்பெருகி ஓடும்படி செய்வது.

(2) குழிகள், உடைந்த சட்டி, பானை, தகரம், கொட்டாங்கச்சி இவைகளில் நீர் தங்காமல் செய்வது.

(3.) கொசுவலைக்காரன் கொசுத் தைலம் (கொசுவலை)யை இரவில் உபயோகப்படுத்துவது.

(4) இரவில் உடம்பில் எண்ணெயை தேய்த்துக்கொண்டு படுத்து விடுவது. இந்த நாற்றத்தில் கொசு சமீபத்தில் வராது.

(5) கந்தகப் புகை, புகையிலைப் புகை இவை கொசுக்களுக்குப் பிடிப்பதில்லை. சந்தனத்தூள் புகையை அறையில் பரவ விட்டால் கொசு ஓடிப்போய் விடும். இரவு படுக்கும் முன் புகையிலையுடன் சாம்பிராணி கலந்து புகையும் சேர்த்து, ஊதுபத்தி போல் செய்து இரவில் அறையில் ஒரு மூலையில் புகையும்படி வைத்தால் கொசு ஓடிப்போய் விடும். சாம்பிராணி புகையும் (வேப்பிலை) கொசுவை விரட்டி விடும். காய்ந்த வேப்பிலைகளில் தீ புகையும் நல்லது.

(6) பஞ்சுக் கிடையின் ஓரமுள்ள இடங்கள் வாசத்திற்கு இருக்கைக் காய்ச்சல் உள்ள இடங்களில் வசிப்பவர்கள் உபயோகித்து வந்தால் இந்தக் காய்ச்சல் வராமல் தடுக்கலாம். இந்த மருந்து வேறும் வயிற்றில் கொண்டு சாப்பிட்டால் நீர் உண்டாகும், அதன் பிறகு சாப்பிட வேண்டும்.

இந்த முறைக் காய்ச்சல் சில இடங்களில் சில மாதங்களில் அதிகமாக வரும். மழை வந்து தண்ணீர் தேங்கும் காலங்களில் அதிகமாக இருக்கும். ஆகவே புதிய மழை காய்ச்சலை உண்டு பண்ணுவதற்குச் சமயம் இரண்டு மாதங்கள் ஆகும்.

குறிகள்:— காய்ச்சல் வருவதற்கு இரண்டொரு நாள் முன்னதாகவே சுறுசுறுப்பின்மை, உடம்பு வலி, வேலை செய்வதில் அலுப்பு இவைகள் காணப்படும். நோய் மூன்று படிகள் உள்ளதாக இருக்கும்.

(1) உடல் நடுக்கம் குளிர்
(2) காய்ச்சலின் அனல் அதிகரிப்பது
(3) வேர்வை விட்டுக் காய்ச்சல் இறங்குவது.

குளிரால் உடல் நடுங்கும் பல் வரிசைகள் ஒன்றோடொன்று மோதி சத்தம் போட்டுப் புரளும். குளிர் நின்றதும் ஒருமணி அல்லது இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு தொண்டை வறட்சி, தாகம், தலைவலியுடன் கொண்டு காய்ச்சல் 104° அல்லது 105° வரையில் போகும். இது இரண்டொரு மணி நேரம் இருக்கும். பிறகு வேர்வை ஆரம்பிக்கும். வேர்வை ஏராளமாக இருக்கும். இந்த வேர்வையுடன் காய்ச்சலும் இறங்கி விடும். ஆனால் பலவீனம் அதிகமாக இருக்கும். இந்தக் காய்ச்சல் முறையாக வந்து கொண்டிருக்கும்.

(1) தினசரி குறிப்பிட்ட நேரங்களில் வந்து விட்டுப் போகும்
(2) ஒரு நாள் விட்டு ஒரு நாள் (இரண்டு நாளைக்கு ஒரு தரம்) வரும்.
(3.) இரண்டு நாள் விட்டு ஒரு நாள் மூன்றாம் முறைக் காய்ச்சல் வரும்.

111

இதில் இரண்டாவதுதான் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வருவதுதான் அதிகம்.
நமக்கு சிகிச்சை இல்லாவிடில் இந்த முறை தொடரும். சில காலங்களில் மறைந்துக்கொண்டு, மீண்டும் திரும்ப மறுபடி காய்ச்சல் போல் ஆரம்பித்து முறை தவறியும், பின் இடைவிடாமல் தொடர்ந்தும் தொடர்ச்சியாக நின்றும் விடும். அப்படி நின்றும் போது, உடல் மெலிந்தும் வெளுத்து, வெளுத்த ரத்தம் இல்லாமல் நிறம் தொடர்ந்து வயிற்றில் இருக்கும் மண்ணீரல் பருத்தும் விடுவதால், தொடர்ச்சியாக தேக ஆரோக்கியம் ஒரு பெருத்த நோய்க்கு உடல் இரையாகி விடும். உடலில் சக்தி குறைவதால் காய்ச்சல் இல்லாமல், எப்பொழுதும் உள்ள நோய்களுக்கு இரையாக இருக்கும். காலத்தில் தக்க மருத்துவம் செய்தால் இந்நோயிலிருந்து முழுமை பெறலாம் தடுக்கலாம்.

இவ்வொரு தடவையும் கொசுக்கடியால் காய்ச்சல் அடுக்கும் அடிமுதல் ரத்தத்தில் கலந்து போகும் கிருமிகளின் முட்டைகள் அதிகரிப்பதால், வெளுத்தல் தப்பு ரத்தத்தில் இருந்தாலும் நடக்கிறது. ரத்தத்தில் உண்டாகும் இயற்கை பாதுகாப்பின் காரணத்தால், உடல் உறுதியாக இருப்பவர்களுக்கு சிறந்த காய்ச்சல் தானாகவே அடங்கி விடும். மலேரியாக் காய்ச்சல் உள்ள இடங்களில் வசிப்பவர்கள் அநேகமாய் இந்தப் பாதுகாப்பை அடைகிறார்கள். இந்த ஊர்களில் குழந்தைகள் நல்லொழுக்கம் வயிற்றில் மண்ணீரல் பருத்திருக்கும். இதைக் **காய்ச்சல் கட்டி** என்று சொல்வது வழக்கம். இந்தக் குழந்தைகள் இந்தக் கட்டியால் இறப்பினும் வளர்ந்து, பெரியவர், பல வேளைகளில் இந்தக் காய்ச்சல் வருவதில்லை.

மருத்துவம் :— குயினா (Quinine) சிங்கோனா மரத்தின் பட்டை மருந்து. அது சின்கோனா மரத்தின் பட்டைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சின்கோனா மரப் பட்டைகளில் குயினைத் தவிர இன்னும் சில மருந்து சத்துகள் இருக்கின்றன. அவை குயினைப் போல இன்னும் சிலவகைகளிலும் இருக்கின்றன. அவை குயினைப் போலவே குணம் உடையவை. சின்கோனா பட்டையிலிருந்து குயினைப் பிரித்தெடுத்த பிறகு மீதியுள்ளவை மருந்து ஆகும். விலையில் மலிவானது. சின்கோனாவைத் தனியாகவும் சாப்பிடலாம்.

உணவு சாப்பிட்டு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு மருந்தை உட்கொள்வது நல்லது. தண்ணீரைக் கொதிக்க வைத்து இருபது (20) நிமிடம் ஆன பின் சின்கோனாவின் சக்தி அதிகரிக்கும். கடுமையான காய்ச்சலுக்குக் கூட மருந்து ஆகும். சின்கோனாவினால் தடுக்கப்படாத எந்தக் காய்ச்சலும் இல்லை. ஆகவே அதை நிச்சயம்.

கொடுக்க வேண்டிய சின்கோனா அல்லது குயினா அளவு :—

வயது வந்தவர்களுக்கு ஆண் பிள்ளைகளுக்கு	10	கிரெய்ன்
பெண் பிள்ளைகளுக்கு	7½	கிரெய்ன்
குழந்தைகள் 8 - 12 வயது	5 - 6	கிரெய்ன்
4 - 8 வயது	4 - 5	கிரெய்ன்
2 - 4 வயது	2½ - 4.	கிரெய்ன்
குழந்தைகள் இரண்டு 2 வயதுக்குள்	1½ - 2.	கிரெய்ன்

தினசரி இரண்டு வேளை கொடுத்து வர வேண்டும்

காய்ச்சல் நின்ற பிறகும் நான்கு நாள் வரையில் அப்படியே கொடுத்து வர வேண்டும். பிறகு பத்து நாட்களுக்கு நிறுத்த வேண்டும். பிறகு தினசரி இரண்டு வேளை ஆறு நாட்களுக்குக் கொடுக்க வேண்டும். காய்ச்சல் கடுமையாக இருந்தால் ஒரு நாளைக்கு மூன்று வேளைக் கொடுக்க வேண்டும். கர்ப்பிணிகளுக்குப் பாதி அளவு மருந்து கொடுக்க வேண்டும். ஆனால் ஒரு நாளைக்கு நான்கு தடவையாகக் கொடுக்க வேண்டும். அல்லது பொட்டாசியம் புரோமைடுடன் (Pottassium Bromide) கலந்து கொடுத்தால் கர்ப்பம் கலையாமல் தடுக்கும். மலச்சிக்கல் இல்லாமலிருக்க ~~கொடுத்து~~ பேதி மருந்து தான் கொடுக்க வேண்டும். வயிற்றுக்குக் கஷாயம் இரண்டு வேளை கொடுத்துப் பிறகு மேற்படி தக்க மருந்துதான் கொடுக்க வேண்டும்.

வாய் வழியாக மருந்து கொடுப்பதில் இருந்தால் அது வயிற்றில் தங்காமல் வாந்தியெடுத்து விடும். அப்படிப் பட்டவர்களுக்குக் குனியாக் கயானிக் கப்பட்ட குயினைன் மாத்திரைகளைத் தண்ணீரில் கரைத்து கொதிக்க வைத்து ஊசியால் குத்தி நல்ல சதையுள்ள இடத்தில் குத்த வேண்டும்.

இந்த முறைக்காய்ச்சலின் தீவிரமானதும், கடுமையானதும், [illegible] பகுதிகளில் பரவி [illegible] கட்டுப்படாமல் மனிதர்களை தீவிரம் [illegible] ஒரு வகை இருக்கிறது. அது காய்ச்சல் அதிகமாக இருப்பதோடு, மயக்கம், பிதற்றல், மஞ்சள் காமாலை, வாந்தி இவைகளோடு கூடியிருக்கும். இவைகளுக்குக் குயினைன் ஊசி மூலம் உடனே குத்த வேண்டும். அப்படிச் செய்தாலும் கூடச் சில சமயம் மரணத்தைத் தடுக்க முடியாது.

மண்ணீரல் வீக்கம். 381

இந்தக் காய்ச்சல் ஆரம்பத்தில் மண்ணீரல் லேசாகக் கனத்திருக்கும். காய்ச்சல் அடிக்க அடிக்க, அதுவும் பெருத்து, இடது விலாப்புறத்திலிருந்து தொப்புள் வரை [illegible] வளர்ந்து வயிறு [illegible] பார்த்தால் கல் போலத் தட்டுப்படும்.

கல்லீரல் வீக்கம்:— மண்ணீரலைப் போல அவ்வளவு அதிகமாக வீங்குவதில்லை. வீங்கினாலும் அவ்வளவு பெரிதாகவும் வீங்குவதில்லை. ஆனால் அந்தப் பக்கத்தில் வலி மாத்திரம் இருக்கும். இந்தக் காய்ச்சல் போனபிறகு, ரத்தச் சோகை, பலவீனம், உடல் வெளுத்தல், இவை இருக்கும். இதோடு நீர் வேட்கையும் வந்தாலும் வரலாம். அடிக்கடி காய்ச்சல் வந்து மண்ணீரல் பெரிதாய் வீக்கத்தில் [illegible] இரும்பு சம்பந்தமான மருந்து, வெள்ளைப்பாஷாணம், நாட்டுச் சுக்கத்தில் [illegible] கொட்டைத்தூள் இவை கொடுக்க வேண்டும். காய்ச்சல் அதிகம் இருந்தால் [illegible] கட்டுவது, [illegible] போட்டுக் [illegible] வேண்டும்.

குயினைன் அல்லது [illegible] கொடுப்பதால், [illegible], வாந்தி, தலைவலி, மயக்கம், காதில் இரைச்சல், காது கேட்பதில் மந்தம் இவை ஏற்படக்கூடும். அப்படி இருந்தால் மருந்தின் அளவைக் குறைக்க வேண்டும்.

ஆகாரம்	அதில் எவ்வளவு பாகம் தண்ணீர்	எவ்வளவு கலோரிகள் தரும் 200 கிராமில்
வெள்ளரிக்காய் வகை	95	9
தக்காளி	94	23
பால் முறித்த நீர்	93	27
முலாம் பழம்	92	30
வேக வைத்த வெங்காயம்	91	42
மோர்	91	37
வேக வைத்த கீரை	90	22
மொச்சை பீன்ஸ் வகை வேக வைத்தது.	90	26
ஆப்பிள் பழம்	89	44
இளம் முள்ளங்கி	92	5
பால்	87	171
ஆரஞ்சு	87	53
முட்டை வெள்ளைக் கரு	86	18
இளம் பச்சை பட்டாணி	84	65
வேக வைத்த உருளைக் கிழங்கு	75	89
வாழைப் பழம், காய் வகை	75	101
அரிசிச் சோறு	72	112

இவைகளிலும் நாம் உண்ணும், காய், கனி, பதார்த்த வகை பாலைப்போலவே தண்ணீர் கொண்டதாக இருப்பது தெரிய வருகிறது. வேலை செய்பவர்கள் அதிகத் தண்ணீர் அருந்துகிறார்கள். ஆகாரம் சாப்பிடும் பொழுது இடையிடையே நீர் அருந்துவது நல்ல பழக்கம். தேகத்திலிருந்து தோல் மூலம் வெளியாகும் வேர்வை நீர் அப்படியே உலர்ந்து போகிறது. தோல் சுத்தமாக இல்லாவிடில் வேர்வை வெளியாகும் துவாரங்கள் அடைபட்டுப் பல வியாதிகள் உண்டாகும். ஆகையால் தினசரி குளிப்பது மிக்க அவசியம். குளிர்ந்த தண்ணீரில் குளிப்பது ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாதது. அப்படிக் குளிக்கும் பொழுது தோலை நன்றாகத் தேய்த்துக் கொள்ளுதல் ரத்த ஓட்டத்தைத் தூண்டி புதிய உணர்ச்சியையும் சுறுசுறுப்பையும் அளிக்கும். குளிர்ந்த தண்ணீரில் நீராடுதல். நீர்க் கோர்வை உண்டாவதும், ஜலதோஷம், [illegible] தடுத்து விடுகின்றது என்பது தெரியும். குளிர்ந்த தண்ணீர் உடம்பில் பட்டால் தோலும் சுருங்குதல் கிடைக்கும். ரத்தக் குழாய்களும் சுருங்கும். அதனால் ரத்தம் உட் பாகங்களில் வேகமாக ஓடும். சூடான தண்ணீரில் குளிக்கும் பொழுது தோலில் இருக்கும் துவாரங்கள் விரிவடைந்து [illegible] ஜலதோஷமும் ஏற்படக் கூடும்.

குடிக்கும் தண்ணீர் சுத்தமானதாக இருக்க வேண்டும். குளங்கள் கிணறுகள் ஏரி, குட்டை யிலுள்ள தண்ணீரைக் காய்ச்சி உபயோகப்படுத்த வேண்டும். ஆற்று நீர் ஊற்று நீரைக் காட்டிலும் [illegible] சுத்தமானது. [illegible] கிருமிகளால் [illegible] ஆகாரங்களை [illegible]. ஆற்று நீர் [illegible] பழக்கம் [illegible] தண்ணீரை [illegible]. [illegible] கொதிக்க வைத்துக் குடிப்பது நலம். [illegible], [illegible], [illegible] பாத்திரம் [illegible] தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டும். [illegible]

24. சூரிய கிரணங்கள்

மனிதனுக்குச் செலவில்லாமல் ஆரோக்கியத்தைத் தரக் கூடியது சூரியன். வெளிச்சமில்லாத வீடுகளில், அறைகளில் பல வியாதிகள் உண்டாவதற்கு மூல காரணம். க்ஷயரோகம், இருட்டு இடங்களிலிருந்து பரவுகிறது. சூரிய கிரணங்களுடைய வெப்பத்தைக் காட்டிலும் வெளிச்சமே அதிகமானது. தேகத்தில் சூரிய வெளிச்சம் பட்டவுடன் தோலானது உட்கொண்டு சக்தியை அளிக்கிறது. தோல் முழுவதும் மெல்லிய சுவாச ரந்திரங்கள் பரவியிருக்கின்றன. அவை மிக உஷ்ண கிரணங்கள் தாக்கும்படி தேகத்தைப் பாதுகாக்கின்றன. [illegible] ஸ்நானம் செய்து, சூரிய வெளிச்சம் படும் இடத்தில் நல்ல மேனியைத் திறந்து வாழும், படிப்படியான [illegible], [illegible] இல்லாமலும் இருக்கும். சூரிய வெளிச்சத்திலே ஒரு பயிற்சியும் பெற வேண்டுமானால், காலை, மாலை, இவ்வேளைகளிலும் உஷ்ணம் அதிகம் இல்லாமல் இருக்கும் பொழுது உடம்பின் துணி போட்டு மூடாமல் இருக்க வேண்டும். நாள் [illegible] பழக்க மென நினைத்து உடம்பு முழுவதையும் சூரியனுக்குக் காட்டினால் ஆரோக்கியத்தை அடையலாம்.

24. தேகப் பயிற்சி

சரீர ஆரோக்கியத்திற்கு ஆகாரம் இன்றியமையாததைப் போலவே தேகப் பயிற்சியும் அவசியமானது. சிறு குழந்தையை நன்கு கவனித்து இயற்கை முறைகளை ஆராய்ந்தோமானால் தேகப் பயிற்சி இயற்கை அமைப்பில் இன்றியமையாததாக இருப்பதை உணரலாம். உறங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் குழந்தை அசைந்து கொண்டே அல்லது கை கால்களை ஓயாது மாற்றித் தூக்கி அடித்துப் புரண்டு கொண்டே இருப்பதைப் பார்க்கலாம். குழந்தை இம்மாதிரி எல்லாம் செய்வதற்குக் காரணம் என்ன என்பது புலப்படாது. இது குழந்தையின் வளர்ச்சிக்காக இயற்கை செய்திருக்கும் ஏற்பாடேயாகும். ரத்த ஓட்டம் அதிகரிப்பதற்கும் தேகம் வேகமாக வளருவதற்கும் தசைகளின் பயிற்சி தேவை. மனிதன் உழைப்பில்லாமல் உயிர் வாழமுடியாது. உணவைப் பாடுபட்டு உழைத்து உண்டாக்க வேண்டும். அவனுக்கு இன்றியமையாத தேகப் பயிற்சி இதுவாகும், சிறுவர்கள் வயதுக்குத் தகுந்தபடி இருப்பார்கள். சிறுவர்கள் ஓயாது ஓடி, ஆடி, விளையாடிக் கொண்டிருப்பது அவர்கள் வேண்டுமென்றே செய்யும் குறும்பு அல்ல. இயற்கை நியதியேயாகும். வாலிப பருவத்தை அடைந்தால் சொம்பேறியாக சும்மா இருக்க அவர்களால் முடியாது.

பெரியோர்கள் குழந்தைகளுடைய சுறுசுறுப்பைத் தடுத்து கண்டிக்காமல் அதை நல்ல வழியில் திருப்பி உபயோகப் படுத்த வேண்டும். கிராமத்தில் பொதுவான பழக்கம் உண்டு. அவர்களுக்கு தேக உழைப்பு போதுமானதும் அவசியம். நிலத்தில் உழைப்பே வருவாய்க்கு ஆதாரமென அந்த ஒரு தொழிலைத் தேர்ந்து செய்து விட்டார்கள். உழைக்காமல் இருப்பது கௌரவமென்றும், பெரிய மனிதத் தன்மை என்றும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போன்ற அறிவீனம் வேறு ஒன்றும் இல்லை. வேலை செய்ய அவசியம் இல்லாத பொழுது நாம் உடம்பைப் பேணத் தேகப் பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். தேக உழைப்பின்றி மூளை வேலை செய்யும், உபாத்தியாயர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள் முதலியவர்களுக்கெல்லாம் தேகப் பயிற்சி இன்றியமையாதது. தேகப் பயிற்சி இல்லாமலே அநேக காரணமாக அஜீரணம் முதலிய வியாதிகள் அதிகமாக ஏற்படுகிறது. தினமும் ஒழுங்காக தேகப் பயிற்சி செய்து வந்தால் ஆரோக்கியமான வாழ்வை அடையலாம்.

25. தூக்கம்.

தேகப்பயிற்சி எவ்வளவு அவசியமோ அவ்வளவு தூக்கமும் தேவை. சிறு குழந்தைகளும் சிறுவர்களும் அதிக நேரம் தூங்குகிறார்கள். தேக வளர்ச்சிக்குத் தூக்கம் அவசியம். வயது ஆக ஆகத் தூக்கம் குறைந்து கொண்டு வருகிறது. குழந்தைகள் 16 மணி முதல் 18 மணி நேரமும், சிறுவர்கள் 10 மணி முதல் 12 மணி நேரம் வரையும், பெரியவர்கள் 6 மணிக்குக் குறையாமலும் தூங்குவது அவசியம். கனவுகள் இல்லாமல் அயர்ந்து உறங்குவதால் தான் தூக்கத்தின் முழுப் பலனும் ஏற்படுகிறது. உலகத்தில் பெயர் பெற்ற அநேகர் தூக்கத்தைக் குறைத்து வேலை செய்து வந்திருக்கிறார்கள். ஓர் அவயவம் வேலை செய்யும் பொழுது மற்றவைகளுக்கு ஓய்வு கொடுக்கும் பழக்கம் பெற்றிருந்த படியால் தூங்கும் நேரம் குறைவாக இருந்த போதிலும் ஆரோக்கியத்தைக் கெடுக்காமல் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும். தேகப் பயிற்சி இல்லாமல் படுக்கையின் மேல் தூங்குகிறவர்கள் சோம்பல் காரர்கள்.

26. பட்டினி

நோயுற்ற காலங்களில் பட்டினி கிடப்பது நல்லது. தேகத்தில் நோய் கண்ட காலத்தில் சில அவயவங்களின் வேலைத்திறன் குறைகிறது. ஆனபடியால் அதிக உணவு உட்கொள்வதில் பயனில்லை. சீரணமாகாமல் நோயை அதிகப்படுத்தும் மருத்துவர்க்குச் சங்கடம் ஏற்படும் காலத்தும், ஒரு வேளை அல்லது இரண்டு வேளை காலத்தும் பட்டினி கிடப்பது நலம்.

அத்தியாயம் 4

38. நோயற்ற தேகத்தின் சராசரி எடை அடியில் கண்ட அட்டவணையில் காணப்படும்.

சரீரத்தின் எடை

வயது பருவகாலம் ஆண்களுக்கு உயரமும் எடையும் இருக்க வேண்டிய பட்டியல்

உயரம்	வயது									
அடி அங்குலம்	19-20	21-22	23-24	30-34	35-39	40-44	45-49	50-54	55-59	25-29
5 -	108	114	118	126	128	131	133	134	135	122
5 - 1	113	118	121	128	130	133	135	136	137	124
5 - 2	118	122	124	130	132	135	137	138	139	126
5 - 3	122	126	128	133	136	138	140	141	142	129
5 - 4	125	129	131	136	138	141	143	144	145	133
5 - 5	129	132	134	140	142	145	147	148	149	137
5 - 6	132	136	138	144	146	149	151	152	153	141
5 - 7	136	140	142	148	150	153	155	156	158	145
5 - 8	140	143	146	152	155	158	160	161	163	149
5 - 9	144	147	150	156	160	163	165	166	168	153
5 - 10	148	151	154	161	165	168	170	171	173	157
5 - 11	153	156	159	166	170	174	176	177	178	162
6	159	162	165	172	176	180	182	183	184	167
6 - 1	164	167	170	178	182	186	188	190	191	173
6 - 2	169	173	176	184	189	193	195	197	198	179

சரீரத்தின் எடை

வயது பருவம் பெண்களின் உயரம் எடையும் தெரிவிக்கும் பட்டியல்.

உயரம்		வயது									
அடி	அங்குலம்	19	20	21–22	23–24	25–29	30–34	35–39	40–44	45–49	50–54
4	10	98	102	106	110	113	116	119	123	126	129
"	11	103	107	109	112	115	118	121	125	128	131
5		109	112	113	115	117	120	123	127	130	133
5	1	113	115	116	118	119	122	125	129	132	135
5	2	116	118	119	120	121	124	127	130	135	138
5	3	120	121	122	123	124	127	130	135	138	141
5	4	123	124	125	126	128	131	134	138	141	144
5	5	126	127	128	129	131	134	138	142	145	148
5	6	129	130	131	133	135	138	142	146	149	152
5	7	131	133	135	137	139	142	146	150	153	156
5	8	135	137	139	141	143	146	150	154	157	161
5	9	138	140	142	145	147	150	154	157	161	165
5	10	141	143	145	148	151	154	157	161	164	169
5	11	145	147	149	151	154	157	160	164	168	173
6		150	152	154	156	158	161	163	167	171	176

40. அத்தியாயம் 5

45. நோயாளியைச் சுத்தப் படுத்துவது.

படுத்த படுக்கையாக இருக்கும் நோயாளியைத் தினசரி சுத்தப் படுத்த வேண்டும். [illegible] வாளி அல்லது வேறு பாத்திரங்களில் வெந்நீர் படுக்கைக்குச் சமீபத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காய்ந்த சுத்தமான துண்டு கொண்டு [illegible] வேண்டும். சோப்பும் வைத்துக் கொள்ள வேண்டும். உடம்பை பாகம் பாகமாக அடியில் குறிப்பிட்டபடி சுத்தம் செய்து [illegible] துடைத்து விட வேண்டும். முகம், கழுத்து, [illegible], வயிறு, [illegible], மார்பு, [illegible], [illegible], [illegible], கால்கள், பாதங்கள், [illegible] இவ்வொழுங்கில் சுத்தம் செய்ய வேண்டும். ஒரு துண்டை வெந்நீரில் நனைத்து அதில் சோப் தேய்த்துக் கொண்டு [illegible] உடம்பில் [illegible] பாகம் துண்டை வெந்நீரில் அலம்பிவிட்டு, சுத்தத் தண்ணீரில் [illegible] கொண்டு [illegible] பாகத்தைத் துடைத்து [illegible] துண்டைக் கொண்டு துடைத்து விட வேண்டும்.

46. நீடித்துப் படுத்திருக்க வேண்டிய நோயாளிகளுக்கு உடம்பு [illegible] உண்டாகாது [illegible] பார்க்க வேண்டும். நோய் [illegible] தொடர்ச்சியாக [illegible], [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வைக்க வேண்டும்

Thermometer: அனல்மானி என்று பெயர். உஷ்ணத்தைச் சரியானபடி பரிசோதிக்க இது உபயோகப்படுகிறது. ஆகவே அனல்மானி Thermometer என்று பெயர். நமது உடல் சாதாரணமாக இருக்கும்போது எப்பொழுதும் ஒரே அளவுள்ள உஷ்ணத்தோடு இருக்கிறது. வெளியிலுள்ள சீதோஷ்ண நிலை எவ்விதம் மாறுபட்டாலும் தேகத்தின் உஷ்ணம் மாறுபடுவதில்லை. அப்படிப்பட்ட நிலையில், வியாதியின் காரணத்தால் தேகத்தின் அனல் ஏறுகிறது. இந்த ஏற்றத்தாழ்வை அளவெடுக்க அனல்மானியை வாயில் நாக்கின் அடியிலாவது, அக்குளிலாவது அல்லது ஆசனத்திலாவது ஐந்து நிமிஷம் வைத்துப் பார்க்க வேண்டும். இந்த அனல்மானியைக் கொண்டு உஷ்ண நிலையைக் [illegible] அறிந்து கொள்ளலாம்.

நமது அனலை அறிந்து கொள்வதற்கு வசதியாகக் கோடுகள் இட்டு, கணக்கு வரையப் பட்டிருக்கும். 95° (பாகை) என்று எழுதியிருக்கும். [illegible] இருக்கும். அதற்கு அடுத்தாக 96° (பாகை) போட்டிருக்கும். 95° யிலிருந்து 96° வரையுள்ள இடம் ஐந்து சிறிய கோடுகளால் ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கும். 95° லிருந்து 96° வரை ஒரு பாகை உஷ்ண நிலையாகும். இந்த ஒரு பாகை ஐந்து ($\frac{1}{5}$) பாகமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இவ்விதமே ஒவ்வொரு பாகையும் பிரிக்கப் பட்டிருக்கிறது. வியாதியின் உடம்பில் மேலே குறிப்பிட்ட பாகத்தில் ஐந்து நிமிஷம் பாதரசமுள்ள குழாயை வைத்தால் உடலின் அனல் எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்குப் பாதரசம் உயர ஏறி நிற்கும். அனல்மானியின் மேற்பாகத்தில் 110° வரை குறிப்பிடப்பட்டிருக்கும். சாதாரணமாக ஆரோக்கியமான உடல் அனல் 98° க்கும் 99° க்கும் மத்தியில் இருக்கும். இந்த ஸ்தானத்தில் அனல்மானியில் ஓர் அம்புக்குறி வரையப்பட்டிருக்கும். எவ்வளவும் கடுமையான காய்ச்சலில் கூட 106° அல்லது 107° பாகைக்கு மேல் போகாது. தேகத்தின் உஷ்ண நிலை 96° பாகைக்குக் கீழே போனால் அபாயம். குழந்தைகளுக்கு வயது வந்தவர்களைக் காட்டிலும் ½ பாகை அனல் எப்பொழுதும் அதிகமாக இருக்கும். உடல் அனல் எவ்வளவென்று தெரியப்பட்டவுடன் அனல்மானியை எடுத்து [illegible] உதறினால் பாதரசம் கீழே இறங்கிவிடும். பிறகு அனல்மானியை [illegible] கீழே உடையாதபடி பத்திரமாக வைக்க வேண்டும். காய்ச்சலின்போது, [illegible] எடுத்த நேரத்தையும் அப்பொழுது இருக்கும் அனலின் அளவையும் குறித்து வைக்க வேண்டும்.

48. உஷ்ண நிலையைக் குறிக்கும் முறை

ஒரு பாகைக்குள் இருக்கும் உட்பிரிவுகள் ஐந்து. அனல்மானியில் [illegible] ஒவ்வொரு பாகை ஐந்து பாகமாகப் பிரிக்கப்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு [illegible] வரை [illegible] தசாம்சமாகும்.


ஆரோக்கிய நிலை	98.4 (98½)
அனல் [illegible]	99
[illegible]	99.2
" "	99.4
" "	99.6
" "	99.8
[illegible]	100

[illegible] 100° பாகைக்கு மேலாகும் [illegible]

எடுக்கப்படும் உருவ நிலையைக் காட்டுவதும், கம்பிக் கப்புள் பிடிக்கில் வைத்து எடுத்த உருவ நிலை மேல்பாகத் தோற்றம் காணப்படும்.

கம்பிகளுள் வைத்து எடுத்த உருவ நிலை 97க்கும் 98க்கும் மத்தியில் பிடித்தால் கோர்ப்பு அல்லது ஆரம்பிக்கும் நிலை.

அசல் கோர்ப்பு.



அசல் கோர்ப்பு

50 சுவாசம்

நோய்க்காப்பாளர் சுவாசங்களைக்கையும் நாடியைக் கவனிப்பதுபோலக் கவனித்துக் குறிக்க வேண்டும். நோயில்லாத மனிதருக்கு நிமிஷத்திற்கு சுமார் 18 தடவை சுவாசம் - உள் மூச்சும் வெளிமூச்சும் - இயங்கும். ஓடியாடி வேலை செய்யும் காலத்தில் இது அதிகரிக்கும். குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் 20 முதல் 22 வரை (நிமிஷம் ஒன்றுக்கு) சுவாசம் இயங்கும். அதாவது மூச்சை 20 முதல் 22 வரை உள்ளிழுப்பார்கள்; 20 முதல் 22 வரை வெளிவிடுவார்கள். காய்ச்சல் அடித்தால் உஷ்ணநிலை ஏறுவதால் ரத்தத்திற்கு நாடித்துடிப்பு ஏறுவதுபோல சுவாசம் இயக்கமும் நிமிஷத்திற்கு கொஞ்சம் அதிகமாகும். உதாரணமாக, ஒரு மனிதனுக்குச் சாதாரண காலத்தில் கை நாடி நிமிஷத்துக்கு 72 என்று வைத்துக்கொள்வோம். அவன் உஷ்ணநிலை 101.4 பாகையாகவும் (degree) சாதாரண உஷ்ணநிலை 98.4 லிருந்து மூன்று பாகை உயர்ந்திருக்கிறது. ஆகையால் அவன் கை நாடி ஒவ்வொன்றிற்கும் 30 அதிகமாகும். அதாவது 72 + 30 = 102 தடவை கை நாடி அடிக்கும். அதுபோலவே மூச்சும் 3×2=6 அதிகரிக்கும். எப்பொழுதும் நிமிஷத்திற்கு 18 தடவை மூச்சு விடுவது 18+6=24 ஆக அதிகப்படும். அதாவது 24 உள்மூச்சும், 24 வெளிமூச்சும் இயங்கும். நோயாளி தோய்ந்து கண்டு படுக்க உன்னித்துணியைப் போட்டு மறைக்காமல் மார்பின வயிற்றின உள்ளங்கையை வைத்துக் கவனத்தோடு பார்த்துக்கொண்டு எண்ண வேண்டும்.

50 மலம்

நோயாளியின் மலத்தைப் பார்க்கவும் ஆராயவும் வெறுப்புக்கொள்ளக்கூடாது. நாள் ஒன்றுக்கு எவ்வளவு தடவை போகிறது, நிறம் எப்படி இருக்கிறது, துர்நாற்றம் எவ்வளவு கெட்டியாக வா அல்லது கூழ்போலவா அல்லது தண்ணீர் போலவா, எந்த அளவு போனது இவைகளையெல்லாம் நோய்க்காப்பாளர் கவனிப்பதோடு, வைத்தியர் வரும் வரையில் சட்டிகள் கொள்கலன், பாத்திரம் மூடி வைத்திருக்க வேண்டும். ஆரோக்கியத்தில் மஞ்சள் கலந்த நிறம், நாற்றமும் இருக்கும். மாமிச உணவு சாப்பிடுபவர்கள் மல துர்நாற்றம் அதிகமாகவும் கெட்டியாகவும் இருக்கும். மரக்கறி சாப்பிடுபவர்கள் மலம் நீர்த்து மஞ்சள் நிறமாக இருக்கும். பால் மட்டும் ஆகாரம் செய்பவர்களின் மலம் சுத்த வெளுப்பாக இருக்கும். மஞ்சள் நிறம் இடையில் வந்து மலம் பச்சைநிறக் கலப்பாகவும் உண்டாகிறது. பித்த கழிவாகவும் இருக்கும். மஞ்சள் காமாலை போன்ற வியாதி இருந்தால் மலம் வெளிறி களிமண் போல இருக்கும். சீதபேதி உண்டானால் ரத்தமும் சளியும் கலந்ததாக இருக்கும். வாந்திபேதி, காலரா வியாதியின் அரிசிக் கஞ்சி தண்ணீர் போல மலம் கழியும். சக்கரை நோய்க்குட்பட்ட மனிதர் நாளொன்றுக்கு நான்கு முதல் எட்டு தடவை தாக்குதல் உள்ள மலம் கழிக்கிறார்கள்.

51 . சிறுநீர்

நோயாளியின் சிறுநீரைக் கவனிக்க வேண்டும். நீரைக் கவனிப்பதால் உள்ள வியாதியின் தன்மையைக் கண்டுபிடிக்கலாம். அதில் போகும் நீரின் அளவு, நிறம், மணம், வாசனை, வண்டல் இவைகளைக் கவனிக்க வேண்டும். நாள் ஒன்றுக்குச் சாதாரண சுமார் பக்கப்படி ஒன்று, ஆரோக்கிய நிலையில் இருக்கும் மனிதன் கழிப்பான். இவன் போவதைக் காட்டிலும் பலவிதமாகக் கொண்டு அல்லது மூன்று தடவை அதிகமாகப் போகும். இவர் அடிக்கடி எழுந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சிறுநீர் உற்பத்தியின் ஏதோ பாகம் இருப்பதாக நினைக்கலாம். குழந்தைகள் அவர்களுடைய எடைக்கு அதிக நீர் கழிப்பார்கள். அவர்கள் நீர் போகும் நிறம் பளிங்குபோல.

இருபத்து நான்கு மணிக்கு (ஒரு நாளைக்கு)

6 வயதுக்கு 1 ஆழாக்கு; 8 ஆழாக்கு 1 பக்கப் படி.

முதல் நாள்	0 முதல் 1/3 குன்றி வரை
2 வது நாள்	0 முதல் 1/2 குன்றி வரை
3 முதல் 6 வது நாள் வரை	1/2 முதல் 1 1/3 குன்றி வரை
1 மாதத்திலிருந்து 2 மாதம் வரை	1 முதல் 2 குன்றி வரை.
2 மாதத்திலிருந்து 6 மாதம் வரை	1 1/6 முதல் 2 1/2 குன்றி வரை
6 மாதத்திலிருந்து 2 வயது வரை.	1 1/3 முதல் 3 1/3 " "
2 வயது முதல் 5 வயது வரை	2 2/3 முதல் 4 1/3 " "
5 வயது முதல் 8 " "	5 " 6 2/3 " "
8 " " 14 " "	5 1/3 " 8 (1 பணவிடை)

நிறையும் மற்றவையும் அளக்க ஆங்கில முறையில் பயன்படுத்தியவர்கள், அவுன்ஸ் என்று சொல்லப்பட்ட அளவை உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு பாத்திரம் நிறையுள்ள தண்ணீரில் வீசம் பங்கு அதாவது 16இல் 1 பங்கு (1/16)க்கு அவுன்ஸ் என்று பெயர். அதைத் தமிழில் வீசம் என்று சொல்லலாம் 60 நீர்த்துளிகள் அல்லது நீர்த்துளிகள் 1 டிராம் [இதுவே ஒரு தேக்கரண்டி அளவாகும்]

20	வீசம் (அவுன்ஸ்)	=	1 பைண்டு
8	பைண்டு	=	1 காலன்
4	டிராம் அல்லது 4 தேக்கரண்டி		1 மேசைக்கரண்டியாகும்.
8	டிராம் அல்லது 8 தேக்கரண்டி		1 அவுன்ஸ் அல்லது வீசம் ஆகும்

அவுன்ஸ் கிளாஸில் டிராம் ஒன்றுக்கு ஒரு சிறு கோடு வரைந்திருக்கும். ஆரோக்கிய நிலையின் நீர் வெளிர் மஞ்சள் (வைக்கோல்) வர்ணமுள்ளது. ~~தண்ணீர்ப்~~ பாகம் குறைந்து அதில் கலந்துக் கிடக்கும் தாதுக்களின் அளவு அதிகரித்தால் மேற்படி அதிக மஞ்சளாக இருக்கும். தண்ணீர் 2 பங்கு அதிகரித்தால் மஞ்சள் நிறம் குறைந்து மேற்படி வெளிறும். சில சமயம் ஆரோக்கிய நிலை தவறி இரத்தத்தில் இரத்தமும் இவைகள் கலந்து வரும். இரத்தம் கலந்த நீர் கலங்கல் ~~கலங்கல்~~ ஆக இருக்கும். இவ்வித நீர் இருந்து தேகம் வைத்திருந்தால் அடியில் கெட்டியான வண்டல் படியும். அதை வைத்தியரிடம் காண்பித்துக் கொண்டு வர வேண்டும்.

52. குளிர்ந்த தண்ணீரை உபயோகப்படுத்தும் விதம்

படுக்கையாக இருக்கும் நோயாளிக்கு எவ்வாறு தண்ணீர் உபயோகப்படுத்திப் படுக்கையிலேயே துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டுமென்று முன்பே சொல்லியிருக்கிறோம். இதைத் தவிர காய்ச்சலுக்கு உடல் அனலைக் குறைக்கக் குளிர்ந்த தண்ணீர் உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். சில குளிர்ந்த தண்ணீரில் நனைத்துப் பிழிந்த பச்சைத் தண்ணீர் துணியை பயமில்லாமல் ஒன்று கூடிய போர்வை போட்டு கொண்டை சுற்றியும் உடம்பைத் துடைக்க வேண்டும். இவ்வாறு போர்த்தின பிறகு உலர்ந்த உடை உடுத்திக் கம்பளிப் போர்வையால் சுற்றி நோயாளியின் மேனி சுற்றி விடாமல் மூடி வைக்க வேண்டும்

53 ஈர அறை

பனியால் துடைத்துக் குளிர்ச்சி செய்வதைக் காட்டிலும் அதிக நேரம் குளிர்ச்சி இருக்க வேண்டியதாகச் சில சமயம் ஏற்படும். அதற்கு உபயோகப்படும் முறை ஈர அறை என்று சொல்லப்படும். இதற்கு மூன்று கம்பளிப் போர்வைகள் தேவை. ஒரு கம்பளிப் போர்வையைக் குளிர்ந்த தண்ணீரில் நனைத்துப் படுக்கையின் மேல் பரப்பி விட வேண்டும். அதன் மேல் காய்ச்சல் அடிக்கிற நோயாளியைப் படுக்க வைத்துப் பிறகு அவர் மேல் குளிர்ந்த தண்ணீரில் நனைத்த இரண்டு போர்வையைப் போட்டு மூட வேண்டும். தலைக்கு அடியில் தலையணைக்குப் பதிலாக ஈரத்துணியை மடித்து வைக்க வேண்டும். உடலின் அனல் தேவையான மட்டும் குறைகிற வரையில் அந்த ஈர அறையில் வைத்திருக்க வேண்டும்.

53. குளிர்ந்த தண்ணீர் ஊற்றுதல்

மிகு வேகமாக அடிக்கும் காய்ச்சலுக்குக் குளிர்ந்த தண்ணீர் துடைப்பதாலும், ஈர அறையில் வைப்பதாலும் குறையாமல் போனால் அந்த நோயாளியைக் குளிர்ந்த தண்ணீர் நிரம்பிய நீளமான மரத் தொட்டியிலாவது அல்லது தகரத் தொட்டியிலாவது படுக்க வைத்து தேகம் முழுதும் தண்ணீரில் மூழ்கியிருக்கும்படி செய்ய வேண்டும். தண்ணீரில் இருக்கும் பொழுது அரைமணிக்கு ஒருதரம் காய்ச்சலின் நிலைமை அனல் மானியைக் கொண்டு கவனிக்க வேண்டும். நோயாளியைத் தூக்கிவிட முடியாவிட்டால் படுக்கையின் கீழ் அடியில் ரப்பர் துணியைப் போட்டு அதன் மேல் ஈரத்துணியை ~~[illegible] அதன் மேல் ஈரத்துணி~~யைப் பரப்பி அதில் அவரைப் படுக்க வைத்து மேலே ஈரத்துணியைப் போர்த்தி அடிக்கடி குளிர்ந்த தண்ணீரை ஈர அறையின் மேல் ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும். தலைக்கும் ஈரத்துணியை மடித்துப் போட்டுத் தண்ணீர் ஊற்றிவர வேண்டும். அரைமணிக்கு ஒருதரம் அனல் மானியால் உடல் அனலைக் கவனித்து வந்து, காய்ச்சல் 100 பாகைக்கு இறங்கியதும் எடுத்துவிட வேண்டும்.

54. பனிப்பை

அதிக காய்ச்சலுக்குத் தலையில் பனிக்கட்டியை வைப்பதுண்டு. பனை போலிருக்கும் பனிக்கட்டியை இரும்பினாலான சுத்தியால் அல்லது ஊசியால் சிறு சிறு துண்டுகளாகும்படி செய்து உடைத்து, உடைபட்ட துண்டுகளின் மேலிருக்கிற கூர்மையைக் கழுவி பனிப்பையில் கொட்டி நிரப்பி தலையின் கீழே வைத்து அதிலுள்ள காற்றை வெளியே போகச் செய்து மூடியைத் திருகி விட்டுத் தலையின் மேல் ஒரு துண்டைப் போட்டு அதன் மேல் பனிப்பையை வைக்க வேண்டும். பனி அதிகமாக இருந்தால் பனிக்கட்டியின் குளிர்ச்சி நிலைக்க உப்பைக் கொஞ்சம் இட்டுக் கலந்துவிட்டுப் பிறகு பனிப்பையை வைக்க வேண்டும். பைக்குள் இருக்கும் பனிக்கட்டி கரைந்தவுடன் தண்ணீரை வெளியில் கொட்டி விட்டு மறுபடியும் முன் போலப் பனிக்கட்டிகளைப் போட்டு நிரப்பி வைக்க வேண்டும். நீண்ட நேரம் பனிப்பை வைக்க வேண்டிய போது அரைமணிக்கு ஒருதரம் எடுத்து அல்லது பத்து நிமிஷம் எடுத்து விட்டு மறுபடியும் வைத்தால் நல்ல பலனைக் கொடுக்கும். அதிகக் குளிர்ச்சி உண்டு பண்ண வேண்டுமானால் பனிக்கட்டிகளுடன் கொஞ்சம் உப்பு கலந்து வைக்க வேண்டும். வேறு முறைப்படி பையைக் கனமாய் ஈரம் காய்ந்தவுடன் அதன் உட்பாகத்திலும் வெளியிலும் மிருதுவாகப் பொடி பண்ணிய அரிசிமாவு அல்லது போரிக் பவுடர் தூவி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் ரப்பர் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு விடும்.

209

54. குளிர்ச்சி ஒத்தடம்

ஐஸ் அல்லது உறைந்த பனிக்கட்டித் துண்டுகளை மடித்துக் கொண்ட துணியில் வைத்து அதிகமாகப் பரவாமல் அப்படியே வைத்து வீக்கமுள்ள இடங்களில் கட்டலாம். ஒரு துணி அல்லது பிளானல் துணியை நெருக்கி ஒரு தடவை நனைக்க வேண்டும். இதைத் தண்ணீரில் நனைத்தும் வைத்துக் கட்டலாம். போரிக் பொடி, வேதி உப்பு முதலிய வற்றை இம்மாதிரி உபயோகப் படுத்துவது நலம்.

55 வெந்நீர் பை.

உள்ளேயுள்ள நீர் பையில் பூராவும் நிரப்பாமல் கொஞ்சம் அல்லது முக்கால் பங்கு இடம் விட்டு நல்ல சூடான வெந்நீர் நிரப்ப வேண்டும். பையின் வாயைக் காற்று அல்லது தண்ணீர் போகாமல் மூட வேண்டும். மேற்கண்டபடி ஒரு தகரக் குவளையில் நீர் நிரப்பி ஒன்றிரண்டு சுற்று வெளிய துணியைச் சுற்றி அவசியமான பக்குவமாக கொடுக்கும். அந்தத் தகரக் குவளையை ஒரு பெரிய வயிற்றில் வைத்து கட்டுப் போட்டு வைக்க வேண்டும். உடம்பின் எவ்வளவு சூடு தாங்கும் சூடு கொடுக்க வேண்டுமோ அதற்குத் தகுந்தபடி வெந்நீர் நிரப்பி வைக்கலாம்.

55 சூடேற்றும் முறை.

சில சமயங்களில் கால் கைகளைச் சூடேற்றுவது அவசியமாகும். கொஞ்சம் நீரும் வைக்கக் கூடிய ஒரு தொட்டியில் வெந்நீர் நிரப்பி நோயாளியை ஒரு நாற்காலியாவது அல்லது கட்டிலின் மேலாவது உட்கார வைக்க வேண்டும். முழங்கால் வரையில் வெந்நீர் ஊற்றலாம். இப்படி செய்யும் போது நோயாளியின் உடம்பை மூடலாம். கால்கள் பொறுக்கக் கூடிய வெப்பமாகக் கால் முழுவதும் பொருந்தும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். இடுப்பு, சிறுநீர்ப்பை, நீர்த் துவாரம், மலத்துவாரம் முதலிய இடங்களுக்கு அவை வசதியாக நோயாளியை ஒரு பெரிய தொட்டியில் பாதி வெந்நீர் நிரப்பிக் கொப்பூழ் வரை உட்கார வைக்கலாம். இதற்கு இடுப்பு தொட்டி என்று பெயர். சுடு தண்ணீரில் நோயாளியின் வயிற்றின் கீழ் பாகம் வெந்நீரில் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்படி வெந்நீரில் உட்கார்ந்திருக்கும் பொழுது உடல் மற்றப் பாகங்களை மூட வேண்டும். இடுப்புத் தொட்டியில் இருந்து எழுந்த பிறகு உலர்ந்த துண்டால் துடைத்து ஒரு துணியைக் கொண்டு துடைக்க வேண்டும்.

56. ஒத்தடம்

இது பல வகையாகக் கொடுக்கலாம். வீக்கம், வலி, அல்லது உள் வேக்காடு கண்ட பாகங்களில் எரிச்சல் கொடுத்து ரத்த ஓட்டத்தைத் திருப்புவதற்காக ஒத்தடம் போடுவது. சாதாரணமாக நல்ல கொதிக்கும் சுடுநீர் தண்ணீரை ஒரு தொட்டியில் ஊற்றி, பாதியாக் கம்பளித் துண்டு அல்லது கெட்டி கம்பளிச் சொக்காய் இவைகளை அதில் போட்டு ஒரு கெட்டி துணியின் நடுவில் வைத்து, கொஞ்சம் இரண்டு பக்கமும் பிடித்துக் கொண்டு தண்ணீரைப் பிழிந்து விட வேண்டும். சூட்டைக் கையால் தொட்டுப் பார்த்துப் பொறுக்கும் படியான நிலையில் ஒத்தடம் கொடுக்க வேண்டும். சூடு குறைந்து விடாதபடி இரண்டு மூன்று போல வெந்நீரில் போட்டுப் பிழிந்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். கற்பூரத் தைலம் அல்லது வாசனை எண்ணெய் போன்ற வைகளை வெந்நீரில் கலந்து இம்மாதிரி ஒத்தடம் கொடுக்கலாம்.

சாதிமல்லிகைக் களி போல் கிண்டி வாழையிலையில் வைத்து வேக்காடு கண்ட பாகங்களில் அத்துடன் போட்டுக் கட்டலாம். கோதுமை, ஆளிவிதை, வெள்ளைக் கடுகு, நாகக் கடுகு இவைகளையும் களி போல் கிண்டிச் சூடாக வைத்துக் கட்டலாம். இந்தக் களிகளோடு கற்பூரத்தைலம் முதலிய மருந்துகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

57. மலச் சிக்கலுக்காக (குடல் கழுவி).

பொருத்தமான சோப்பைக் காய்ச்சி தண்ணீரில் (ஒரு பைண்ட் கழுவு தண்ணீர்) கலந்து நோயாளியை இடது புறமாகப் படுக்க வைத்து முழங்கால்களைப் பாதி மடக்கி வைத்துக் கொண்டு இருக்க, மூன்று அடி உயரம் படுக்கையிலிருந்து உயர்த்தித் தண்ணீர் மெதுவாக உள்ளுக்குள் போகும்படி செய்ய வேண்டும். தண்ணீர் உள்ளே சென்றவுடன் ரப்பர் குழாயை விரலால் அழுத்தி விட வேண்டும் அல்லது மல துவாரத்தின் வெளிப்பக்கம் துணியை அழுத்தி வெளியில் கசிந்து உள்ளே தண்ணீரில் தண்ணீர் கலக்கவிடும். உள்ளே தண்ணீர் சென்ற பிறகு ஐந்து அல்லது பத்து நிமிஷம் பொறுத்து வெளியே வரும்படி செய்ய வேண்டும். சில சமயங்களில் உட்சென்ற தண்ணீரைக் காட்டிலும் குறைவாகத் திரும்பி வரும் இருப்பலாம். அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை.

நோயாளிக்கு வாய் வழியாக ஆகாரம் அல்லது தண்ணீர் செல்லாத நிலை ஏற்பட்டு விட்டால், மலவழியாகக் கொடுக்க வேண்டியதாகும். அத்தகைய ஆசனக் குழாய் மூலம் தண்ணீர், மருந்து, ஆகாரம் முதலியவைகளை மலத்துவாரத்தின் ஆசனக் குழாயை வைத்து மெதுவாகச் செலுத்தி உள்ளே செய்யலாம். இது தேக்கரண்டி உப்பு, அரைப்படி வெந்நீரில் கரைத்து அல்லது மருந்து சர்க்கரை கரைசல். தேக்கரண்டி சேர்த்துக் கொடுக்க வேண்டும். ஆசனக் குழாய் துளியுள்ள சிறிய ரப்பர் குழாயைச் செலுத்தி அதை மெதுவாகக் குடலினுள் செலுத்தி மேற்கண்டபடி செய்ய செய்யப்பட்ட பானத்தைச் சொட்டு சொட்டாக உள்ளே போகும்படி செய்ய வேண்டும். மலத்துவாரத்தின் வழியாக ஆகாரம் கொடுக்க வேண்டுமானால் மேற்கண்ட பானத்தோடு ஆரோக்கியமும் அல்லது பாலின் உள்ள தைக் மருந்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு மெல்லிய ரப்பர் குழாயை ஓர் அடிக்கும் மேல் குடலுக்குள் செலுத்திச் சொட்டு சொட்டாக உள்ளே போகும்படி செய்ய வேண்டும். பத்து நிமிஷத்துக்கு மேலாக இதை ஒரு தடவையில் கொடுக்கக் கூடாது. இப்படி ஆசனக் குழாய் மூலம் ஆகாரம் செலுத்துவது மிகவும் நாட்களுக்கு மேல் கூடாது. நோயாளி வாயின் வழியாக ஆகாரம் ஏற்றுக் கொள்ளும் வரையில் கொடுக்க வேண்டும்.

சில சமயங்களில் மலத்துவாரத்தின் வழியாகச் சிறு குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் மலம் கழிவதற்காகத் திரைப்பதை உபயோகப்படுத்த வேண்டி வரும். கண்ணாடிப் பிசிறுகள் இல்லாத கிளிசரின் அல்லது விதம் திரைப்பான் (Glycerine), அல்லது விதம் தண்ணீரில் கலந்து மெதுவாக மலத்துவாரத்தின் கண்ணாடி குழாயைச் செலுத்தி மெள்ள, அந்த திரவத்தைச் செலுத்திக் கொடுக்க வேண்டும். இது வயதானவர்களுக்கு ஒரு விதம் திரைப்பான் ஒரு விதம் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும்.

உடல் புண்கள், வயிற்றுக் கட்டி வயிறு இருந்தால் அவர் கருவியின் மேல் கழுவுவது வழக்கம் முன்பு எதுவும் மேற்கண்ட முறையை அனுசரித்துச் செய்ய வேண்டும்.

ஆசனக் குழாய் வெளிக் கொண்டு உடலின் வேறு அவயவங்களையும் கழுவுவது உண்டு. மேலும் கர்ப்பப்பை, யோனி முதலிய அவயவங்களை மருந்துகளைக் கொண்டு கழுவ வேண்டும்.

ஒவ்வொரு தடவைக்கும் ஒரு படி தண்ணீர் அல்லது இரண்டு படி மருந்து மருந்து நீர் உபயோகப்படுத்தலாம்.

59. கடுகுப் பற்று

அதிக வலி உண்டாக்கும் நோய்களுக்குக் கடுகுப் பற்றை நோயுள்ள இடத்திற்கு மேலாகப் போடுவது உண்டு. அவ்வெண்ணெய் கடுகை மாவாக அரைத்துத் தண்ணீரைக் கலந்து பசை போலச் செய்து அதை ஒரு மெல்லிய காகிதத்தில் தடவி வலியுள்ள இடத்தின் மேல் மருந்து பக்கம் உடலில் படும்படி போட வேண்டும். சுத்தமான கடுகும் உபயோகப்படுத்தலாம். ஆனால் காரம் குறைவாக இருக்கும். இந்தக் கடுகுப் பசையை போட்டுக் கொண்டு நிமிஷத்திற்கு ~~பின்~~ப் பிறகு எரிச்சல் உண்டாகும். பத்து நிமிஷத்திற்கு மேல் இருக்கும்படி விடக்கூடாது. அதற்கு மேல் போனால் தோலில் கொப்புளம் புறப்பட்டு விடும். பத்து நிமிஷத்திற்குப் பிறகு பசையை எடுத்த இடம் சிவந்து போய் வலி குறையும். வாதம் நடுப்பதை நீக்குவதற்கும் கடுகுப் பற்றை உபயோகப்படுத்தலாம். மார்புச் சளிக்கு மேலும் நீரும் நாளுக்குள் கடுகுப் பற்றுப் போட வேண்டும்.

59. கடுகுச் சாந்து.

நுரையீரல், நீர்க்கோர்வை, ஈரல் நோயும், சன்னிக்கட்டு இவைகளுக்குக் கடுகுப் பற்று உபயோகப்படும். ஒரு சிறிய கரண்டி கடுகு, ஒரு சிறிய கரண்டி கஸ்தூரி மஞ்சள், அதே அளவு சாம்பிராணி இவைகளைப் பொடி செய்து தண்ணீரில் கலந்து ஒர் இரும்புக் கரண்டியில் கொதிக்க வைத்துச் சூடாக இருக்கும் பொழுது முன் நெற்றி, பின் மண்டை இந்த இடங்களில் பூசி மறுநாள் காலையில் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்து விட வேண்டும். கீல்வலி, முடக்கால், வீக்கம், பேட்டுப்புழுப்பு இவைகளுக்கும் கடுகுப் பற்றுப் போடலாம். சில சமயங்களில் மிளகாயை அரைத்துப் பற்றுப் போடலாம்.

59. படுக்கைப் புண்.

நோய் காப்பாளர்கள் கவனிக்க வேண்டியவைகளில் மிகவும் முக்கியமானது படுக்கைப் புண். நெடுநாளான வியாதியால் கைகால் அசைக்க முடியாமல் ஒரே பக்கத்திலேயே பல நாட்கள் படுக்க வேண்டிய அவசியம் நேரிடும். அப்படிப் படுத்திருக்கும் காலத்தில் மெலிந்து போன உடலின் எலும்பின் மேல் சதையும் தோலும் அழுத்திக் கொண்டிருப்பதால் அந்த இடங்கள் புண்ணாகி விடும். உணர்ச்சி குறைந்திருக்கும் நோயாளிக்குப் புண் ஏற்படுவது தெரிவதில்லை. இவ்வாறு ஏற்பட்ட புண் நெடுநாட்களுக்குக் குணமாவதில்லை. ஆகையால் அது வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோயாளியை அடிக்கடி ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் திருப்பி மாற்றிப் படுக்கையில் புரட்டிவிட்டு

புரட்டி விட்டுப் படுத்திருக்க பாகங்களின் சுத்த இடையம் அதற்படும்படி கவனிக்க வேண்டும். எலும்புக் கூடுத்தும் இடங்களின் மீது சென்று உள்ள காற்றடைத்த ரப்பர் வளையங்களைப் போட்டு அதன் மேல் நோயாளியைப் படுக்க வைக்க வேண்டும். ரப்பர் வளை கிடைக்காவிட்டால் சுத்தமான பஞ்சினைப் புரிபோல் சுற்றிக் கோலச் சுற்றிப் புண்ணாகக் கூடிய பாகத்தின் பாரம் விழாமல் உடலை அதன் மேல் உயர்த்தி வைக்க வேண்டும். இது தவிர, தினம் இரண்டு முறை அந்தப் பாகங்களில் எரிசாராயத்தைப் பஞ்சில் நனைத்துக் கொண்டு தடவிப் பிறகு போரிக் பவுடரும், ஜிங்க் ஆக்ஸைட் மாவும் (ஸிங்க் மாவு) சமபங்கியாகக் கலந்து தடவ வேண்டும்.

60. ஆயுதங்கள் சிகிச்சைக்குரிய உபகரணங்களைச் சுத்தப் படுத்தல்

வைத்தியர் சிகிச்சைகளை நோயாளிக்கு மருந்து கொடுத்து உபயோகிப்பதற்கு முன்பு, கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் கிருமிகள், மற்ற அசுத்தங்கள் இல்லாமல் சுத்தப் படுத்துவதற்கு ஒரு முறை வேண்டும் உண்டு. இதற்குக் கிருமி சுத்தம் என்று பெயர். இது நோய் காப்பாளர்க்குத் தெரிய வேண்டும். சுத்தம் செய்ய வேண்டிய சாமான்கள் இரும்பு, அலுமினியம், வெள்ளி, கண்ணாடி, ரப்பர், இவைகள் இவைகளால் செய்யப்பட்டவையாக இருக்கலாம். ஒரு சிகிச்சை செய்வதற்குக் கத்தி, கத்தரி, ஊசிகள் முதலிய பல வகை ஆயுதங்கள், அவை வைக்கப்படும் தட்டுகள், கை கழுவும் தட்டுகள், துண்டு, கிருமி போன்ற பொருள்கள் எல்லாம் கிருமி சுத்த முறையில் சுத்தப் படுத்த வேண்டியவைகளாம். அப்படிச் செய்வதற்குச் சுலபமானதும், அநேகம் ஆஸ்பத்திரிகளில் வழக்கத்தில் இருக்கக் கூடியதுமான முறை ஒன்று உள்ளது. ஆயுதம், சிகிச்சைக்குரிய தட்டு முதலிய எல்லாவற்றையும் அந்த நிமிடம் முதல் அரை மணி நேரம் கொதிக்கும் தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டியது தான். அப்படிக் கொதிக்க வைத்த பிறகு தீவாயால் வைத்துச் சுத்தம் செய்த துண்டுகளின் மேல் எடுத்து வைக்க வேண்டும். அப்படி வைக்கும் முன்பாக நோய்க் காப்பாளர் தங்கள் கைகளையும், முன்னங் கைகளையும், நகங்களை வாளையால் சுரண்டி ஸோப்புப் போட்டு நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்தி, ஆவியில் தண்ணீரில் கழுவிக் கொண்டு, பிறகு ஆயுதங்களை எடுத்து வைக்க வேண்டும்.

சிகிச்சைக்குரியவைகளை அப்படியே போட்டுக் கொதிக்க வைக்கக் கூடாது. ஊசிகளை வேறாகவும் கண்ணாடித் தட்டைத் தனியாகவும், ரப்பர் குழாய்த் தனியாகவும் போட்டு வைத்துக் கொதிக்க வைக்க வேண்டும். வைத்தியர் வருவதற்கு நேரமானால், கருவிகளை அவர் வரும் வரையில் மருந்து நீரில் ஊறவைத்திருக்க வேண்டும்.

சிகிச்சைக்குரிய ஊசிகளில் பல நிறைகள் உண்டு. இவை ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து இருபது, இருபத்தைந்து ஸி-ஸி அளவுள்ள பல மாதிரிகள் இருக்கின்றன. நோய்க்குக் கொடுக்க வேண்டிய மருந்தின் அளவுக்குப் பொருத்தமான சிகிச்சைக் கருவியை வைத்தியர் உபயோகிப்பார். ஸி-ஸி" என்பது திரவ மருந்து அளவு. ஒரு கால் அவுன்ஸில் சுமார் 16½ ஸி-ஸி" கொள்ளும். ஒரு திரவ அவுன்ஸ் நீர் 28½ ஸி-ஸி" ஆகும்.

அதிக வெப்பத்தில் நோயாளியின் படுக்கை, துணி, இவை கண்ணில் தெரியாத கிருமிகளைக் கொல்லும் நோக்கத்துடன் வெயிலில் காய வைத்தால் இவை சுத்தமாகிவிடும். அதன் காய வைக்கும்

ஆனால் காய வைக்கும் நேரம் பகல் பன்னிரண்டு மணியிலிருந்து இரண்டு மணி வரையில் இருக்க வேண்டும். நல்ல வெயிலில் விரித்துப் போட்டு, மாற்றிப் போட்டுக் காய வைக்க வேண்டும். இல்லாவிட்டால் கொதிக்கும் தண்ணீரில் ஒரு மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். மண்ணெண்ணெய், சாம்பிராணி போன்ற வாசனைப் பொருட்களுடன் கலந்து சோப்பு வைத்து சலவை செய்வது நல்ல முறை. மருத்துவர் சொல்லாமல் உபயோகித்தல் கூடாது. பகிர்ந்து இருக்கக் கூடிய இடங்களில் இந்த நோயைக் கட்டுப்படுத்த வேண்டும்.

62. நோயாளியின் உணவு

நோய் வாய்ப்பட்டவர்களுக்குப் பசி அதிகம் இராது. நோயாளிகளுக்கு உடையது தான். நோயாளர்கள் தினசரி கொடுக்கப்படுவதிலிருந்து அவர்கள் கொழுப்பு நிறைந்தவைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால், வழக்கத்தினும் கொஞ்சம் பாதி கூட காம உண்ணாதிருக்கும். வயிறு நிறையக் கொள்ளாமலிருக்கும் படியும் உண்ணுதல். அது நல்லது. பல நோய்களுக்கும் உண்ணாமலிருப்பதே சிறந்த வைத்தியம். பல நாள் உண்ணாமல் இருந்தாலும் உயிருக்குச் சேதம் வந்து விடுமென்று பயப்பட வேண்டியதில்லை. வழக்கம் போல் உணவை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், மெதுவாகவும், எளிமையாக ஜீரணிக்கக் கூடியதுமான ஆகாரத்தை நோயாளிகளுக்குக் கொடுக்கலாம். இத்தகைய ஆகாரங்கள் பலவகை உண்டு. அவற்றைச் செய்யும் விதங்கள் நோய் காப்பாளர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

எல்லாக் காய்ச்சல்கள், வயிற்று வலி, வாந்தி, பேதி, வயிற்றுக் கடுப்பு, ஈரல் நோய், அஜீரணம், வயிற்றில் ரத்தம், மஞ்சள் காமாலை இவைகளுக்கு வழக்கம் போல் உணவை நிறுத்தி விட வேண்டும். நோயாளிகளுக்குக் கொடுக்கும் உணவு தண்ணீர் மயமாக இருப்பது நலம். அவ்வாறு உணவுகளில் முக்கியமானது நம் நாட்டில் பொரி அரிசிக் கஞ்சி. கைக்குத்தல் புழுங்கல் அரிசியை இரண்டொன்றாக உடைத்துச் சட்டியில் அனலில் வைத்துப் பொன் நிறத்துடன் மணம் வரும் வரை அனலிலிருந்து எடுத்து வர வேண்டும். அதைக் கால் படி வறுத்த அரிசிக்கு ஒரு படி தண்ணீர் வைத்து ஒரு மணி நேரம் கொதிக்க வைத்து, பாதி அந்தக் கஞ்சி நீரை உபயோகப்படுத்தலாம். இதில் கொஞ்சம் உப்பு சேர்த்து எலுமிச்சம் பழம் பிழிந்து விட்ட மோரைக் கலந்து கொடுக்கலாம். அல்லது பசுவின் பாலும் சர்க்கரையும் போட்டுக் கலந்து கொடுக்கலாம். அவல் பொரியைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் கஞ்சி செய்து கொடுக்கலாம். நெற் பொரியும் அரிசிக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம். பல வகைக் கஞ்சிகளுக்குப் பால் சேர்ப்பது சாதாரணமாயுள்ளது. மோர் சேர்ப்பதைப் பற்றி அநேகருக்குப் பயம் இருக்கிறது. வெண்ணெய் எடுக்கப்பட்ட மோர் சேர்ப்பதைப் பற்றிப் பயம் வேண்டியதில்லை. அநேக வித வயிறு, குடல் நோய்களுக்குப் பால் உபயோகப்படுத்த முடியாது. அதற்குப் பதிலாக மோர் சேர்ப்பது நன்மையைக் கொடுக்கும். பார்லியை (பார்லி அரிசி)க் கஞ்சி செய்வது போல், இதே வழி இன்னும் பல பக்குவ உணவுகளை நோயாளிகளுக்கு உபயோகப்படுத்தலாம். அரைக்கால் படி பார்லியைத் தட்டிக் கொண்டு படி தண்ணீர் வைத்து ஒரு மணி நேரம் கொதிக்க வைத்துப் பாதி கஞ்சியைக் கஞ்சியாக வடித்து அல்லது சர்க்கரை பால் அல்லது மோர் கலந்தாவது கொடுக்கலாம். இதே மாதிரி உபயோகப்படுத்திய பார்லியைத் தான் அந்தச் சட்டியிலேயே வைத்திருந்து மேன்மேலும் இதே மாதிரி பொங்கு நீரைச் சேர்த்து கொடுக்கலாம். இதேபோல் சோளத்து மாவை

பலகாரியக் கருவியை ஒரு பாண் பெருவதும் வைத்திருந்து உபயோகப் படுத்தலாம்.

இவ்வாறில் கஞ்சி தயாரிப்பதில் அரிசி நன்றாக வெந்து குழைந்து விட வேண்டும். சோறுமை செய்க கஞ்சியும் அவ்வாறு செய்ய வேண்டும். இந்தக் கஞ்சியும் தனியாகவோ அல்லது பசுவின் பால் அல்லது மோர் இவைகளோடு கலந்து கொடுக்கலாம். கறிவேப்பிலை நோய்களின் காய்ச்சல், இதன் தண்ணீர் பருக்கொள்ளவர்களுக்கு அவைகளைக் கொடுக்கலாம் இரண்டும் கொடுக்கலாம். அது தாக சாந்தியும் ஆகாரமும் ஆகும். பால் நோயாளிகளுக்கு ஏற்பட்ட உணவு. ஆயினும் பசுவின் பால் சிறந்தது. பாதியளவு தண்ணீர் கலந்து ஒரு கரண்டி சர்க்கரையும் போட்டுச் சூடாகக் கொடுக்கலாம். இளம் குழந்தைக்கு அரை ஒரு படி பால் வரையில் கொடுக்கலாம். சிலருக்குப் பால் பிடிக்காது. அவர்களுக்கு மோர் கொடுக்கலாம்.

நோயாளிகளுக்குத் தண்ணீர் ஏராளமாகக் கொடுக்க வேண்டும். சிலர் தண்ணீர் கொடுக்கக் கூடாதென்று பயப்படுகிறார்கள். அது தவறான எண்ணம். ஆகாரத்தோடு கூடத் தண்ணீரைத் தவிர, தினசரி ஒருவருக்கு இரண்டு படி தண்ணீர் இவ்வாறாக இருக்க வேண்டும் என்று கூறப் படுகிறது. நோயின் கிருமிகளை வெளியேற்றவும், வறட்சியைத் தடுக்கவும் தண்ணீர் கூடிய அளவு கொடுப்பது அவசியம். பழங்களின் ரசம் நோயாளிகளுக்கு நன்மை தரும். கிச்சிலிப் பழம், சாத்துக்குடி பழம், தக்காளி, எலுமிச்சை, மாதுளை இவைகளின் ரசம் தனியாகவோ அல்லது தண்ணீருடன் கலந்து இனிப்புச் சேர்த்தோ கொடுக்க வேண்டும். தக்காளிப் பழமும் உபயோகிக்கலாம். ஆனால் விதைகளை வடிகட்டி விட்டுக் கொடுக்க வேண்டும். வயிறு, குடல் புண்களுக்கு, கூழ் போன்றதுக்கும் இளநீர் மிக நல்ல ஆகாரம். பச்சைக் கோழி முட்டையை உடைத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வெள்ளைக் கருவையும் மஞ்சள் கருவையும் சேர்த்து அடித்து, அத்துடன் நாலு விதம் பழம் ஒரு கரண்டி சர்க்கரையும் சேர்த்துக் கொடுப்பது நல்ல பயன் தரும். வயிறு, குடல் புண்களுக்கு ஒரு முட்டையின் வெள்ளைக் கருவுடன் காய்ச்சின தண்ணீர் கலந்து சர்க்கரை சேர்த்துக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் அவ்விதம் கொடுக்கும் போது ஒரு முட்டையின் வெள்ளைக் கருவிற்கு பத்து விதம் தண்ணீர் சேர்க்க வேண்டும். அதில் மேலும் சர்க்கரை ஒரு கரண்டி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பால் தெளிந்த நீர் (Whey) மேல் கூறிய இரண்டு நோய்களின் பாதுகாப்புக்கு உபயோகப் படுத்தலாம். பாலை இறக்குவதற்கு முன் பாலில் ஒரு கரண்டி அல்லது மோர் பாத்திரத்தில் காய்ச்சி சூடாக இருக்கும் போது எலுமிச்சம் பழம் சாறு பிழிய வேண்டும். பிறகு கரண்டியால் கிளறினால் பால் உடைந்து கட்டியும் தண்ணீருமாகப் பிரியும். அதை ஒரு சுத்தமான வெள்ளைத் துணியில் வடிகட்டினால் கட்டியும் தண்ணீரும் வேறாகப் பிரியும். இவ்வாறு நீர் சுத்த வெள்ளையாகவும் தெளிவாகவும் இருக்கும். அதைத்தான் நோயாளிக்குக் கொடுக்க வேண்டும். எலுமிச்சம் பழச்சாறு ஊற்றுவதற்குப் பதிலாக மோர் தண்ணீர் சேர்க்கலாம். ஒரு படிக்கால் கட்டியை உடைத்துத் தாள் செய்து அதில் சுத்தத் தண்ணீரில் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் கலக்கச் சேர்க்க வேண்டும்.

எவ்வளவு கரைக்கக்கூடுமோ அவ்வளவு கரைத்து அந்தத் தண்ணீரில் சொற்பம் எடுத்துச் சூடான பாலில் துளித் துளியாக விட்டுப் பால் முறிந்த உடன் வடிகட்டி குடிக்கக் கொடுக்கலாம். இதை அடிக்கடி தயாரித்துக் கொடுக்க வேண்டும். ஒரே தடவையில் செய்து வெகு நேரம் வைக்கக் கூடாது.

நோயாளிக்கு எவ்வளவு தரம் ஆகாரம் கொடுக்க வேண்டும் என்பதை திட்டமாக நிர்ணயம் செய்ய முடியாது. அது நோயைப் பொறுத்தும், நோயின் நிலைமையைப் பற்றியும் மாறுபடும். சாதாரணமாக, காலை 6 மணிக்குத் தொடங்கி 10 மணி, 2 மணி, 6 மணி நேரங்களில் ஆகாரம் கொடுக்கலாம். இரு தடவைக்கு இடையே கால் படி ஆகாரமாவது கொடுக்க வேண்டும். ஒரே தடவையில் கால் படி கொடுக்க முடியாவிட்டால் இந்த இடைவேளையில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும். ஆகாரத்தைப் படுக்கையில் இருப்பவர்களுக்கு தலையின் அடியில் கையைத் தாங்கி அல்லது தலையைப் பலமாக உயர்த்தி தலையணையை வைத்து மேலே நிமிர்ந்த பின் சரியான பாத்திரத்தில் கொடுக்க வேண்டும். ஆகாரம் கொடுத்த பிறகு வாயைக் கொப்பளிக்க வைத்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

மயக்கமுற்றிருக்கும் நோயாளிக்கு ஆகாரம் வாய் வழியாகக் கொடுக்கவே கூடாது. அப்படிக் கொடுத்தால் சுவாசக் குழலில் ஆகாரம் சிக்கி அடைத்து அபாயம் உண்டாகும்.

புகை, ஆவி; இருமலுள்ள நோயாளிக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு மூக்குள்ள வெந்நீர் போடும் பாத்திரத்தில் (kettle) தண்ணீரைப் போட்டுக் காய்ச்ச வேண்டும். ஆவி கிளம்பும் சமயத்தில் அதில் போட வேண்டிய மருந்துகளை ஊற்ற வேண்டும். உதாரணம், யூகலிப்டஸ் தைலம் இவைகளில் ஒரு மேஜைக் கரண்டி (table spoonful) கலந்து அந்த ஆவியை நோயாளியின் சுவாசத்துடன் உட்கொள்ளும்படி செய்ய வேண்டும். ஒரு கெட்டியின் வாயில் பேப்பர் குழாயை வைத்து விட்டால் புகை அதன் வழியாக வெளிவந்து கொண்டிருக்கும். அது இலகுவான சமயத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நோயாளியின் அறையைச் சுத்தம் செய்வதற்குக் கந்தகத்தை நெருப்பில் போட்டுப் புகையும்படி செய்ய வேண்டும். காச நோய் உள்ளவர்களுக்குக் காய்ந்த உமியும் வேப்பிலையும் அனலில் போட்டுப் புகையை உண்டாக்கி, அப்புகையைக் கொசுவலைக்குள் விட்டு அதற்குள் நோயாளியைப் படுக்க வைப்பது சிக்கலைக் குறைக்கும். சிக்கல் குறைந்தவுடன் கொசுவலையிலிருந்து நோயாளியை வெளியேற்றி விடலாம்.

66. மரணக் குறிகள்

நோய்க்காரப் பார்ப்பவர்களுக்கு மரணத்தின் குறிகள் அவசியம் தெரிய வேண்டும்.

(1) இரத்த ஓட்டம் நின்று விடும். நாடியின் துடிப்பு நின்று விடும். மார்பில் இருதயத்துடிப்பு கைக்குத் தெரியாது; காதிற்கும் கேட்காது.

(2) மூச்சு நின்று விடும். மார்பு, வயிறு இரண்டும் அசைவற்று நின்றிருக்கும். ஒரு கண்ணாடியை வாயின் முன்னும், மூக்கின் முன்பும் பிடித்தால் அதில் ஆவி படியாது.

(3) தேகம் கொஞ்சமாக உடல் குளிர்ந்து விடும். உயிர் போகும் பொழுது தேகம் அதிகம்

நீலம் அதிகம் இருந்தால் உயிர் போனபின்னும் உடல் விரைத்து போவதற்குக் காரணமாகும்.

(4) உடல் படிப்படியாக குறைந்து விடும்.

(5) கண்கள் பஞ்சடைந்து, வெளிறி, மங்கிப் போய், உள்ளடங்கி விடும்.

(6) உடல் அசைவற்றிருக்கும்.

இந்த அறிகுறிகளைக் கொண்டிருந்தால் மரணமடைந்து விட்டதென்று அறியலாம்

67. தொத்து நோய்களின் அட்டவணை.

வியாதி	தொத்தும் பொழுது அடங்கியிருக்கும் காலம்	கொப்புளம் கிளம்பும் நாள்	தனித்து வைக்க வேண்டிய நாட்கள் (நோயாளிக்கு)	நோயாளியுடன் இருந்தவர்களுக்குத் தொத்து ஒட்டும் நாட்கள்
1 [illegible] காய்ச்சல்	2-5. நாட்கள்	கொப்புளம் இரண்டாவது.	காய்ச்சல் அடங்கும் நாட்கள்	மூக்கிலும், தொண்டையிலும், காதுக் கிருமிகள் இல்லாமலிருக்கும் வரை.
2. சின்னம்மை	11-23. நாட்கள்	முதல் நாள்	காய்ந்த பொருக்குகள் பூராவும் விழும் வரையில் (மூன்று வாரம்)	21. நாட்கள்.
3. வாந்தி பேதி (காலரா)	1-6. நாட்கள்	கிடையாது.	வியாதியின் குறிகள் இருக்கும் வரையில்	....
4. முடக்குக் காய்ச்சல்	4-5. நாட்கள்	உடல் தடிப்பு முதல் நாள். தனித் தடிப்புகள் 4. அல்லது 5 நாள்	முதல் 24 மணி நேரம்	கடிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து நாள்.
5. தொண்டைக் காய்ச்சல்	2 நாள்	,,	தொண்டையில் கிருமிகள் நீங்கு வதற்குச் சோதனைகள் போல இல்லாமல் இருக்க வேண்டும்	6 நாட்கள்
6 வயிற்றுக் கடுப்பு.	2-7. நாட்கள்	,,	,,	,, .
7. நடுக் காய்ச்சல் விஷக் காய்ச்சல்	10-14 நாட்கள் 1-3 கிழமைகளும் வேறுபடலாம்.	மேற்படி போலவே மேற்படி போலவே	மேற்படி போலவே வியாதியின் பின் மறைந்து சில நாட்கள்	மேற்படி போலவே. ,,
8 குளிர் முறைக் காய்ச்சல்	10-14 நாட்கள்	,,	ரத்தத்தில் கிருமிகள் இருக்கும் வரை	,,

தொத்து நோய்களின் அட்டவணை.

	வியாதி	தொத்தும் பொழுது (அடங்கியுள்ள காலம்)	தொப்பளம் தோன்றும் நாள்	தனித்துவைக்க வேண்டிய நாட்கள் (நோயாளிக்கு)	நோயாளியுடன் இருந்தவர்களுக்கு ஒதுக்கிவைக்கும் நாட்கள்
	மூளைத்தண்டு காய்ச்சல்	2-5-நாட்கள்	தொப்பளம் கிடையாது	காய்ச்சல் அடங்கும் நாட்கள்	மூக்கிலும், தொண்டையிலும் நோய்க் கிருமிகள் இல்லாமலிருக்கும் வரை.
9	சின்னம்மை	10-15-நாட்கள்	4-வது நாள்	உடலில் தழும்புகள் கண்டு 14 நாட்கள்	15 நாட்கள்
10	பொன்னுக்கு வீங்கி	15-21-நாட்கள்	,,	கழுத்தில் வீக்கம் ஏற்பட்டு 15 நாள்	26 நாட்கள்
11	பிளேக் (மகா-மாரி)	2-5-நாட்கள்	,,	வியாதியின் எல்லாக் குறிகளும் மறையும் வரை	10 நாட்கள்
12	பெரியம்மை	14 நாள்	3வது அல்லது 4வது நாள்	எல்லாக் கொப்புளங்களும் காய்ந்து உதிர்ந்து போகும் வரை	16 நாட்கள்
	கக்குவான் இருமல்	5-14-நாட்கள்	,,	ஐந்து வாரங்கள்	15 நாட்கள்

69. :- அத்தியாயம் 6 :-

மனிதன் உடல்

வியாதிகளைப் பற்றியும், மனிதனுக்குத் தீமை ஏற்படும் அபாயங்கள், சிகிச்சைகளைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு முன்பாக மனிதனுடைய உடலின் இயல்பு, அமைப்பு இவைகளைப் பற்றிய முக்கியமான தத்துவங்களைக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்

உடல், உயிர், என்ற இரண்டும் சேர்ந்து மனிதன் உண்டாகிறான். உயிர் ஆத்மா இவைகளைப் பற்றிய ஆலோசனை இங்கு செய்ய வேண்டிய அவசியமில்லை. உயிர் இருக்கும் உடலைப் பற்றிக் கவனிக்க வேண்டும். தாயின் வயிற்றில் கருக் கர்ப்பத்திற்கு ஆணும் பெண்ணும் கூட வேண்டும். தகப்பன் பாகமான வீரியம் உயிரணுக்களின் புது உயிர் உற்பவத்திற்கென்று உண்டாகிய சிறிய அணுவை ஆணின் பாகம் அணுகியதும் உயிருள்ள ஒரு செல்லாகக் கருவாகத் தங்குகிறது. தாயின் சக்தியினாலும், ரத்தத்தினாலும் வளர்க்கப்பட்ட உயிரணு மெல்ல மெல்ல பெருகி, பருத்து, இரண்டாகி, நான்காகி இவ்வாறு கோடிக்கணக்கான உயிரணுக்களாகச் சேர்ந்து உடலாகிறது. உயிரணுக் கூட்டங்கள் ஊன், ரத்தம், எலும்பு இவைகளாகப் பிரிக்கப்பட்ட பாகங்களாகி; ஒவ்வொன்றும் அதற்கு ஏற்பட்ட வேலைகளைச் செய்து வருகிறது. உடல் உண்டாகி வளர்ந்து வருவதற்குச் சரீரத்தில் நடக்கும் சம்பவங்கள் நாம் விரும்பிச் செய்வதன்று. வெகுநேரமே, கண் விழிப்பதற்கு எதிர்பாராமல் அற்புதமான இந்த வேலையைச் செய்து வருகிறது. இரத்தம் ஓடுவதும், மூச்சு விடுவதும், உணவு ஜீரணிப்பதும், எல்லாம்

எல்லாம் நம் யந்திரசக்தி கலந்து வருகின்றன. விழித்திருக்கும் போதும், தூங்கும் போதும், ரத்தம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. ரத்தம் இருதயத்தை அதாவது நெஞ்சையும் தவறாமல் நீரேற்றி யந்திரம் போல் இடைவிடாமல் இருதயம் வேலை செய்கிறது. உலகத்தில் எல்லா விஞ்ஞானிகளும், அமைப்பு, ஒழுங்கு, அறிவு, புத்தி இத்தனையும் இங்கே இங்கே அமைந்துள்ள அற்புதமான இந்த யந்திரமாகும். மனித சரீரம்

69. உடலில் இணைக்கப்பட்ட பல பாகங்கள்

உண்ணும் உணவு ரத்தத்தில் சேர்ந்து அதன் மூலமாக உடல் வளர்கிறது. உண்ணும் உணவில் தேவையானதை ரத்தம் எடுத்துக் கொண்டு வேண்டாதவற்றை வெளியே தள்ளி விடுகிறது. பசி, ருசி, இவைகளால் தூண்டப்பட்டு உணவு ~~வேண்டிய போது~~ நாம் உட்கொள்ளப்படுகிறது. ரத்தத்திற்குத் தேவையான உணவு வேண்டிய போது பசி எடுக்கிறது. பசி என்பது உணவுக்காக இரத்த பேசுகிறதும், உண்மையில் ரத்தத்தின் தேவையே பசி. எலும்பு, சதை, நரம்பு, பாய்க்குழாய் (arteries) வழியே வரும் அல்லது நாளம் (veins), தோல், நகம், மயிர், பல், மூளை, நாக்கு, சிறுநீரகம் (Kidneys), ஈரல், வயிறு, இவை யாவும் ரத்தத்திலிருந்துதான் ஆக்கப்பட்டவை. அந்த ரத்தமே பலவித அவயவமாக மாறுகிறது. மேலும் கழிவுகளும் கூட ரத்த ஓட்டத்தின் மூலம் அதனின்று வெளிப்படும் அசுத்தங்களை வெளியே கொண்டு வருவதும் இதுதான்.

70. பலவித தாதுக்கள் (Tissues)

(1) தோல் - உடலை மூடும் தாது.

(2) இணைக்கும் தாது அல்லது சதை.

(3) நரம்பு சம்பந்த தாது.

(4) சதை அல்லது ஊன் தாது

(5) ரத்தமும், ரத்த நாளங்களும்

(6) எலும்பு.

உடலின் இந்த 6 வகை தாதுக்களும் லக்ஷக்கணக்கான உயிரணுக்கள் சேர்ந்து உண்டானவை.

70. உடலின் கூறுபாடு

1 தலை

2 கவசம் (அதாவது மார்பும் வயிறும் சேர்ந்த நடுப்பாகம்)

3 புஜம், முன்கை, உள்ளங்கை, விரல்கள்

4 தொடை, கால், பாதம்.

இது இரண்டு பாகங்கள் கொண்டது. இருதயம், நுரையீரல் மண்டை தலையைக் கவசத்துடன் இணைப்பது கழுத்து. கவசத்தின் மேற்பாகம் மார்பு, அடிப்பாகம் வயிறு.

71. மார்பிலுள்ள அவயவங்கள்

மார்பு என்பது ஒர் எலும்புக் கூட்டுக்குள் அடங்கியுள்ள அவயவங்களாகும். இந்த மார்புக் கூட்டுக்கும் அதற்குக் கீழுள்ள வயிற்றுக்கும் மத்தியில் அகலமான ஒரு திரை இருக்கிறது. அந்தத் திரைக்கு ஜவ்வுத்தட்டு அல்லது இடைத்தட்டு (diaphragm) என்று பெயர். வாயிலிருந்து வயிற்றுக்கு ஆகாரம் கொண்டு போகும் குழாயும் இருதயத்திலிருந்து அடிப்பாகத்திற்குப் போகும் ரத்தக் குழாயும் திரும்பி வரும் வடி குழாயும் இடைத்தட்டின் வழியாகப் பொத்துக் கொண்டு செல்லுகின்றன.

மார்புக் கூட்டுக்குள்

இருதயமும், இரண்டு நுரையீரல்களும் இருக்கின்றன. (heart and lungs) இரண்டு நுரையீரல்களும் மெல்லிய ஒர் உறையினால் மூடப்பட்டுள்ளன.

இரண்டு நுரையீரல்களுக்கும் மத்தியில் இருதயம் இருக்கிறது. இருபக்கங்களிலும் மற்றும் மார்புக் கூட்டின் பின்புறத்தில் சுவாசக் குழல்களோடும் முதுகுத் தண்டோடும் (Spinal column) பிணைக்கப்பட்டிருக்கிறது.

இருதயம் மார்புக் கூட்டின் முன்புறத்தில் சற்றுக் கோணலாக அமைந்திருக்கிறது. இருதயத்தின் விரிவு பாகம் மேலும் கூர்மை பாகம் கீழுமாக அமைந்திருக்கின்றன. காலை கட்டை விரலை கீழாக வைத்தபடி இருதயத்தின் நுனி, மார்புக் கூட்டைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இருதயத்தின் அடிப்பாகம் மார்பெலும்பிற்குப் பின்னால் மூன்றாவது இடது விலா எலும்பின் மட்டத்தில் இருக்கிறது. இருதயத்தின் நுனி இடது பக்கத்து ஐந்தாவது ஆறாவது விலா எலும்புகளின் மத்தியில் இருக்கிறது. இருதயத் துடிப்பை இந்த இடை வெளியில் மார்பின் மத்திய பாகத்திலிருந்து மூன்றரை அங்குலத் தூரத்தில் இடதுபுறம் பார்க்கலாம்.

நாம் மூச்சு விடும்போது காற்று உட்கொள்ளுவதற்கும், வெளியேற்றுவதற்கும் ஏற்பட்டுள்ள குழாய்க்குச் சுவாசக் குழல் (trachea) என்று பெயர். வாயின் அடிப்பாகத்தில் இந்த மூச்சுக் குழல் சற்று அகன்று ஒலி வழி என்ற அவயவமாகிறது. இதன் மூலமாகத்தான் சுவாசம் இயங்குகிறது. கழுத்தின் கீழ் கொஞ்ச தூரத்தில் சுவாசக் குழல் இரண்டு கிளைகளாகப் பிரிந்து, வலது புற நுரையீரலுக்கு ஒரு கிளையாகச் செல்கிறது. மார்புக் கூட்டில் இருதயத்தோடு சேர்ந்த ரத்தக் குழாய்கள் இருக்கின்றன. இருதயத்திலிருந்து ரத்தத்தை எடுத்துப் போகும் குழாய்களுக்கு நாடி அல்லது பாய்க்குழல் (arteries) என்று பெயர். ரத்தம் இருதயத்திற்குத் திரும்பிப் போகும் குழாய்களுக்கு வடி குழாய் அல்லது சிரைகள் என்று பெயர். ஆகவே இந்த மார்பில் உயிருக்கு முக்கியமான இரண்டு சிறந்த அவயவங்கள் இருக்கின்றன. ஒன்று சரீரத்தின் ரத்த ஓட்டத்திற்காகவும் மற்றொன்று சுவாச ஓட்டத்திற்காகவும் ஏற்பட்டிருக்கின்றன. ரத்த ஓட்டத்தை இயக்கும் கருவி இருதயம். இருதயத்தின் உட்புறம் நான்கு அறைகளாகப் பிரிந்துள்ளது. ஒரு தசைத் திரையால் நீளத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இடதுபுறத்து அறையில் சுத்தமான ரத்தம் நுரையீரல் வடி குழாய் மூலம் வந்து (auricles) நிரம்பிக் கொண்டிருக்கிறது. அது கீழறை என்கிற பெரு நாடியின் மூலம் மற்ற நாடிகளுக்குப் பாய்கிறது. பாய்குழாய்கள் சிறு குழாய்களாகப் பிரிந்து சுத்த ரத்தம் உடல் முழுவதும் பாய்ந்து உயிர் அணுக்களுக்கு உணவைக் கொடுத்து அசுத்தமாய் அசுத்தமான ரத்தம் சிறு வடி குழாய்கள் சேர்ந்து பெரு குழல்களாகி வடிகுழாய்கள் மூலம் இருதயத்திற்குத் திரும்பி வருகிறது. கீழ்ப்புறம் இரண்டு பெரும் பாய் குழல்கள்

பாய் குழாய்கள் மூலம் இருதயத்தின் வலது பாகத்தில் வந்து சேருகிறது. அங்கிருந்து நுரையீரல்களுக்குச் சென்று சுத்தப்பட்டு இருதயத்தின் இடது பாகத்திற்கு மறுபடியும் வந்து சேருகிறது. அங்கிருந்து சென்று முன் சொல்லியபடி உடல் முழுதும் பாய்கிறது. நுரையீரல்களிலே புள்ளி கூடு போன்ற சிறு சுவாசக் குழாய்களால் நிறைந்துள்ளன. இந்த மெல்லியதான சுவாசக் குழாய்களைச் சுற்றி மிகச் சிறியவையான ரத்த நாளங்கள் (capillaries) ரத்தத்தைக் கொண்டு வந்து அந்த சுவாசக் குழாய்களிலுள்ள பிராணவாயுவை எடுத்துக் கொள்வதால் ரத்தம் நுரையீரலில் சுத்தமாகிறது. தேகத்தின் ரத்தம் சுத்தமாக இருப்பதற்கு இருதயம் ரத்தத்தைச் சரியாகப் பாயச் செய்து நுரையீரல்களுக்கு பிராணவாயுவின் மூலம் சுத்தப்பட வேண்டும்.

73. வயிற்றிலுள்ள அவயவங்கள்

நெஞ்சுக்கூட்டை இரு கூறாகப் பிரிக்கும் இடைத்தட்டுக்குக் கீழுள்ள பாகம் வயிறு. அதிலும் மிக முக்கியமான அவயவங்கள் இருக்கின்றன. தொண்டையிலிருந்து இரண்டு குழாய்கள் கீழ்ச் செல்லுகின்றன. ஒன்று நுரையீரல்களுக்குப் போகும். சுவாசக் குழாய்க்குப் பின்புறமாக இருக்கிறது. அது இடைத்தட்டைப் பொத்துக்கொண்டு இரைப்பையில் போய்ச் சேருகிறது. உணவுக் குழாயே அகன்று இரைப்பையாகி, விரிந்து எனவே சொல்லலாம் இரைப்பையின் கீழ்முனை உணவுக் குழாயாக நீளுகின்றது. மற்றொரு முனையிலிருந்து சிறுகுடல் ஆரம்பிக்கிறது. இது சுமார் இருபதடி நீளம். இதன் வழி ஆகாரம் செல்லுகிறது. இதன் சுருள்கள் பாம்பு சுற்றியிருப்பது போல் சுருண்டு வயிற்றினுள் அடங்கியிருக்கிறது. வயிற்றின் வலது பாகத்திலுள்ள இந்தச் சிறுகுடல் பெருங்குடலாக மாறுகிறது. இதன் மொத்த நீளம் ஐந்தடி. ஏறுகுடல், குறுக்குக்குடல், இறங்குகுடல் என்று மூன்றுவிதமாக வயிற்றினுள் சுற்றிக்கொண்டு கடைசியாக மலத்துவாரத்தில் போய் முடிகிறது. இந்த ஆகாரத்திற்குள்ள இந்த அவயவம் வாயிலிருந்து மலத்துவாரம் வரையில் ஒரே குழாயென வைத்துக் கொள்ளலாம். சிறுகுடலும், பெருங்குடலும் சேருமிடத்திற்குப் பெருங்குடல் வாய் (caecum) என்று பெயர். [இதனிடம் நீண்ட நூல்போல் தொங்குவது குடல் வால் அல்லது புழு வடி (appendix) என்பது] சிறுகுடல் பெருங்குடல் இரண்டுமாக இருபத்தாறு (26) அடி நீளமுள்ள இந்த ஆகாரக் குழாய்க் குடல் இரைப்பையுடன் பின்புறத்தில் தசையால் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர கணையம் (pancreas), கல்லீரல் (liver) (மண்ணீரல் – Spleen) இரண்டு மொச்சைக்கொட்டை வடிவான சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பாத்தி (kidneys) சிறுநீர்ப்பை (bladder) இவைகளும் வயிற்றுக்குள் அடங்கியிருக்கின்றன. கணையம் இரைப்பைக்குப் பின்புறத்தில் மறைந்தாற் போல் இருக்கும். கல்லீரல் இடைத்தட்டுக்கு அடியில் வலதுபுறத்தில் இருக்கிறது. சிறுநீர்ப் பாத்திகள் முதுகின் அடியிலுள்ள தண்டின் இருபுறத்திலும் [illegible] இடுப்பு பாகத்தின் நேருக்குப் பின்புறத்தில் இருக்கிறது. இவைகளிலிருந்து ~~[illegible]~~ (சிறுநீர்ப் பாத்திகள்) இரண்டு குழாய்கள் புறப்பட்டு அடிவயிற்றிலுள்ள மூத்திரப்பைக்குச் செல்கின்றன.

வயிற்றுக்குள்ளிருக்கும் அவயவங்கள் ஆகாரத்தை உட்கொண்டு, அதை வேண்டிய படி மாற்றி அதனின்று ரத்தத்துக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு வேண்டாத பாகத்தை வெளியாக்குகிற வேலைகளைச் செய்கின்றன. தொண்டைக்குப் பின்புறமாக இருக்கும் உணவுக் குழாய்க்குள் உணவு செல்லும் போது அந்த சுவாசக் குழாயின்

இது சுவாசக் குழாய்க்குள் போகாமல் தடுப்பதற்கு மூடிபோல இருக்கிறது. அதற்குச் சங்கவடி மூடி என்று பெயர். சங்கவடி மூடி, ஆகாரம் விழுங்கும் போது சுவாசக் குழலை மூடும். உணவு அதன் மேல் உணவுக் குழாய்க்குள் போய்ச் சேரும். மற்ற சமயங்களில் திறந்து நின்று, சுவாசம் நிகழ்கிறது. நாம் உட்கொள்ளும் ஆகாரம் வாயில் உமிழும் நீருடன் கலந்து இரைப்பையில் சென்று அங்கு பையில் சுரக்கும் அமில நீருடன் (gastric juice) கலந்து, பிறகு அங்கிருந்து சிறு குடலில் பாகமாகிறது. அங்கு கணையம், கல்லீரல் இவைகளின் சுரந்த நீருடன் கலந்து பித்தநீருடனும் கலந்து, சிறு குடலின் வழியே தள்ளப்பட்டுப் பெருங்குடலில் போய்ச் சேருகிறது. சிறுகுடலில் போகும் போது ரத்தத்திற்குத் தேவையான ரசம் அதைகளாகப் பார்த்து ரத்தத்துடன் கலந்து விடுகிறது. இவ்வாறு ஆகார சத்தைக் கொண்ட ரத்தமானது கல்லீரலுக்குச் செல்லுகிறது. பெருங்குடலுக்கு வந்தவுடன் நீரானமாகச் சென்று உடலுக்கு வேண்டிய தண்ணீரும் சில உப்புச் சத்துக்களும் ரத்தத்திற்குச் சென்று மீட்டு மீதி மலமாகக் கழிந்து விடுகிறது.

ஆகாரத்திலிருந்து ரத்தத்தின் மூலம் செல்லும் சத்தின் உடலுக்கு உடனே தேவையானது போக அதிகமாயுள்ள பாகம் கல்லீரலில் சேமித்து வைக்கப்பட்டுத் தேவைக்கேற்ப தகுந்தபடி கல்லீரலிலிருந்து அப்பொழுதைக்கப்போது ரத்தத்தோடு கலந்து கொள்ளுகிறது. இது கல்லீரலின் மிக முக்கியமான வேலை. இதைத் தவிர, கல்லீரலின் தான் பித்தநீர் உண்டாக்கப் படுகிறது. இது கல்லீரலோடு இணைக்கப் பட்டிருக்கும் பித்த கோசத்தில் சேமிக்கப்பட்டு வேண்டிய போது அதிலிருந்து சிறுகுடலுக்குள் வருகிறது. பித்தநீர் உணவின் ஜீரணத்திற்கு அவசியமான பொருள். ஆகாரம் சிறுகுடலில் செல்லும் போது பித்த கோசத்திலிருந்து பித்தநீர் வடிந்து ஆகாரத்துடன் கலந்து கொள்ளுகிறது. இந்தப் பித்தநீர் தான் மலத்திற்கு மஞ்சள் நிறம் தருகிறது. இதுவன்றி கல்லீரல் செய்யும் வேலை வேறுமுண்டு. உடலுக்கு வேண்டிய ஊன் சத்துக்கு மேல் அதிகமாக உள்ளதை ரத்தத்திலிருந்து எடுத்துக் கொண்டு மூத்திரப் பொருளாக்கி விட்டு, அதை மறுபடியும் ரத்தத்துடன் கலந்து அனுப்புகிறது. ரத்தத்திலுள்ள மூத்திரப் பொருள் சிறுநீர்ப் பாதையாகிய மூத்திரக்குண்டிக்காயில் ரத்தத்திலிருந்து பிரிந்து அப்புறப்படுத்தப் படுகிறது. உடலில் கல்லீரல் செய்யும் வேலைகள் பலவாறானவையும் முக்கியமானவையும் ஆகும்.

76. மண்ணீரல்

இந்த அவயவம், வேலை தீர்ந்து போன சிவப்பணுக்களை அழித்துக் கல்லீரலின் மூலம் பித்தம் உண்டாக்குவதற்குப் பயன்படுவது அறாப்படும். சிவப்பணுக்கள் உற்பத்தி வேலையையும் மண்ணீரல் செய்யும்.

76. சிறுநீர்ப் பிரிப்பி

இந்த அவயவம் மூத்திரப் பொருளையும் (urea) இன்னும் வேண்டாத வேறு சில பொருள்களையும் ரத்தத்திலிருந்து பிரித்துச் சிறுநீர்க் குழாய் மூலம் சிறுநீர்ப் பையில் சேர்க்கிறது.

76 தலையிலுள்ள அவயவங்கள்

மூளை என்பது மெத்தென்ற மண்டை ஓட்டுக்குள் இருக்கும் மூளையும் கொண்டது. மண்டை எலும்புக் கூட்டத்தின் மேலே அமைந்திருக்கிறது. மண்டையோட்டை எலும்புகளும், உணர்வுகளும் இயக்கும் கருவி மூளையாகும். மூளை இருபாதிகள் கொண்டது. முன்புறம் உள்ளதும் பெரியதுமான பகுதிக்குப் பெருமூளை (cerebrum) என்றும், பின்புறமுள்ள சிறிய பகுதிக்குச் சிறுமூளை (cerebellum) என்றும் பெயர். பெருமூளையின் முன் பகுதி மனத்திற்கு இருப்பிடமென்றும், பின்பகுதி புலன் உணர்ச்சி ஸ்தானமென்றும் கருதப்படுகிறது. சிறுமூளை உடலிலுள்ள தசைகளும் கட்டுக்களும் பலவித இயக்கங்களை வேலை செய்வதற்கான அவயவம் என்றுக் கொள்ளப்படுகிறது. மூளையின் அடிபாகத்தில் சிறுமூளைக்கு முன்புறமாக மூளை முடிச்சு (medulla) இருக்கிறது. இது, மனம் தெரியாமல் தானாகவே இயங்கும் சுவாசம், இரத்த ஓட்டம் முதலிய உயிருக்கு இன்றியமையாத காரியங்கள் நடைபெறுவதற்குரிய நரம்பு மேல்நிலை. மூளையின் பெரும் பகுதி நரம்பணுக்கள் அடங்கி (nerve cells) யுள்ளது. அவைகள் தாம் நம்முடைய உணர்ச்சி, பகுத்தறிவு முதலியவைகளை மனதிற்கு கொடுக்கும் ஸ்தானமாகும். சுவை, ஒளி, மணம், ஓசை, ஸ்பர்சம் - ஆகிய புலன்களின் உணர்ச்சி ஸ்தானங்கள் மூளையில் தான் இருக்கின்றன. கண், மூக்கு, நாக்கு இவைகள் எல்லாம் பலகணி போல உள்ளதைக் காட்டும் சாதனமே தவிர உணர்ச்சியடைவதில்லை. உணர்ச்சியடைவது மூளையில் தான்.

77. காது.

மருத்துவம்:— ரத்தப் பெருக்கை நிறுத்துவதற்குச் சீனிக்காரத் தண்ணீரை உபயோகப் படுத்த வேண்டும். நெற்றியிலும், மூக்கிலும் பனிக்கட்டியை வைத்தல் அல்லது துணியைக் குளிர்ந்த தண்ணீரில் அடிக்கடி நனைத்துப் போடுதல். குளிர்ந்த சாவியை முதுகில் போடுதல். பெருக்கு மிகவும் அதிகமாக இருந்தால் பஞ்சைச் சீனிக்காரத் தண்ணீரில் நனைத்து மூக்குத் துவாரத்தை அடைத்தல். பெருக்கு நின்றவுடன் அடைப்பை எடுத்து விட வேண்டும். மற்றபடி உள்ளிருக்கும் நோய்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும். மூக்கிலிருந்து சதை வளர்ந்திருந்தால் அதைக் கல்வி மருத்துவர்களைக் கொண்டு எடுத்து விட வேண்டும்.

414 தோலும் – தோலைப் பற்றிய நோய்களும் (Skin diseases)

நம்முடையத் தோல், ஒரு முக்கிய அவயவம். எண்ணற்ற சிறு துவாரங்களின் மூலமாக ரத்தத்தின் கெடுதல் அசுத்தத்தை இது வெளிப் படுத்துகிறது. கொஞ்சம் கரியமில வாயுவும் இதன் மூலமாக வெளியாகிறது. தோல் இரண்டு பாகமுள்ளது. ஒன்று வெளித் தோல் (Epidermis); மற்றொன்று உள் தோல் (dermis). பாதம், உள்ளங்கை, முதுகு இந்த இடங்களில் தோல் கனமாகவும் பருத்தும் இருக்கிறது. மேல் தோல் அடுக்கப்பட்ட அணுக்களால் ஆகியது. இதம் மேல் தோலைப் பற்றியது. தோலுக்கு அடியில் கொழுப்பு சக்தி உடலுக்கு உதவுமாறு சேர்க்கிறது. உள் தோலில் ஏராளமான இரத்தக் குழாய்களும் நரம்புகளும் பரவியிருக்கின்றன

மேல் தோலில் துவாரங்கள் நிறைய இருக்கின்றன. இவை வேர்வைச் சுரப்பிகளின் துவாரங்கள். வேர்வை ரத்தத்திலிருந்து வேர்வைச் சுரப்பிகளால் வெளியாக்கப் படுகிறது. உள் தோலில் மயிர்க்கால்களும், அவற்றுடனுள்ள கொழுப்புச் சுரப்பிகளும் இருக்கின்றன. மயிர்களுக்கான வழுவழுப்பை இந்தக் கொழுப்புச் சுரப்பிகள் தருகின்றன. வேர்வை மிக்க அவசியமானது. எப்பொழுதும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. குளிர் காலத்தில் வெளி சம்பந்தமானது. உஷ்ண காலத்திலும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. கோடைக் காலங்களில், காற்று வரத்தும், காற்றுக்குப் புலப் படாமலே உலர்ந்து விடுகிறது. வேர்வை வெளிவந்து உலரும் போது, உடலிலுள்ள உஷ்ணமும் படி வெளியாகி விடுகிறது. இதனால் அதிகமாக இருந்தால் வேர்வை வெளியாகி உஷ்ணத்தைக் குறைத்து விடுகிறது. மூளையிலிருந்தும், முதுகுத்தண்டிலிருந்தும் நரம்புகள் வேர்வைச் சுரப்பிகளுக்கு வந்து தேவையான பொழுது வெளி உஷ்ணத்திற்கும் குளிர்ச்சிக்கும் தகுந்தாற் போல் வேர்வையை அதிகரிக்கவும் குறைக்கவும் செய்கின்றன. தோல் ஓர் உணர்ச்சி அவயவம். தொடுவது அழுத்துவது இவைகளையும் அறிவிக்கும் கருவி. சூடு, குளிர்ச்சி இவற்றைத் தெரிவிப்பதும் அதன் வேலை. வலியுணர்ச்சியும் தோல் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் சில சமயங்களில் இந்த உணர்ச்சி அதிகரித்து விடும். அப்பொழுது தோலுக்கு அடியில் பூச்சி ஊர்வது போலத் தோன்றும். இவ்வகை வியாதியால் அதிக அரிப்பு (நமைச்சல்) உண்டாகும். ரத்தத்தில் விஷம் அதிகரித்திருந்தால் இந்த மாதிரி அரிப்பு உண்டாகலாம். தோலின் உணர்ச்சியைப் பழக்கத்தால் அதிகப்படுத்தலாம். கண் தெரியாத குருடர்கள் இந்த உணர்ச்சியால் தடவிப் பார்த்து எழுத்துக்களைக் கொண்டு படிக்க முடியும்.

தோல் எப்பொழுதும் சுத்தமாக வைக்கப்பட வேண்டும். இது வேர்வையின் காரணமாக எப்பொழுதும் அழுக்குப் படிந்து கொண்டே இருக்கும். குளிக்க தண்ணீரில் சோப்புகளால் உடலைத் தேய்த்துக் குளிக்க வேண்டும். நோயாளிகளுக்குத் தோலைச் சுத்தப் படுத்தி வைப்பது சுகமாக இருப்பவர்களைக் காட்டிலும் அதிகம் தேவை. ஸ்நானம் செய்வதனால் குளிர்ச்சி ஏற்படும். என்றும் அதனால் ஜலதோஷமும் ஜுரமும் இவைகள் உண்டாகும் என்றும் நினைப்பது

415 தோலின் நோய்கள் – அரிப்பும் தடிப்பும் (விஷக்கடி)

திடீரென்று தோலில் அரிப்பு எடுத்து, பின் வீங்கலாகத் தடிப்பு உண்டாகும். இது அபாயமான நோயல்ல. அநேகமாய் மனக்கிளர்ச்சியிலும், வயிற்றில் அஜீர்ணத்திலும் உண்டாகிறது. இதற்குக் கக்கலாய்த்தான் பேதிக்குக் கொடுத்து, ஓரிரண்டு நாள் கஞ்சி, பால்

இவைகளை உணவாக வைத்துக் கொண்டால் போதுமானது. இனி, இவை முதலியவை கொட்டுதலில் இந்த மாதிரி அரிப்பும் தடிப்பும் உண்டாகும். சிலருக்குக் கோழி, வெள்ளைப் பூண்டாலும், சோடா பானங்கள் இவை சாப்பிட்டால் தடிப்பும் அரிப்பும் வருவது உண்டு. இதற்கு சோடா உப்பு 30 கிரெய்ன்களையத் தோய்த்து தண்ணீரில் கரைத்து மேலே தடவிக் கொண்டால் அரிப்பு அடங்கும். கால்சியம் லாக்டேட் (calcium lactate) 10 கிரெய்னை ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டும். பேதிக்குக் கொடுக்க வேண்டும்.

415. வெண்குஷ்டம் (Leucoderma)

இதற்கும் குஷ்ட ரோகத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இதன் இயல் காரணமிதுதான், குஷ்டத்திற்கும் இதற்கும் பொதுவான அடையாளங்கள் ஒன்றுமில்லை. இது தொற்று நோயல்ல. பார்ப்பதற்கு விகாரமாகத் தோன்றுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. முதலில் சுத்தச் சிவப்பாக ஆரம்பித்து வருகிறது. இதற்கு மேல் பற்று ஒன்றைத் தவிர வேறு மருந்து கிடையாது.

கார்போக அரிசி 60 கிரெய்ன், ஆர்சனிக் சல்பைட் (Arsenic Sulphide) 60 கிரெய்ன். இரண்டையும் சேர்த்து நன்றாகத் தூளாக்கி தண்ணீராவது, மாட்டு மூத்திரத்திலாவது விட்டு அரைத்துப் பசை போலாக்கி, தினசரி வெளுப்பான இடங்களில் தடவ வேண்டும். மாட்டு மூத்திரத்தைச் சேர்ப்பதாக இருந்தால் தினசரி புது மூத்திரத்தை உபயோகிக்க வேண்டும். ஒரு நாளைக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. தொடர்ச்சி நாளைக்கு இருதடவை போட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இடம் மாறி எப்பொழுதும் உள்ள நிறம் புள்ளி புள்ளியாகத் திரும்பவும் தோன்றும்.

416. படர்தாமரை (தேகப்பற்று-படை) (Ringworm)

இது தோலைப் பற்றிய ஒரு தொத்து நோய். (Contagious). காளான் வகையைச் சேர்ந்தது. தோலில் இது வெடிப்புகளாலும், காயங்களாலும் உட்புகுந்து பரவுகிறது. இந்தக் காளான் தோலுக்குள் சென்று அரிப்பு (தினவு) உண்டு பண்ணுகிறது. சொறிந்தால் அந்த இடம் சிவந்து உண்டாகி விடும். நடுவில் ஆறிக் கொண்டிருக்க, சுற்றிலும் வட்டமாக நோய் படர்ந்துக் கொண்டே போகும். தாமரையிலை போலப் படர்ந்து கொண்டு போவதால் இதற்குப் படர்தாமரை என்றும் படை என்றும் பெயர். காளான் அதிகமான படிவம் பாகத்தில் இருக்கும். உடலின் தோல் இடுக்குகள் கால் வாசையில் பல பாகத்திலும் வரும்.

மருத்துவம் தினம் இரண்டு ஸ்நானம் செய்வதற்குச் சுத்த தேவை முன்பாகக் கற்பூரத்தைத் தேங்காய் எண்ணெயில் கலந்து உடம்பில் தேய்த்துக் கொண்டு கொஞ்சம் நேரம் ஊற வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

தேங்காயெண்ணெய் 1 அவுன்ஸ், பொடி செய்த கற்பூரம் 5-10 கிரெய்ன் முதல், இந்த வகையில் தயாரித்துத் தேய்த்துக் கொள்ள வேண்டும். ஸ்நானம் செய்து

ஸ்நானம் செய்து உடம்பு துடைத்துக் கொண்ட பிறகு கீழே குறிப்பிடுகின்ற களிம்புத் தூளை சேர்த்துக் கசிவான இடங்களில் தடவ வேண்டும். கந்தகம் ½ பலம், போரிக் தூள் ½ பலம், கற்பூரம் 40 கிரெய்ன் இவ் யாவற்றையும் தனித்தனியாகத் தூள் செய்து கலந்து பூசிக் கொள்ள வேண்டும். களிம்பும் போடலாம். ஆறில் உடை [illegible] கரைந்து எண்ணெயாகி விடும். இவை [illegible] காரியங்கள் கருதலாம்.

சாலிசிலிக் ஆசிட் (Salicylic acid) கிரெய்ன், பென்ஸாயிக் ஆசிட் (Benzoic acid) 15 கிரெய்ன், வாஸிலைன் (Vaseline) 1 அவுன்ஸ், பலமாக இருக்கும் படைக்குச் சுத்தக் காடியம் (Acetic Acid) ஒன்றிற்கு இரண்டு பங்கு தண்ணீர் கலந்துக் கொண்டு, பஞ்சால் படைகளின் மேல் தடவ வேண்டும். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு வெளுப்பாகச் சாம்பல் போலக் காய்ந்து விடும். இதை [illegible] துணியால் துடைத்து விட வேண்டும். இப்படி மருந்து போடுவதில் புண்ணாகி விடக் கூடாது.

417. சொறி சிரங்கு (Scabies)

இந்தத் தொற்று நோய் கர்ப்பமாக இருக்கும் பெண் சொறிக் கிருமியால் உண்டாகிறது. இந்த கிருமி கர்ப்பமாக இருக்கும் பொழுது முட்டையிடுவதற்காகத் தோலில் ஊர்ந்து செல்லும். பெண் கிருமி ஆண் கிருமியைக் காட்டிலும் பெரியது. கண்ணால் பார்க்க முடியும். தோலில் தொற்றிக் கொண்டால் மேலே இருந்து உள்ளே துளைத்துக் கொண்டு போகும். சில நாள் கழித்துக் குடைந்த இடமெல்லாம் நீர் கொண்டு, சீழ் பிடித்துப் புண்ணாகி, காய்ந்து பொருக்குகள் ஏற்பட்டுவிடுகிறது. இந்த பொருக்கின் மேல் மருந்து போட்டால் உள்ளே இருக்கும் கிருமி கொல்லப்படுவதில்லை. இதிலிருந்து வடியும் ஊனீர், சீழ், ரத்தம் இவை பிறர் தோலில் பட்டால் அவர்களுக்கும் இந்த நோய் தொற்றும்.

சிகிச்சை:— களிம்பு அதிகப் பயன் அளிக்காது. புண்ணை நன்றாகக் கழுவி, பொருக்குகளைப் புரட்டி விட்டு, அழுத்தி [illegible] இரத்தம் வரும்படியாக நன்றாகத் தேய்க்க வேண்டும். தேய்ப்பதில் இந்தக் கிருமிகள் ரத்தத்தோடு வெளியே தள்ளப்படும். புண் முழுவதும் ரத்தம் பெருக விட வேண்டும். இது வலியாக இருந்தாலும் நல்ல பலனை கொடுப்பதால், செய்தே தீர வேண்டும். இந்த முறைப்படி மூன்று நாட்களுக்குச் செய்தால் நிச்சயமாகக் குணமாகி விடும். இப்படிச் செய்யாமல் புண்ணின் மேல் மருந்து போட்டு வந்தால் இந்தக் கிருமிகள் உள்ளே குடைந்து குடைந்து கொண்டு, மருந்திலிருந்து தப்பி ஓடி விடும். இப்படிப் [illegible] முன்பு வலி அதிகமாக இருக்கும். நன்றாகத் தேய்த்தால் [illegible] வலியும் குறையும். நன்கு ரத்தம் வரும்படி தேய்த்துச் சுத்தமான பிறகு கந்தகக் களிம்பு (Sulphur ointment) புண்ணின் மேல் தடவ வேண்டும். [illegible] தண்ணீரில் கலந்து [illegible] கொடுத்தால் இந்நோய் சொஸ்தமாகும். நோயாளிக்குச் சுத்தமான பழக்க வழக்கங்களை அனுசரிக்கப் பழக்க வேண்டும். ரத்தத்தை விருத்தி செய்யுமாறு சத்துள்ள உணவைக் கொடுக்க வேண்டும். இந்தச் சொறி ஆரம்பத்தில் சிறிது அரிப்பு உண்டாகும். அதை நல்ல சுத்தமான முரட்டுத் துணியினால் நன்றாகத் தேய்த்து, கொப்புளங்களை உடைத்து, பிறகு அதன் மேல் சோடா உப்புத் தண்ணீர்

சோடா உப்புத் தண்ணீர் தடவ வேண்டும். டெட்டால் (இடிப்புதைலம்) தண்ணீரில் இரண்டு தரம் சோடா உப்பைக் கரைத்துத் தேய்க்கவும் வேண்டும். அரிப்பு அடங்கின பின் போரிக் தூள் அல்லது அரிசிமாவும் போரிக் தூளும் கலந்து மேலே தூவிவிட வேண்டும். உடுத்தும் உடை, பாய், படுக்கை, தலையணை உறை இவற்றை எல்லாம் தண்ணீரில் கொதிக்க வைத்துப் பிறகு வெயிலில் காயவைக்க வேண்டும்.

418 அரிப்பு (Pruritus–itching)

மேற்புறப் புண்களின் வெளிப்பாகத்திலும், மர்மஸ்தானத்திலும் உண்டாகும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று சிறு பேன்களாலும் அதன் முட்டைகளாலும் உண்டாகும். மற்றொன்று சிறு நரம்பு நுனிகளின் அழற்சியாலும் உண்டாகும். பேனும் அதன் முட்டைகளும் கற்பூரத் தைலம் தடவுவதால் இறந்து விடும். இந்த தைலம் உடலில் படக்கூடாது. ஒன்று நாளைக்கு இரு தரம் தடவ வேண்டும். நரம்பின் அழற்சியால் உண்டானால், அரிசிமாவு போரிக் தூள், ஜிங்க் ஆக்ஸைட் (Zinc oxide) தூள் மூன்றும் சமமாகக் கலந்து மேலே போட வேண்டும். கால்ஷியம் லாக்டேட் (Calcium Lactate) 10 கிரெய்ன் தினம் இரண்டு வேளை சாப்பிட வேண்டும். சிறு நீர்ப் பூச்சியினால் மர்மஸ்தானத்தில் அரிப்பு உண்டாகும். உப்பை எவ்வளவு கரைக்க முடியுமோ அவ்வளவு தண்ணீரில் கரைத்து மர்மஸ்தானத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். உப்புத் தண்ணீரை வெதுவெதுப்பாகக் கொடுக்க வேண்டும். பெண்களின் அடிப்பாகத்தைக் டூஷ் கருவியால் சுத்தம் செய்ய வேண்டும்.

419. அக்கி – பெயர் சொல்லாதது (Herpes)

இது நரம்பின் நுனிகளின் அழற்சியினால் உண்டாகிறது. வாயின் வெளிப்புறத்திலும் மார்பிலும், முதுகிலும், தோல் சிவந்து, தடித்து, சிறு சிறு நீர்க் கொப்புளங்கள் புறப்படும். அந்தக் கொப்புளங்களில் வலி அதிகமாக இருக்கும். கொப்புளங்கள் உடைந்து பொருக்காகி விடும். பிறகு உதிர்ந்து விடும்.

வைத்தியம்:– பேதிக்குக் கொடுத்து மலத்தை வெளிப்படுத்த வேண்டும். சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும். போரிக் தூளும் (Boric powder), ஜிங்க் தூளையும் சமமாகக் கலந்து மேலே தடவ வேண்டும். காலமைனையும் மேலே தடவலாம்.

419. கரப்பான் புண் (Eczema)

தோல் சில இடங்களில் தடித்து சிவந்து அரிப்பு உண்டாகி, பிறகு நீர் கோர்த்துக் கொண்டு சிறு சிறு கொப்புளங்கள் கொத்தாகப் புறப்பட்டு உடைந்து பசையும் மஞ்சளும் கலந்த பொருக்காகி, அவற்றின் கீழ் நீர் பொசிந்து பரவிக் கொண்டே போகும். உடம்பின் காது அதன் பின்புறம், கால், தொடை இந்த இடங்களில் அடிக்கடி வரும். மற்ற இடங்களில் இவ்வளவு அடிக்கடி வராது.

சிலருக்கு இப்படிச் சிலசமயம் உடம்பு முழுவதும் பரவியிருப்பதும் உண்டு. வைத்தியம் செய்து கொண்டால் மறைந்து இல்லாதது போலத் தோன்றும். சில காலம் சென்று மறுபடியும் திரும்பத் திரும்ப வரும். உணர்ச்சி வழக்கத்துக்கும், அரிப்பு மிக்க உபத்திரவத்தை உண்டு பண்ணும். உடம்பைப் பார்ப்பதற்கும் அருவருப்பாக இருக்கும். இது தொத்து நோயைப் பற்றிய வியாதி அல்ல. உடம்பைப் பற்றியதாகவும் இருக்கும் – இது வந்து விட்டால் சொஸ்தப்படுத்துவது ஒரு கஷ்டமான

வைத்தியம்:– மலச்சிக்கல் நீக்க வேண்டும். உணவை மாற்ற வேண்டும். காரம், புளி

காரம், புளி, முதலியவைகளை நீக்கிப் பால், பழம் முதலியவைகளை உபயோகிக்க வேண்டும். இரவில் அதிக அரிப்பாக இருக்கும் பொழுது களிம்புகள் போடக்கூடாது. நல்லெண்ணெய், சோப் உபயோகப்படுத்தக் கூடாது. போரிக் தூள், ஜிங்க் ஆக்ஸைட், லெட் அஸிடேட் (Lead acetate) தண்ணீர் இவைகளை உபயோகப்படுத்த வேண்டும். பப்பாளி ரசம் பாலில் கலந்து, சர்க்கரையும் சேர்த்துத் தொடர்ந்து போட்டால் நல்ல குணம் கொடுக்கும். துணி படுக்கை இவைகளை நன்கு தண்ணீரில் கொதிக்க வைத்து வெயிலில் காயவைக்க வேண்டும். இந்த நோய்க்குத் தொத்தும் குணம் உண்டு. ஆகையால் மற்ற தொத்து நோய்களுக்குள்ள முன் ஜாக்கிரதை செய்து கொள்ள வேண்டும்.

420. நீர்க் கொப்புளங்கள் (Pemphigus)

வெளிப்படையான யாதொரு காரணமும் இல்லாமல் சில நேரங்களில் குழந்தைகளுக்கு நெருப்புச் சுட்ட கொப்புளங்கள் போலத் தோலில் ஏற்படும். வயிற்றில் கோளாறு, அஜீரணம், மலச்சிக்கல் இவைகளினால் தான் இம்மாதிரி வருகிறது. உடனே பேதிக்குக் கொடுத்து மலச்சிக்கலை நீக்கி, பாலில் ஆறிலொரு பங்கு சுண்ணாம்புத் தெளிநீர் கலந்தால் அதையும் கொடுக்க வேண்டும். கொப்புளங்கள் தானாகவே உடைந்து விடும். வெந்நீரைக் கொண்டு சுத்தம் செய்து, பிறகு துத்தநாகக் களிம்பை மேலே தடவ வேண்டும்.

420. வேர்க்குரு (Sudamina - Prickly heat)

வேர்வையினால் உஷ்ண காலங்களில் உடம்பு முழுவதிலும் உண்டாகும். முக்கியமாக வேர்வை அதிகம் இருக்கும் பாகங்களில் உண்டாகும். தேங்காய் எண்ணெயைத் தடவி, பிறகு துவாலையைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து சுத்தப்படுத்த வேண்டும். சோப் உபயோகப்படுத்தக் கூடாது. மருந்து கலந்த பவுடரை (medicated powder) மேலே தூவிக் கொள்ளலாம்.

420 சாம்பல் படை (Psoriasis)

தோல் வட்ட வடிவமாகச் சிவந்து, சிறிது பாளம்பாளமாக உரிந்து, சாம்பல் பூத்தது போல, அரிப்புடன் வரும் நோய் இது. முக்கியமாக முழங்கை, அதன் வெளிப்புறம், முழங்கால், அக்குள், ஜனனேந்திரியம் இவைகளில் வரும். சிலர், ஊசி போல் கொப்புளங்கள், சிறு செதில்கள் இவை கிளம்பும். இதன் காரணம் இன்னது என்பது நிச்சயப்படுத்தவில்லை. ஒரு சமயம் தோல் தடிமனாகி, பிறகு சிறு செதில்கள் உண்டாகி, அப்புறம் சாம்பல் பூத்தது போல ஆகும். இதற்கு இது திரும்பி வரும். ஆனால் இதற்கு அரிப்பு இருக்காது.

மருத்துவம்:— முதலில் தேகக் காரணத்தைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்ய வேண்டும். ஆர்சனிக் உபயோகப்படுத்துவதும் நலம். உணவில் காரமாகச் சமைக்கக் கூடியவற்றை உபயோகப்படுத்த வேண்டும். சில வகை உணவுகளில் இருக்கிறதா என்பதை டாக்டரிடம் தெரிந்து கொள்ளலாம்.

ஸாலிஸிலிக் ஆஸிட் (Salicylic acid) 15 கிரெய்ன், வாஸலைன் (Vaseline) 1 அவுன்ஸ் சேர்த்துக் கலந்து மேலே தடவ வேண்டும். சோடா ஸாலிஸிலேட்டை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். ஆர்ஸனிக் 1/20 கிரெய்ன் அளவு மாத்திரை மாதம் செய்து உணவுக்குப் பிறகு ஒரு நாளைக்கு இரண்டு வேளை பல நாள் கொடுக்க வேண்டும்.

421. குதி வெடிப்பு (Fissure of the heel), பித்த வெடி

குளிர்காலத்தில் உள்ளங்கை, தோல், பாதம் இந்த இடங்களில் தோல் தடித்து வெடிக்கும். வாய் உதடும் இம்மாதிரி வெடிக்கும். போரிக் களிம்பு தடவிக் கொண்டு வந்தால் போதுமானது.

421 பாதத்தில் ஆணிகள் - காலிலுள்ள காய்ப்பு (Corn)

கால் ~~விரல்~~ விரல்களில், பொருத்தமாகப் பூட்ஸ் போடுகிறவர்களுக்கு இது உண்டாகும். கனச் செருப்பாய் கொட்டை உட்காருகிற வழக்கமுள்ளவர்களுக்கும் தோல் அழுத்தும் இடத்தில் தோல் கனத்து வளர்ந்துக் கொண்டு வரும். பாதம் நிற்கும் பொழுதும் நடக்கும் பொழுதும், காலாணியின் படியாமல் இது கூரியதாகப் பதிந்தால் அங்கும் கட்டியாக உள்ளானியாகி நடக்கும் பொழுது வலி கொடுக்கும்.

மருத்துவம்:— தோலில் ஆணி விழுந்து விட்டால் அரைச் சவரக் கத்தியால் மேலாகச் சீவி விட்டு, சாலிசிலிக் ஆசிட் (Salicylic acid) டைத் தண்ணீரில் கரைத்துத் தடவ வேண்டும். மருப்படியும் பூட்ஸ் அணியாமலும், அதே பாதத்தில் அழுத்தி உட்காராமலும் இருந்தால் முற்றும் குணமாகும். இல்லாவிட்டால் அடிக்கடி திரும்பி வரும்.

422. மலக்குடல் - மலத்துவாரம் - இவைகளைப் பற்றிய நோய்கள் (Diseases of the Anus and Rectum) (Piles - Haemorrhoids மூலம்)

மூலம் என்பது மலத்துவாரத்தின் வெளிப் புறத்திலும் உட்புறத்திலும் சிறிய திராட்சைபோல் பல அளவுள்ள ரத்தக் கட்டிகள். இவை அகன்ற ரத்தக் குழாய்கள் - நாளங்கள் - இவை தசையல்ல. பல காரணங்களால் ரத்தம் மலக்குடலின் அடிப்பக்கத்திலும், மலத்துவாரத்தைச் சுற்றிலும் தங்கி, மேலே செல்ல முடியாமல் தடைப்பட்டால் அங்கே நாளங்கள் சிறிய திராட்சைக் குலைகள் போலப் பருத்து அகன்று விடுகின்றன. இரண்டு விதமான மூலம் உண்டு.

(1) வெளிமூலம் (2) உள்மூலம்.

வெளிமூலம் மலத்துவாரத்தைச் சுற்றி வெளிப்புறத்தில் தோலால் மூடப்பட்டுள்ள முளைகள். இவை அரத்து சில சமயங்களில் அழற்சியுடன் வலியுண்டாக்கிச் சீழ் பிடிக்கலாம். உடைந்து ரத்தம் அதிகமாகவும், சீழ் கொஞ்சமாகவும் வெளியாகி ஆறிவிடலாம். சில சமயங்களில் உடைந்து ஆறுமுன் புரையாகி மாதக் கணக்காகவும், வருடக் கணக்காகவும் இச்சமயம் புண் வாய் மூடியும், சில சமயங்களில் திறந்தும் இருந்து கொண்டே இருக்கும். அப்பொழுது அதற்கு பவுத்திரம் (Fistula) என்று பெயர்.

(2) உள்மூலம் என்பது மலத் துவாரத்தின் உட்புறத்திலுள்ள நாளங்கள் பருத்திருப்பதால் உண்டாகிறது. அது வெளியில் தெரியாது. சளி சவ்வினால் மூடப்பட்டு, கரு ரத்தத்தின் நிறமாக இருக்கும். இவைகள் அடிக்கடி உடைந்து மலம் போகும்போது முன்பும், பின்பும் ரத்தம் வெளியாகும். முளைகளும் இந்தச் சமயத்தில் மலத்துவாரத்திற்கு வெளியில் வரும்.

காரணங்கள்:— (1) நாள்பட்ட மலச்சிக்கல், மலம் சரியாக வெளியாகாமல் தங்கினால் இடையிலுள்ள ரத்தக் குழாய்களில் ரத்த ஓட்டம் தடைப்பட்டு, குழாய்கள் பருத்து அகன்று முளைகளாகி விடுகின்றன.

(2) கல்லீரல் நோய்கள்: வெளியிலிருந்து ரத்தக் குழாய்கள் (நாளங்கள்) கல்லீரலுக்குச் செல்லுகின்றன. கல்லீரலின் நோயினால் ரத்த ஓட்டம் தடைப்படுவதால், மலக்குடல் முதலிய இடங்களில் ரத்தத் தேக்கம் ஏற்பட்டு மூலம் உண்டாகிறது.

(3) இருதய நோய்: இந்த நோயின் காரணமாகப் பெருவழி நாளங்களில் தேக்கம் உண்டாவதின், மலக்குடலிலும் தேக்கம் உண்டாகி மூலம் ஏற்படும்.

மருத்துவம்:— மலச்சிக்கல் இல்லாமல் இருந்தால் மூலம் மறைந்து விடும். அதுபோது மலச்சிக்கல் உண்டானால் முளை இடிப்பதும் உண்டாகும். கடுக்காய்த் தூள் இந்த நோய்க்கு மிகவும் சிறந்த மருந்து. மலத்தை இளக்கி, அதிகக் கொழுப்பு உண்டாகாமல் தடுக்கும் உணவில் பழங்கள், கீரை வகைகள் இவைகளை அதிகம் சேர்த்துக் காரத்தை நீக்கியோ குறைத்தோ தயாரிக்க வேண்டும். ரத்தப்போக்கை நிறுத்த வருத்துப் பனிக்கட்டி போலக் குளிர்ந்த தண்ணீரால் எனிமா கொடுக்க வேண்டும். முளைகள் அடிக்கடி வருத்தும் கொண்டு கடுக்காய்த்தூள், இனிக்காரம் 1 டிராம், தண்ணீர் ½ பைன்ட் (பத்து அவுன்ஸ்) இவற்றைக் கலவைப் பஞ்சில் நனைத்து வெளிப்பக்கத்தின் மேல் இரண்டு மூன்று அல்லது ஆறு தடவை தடவ வேண்டும். நனைத்த பஞ்சு அப்படியே மடித்துத் தண்ணீரை, மெதுவாக அழுத்த உடலில் சுற்று நேரம் தங்கியிருக்கும்படி கொடுத்தால் உள்ளேயும் அடங்கும். வலி அதிகம் இருந்தால் அபின் கலந்த வெளியுமும், நனி விளக்கெண்ணெய் கொண்டு மலத்துவாரத்தின் உட்புறத்திலும் தடவ வேண்டும்.

கடுக்காய்த்தூள் பசை போலச் செய்தது 1 டிராம், அபின் 4 கிரெய்ன் இவை வெண்ணெயும் சேர்த்து அரைத்துக் களிம்பு போலச் செய்து முளைகளின் மேல் தடவ வேண்டும். தீராத மூலத்திற்குக் கருவி மருத்துவம் செய்ய வேண்டும். பகந்தரத்திற்கும் அப்படியே.

423. மூத்திரக்குழாய் நோய்கள் (Urethral stricture)

மூத்திர அடைப்பு:— மூத்திரம் கழிப்பதற்கு முடியாமல், சிறுநீர்ப்பை நிரம்பி, கையால் தொட்டுப் பார்க்கக்கூடிய அளவு அடிவயிற்றில் காணப்படும். வலியும் வயிறு வெடித்து விடுவது போன்ற அவஸ்தையும் ஏற்பட்டு நோயாளிகள் கஷ்டப்படுவார்கள். இந்த நீர் அடைப்பு, பல காரணங்களால் உண்டாகலாம்:

(1) மூத்திரப் பையிலிருந்து சிறுகற்கள் வெளிவருவதற்காகக் கீழே இறங்கி, மூத்திரக் குழாயை அடைத்துக் கொள்வது.

(2) நரம்புகளின் அதிர்ச்சியால் (nervous shock) அடிக்கடி தசை வேலை செய்யாமல் நீர் போகும் வழியை அடைத்துக் கொள்வது.

(3) மூத்திரக் காயமும் குழாயும் தசைக் கட்டிகள் வளர்ந்து அடைத்துக் கொள்வது.

(4) கர்ப்பமாக இருக்கும் கருப்பை மூத்திரக் குழாயை அழுத்தியிருப்பது.

(5) நீர்த் தாரையின் பக்கங்களில் இரத்தக் கட்டிகள் உண்டாகி விரிந்து தாரையை அமுக்குவது.

(6) வெட்டை சூடு என்ற நோயினால் நீர்த்தாரை புண்ணாகி, ஆறி, சில காலம் கழித்து சுருங்கி அடைப்பு ஏற்பட்டு, நீர் கீழே இறங்க முடியாமல் போய் விடுவது. நரம்பு அதிர்ச்சி, நீர்த் தாரை அழற்சி இவைகளால்

நீர்த் தாரை அழற்சி நிலைகளால் உண்டாகும். அவைகளை வைத்தியர்கள் ரப்பர்க் குழாய்களால் நீக்கிவிட முடியும்.

சிறு குழந்தைகளைச் சுடு தண்ணீரில் இடுப்பு வரையில் உட்கார வைத்தாலும் அல்லது அடி வயிற்றிலும், நீர்த் தாரையின் மேலும் சுடு தண்ணீர் ஒத்தடம் போட்டாலும் நீர் அடைப்பு நீங்கி விடும். மற்ற விதமான அடைப்புகளுக்குக் கருவி மருத்துவர்களைக் கொண்டு மருத்துவம் செய்ய வேண்டும். சில சமயங்களில் மூத்திரப் பை நிரம்பி அதிலிருந்து தானாகவே நீர்த் தாரையிலிருந்து மூத்திரம் கசிந்து சொட்டுச் சொட்டாக வெளி வந்து கொண்டிருக்கும். இதனால் மூத்திரம் வெளி வந்து விட்டதென நினைக்கக் கூடாது. மூத்திரப் பை நிரம்பி இருப்பது அடிவயிற்றைப் பார்த்தால் தெரிய வரும்.

425 பெண் பிள்ளைகளுக்கு உரிய நோய்கள் (Diseases peculiar to women)

முலை அழற்சி:— இது எந்த வயதிலும் வரக்கூடும். முக்கியமாக, பிரசவித்த புதிய தாய்மார்களுக்கு முதல் ஒரு மாதத்திற்குள் ஏற்படுவது. முலைக் காம்பில் உண்டாகும் வெடிப்பு, சிறு புண்கள், சொறி, இறுக்கு முதலியவைகளிலிருந்து பால் சுரப்பிகளுக்குள் நோய் நுண்ணுயிர்கள் பரவி அழற்சி உண்டாக்குவது. மேலும் குழந்தையின் வாயில் புண், சுரம் முதலியவை இருந்தால் அது பால் குடிக்கும் பொழுது தாயின் பால் சுரப்பிகளுக்குள் சென்று அங்கு அழற்சியை உண்டு பண்ணலாம். வீக்கம், முலைச் சிவப்பு, வலி, காய்ச்சல் இவை [illegible] முலையில் உண்டாகும். மற்ற இடங்களில் அழற்சி உண்டானால் என்ன மருத்துவம் செய்ய வேண்டுமென முன்பு சொல்லியிருக்கிறேனோ, அது போலவே இதற்கும் செய்ய வேண்டும். பால் கொடுக்கும் பருவத்தில் உள்ள சிசு ஒன்றிரண்டு மாதங்களுக்குள் இறந்து விட்டாலும் முலையில் பால் கட்டிக் கொண்டு அழற்சி உண்டாகலாம். அதைக் குறைப்பதற்குக் கொதிக்கும் தண்ணீரில் துணியை நனைத்துப் பிழிந்து ஒத்தடம் போட வேண்டும். முலைகளில் நிரம்பியிருக்கும் பாலைப் பீய்ச்சி விட வேண்டும். முலைக் காம்புகளைச் சுத்தமாக வைத்திருந்தால் இது வராது. இது வந்தால் கருவி மருத்துவம் செய்ய வேண்டும்.

425 பிறப்புறுப்புகளிலிருந்து ஊனீர்க் கசிவு (Leucorrhoea)

இதைச் சாதாரணமாக வெட்டைச் சூடு என்று சொல்வார்கள். பெண் பிள்ளைகள் பலருக்கு உண்டாவதும், சிகிச்சைக்குத் தொல்லை கொடுப்பதுமான நோய் இது. உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லாவிடினும், நோயாளிக்குச் சங்கடத்தை உண்டு பண்ணுவது.

காரணங்கள்:— பிறப்பு உறுப்புகளின் உட்பக்கத்திலுள்ள சளி ஜவ்வின் நோயினால் இந்த நோய் உண்டாகிறது. சளி ஜவ்வுகளில் அழற்சி அதிகமாக இருந்தால், சீழ் பிடித்தது போலவே வெண்மையான திரவக் கசிவு இருக்கும். அழற்சி குறைவாக இருந்தால் ஊனீர் போல் இருக்கும். உடம்பில் ரத்தக் குறைவு, பலவீனம், மனக் கலக்கம், வெட்டைச் சூடு முதலியவைகளும் இந்த நோய் ஏற்படுவதற்குரிய காரணங்களாகும்.

மருத்துவம்:— தினசரி வேப்பிலைப் போட்டுக் காய்ச்சின சுடு தண்ணீரில் கொஞ்சம் வெங்காரம் சேர்த்து, அதை ரப்பர்க் குழாயின் மூலம் செலுத்தித் தினசரி உறுப்புகளைச் சுத்தம் செய்ய வேண்டும். உதாரணக் கஷாயம் ஒரு டிராம் ஒரு பைண்ட் (அரைப்படி) தண்ணீரில் சேர்த்து லோஷன் செய்தும் உபயோகப் படுத்தலாம்.

இதுவுமல்லாமல் பொட்டாசியம் பர்மாங்கனேட் என்பது அதிக சக்தி தண்ணீரையும் உபயோகப்படுத்தலாம். இளஞ்சூடான ஒரு பைன்ட் தண்ணீரில் ஒரு டிராம் கலக்க வேண்டும். பொட்டாசியம் பர்மாங்கனேட் ஒரு பைன்ட் தண்ணீருக்கு எட்டு கிரெய்ன் சேர்க்க வேண்டும். அதிக ஒரு பைன்ட் தண்ணீருக்கு ஐந்து கிரெய்ன் வீதம் சேர்க்க வேண்டும். உடம்பின் பலம் அதிகரிப்பதற்கேற்ற உபாயங்களைச் செய்ய வேண்டும். உயிர்ச்சத்துக்கள் (Vitamins) உணவில் நிறைய இருக்க வேண்டும். சுத்தமான காற்று, மாத்திரைகள், பல்லில் சீழ்வடிதல் இவைகள் இருந்தால் கவனித்து அதற்கேற்ற தேவையான சிகிச்சை முறைகளைச் செய்ய வேண்டும். இரும்பு சத்து மருந்துகள் மிக்க நல்லது. அறுவைக் கருப்பையின் வாயில் மூலம் ராகம் இடுவது மருந்தாகக் கொடுப்பதும் பலன் கொடுக்கும்.

426. சூதக வலி (Dysmenorrhoea)

மாதவிடாய் காலங்களில் உண்டாகும் வலிக்குச் சூதக வலி என்று பெயர். மூன்று விதமான வலிகள் உண்டு (1) கருப்பை சம்பந்தமாக உண்டாகும் வலி (2) அழற்சியால் உண்டாவது (3) சவ்வு வெளியாவதால் உண்டாகும் வலி.

(1) **கருப்பை சம்பந்தமான வலி:-** இதுவரையில் கர்ப்பமாகாதவர்கள் பெரும்பாலும் இரண்டு மணி நேரம் முன்பாக உண்டாகும் வலி இது; பெருத்த பெயர்ச்சியாக இருக்கும். வாந்தி எடுக்கும். மயக்கம் வந்து களைப்பு ஏற்படும். வலி அடிவயிற்றில் அதிகமாக இருக்கும்.

(2) **அழற்சியால் உண்டாவது:-** இந்த வகை வலியானது மாதவிடாய் மந்த வலியாக இருக்கும். வலி நெடுநேரம் இடையின் பின் புறத்திலும், தொடை, கால், அடிவயிறு இவைகளிலும் இருக்கும். வலி மாதவிடாய் ஆரம்பிக்கும் சில நாள் முன்பாக வெளியாவதுடன் குறைய ஆரம்பிக்கும். இது மாதவிடாய்க்கு இரண்டு நாள் முன்பே ஆரம்பித்து, ரத்தப்போக்கு தொடர்ந்து மூன்று நாட்கள் வரை இருப்பதும் உண்டு. ஆகையால் வலி இடைவிடாமல் தொடர்ந்து இருக்கும்.

(3) **சவ்வு வெளியாவது:-** இது அபூர்வம். பெருத்த பெயர்ச்சியான வலி உண்டாகி, பின் சவ்வு வெளியானவுடன் நின்று விடும்.

வலி அதிகமாக இருந்தால் சில காய்ச்சல் இருக்கும். அழற்சியால் உண்டாகும் வலியால் காய்ச்சல் ஏற்படுகிறது. இந்த அழற்சி கருப்பை, கருப்பைக் குழாய்கள், சினைப்பை இவையில் இருக்கலாம். இதில் நோய்க்கிருமிகளின் தாக்குதல் இருக்கலாம். கீழ்க்கண்ட மூன்று காரணங்கள் முக்கியமாக உண்டு.

(1) அழுக்கு வெளிப்படுவதற்குத் தடை. இது கருப்பை முன்பு வளைந்து வருவது, அல்லது கழுத்து இறுகுதலால் உண்டாகும்.

(2) கருப்பையின் தசை, வேறு இல்லாமல் இருப்பதனாலோ அல்லது அழற்சி, புண் இவைகளால் கட்டி ஏற்பட்டு உண்டாகி, அதனால் கொடுத்த வலிகளால் உண்டாகலாம்.

(3) ஒரு காலத்தில் கருப்பை சுருங்குவதால் அதன் அழுத்தத்தினால் நரம்புகளின் வலி உண்டாகிறது.

மருத்துவம்:- காரணத்திற்குத் தக்கபடி செய்ய வேண்டும். இந்த நோய் அநேகமாகச்

அநேகமாகச் சுகவாசிகளுக்கு ~~நாள்~~ சரியாக உண்டு. உழைப்பாளிகளுக்கு வசதி இல்லை. நோயுற்றவர்களுக்கு இதன் மருத்துவம் அவர்களை விட்டு வேலைகளை முறையாகச் செய்யும் படியான பழக்கம் உண்டாக்குவது. வீடு கூட்டுவது. அரிசி இடியவைகளை அரைத்துப் பொடியாக்குவது நெல் குத்துவது இவை போன்ற காரியங்களைச் செய்யப் பழக்க வேண்டும். ஒருகாலத்தில் படுக்கையில் இருக்க வேண்டியது.

இரவில் சுடு தண்ணீர் வைத்து இடுப்பு வரை அதில் மூழ்கி இருக்கும்படி இரண்டு வேளை உட்கார்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அடி வயிற்றில் சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும். சுடுதண்ணீரை புட்டிகளில் அடைத்து அடி வயிற்றைச் சார வைப்பது. சூடான வெந்நீரினால் பிறப்பு உறுப்புக்களைக் கழுவிச் சுத்தம் செய்வது இவைகளும் நல்ல பயனைத் தரும்.

வலி அதிகமாக இருந்தாலும், காய்ச்சல் இருந்தாலும் கஞ்சி, பால் இவை கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் லேசான உணவு (அலபமாகச் சீரணிக்கக் கூடியது) ஏதாவது கொடுக்கலாம். சோடியம் சாலிசிலேட் அல்லது பொட்டாசியம் புரோமைட், ஊமத்தை இலைத்தூள் இவைகளை வலியை நிறுத்தக் கொடுக்க வேண்டும். மலச்சிக்கலை நீக்க வேண்டும். பரதாளக்கந்திவேர் 30 நெல்லெடை அதிக வலியாக இருந்தால் கொடுக்கலாம்.

கர்ப்பம் தரித்தால் அநேகமாய் இந்த நோய் தீர்ந்து விடும்.

மருத்துவம்:- உலர்ந்த கம்பளி நெல்லிக்காய்த் தூளை 15 நெல்லெடை வீதம் ருது காலத்தில் ஒரு நாளுக்கு மூன்று வேளையும், 10 நெல்லெடையை ஒரு நாளுக்கு இரண்டு முறை வீதம் ருதுவாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவும் சாப்பிட வேண்டும்.

மலச்சிக்கலை நீக்கப் பேதி உப்பு அரை அவுன்ஸ் அல்லது கடுக்காய்த் தூள் மூன்று காய்கள் எடை கொடுக்கலாம்.

சோடா சாலிசிலேட் 10 நெல்லெடை, போராக்ஸ் (உவர்ப் பொரிகை) 2 நெல்லெடை, சோடா உப்பு 5 நெல்லெடை, பொட்டாசியம் புரோமைட் 10 நெல்லெடை, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துத் தண்ணீரில் கலந்து சாப்பிட வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொடுக்க வேண்டும்.

428. ரத்தப் பெருக்கு (பெரும் போக்கு)

பெண் மக்களின் பிறப்பு உறுப்புக்களிலிருந்தும் ரத்தப் பெருக்கு, பல காரணங்களால் உண்டாகும். ரத்தப் பெருக்கு, கருப்பையிலிருந்து வரலாம். ருதுகாலத்தில் சாதாரணமாக அதிகமான ரத்தமும் வெளிப்படும். ருதுகாலம் முடிந்த பிறகுங்கூட ரத்தம் வெளியாகலாம். இதுதவிர யோனியிலிருந்தும் கருப்பையின் கழுத்திலிருந்தும் ரத்தம் வெளியாகலாம்.

யோனியிலிருந்து வெளியாகும் ரத்தப் பெருக்கைச் சிகிச்சையில் நிறுத்தி விடக் கூடும். துவர் மருந்துகளும், நச்சுக் கொல்லிகளும் கலந்த மருந்துத் தண்ணீரில் யோனியைக் கழுவிச் சுத்தம் செய்தால் அது நின்று விடும்.

கருப்பைக் கழுத்திலிருந்து, பல காரணங்களால் ரத்தம் பெருகும். காரணத்துக்குத் தக்கபடி அறிந்து அதற்குத் தகுந்து போல மருத்துவம் செய்ய வேண்டும். அங்கே உண்டாகும் புண், கழலைக் கட்டிகள், கிரந்தி, வெட்டைச் சூட்டுப் புண்கள் இவைகளினால் இரத்தம் உண்டாகலாம்.

கருப்பையிலிருந்து அதனுள் இருக்கும் சளி சவ்வின் அழற்சி, பெரிய அப்பை போன்ற தொந்த கோழைக் காய்ச்சல்கள், மற்ற பிறப்பு உறுப்புக்களின் அழற்சி, கருப்பை சுருங்காமல் அதன் ... பெரிதாய் விரிந்து இருப்பது, கருப்பை இடம் பெயர்ந்து இருப்பது, **கருப்பைக் குழாய்களில் கர்ப்பம் தரிப்பது** அல்லது கருப்பையை விட்டு வேறு எங்கு இருந்தாவது கருவளர்ச்சி இருப்பது

இவை எல்லாவற்றிலும் ரத்தப் பெருக்கு ஓர் அடையாளமாக இருக்கும். பெண்களுக்கு அல்லது நாற்பது வயதுக்கு மேல் ரத்தப் பெருக்கு ஏற்பட்டால் அதிகமாய்க் கவனிக்க வேண்டும். Cancer உண்டாகி இருந்து இருக்கலாம்.

மருத்துவம்:— ரத்தப் பெருக்கானது கர்ப்பப்பையில் ஏற்பட்டால் எந்த நோயினால் என்பதை வேறுவேறு ஒன்று கண்டுபிடித்து அதற்கேற்பச் செய்ய வேண்டும். கால்சியம் லாக்டேட் 15 முதல் 30 கிரெய்ன் வரையில் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்தால் அநேகமாய் அடங்கிவிடும்.

கால்சியம் குளோரைட் (5-10 % கரைசல்) 2 C.C. காய்ச்சின தண்ணீரில் நரம்பின் வழியாகக் கொடுக்க வேண்டும். இதைக் காலைத் தண்ணீரில் ... செய்ய வேண்டும். இப்படியும் ரத்தப் பெருக்கு நிற்காவிடில் கர்ப்பத் துவாரத்தை கிருமிநாசினித் தண்ணீரில் நனைத்த யோனித்துவாரத்தின் கொள்ளளவை அடைத்து விட வேண்டும். நான்கு அல்லது ஆறு மணிநேரத்திற்குப் பிறகு எடுத்து விட்டுப் பிறகு தேவையானால் அப்படியே செய்ய வேண்டும். இந்த நோயாளி தன் படுக்கையிலேயே இருக்க வேண்டும். எந்தக் காரணத்திற்காகவும் எழுந்திருக்கக் கூடாது. ஒரு கிரெய்ன் உள்ள அபின் ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொடுக்கலாம்; அல்லது மார்பியா 1/4 கிரெய்ன் ஊசியின் மூலம் தோலுக்கு அடியில் கொடுக்கலாம். அடிவயிற்றில் ஐஸ்கட்டிகளை பற்றுப் போட வேண்டும். சித்த வைத்திய முறையும் ... ரத்தப்பெருக்கைத் தடுக்கும். இரண்டு சித்த மருந்துகள் இங்கே காட்டப்படுகின்றன:

(1) அசோகம் (2) வெங்காரம்

அசோகப்பட்டை 360 கிரெய்ன் (இரண்டு கிரெய்ன்) தண்ணீர் - கால் சேர், பால் - கால் சேர் ஆகிய இவை மூன்றையும் சேர்த்து 1/8 சேர் ஆகும் வரையில் சுண்டக் காய்ச்ச வேண்டும். பிறகு வடிகட்டி அதை ஒரு வேளையில் சாப்பிட வேண்டும்.

வெங்காரம் 20 கிரெய்ன்
எட்டிக்கொட்டைத்தூள் 1 கிரெய்ன் } ஒரு பொட்டலம்

ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்க வேண்டும்.

மேலும் எந்தக் காரணத்தினால் ரத்தப் பெருக்கு ஏற்பட்டாலும், ஆங்கில வைத்தியர்களைக் கொண்டு பரிசோதனை செய்து, தகுதி வேண்டியவற்றைச் செய்ய வேண்டும். கர்ப்பம், வெட்டைக் கட்டி இவைகளால் ரத்தப் பெருக்கு உண்டாகியிருந்தால் அதற்கேற்ற தக்கபடி சிகிச்சையைச் செய்ய வேண்டும். இந்த நோயினின்று விடுபட்டவர்கள், ஒரு காலம் வரையில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்பே அதிக வேலை, அலைச்சல், மனச்சிக்கல் ஆகிய தொந்தரவுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

430. ருது போக்கு இல்லாமல் போவது (Amenorrhoea)

பெண் பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் இயற்கையாக உண்டாக வேண்டிய ருதுஸ்நானம் இல்லாமலே போகிறதோ அல்லது வந்து சரியாக நின்று விட்டதோ, அது எந்தக் காரணத்தினால் நேர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நோயின் காரணம் தெரிந்து இருந்தால் அதற்காக வேண்டிய சிகிச்சை செய்ய வேண்டும். இதை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம்

1 ருதுஸ்நானமே ஏற்படாமல் இருப்பது. 2 ஏற்பட்டுப் பிறகு நின்றுவிடுவது.

1. ருதுப்போக்கு ஏற்படாமல் இருப்பதற்குப் பல்வேறான காரணம் உண்டு. கர்ப்பப்பையின் வளர்ச்சி இல்லாமல் சிறியதாகவோ இல்லாமலோ அமைந்திருக்கலாம்; அல்லது யோனித்துவாரம் தவறுதல் அடைப்பட்டிருக்கலாம்.

2 **இயற்கையின் காரணத்தால் நின்றுவிடுவது:-** கர்ப்பமாக இருப்பதில் இரத்தப் போக்கு நின்று விடும். ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயதுக்கு மேல் கர்ப்பம் தரிப்பது நின்று இரத்தப் போக்கு மறைந்து விடுகிறது இயல்பு.

3. **நோய்களின் காரணத்தால் நின்றுவிடுவது:-** இரத்தச் சோகை இதற்கு முக்கிய காரணம். இப்படிப்பட்டிருக்கும் நோய்கள் இரத்த சோகைக்குக் காரணம்.

நெடுநாள் முறைக் காய்ச்சல், குளிர்க் காய்ச்சல், சீத பேதி (நாள்பட்டது) காலரா (வாந்தி பேதி), கொக்கிப் புழு நோய், வெட்டை, உடல் நோய் அதிர்ச்சி, ஏதாவது நோயினின்று பிழைத்துப் பலவீனமாய் இருக்கும் காலம் இவைகளால் இரத்தசோகை உண்டாகும்.

மருத்துவம்:- இது காலம் தவறியதன் காரணத்தைத் தெரிந்து கொண்டு தான் சிகிச்சை செய்ய ஆரம்பிக்க வேண்டும். கல்வி, அறிவு இவைகளால் யோனிப் பரிசோதனையோ அல்லது பரிசோதனை செய்யவோ அனுபவப்பட்டிருந்தால் அதற்குக் கருவி வைத்தியர்களைக் கொண்டு தக்க சிகிச்சை செய்விக்க வேண்டும். இரத்தச் சோகைக்குக் காரணமான அந்த அந்த வியாதிக்குத் தேவையான வைத்தியங்களை முறைப்படி செய்ய வேண்டும்.

இருது காலங்களிலாவது அதிக நீரிலாவது தொடர் வாடை இருப்பினாவது அல்லது பெரும் துன்பங்களிலாவது பட்டால் இருது கால அடையாளம் வராமல் நின்று விட்டாலும் விடலாம். அல்லது வந்த பாதியில் நின்று விட்டாலும் விடலாம். அதற்கு வெந்நீரைத் தொட்டியில் விட்டு இடுப்பு அளவுக்கு அதில் இரண்டு வேளை பத்து நிமிஷ நேரம் உட்கார்ந்தால் ஓடுவதாகி விடும். முற்று

கோளாறு அத்தியாயம்

145

சிறுகட்டிகள் அத்தியாயம் 7.

உடலில் எந்தப் பாகத்திலாவது காயம் உண்டானாலும் நோயணுக்கள் தாக்கினாலும் தற்காப்புக்காக இயற்கைச் சக்தியால் சரீரத்தில் போரிடும் செல்கள் அந்தப் பாகத்தில் பெருக்கமடைகின்றன. இதில் நோய்ப்பட்ட பாகத்தில் இரத்தம் அதிகமாகச் சேருகிறது. உஷ்ணம், வீக்கம், வலி, சிவப்பு ஆகியவை ஏற்படுகின்றன. இவை அளவுக்கு மிஞ்சிப் போவதால் அதுவே சரீரத்திற்கு ஒரு நோயாகிறது. இதற்குச் **சதைக் கொதிப்பு** என்று பெயர். இப்படி சதைக் கொதிப்பு தோலிலும், தோலுக்கு அடியிலிருக்கும் சதையிலும் உண்டாகில் கட்டிகள் தோன்றும். முதலில் கடினமாகவும், சிவப்பாகவும், மத்தியில் ஒரு பொக்கரும் கொண்டு விகாரமாகும். நாளுக்கு நாள் அதிகப் பெருத்து வலியுடன் மெல்ல கிளம்பும். பெரும்பான்மையாக கிளம்பும். இது நீண்ட நேரம் அதிகப் பெருத்த வலியுடன் மெல்ல கிளம்பும்

முகம், கழுத்து, முதுகு, அரைப்பூட்டு, அக்குள் முதலிய இடங்களில் கிளம்பும்

கிரந்திக்கட்டி என்பது, இவ்விதமே கண்ணாடி உள்ளோரத்தில் புறப்படும் சிறுகட்டி. கடுமையான நோய் வாய்ப்பட்டு இரத்தம் கெட்டிருந்தால் கட்டிகள் சிறுவர்களுக்கு அதிகமாக வரும். கடுமையான நோய் வாய்ப்பட்டு இரத்தம் கெட்டிருந்தாலும், பிறகுள்ள ஆகாரம் குறைந்து இருந்தாலும், மலச்சிக்கல் அதிகம் இருந்தாலும் பொதுவாகப் பலவீனம் ஏற்பட்டாலும் இந்தக் கட்டிகள் புறப்படும்.

சில சமயங்களில் கட்டிகள் தானாகவே அடங்கிப் போகலாம். பெரும்பாலும் முகம் கொண்டு, உடைந்து அத்துவாரத்தின் வழியாக மஞ்சள் நிறமுள்ள சீழ் காணப்படும். சீழ் வெளிவந்த பிறகு தான் இதை முளை அல்லது ஆணி என்று சொல்லுவார்கள். இந்த முளை வெளிவந்த பிறகு தான் புண் ஆறுவதற்கு ஆரம்பமாகும்.

சிகிச்சை:- மூல காரணத்திற்கு வைத்தியம் செய்ய வேண்டும். மலச்சிக்கலைப் போக்கி மருந்துகள் கொடுத்து நீக்க வேண்டும். ஆகாரத்தில் மிகவும் சிறந்த உணவாகக்

உணவாகக் கொடுக்க வேண்டும். பால், மோர், பழங்கள் இவைகள் சாப்பிடலாம். மலி கெட்டிப் பொருள்கள் அடங்கிய பதார்த்தங்கள் உணவில் சேர வேண்டும். வலி அதிகமாக இருந்தால், கட்டியின் மேல் அபின் பிளாஸ்திரி போடலாம். கட்டி பெரியதாக இருந்தால் ஆளிவிதையும் அரிசிமாவும் [illegible] கலந்து, சிறிது வெண்ணெய் கலந்து களி போலக் கிண்டிச் சூடாக ஒரு நாளைக்கு மூன்று, நான்கு தடவைக்குக் கைபொறுக்கும் சூட்டுடன் கட்டலாம். ஊமத்தை இலையை வாட்டிச் சூடாக மேல் ஒத்தடம் போடலாம். ஐயோடின் [illegible] இரண்டு மூன்று தரம் தடவினால் வலிக் குறையும். கை விரல்களினாலாவது, நகங்களினாலாவது கட்டியின் மேல் நெருடுதல், கீறுதல் ஒன்றும் செய்யக் கூடாது. கடைசியாக, [illegible] சுத்தமான கத்தி முனையாலாவது ஊசி முனையாலாவது பழுத்திருக்கும், [illegible] கீறி விடலாம். சீழ் வடிந்த பிறகு முளை வெளி வர வேண்டும். வரும் வரையில் சூடான ஒத்தடம் கொடுத்துக் கட்டியை இளக வைத்து வெளிப்படுத்த வேண்டும். போரிக் பவுடரை மேல் பூசி, [illegible] விட்டால் நன்றாக வெளிவந்து விடும்.

147. ஊமைக் கட்டி

இதில் சாதாரணச் சிறு கட்டிகளைப்போல் முளை இருக்காது. ஊமை வீக்கமாக இருந்து, சிவப்பாகத் தெரியும். ஆழத்திலிருந்து புறப்பட்டால் சிவப்பு நிறம் சில நாட்களுக்குத் தெரியாது. வலி மாத்திரம் நாலைந்து நாள் அதிகரித்துக் கட்டி கனமாகிக் கொண்டு வரும். காய்ச்சலும் அதனுள்ள மற்றக் குணங்களும் இருக்கும். வீக்கம் அதிகமாகி மத்தியில் குழிந்து [illegible] தொடுக்க ஆரம்பிக்கும். ஆள் காட்டி விரலைக் கட்டியின் ஒரு பக்கத்தில் அழுத்தமாக வைத்துக் கொண்டு இன்னொரு கை ஆள்காட்டி விரலை மற்றொரு பக்கம் அமுக்கினால், உள்ளே இருக்கும் நீர் அழுத்தியிருக்கும் விரலில் வந்து மோதுவது தெரியும். சில நாட்களுக்குப் பிறகு மேல் தோல் இளகி, தானே உடைந்து அழுகி மஞ்சளான சீழ் வெளியாகும். சீழ் பழுத்து உடையாமல் இருந்தால் குளிர் காய்ச்சலும் அதன் சின்னங்களும் உண்டாகும்.

147 வேகாக் கட்டிகள்.

சில ஊமைக் கட்டிகள் முதலில் வெகுநாள் அதிக வலி இல்லாமலும், வேகாமலும், பழுக்காமலும், சீழ் கொண்டதாகவும் இருக்கும். பிறகு குளிர் காய்ச்சலும் சாயங்கால வேளைகளில் வரலாம். இது அநேகமாகச் சுரத்துக்கு அடியில் உண்டாகும்.

சிகிச்சை:- முதலில் அரிசிமா, ஆளிவிதைமா இவைகளைக் களி போலக் கிண்டி ஒரு நாளைக்கு மூன்று நான்கு வேளைக் கட்ட வேண்டும். வலி அதிகம் இருந்தால், ஊமத்தை இலைகளை வாட்டிப் போடலாம். அபின் பிளாஸ்திரி போடலாம். கட்டிப் பழுத்த பிறகு தானே உடையாவிட்டால் வைத்தியரைக் கொண்டு கீறி விட வேண்டும்.

147. பிளவை

இதுவும் ஊமைக் கட்டி இனத்தைச் சேர்ந்தது. முதலில் சிறு கட்டியைப் போலத் தோன்றி நாளுக்கு நாள் பெரிதாயும் அகலமான அடிப்பாகத்தோடும் வீக்கம் காணும். வலியும் அதிகமாக இருக்கும். நீரிழிவு ரோகம் உள்ளவர்களுக்கு அடிக்கடி வரும். அடிக்கடி [illegible] பிறகு வீக்கத்தின் மேல் சிறு கண்களாகச் சீழ் பிடித்த கொப்புளங்கள் போல் புறப்படும். அவை உடைந்தால் சிறு துவாரங்களாகி அடியில் இருக்கும் மஞ்சள் சதை காணப்படும். கட்டி பூராவும் தேன் கூடு போலப் பல துளைக் கொண்டு காய்ச்சலுடன், உடலை உருக்கி விடும். [illegible] சிகிச்சை செய்வதோடு மேலுக்கு அபின் பிளாஸ்திரி போடுவது, களிம்புக் கட்டுவது முதலியன செய்ய வேண்டும். பிளவைகளுக்குத் தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு ரண சிகிச்சை செய்ய வேண்டும். இல்லாவிட்டால்

முன் காரத்தைத் தோய்த்து நீக்கிவிட்டு, அவ்விடத்தைச் சுத்தம் செய்து திரைசீலை கொண்டு மூடிக் கட்ட வேண்டும். நோய்க் கிருமிகள் அணுகா வண்ணம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கருவி மருத்துவம் செய்வதற்குமுன் கருவி கத்தி முதலியவைகளின் படி ஆயுதங்களைக் கொதிக்க வைத்தும் கைகளையும் சோப்பு போட்டுச் சுத்தம் கொண்டு மருந்து நீரில் கைகளை கழுவி; கட்டியின் மேல் புறத்தையும், பக்கவாட்டுகளையும் எரிநீர் சாராயம் போட்டுச் சுத்தம் செய்து பிறகு வேலை செய்ய வேண்டும்.

148. புரையும் பவுத்திரமும்.

கட்டிகளிலிருந்து சீழ் வெளிவருவதற்குப் போதுமான வழியில்லாவிட்டால் அதுவள்ளே தங்கியே பலவழிச் சென்று, சதைப் பகுதியுள் நீண்ட பாதைகளை அமைத்துக் கொள்ளும். இதற்குப் புரை என்று பெயர். புரையோடிப் போய் மற்றொரு புறத்திலிருந்து கொண்டு இரண்டு அல்லது மூன்று துவாரங்கள் உண்டு பண்ணிக் கொண்டு விட்டால் அதற்குப் பவுத்திரம் என்று பெயர். பவுத்திரங்கள் மலத்துவாரத்தைச் சுற்றியும், நீர்த் தாரையை ஒட்டியும் ஏற்படும். சாதாரண சிகிச்சையில் இந்தப் புரையும் பவுத்திரமும் குணப்படுவதில்லை. புரையைப் பூராவும் கத்தியால் கிழித்து விட்டு அங்கு வழியைச் சுத்தப்படுத்தி ... வைத்துக் கட்டிப் பிறகு கட்டியில் காணப்படும் பிறகு கட்டுகளைப் ... பெரிய ... பயன் ஆகும்.

148. நகச் சுற்று.

இது விரல்களின் நுனியில் நகங்களின் அடியில் சுற்றி தோலின் புறம்பெடுக்கும் வேக்காடு. நகம் சதைக்குள் வளர்ந்து சதையைக் குத்துவதாலும், நகங்களை அதிகமாகக் கிள்ளிக் காயப்படுத்திக் கொள்வதாலும், நகத்தை வாயில் வைத்துக் கடிப்பதாலும் இவை போன்ற காரணங்களினாலும் நோய்க் கிருமிகளுக்கு இடம் உண்டாகி நகச் சுற்று உண்டாகும். நகத்தைச் சுற்றிலும் வலியும் வீக்கமும் அதிக அதிர்ச்சியால் காய்ச்சலும் உண்டாகும்.

சிகிச்சை:– விரல் நுனியை எலுமிச்சம் பழத்தைக் கொண்டு மூன்று நாட்களுக்குச் சொருகி வைப்பது வழக்கம். இதனால் அதிகப் பலன் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கனிவேப்பிலை வைப்பது ... சுத்தமான ... நீரில் ..., அப்படியே விட்டு விட்டால் நொந்து சீழ் போய்த் தசைகளையும் நரம்புகளையும், எலும்புகளையும் கெடுக்கும். விரல் எலும்பும் இவ்வாறு அழுகிப் போய் விடும். சீழை வெளிப்படுத்த வேண்டும். ... கட்ட வேண்டும். நல்ல அளவு கொண்ட சப்பாத்திக்கள்ளிப் பழம் ... பார்த்துப் பழுக்க உடனே அதன் மேலுள்ள முட்களை எடுத்து விட்டுக் காம்புப் பக்கம் பழுத்ததின், நோய் பட்ட விரல் நுழையும் படி ... அதில் நகச்சுற்று விரலைச் செருகி மெல்லிய துணியைக் கொண்டு கட்டி விட்டால் வலி குறைந்து நகச் சுற்று ஆறிப் போகும். இந்தச் சிகிச்சை நகச் சுற்று நோய் கண்ட உடனே செய்தால் பலிக்கும். பழுத்திலிருந்து சலம் போகாமல் துணி செய்ய வேண்டும். பழுத்ததின் ... புண் மேல் ... அசையும் படி கட்ட வேண்டும். பழுத்தின் ... வாயை இறுக்கிப் பிடிக்காமல் கட்ட வேண்டும்.

149. அரையாப்புக் கட்டி

இது இடை இடுக்கில் வருவது. ஒரு பக்கமும் அல்லது இரு பக்கமும் வரலாம். இனப்பெருக்க ... உறுப்புகளில் ஏதாவது நோய் உண்டானாலும், கால் விரலில் புண் முதலியவை இருந்தாலும், வெள்ளை, கிரந்தி முதலியவைகள் இருந்தாலும் உண்டாகும். கிரந்தியால் உண்டானால் உள் மருந்துகளால் குணமாகும். கிரந்திக்கு வேண்டிய சிகிச்சை செய்தால் கட்டியும் குணமாகும். மற்ற காரணங்களால் உண்டானால் அதிகமாய்ச் சீழ் பிடித்து உடையும். கட்டியைக் கிழித்து சீழை வெளியில் விட்டுப் பிறகு சூடான ஒத்தடங்கள் கொடுத்துப் போடுவதுதான் முறை. அதை ஆழமாகக் கீறி விடக் கூடாது. புண்ணின் அடிபாகத்தில்

சில நீர்ச்சுரப்பிகள் இருக்கும். அவைகளும் கெட்டுப் போயிருந்தால் அவைகளையும் எடுத்தால் ஒழிய புண் ஆறுவதில்லை. அவைகளை எடுக்க வேண்டுமானால் தேர்ந்த கல்வி மருத்துவர்களைக் கொண்டு செய்ய வேண்டும். எந்த வியாதியின் காரணமாகக் கட்டி உண்டாகிறதோ அந்த வியாதிக்குத் தக்க மருந்துகளை உள்ளுக் கொடுக்க வேண்டும்.

150. அழுகு ரணம்

முதலில் புண் போலத் துவக்கிச் சுற்றிலும் இருக்கும் சதைகள் ரத்தமில்லாமல் ஜீவனற்றதாகக் காணப்படும். இதில் ஈரம் இருக்காது. அழுப்பாகம் வெடித்து அங்கும் இங்கும் கறுப்புப் புள்ளிகள் கொண்டு ரத்தமில்லாமல் காய்ந்து கட்டையாகக் கறுப்பாக மாறி விடும். நாற்றம் வீசும். இதற்குக் கருக்கழுகு ரணம் என்று பெயர்.

சுற்றிலும் சதைத்து, ரத்தக் குழாய்கள் பழுத்து வீக்கம் கண்டு ஆரம்பமாகும். புண்ணில் ஈரக்கசிவு அதிகமாக இருக்கும். கட்டையாகப் புண்ணில் சூடு மேலிக் கொண்டு போய், மிகு அழுகுதலும் உண்டாகும். புண்ணும் சிவப்பு மாறிக் கொண்டு போய், மிக மஞ்சள் நிறம், மிக பச்சை, மிக கறுப்பு நிறங்களாக மாறித் தோன்றும். இதற்குக் கசிவழுகு ரணம் என்று பெயர். நீரிழிவு இதய நோயில் ரத்த ஓட்டக் குறைவு, ரத்த சோகை ஆகிய வியாதிகள் அழுகு ரணத்திற்கு இடம் கொடுக்கும்.

சிகிச்சை:- எந்த பாகத்தில் இம்மாதிரி ஏற்பட்டிருந்தால் அழுகிக் கொண்டுள்ள அங்கம் தள்ளி அந்த அங்கத்தை அறுத்து எடுத்து விட வேண்டும்; நல்ல தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டுதான் செய்ய வேண்டும்.

150 ஆண் குறி முன்தோல் சுருங்கல்

பிறவியிலேயே சில ஆண் கன்றுகளுக்கு ஆண் குறியை மூடியிருக்கும் முன் தோலின் துவாரம் மிகச் சிறியதாக இருக்கும். நாளடைவில் அழுக்கு சேர்ந்து வலி உண்டாகி நாள் தவறாது வரும். இதற்குச் சிகிச்சை துவாரத்தைப் பெரிது பண்ணி விட வேண்டும் இல்லாவிடில் முன் தோலையே கத்தரித்து விட வேண்டும்.

பெருக்கமுள்ள மாடுகளுக்கு ஆண் குறியின் முன் தோல் மேல சதைத்துண்டு வெட்டுக் காயங்களும் புண்ணாகிச் சுருங்கி விடும். அதைப் பின்பு தள்ள முடியாமலும், உள் இழுக்கும் போது, சுத்தம் செய்யவும் முடியாமலும் இருக்கும். இதற்கும் முன் தோலைக் கத்தரித்துப் பிற்புறம் தள்ளி நகர்த்தி விட வேண்டும். மேலும் வெட்டின இடங்களுக்கு உள் மருந்து கொடுக்க வேண்டும்.

151. ஆண் குறி நுனியின் பின்னால் மடங்கிப் போன முன் தோல்

மூட வராமல் பின்புறமே நின்று விடுவது. இதனால் குறியின் முன் பாகம் வீங்கி, வலி உண்டாகும். நீர் இறங்கி வரவும் கஷ்டப்படும். ஆரம்பத்தில் குளிர்ந்த தண்ணீரில் துணியை நனைத்து காய விடாமல் ஒரு நாள் முழுவதும் கட்டி வைத்தால் வீக்கம் வடிந்து முன் தோலைச் சுலபமாக இழுத்து மூடி விடலாம். மூடும் பொழுது கட்டை விரல் இரண்டையும் ஆண் குறியின் மேல் வைத்துக் கொண்டு, இரண்டு ஆள் காட்டி விரல்களால் விரைத்திருக்கும் மேல் வழித்து நீட்டி இழுக்க வேண்டும். ஆறு இருக்கும் தோல் வீங்கிப் போயிருந்தால் ஊசியால் குத்தி நன்றாக சுத்தம் செய்து வடித்து விட்டால் சுலபமாகத் தோலை இழுக்க முடியும்.

151 குடல் தள்ளுதல்

சில கன்றுகளுக்கு நாள் பட்ட ஒரு பெரிய காரணத்தால் உள் வெந்து நைந்து போய் குடல் மலப் போகும் பொழுது அடிக்கடி மலத்துவாரத்திலிருந்து வெளியே

தள்ளி வரும். சில சமயங்களில் உள்ளே போகாமல் அப்படியே நின்று விடும். மற்றவர்களுக்கு சில வைத்தியர்களும், மருத்துவர்களும் அதின் உட்புறத்தில் சதை வளருகிறதென்றும் குடல் அடிப்பாகம் வெளியே தள்ளும். குழந்தைகளுக்குக் குடல் தள்ளுமானால் அப்படியே இடை வரையில் வெந்நீரில் பூர்த்து நிமிஷ நேரம் உட்கார வைத்துப் பிறகு மெதுவாக உள்ளங்கையால் மிருதுவான பஞ்சை வைத்துக் கொண்டு குடலை உள்ளே தள்ள வேண்டும். குடல் உள்ளே சென்ற பிறகு வெளிவராமல் பஞ்சை வைத்துக் கோவணம் போல் மூன்று அங்குலம் அகலமுள்ள துணியால் கட்ட வேண்டும். இது வியாதிக்குத் தகுந்த வைத்தியம் செய்ய வேண்டும். சிறுவரைக் கொண்டையில் மருந்து கலந்து குடல் வெந்நீர் தண்ணீரும் படி உண்டுக்கக் கொடுக்க வேண்டும். மேலும் பெரிய வயதினர் காலத்தால் குடல் தள்ளுமேயானால் அந்த அந்த வியாதிக்குத் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும்.

152. குடல் வாதம்.

இந்த நோய்க்குக் காரணம் உள் அவயவம் ஏதாவது தன்னுடைய இருப்பிடத்தை விட்டுப் பிதுங்கி வேறோர் அவயவத்தில் பிரவேசிப்பது. இது முக்கியமாக இருவகையில் ஏற்படும்

1 தொப்புள் பிதுக்கம்
2. அரைப் பிதுக்கம்.

பெரும் பளுவைத் தூக்குவதாலோ, மலஜலம் கழிக்கும்போது முக்குவதாலோ திடீரென்று சதை கிழிந்தது போல உணர்ச்சி உண்டாகி மேற்கூறிய இரண்டு பிதுக்கங்களும் ஏற்படும். இவைகள் பிறவியிலேயே ஏற்பட்டு விடுகிறது.

152. தொப்புள் பிதுக்கம்.

இது சிறு குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படலாம். பிறவியிலிருந்தும் ஏற்படலாம். பிறந்த பிறகும் ஏற்படும். தொப்புள் குழியாக இல்லாமல் மேலே கிளம்பியிருக்கும். குழந்தை அழும் போதும், இருமும் காலத்திலும் பெரிதாகும். கையால் தொட்டு அழுத்தினால் காற்று உள்ளே போவது போல வயிற்றுக்குள் போகும். போகும் வழி வயிற்றுத் தசையில் துவாரமாக இருக்கும். குழந்தை வயசு வர வரத் தானாகவே துவாரம் இறுகி மூடி விடும்

சிகிச்சை:— ஓர் அரை அணாவை கிண்டி அவ்வளவு அகலமும், குழந்தை வயிற்றைச் சுற்றும் வரக் கூடிய நீளமும் கூடிய பிளாஸ்திரியின் மத்தியில் வைத்து அழுத்தி தொப்புள் குழியின் மேல் பிதுங்கியிருக்கும். குடலை உள்ளே தள்ளி விட்டு அந்தத் துவாரத்தின் மேல் பிதுங்கியிருக்கும் குடலை உள்ளே தள்ளி விட்டு அந்தத் துவாரத்தின் மேல் வைத்துக் கட்டி வைக்க வேண்டும். கடக்கக் கூடிய சிறுவர்களுக்கு இடையில் கட்டும் துணியையே தொப்புளின் மேல் வரும்படியாகக் கட்டிக் கொள்ளலாம் அதுவே போதுமானது.

வயது வந்த பெண்களுக்கு அடிக்கடி பிரசவம் ஏற்பட்டு வயது தளர்ந்து, தசைகள் கர்ப்பகாலத்தில் வயிற்றின் நடு மத்தியில் பிரிந்து பிரசவத்திற்குப் பின்னரும் சேராமல் இருந்து விடுவதாலும் பிதுக்கம் ஏற்படலாம். இதற்கு வயிற்றுக்குத் தாங்கலாகத் தோலினால் ஓர் அகலமான பட்டையைத் தயாரித்துக் கட்டி விட வேண்டும்.

153. அரைப் பிதுக்கம்.

குடல் வயிற்றுத் தசையை கிழித்துக் கொண்டு பீஜத்தில் (விதைகளில்) இறங்குவதோ, வலது புறமோ அல்லது இடது புறத்திலுமோ இறங்குகிறது. இவ்வாறு பீஜ கோசத்திற்குள் குடல் இறங்கும் துவாரம் உடலமைப்பில் எவ்வாறு ஏற்பட்டிருக்கிறதென்றால், கர்ப்பத்திலிருக்கும் ஆண் சிசுவுக்கு ஏழாவது மாதத்தில் தான் பீஜம் வயிற்றிலிருந்து கீழே இறங்கும். அது இறங்கிய

அதுவரையில் துவாரம் சிறுகச் சிறுக அப்படியே மூடாமல் இருக்கும். இந்தத் துவாரத்தின் வழியாகத்தான் பிறகு எந்த வயதிலும் குடல் பிதுக்கம் உண்டாவது. இது மூன்று விதமாக இருக்கலாம்.

(1.) உள்ளே தள்ளிவிடக் கூடியது; இது எளிதான பிதுக்கம்.

(2.) தள்ள முடியாமல் அந்த வழியிலேயே தங்கியிருப்பது; இது மீளா பிதுக்கம்.

(3.) குடல் துவாரத்தில் அகப்பட்டுக் கொண்டு முன் பின் போகாமல் மாட்டிக் கொள்வது; இது வலி நெறிப் பிதுக்கம்.

இம்மூன்று வகையில் மூன்றாவது சொல்லியது உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும். சாதாரணமாக இதை வாதவெட்டம் என்று சொல்லுவார்கள். இது தவிர குடல் இறங்கி வருவதால் தான் இந்த நோய் உண்டாகும். இதில் எளிதான பிதுக்கம் ~~இல் அகப்பட்டுக் கொண்டு ரத்தம் ஓடுவதற்கு இல்லாமல் இறங்கியிருக்கும்~~ மீளா மலச்சிக்கலினாலோ அல்லது உடலின் எடை பாரம் வந்து இறங்கி விட்டாலோ பிதுக்கம் துவாரத்தில் அகப்பட்டுக் கொண்டு ரத்தம் ஓடுவதற்கு இல்லாமல் இறங்கியிருக்கும் குடல் அழுகிப் போய் நச்சுப்பட்டு மலம் தேங்கி நிற்கும். வலி நெறிப்பை நீக்காவிடில் அழுகி விடும். உயிருக்கும் ஆபத்தாகி விடும். இது ஏற்பட்டுவிட்டால் இரண்டு மணி நேரத்திற்குள் உள்ளே போகவில்லை எனில் சிகிச்சை (ஆபரேஷன்) செய்ய வேண்டும்.

சிகிச்சை:— உள்ளே தள்ளி விடக்கூடிய எளிய பிதுக்கத்திற்குத் தாங்குவார் காயாத்துப் பிதுக்கத் துவாரத்தை அடைத்து மூடி இருப்பது போல கட்ட வேண்டும். இவ்வாறு கட்டுதல் வாராமல் துவாரத்தின் மேல் அழுத்திக் கொண்டு இருக்கும். இதை எப்பொழுதும் அணிந்து கொள்ளுதல் வேண்டும். இரவு தூங்கப் போவதற்கு முன்பு படுக்கையிலேயே குடல் முழுவதும் உள்ளே தள்ளிவிட்டுப் பிறகு போட வேண்டும். மலச்சிக்கல் உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

137 - தனுர்வாயு அல்லது ரணஜன்னி

இந்த நோயை உண்டாக்கும் நோய்க் கிருமி மண்ணிலும் புழுதியிலும் அழுக்குப் படிந்த இடங்களிலும் பரவியிருக்கும். உடம்பில் ஏற்பட்ட காயத்தின் வழியாக கிருமிகளுக்கு இடம் கிடைத்து விட்டால், ரணஜன்னி தோன்றி, உயிருக்கு அபாயமாகும். காயத்தின் மேல் படிந்த மண் அழுக்குகளிலிருந்து இந்த நோய்க் கிருமி ரத்தத்தில் புகும். இரண்டு, மூன்று நாட்களுக்குள், வாய்ப்பூட்டு, இழுப்பு, உடல் விறைப்பு, இவைகளுடன் காய்ச்சல் தோன்றும். இதைத் தடுப்பதற்காகத்தான் புண்ணைக் கழுவி டிஞ்சர் அயோடின் போட்டுக் கட்ட வேண்டும். பெரிய காயங்கள் பட்டு, மண் அழுக்குகளை ஒட்டிக் கொண்டிருந்தால் ரணஜன்னிக்குக் காப்பாக மருந்து ஊசி குத்திக் கொள்வது* நல்லது.

நோயணுக்கள் இருக்குமிடம் தடுப்பது:— உயரமைப்பில், மண், புல், குதிரைகள் போன்ற எல்லா ஜீவ ராசிகளிலும், இயற்கையாய் பாதுகாப்புகள் ஏற்படுகின்றன.

✳ (மருத்துவரின் குறிப்பேடு) (என்பதற்கு விளக்கம்) ஹானிமன் அந்த மருத்துவர்கள் இவ்வகையான வியாதிகளுக்காகப் புது வைத்திய சாஸ்திரம் படித்தவர்களிடம் வைத்தியம் செய்கிறார்கள். பொதுவாக அந்த மருத்துவர்கள் செய்யும் வேலை என்னவென்றால் இந்த நோய்க்குச் சம்பந்தப்பட்ட நோய்க் கிருமிகளை வேறு பிராணிகளின் ரத்தத்தில் இனவிருத்தி செய்ய விடுவார்கள். அப்படிச் செய்வதனால் அந்தப் பிராணியின் ரத்தத்தில் நோயை எதிர்க்கும் சக்திப் பொருள்கள் இயற்கைச் சக்தியால் உண்டாகும். அவ்வாறு மாற்றுச் சக்தி பெற்ற ரத்தத்திலிருந்து பிரித்தெடுத்து வேறு நோய்க் கிருமிகள் அதில் கலவாதபடி சுத்தமாகச் சிறு கண்ணாடிக் குழாய்களில் வைக்கப்பட்டிருக்கும். மருத்துவர் ரத்தம் பரிசோதனை செய்யப்பட்டு கிருமிப் பரீட்சை செய்யப்படும்.

பாதுகாப்புகள் அடைப்படுகின்றன. ... காயம் பட்டிருக்கின்ற ... வெட்டாயிருந்தால் வெட்டின இடத்தில் பூச்சி புகாமல் நாம் கவனித்துக் கொண்டால் மட்டுமே கிருமியோ பட்டுப்போவதில்லை. அதுபோலவே மனிதன் உடலும் தற்பாதுகாப்புச் செய்து கொள்கிறது. நோயாளிகள் புறத்திலிருந்து புகாமல் மட்டும் செய்துவிட்டால் புண் தானாகவே ஆறிவிடும். இப்படித் தானே ஆகும் உடல் சக்திக்கு இயற்கை நிவாரணம் என்று பெயர். இம்மாதிரியாகத் தன்னைக் காக்கும் சக்தி உடலுக்கு இல்லாவிட்டால் எந்த மருந்து போட்டாலும் பயன்படாது.

இந்த இயற்கைப் பாதுகாப்பு முழுவதும் பயன்பட வேண்டுமானால் உடல் நல்ல ஆரோக்கிய நிலையில் இருக்க வேண்டும். பலம் குறைந்து, சோகை பிடித்து, நல்ல ரத்தம் இல்லாதவர்கள் உடலத்தில் இந்த இயற்கைப் பாதுகாப்புக் குறைந்தும் பயனற்றதாகவும் இருக்கும். இந்த இயற்கைப் பாதுகாப்புக் குறைந்தும் பயனற்றதாகவும் இருக்கும். இந்த இயற்கைச் சக்தியை அறிந்து அதை அடிப்படையாகக் கொண்டு ஏனை வைத்தியர்கள் கத்தியால் உடலின் எந்த இடத்திலும் பயமில்லாமல் வெட்டித் தைத்து எவ்வளவு பெரிய காயங்களையும் குணப்படுத்துகிறார்கள்.

அவர்கள் செய்வதெல்லாம் நல்ல உடலமைப்புள்ள கூடியவர்களுக்குக் கத்தியின் மூலம் வெட்டுக்காயங்கள் உண்டானால் அவைகளில் நோய்க் கிருமிகள் அணுகாவண்ணம் காப்பு ஏற்பாடு என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான். ஆகையால் அந்த ஏற்பாடுகளைக் காயங்களைக் கழுவக் கூட வேண்டிய எல்லாமே கூடிய அளவு அறிந்துகொள்ளலாம்.

(1.) காயம் பட்டவன் இருக்கும் அறை, படுக்கை, சுவர், ஜன்னல், கதவு, தரை எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். கிருமிகள் நோயாளிக்கு அழிக்கும் மருந்துகளைத் தண்ணீரில் கலந்து தரையைக் கழுவ வேண்டும்.

(2) வெட்டுக்கு உபயோகப்படும் சகல சாமான்களையும் கொதிக்கும் தண்ணீரில் அரைமணிநேரம் வைத்தோ அல்லது வெந்நீரில் நச்சுக்கொல்லி மருந்துகளைக் கலந்து சுத்தம் செய்தோ வைத்துக் கொள்ள வேண்டும்.

(3) வேலை செய்யும் பொழுது காயங்களில் டா. உட்காருமிடமும், ஆயுதங்களும் மற்றுமுள்ள சாமான்களும் பத்திரமாகவும் அந்த அறையில் டா. புகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(4) கட்டும் துணி, பஞ்சு, துடைக்கும் கந்தைகள் எல்லாம் நீராவியில் அவித்து வைத்துப் புழங்க வேண்டும்.

(5) சிகிச்சை செய்கிறவர்கள், உதவியாளர்கள் இவர்களுடைய உடை, கைகள், சுத்தமாக இருக்கவேண்டும். கைகளைச் சவுக்காரம், எரிசாராயம் முதலியவைகளால் சுத்தம் செய்து கொண்டு நச்சுக் கொல்லிகள் கலந்த மருந்து நீரில் கைகளைக் கொஞ்சநேரம் ஊறவைத்துப் பிறகு காயங்களைத் தொட்டு வேலை செய்ய வேண்டும்.

மேற்கூறிய பாதுகாப்புகளைக் கவனித்து வேலை செய்தால் உயிருக்குக் கேடு இல்லாமல் சிகிச்சை பலனடையும்.

139 இரத்த நீக்கிகள்

(1) கொதிக்கும் தண்ணீர்

(2) சூரிய கிரணங்கள். வெண்மேகம் படைகள் முதலிய ஏற்பட்டால் சொரி

பட்டால் நோய்க் கிருமிகள் அழிந்து விடும்.

(3) ஐயோடின் திராவகம், மூன்று கோப்பைக் கொதி நீரில் சேர்த்து மருந்தின் நிறம் மஞ்சளாக மாறும் அளவு திராவகம் கலந்துக் காயம் கழுவுவதற்கு மருந்து நீராக உபயோகப்படுத்தலாம்.

(4) பச்சை வேப்பிலையைக் கொதிக்க வைத்த தண்ணீரும் நல்லது.

(5) போரிக் காடித்தூளும், அதை கரைத்த திராவகமும். கொதிக்க வைத்த வேப்பெண்ணெய்.

இயற்கை சிறப்பு ஏற்படாமல் சுத்தத்தின் காரணமாகச் சீழ் பிடித்து விட்ட புண் கொஞ்சமாக ஆறி பின் மேல் வந்து தழும்பு ஏற்படும். இதை இரண்டாம்படி இயற்கை சிறப்பு என்று சொல்லலாம். இக்காயத்தில் நோயணுக்கள் இடம் பெற்று விட்டால், காயத்தில் வீக்கம் வலி, உடலில் காய்ச்சல் முதலியவை ஏற்படும். தக்க சிகிச்சையின் காரணத்தாலோ அல்லது தேக வன்மையாலோ அந்த நோயணுக்களைப் போக்குவதற்காகவே புண்ணில் சீழ் பிடிக்கிறது. இதற்குப் புற நோய்க் கிருமிகளுக்கும் ஆகாது. சீழ் இருக்கிற இடத்தில் நோய்க் கிருமிகள் செத்துவிடும். காயம் ஆற ஆற வீக்கம் வடிந்து புண் சிவப்பாக மாறி, இறந்த வேறு நாளைகள் முதலியவைகளெல்லாம் அடியிலிருந்து வெளி வந்து மறுபடி காயம் ஆறுமையும்.

நோய்க்கிருமிகளின் இடம் பட்டால் உடனே அவற்றை எதிர்த்து உடலைக் காப்பாற்றுவதற்காக இரத்தத்திலுள்ள வெள்ளைத் அணுக்கள் அந்த இடத்திற்கு வந்து சேருகின்றன. இவையும் இரத்தத்திலுள்ள வெண் அணுக்களும் போரிடும். இவைகளுக்கும் நோய்க்கிருமிகளுக்கும் நடக்கும் போரில் வெப்பக் கொதிப்பு உண்டாகி, வீக்கம் முதலிய குணங்கள் காணப்படுகின்றன. வெண் அணுக்களுக்கும் நோய்க்கிருமிகளுக்கும் நடந்த போரில் இறந்த அணுக்கள் மாண்டு போகின்றன. நோய்க்கிருமி கள் உடலில் உற்பத்தியாகும் கழிவுப் பொருளைக் கொடுத்த இரத்த நீர்களுக்கள், மாண்ட நோய்க் கிருமிகள் உடலின் முதலியவைகளோடு சேர்ந்து சீழாக மாறுகிறது. இதனால் சீழ் உடலில் தங்கக் கூடாது. தங்கினால் பல வகைத் தொல்லைகள் உண்டாக்கும். புண்ணுக்கு நச்சுக் கொல்லிகள் மேல் போட்டு சுத்தம் செய்து கட்டு கட்டினால் இப்படியான புதிய நோய்த் தடையை முறித்துப் பலவீனம், புண் ஆறித் தழும்பாகும்.

அத்தியாயம் 8

[illegible]

[illegible]

1000	பிரசவங்களில் இறந்து பிறக்கும் சிசுக்கள்	50
"	கர்ப்பங்களில் சிதைவாகப் பிரிந்து போவது	200
"	பிறந்த குழந்தைகளில் ஒரு வயதுக்குள் இறப்பது	300
	ஆயிரத்துக்கு ஆக மொத்தம்.	550

[illegible] அறுபது (60) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

கர்ப்பமானவுடனே யோனிக்குள் கீழ்ப்புறம் கருப்பையின் கழுத்து இறுகி மூடிக் கொண்டு அதன் மத்தியில் இருக்கும் துவாரம் பசைக்கசிவினால் அடைபட்டு விடுகிறது. இந்தக் கசி [illegible] வழுவழுப்பாக உறுதியாக இருக்கும். இது வெள்ளைகளால் நிறைந்திருக்கிறது. இந்த வெள்ளைகள் எந்த நோய்க் கிருமிகளையும் கொன்று [illegible] சக்தி கொண்டவை. ஆகையால் கருப்பையின் வாய்ப்பகுதி கருப்பையின் துவாரத்திற்கு ஒரு தக்கை போன்று இருப்பதோடு [illegible] அதைத் தொட்டு அறுத்துவிடுவதால் [illegible] முடியாது. கர்ப்பம் பிரசவம் வரையில் அந்தத் துவாரம் திறக்காமல் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதனால் அழுக்கு வெளிவருவதற்கும், புணர்ச்சியின் காலங்களில் கர்ப்பம் [illegible] துவாரம் இருக்கிறது. கர்ப்பம் ஏற்பட்டவுடன் [illegible] புணர்ச்சியின் காரணமாக [illegible] கர்ப்பம் வளர்ந்து பூரணமாவதற்கு அடைப்பட்டிருப்பதின் அவசியமும் பாதுகாப்பும் நன்கு விளங்கும். கர்ப்பமாக இருக்கும் [illegible] காலத்தில் [illegible] வெளியே வந்து விடுகிறது. இந்த [illegible] எல்லாம் இயற்கைப் பாதுகாப்புகள் இருக்கின்றன.

இதுமட்டுமல்ல, பிரசவ காலத்திலும் அதைப் பற்றும் [illegible] பிறந்த [illegible] கண்டு. மேலும் [illegible] வைத்திய [illegible] நாம் [illegible] முடியாது. [illegible] கருப்பையின் வாய் [illegible] அடைபடாமல் [illegible] இருக்கும். அச்சமயம் கருப்பையும் அதைச் சார்ந்த யோனி [illegible] அவசியமாகிறது. [illegible] இயற்கை அமைப்பு உண்டு. [illegible] வெளிவரும். [illegible] வெளிவரும் [illegible] நீர் [illegible] கொண்டு வரும். இந்த [illegible] நீர் வெள்ளத்தில் கருப்பையின் கழுத்து [illegible] வெளி வந்து விடுகிறது. [illegible] யோனியின் [illegible] கர்ப்பமாக இருக்க [illegible] கருப்பையும் [illegible].

[illegible], யோனி [illegible] கர்ப்பத்தின் [illegible] யோனித்துவாரம் [illegible] சுத்தம் செய்யப்பட்டு விடுகிறது. [illegible] அமைத்துக் கொண்டு வரும் [illegible] நீர் [illegible]. மேலும், [illegible] வெளிவந்தவுடன் [illegible] நீர் [illegible] யோனியைக் கழுவி விடுகிறது. இதுவும் [illegible] இயற்கை [illegible] காப்பு.

[illegible] வெளிவர ஆரம்பிக்கின்றன. அவை வெளிவரும் பொழுது [illegible] யோனியையும் நீர் கழுவி நோய்க் கிருமிகள் [illegible] சுத்தமாக விடுகின்றன [illegible]. [illegible] கருப்பையின் [illegible] சுத்தமான நீர் [illegible] வாரங்கள் வரையில் கழிந்து [illegible] சுத்தமாக வைக்கிறது.

இந்த இயற்கைப் பாதுகாப்புகளுக்கு மேல் நாமாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. [illegible] கள், மருந்து, மருத்துவம் [illegible] தேவையில்லை. நாம் [illegible] செய்ய [illegible] இயற்கைப் பாதுகாப்புகளைக் கெடுத்து விட [illegible]. பிரசவ காலத்தில் [illegible] துவாரம் [illegible] பார்ப்பது [illegible] ஆபத்தான காரியம். [illegible] சுத்தம் செய்துகொள்வது [illegible]. அவ்வாறு செய்துகொண்டாலும், யோனியின் [illegible] காலத்தில் யோனிக்குள் [illegible] கூடாது. [illegible] சுத்தமாக இருக்கவேண்டும். [illegible] நோய்க் கிருமிகள் [illegible] கொண்டு [illegible]. கருப்பையின் துவாரத்தில் [illegible] (ஸெப்டிக்) [illegible] கருப்பைக்குள் [illegible] சுத்தமாகக் [illegible]. ஆகையால் [illegible] கூடாது. [illegible] சுத்தம் செய்யவும் வேண்டும்.

பிரசவத்திற்கு முன்பாக யோனியிலிருந்து நீர், [illegible] நீர் [illegible] வெள்ளையாக ஏற்பட்டால், அப்பொழுதுதான் [illegible] வேண்டும்.

பிரசவ காலத்தில் ரத்தம் [illegible] வெளிப்படுத்துவதற்காக விரல்களை ஆயுதங்களை உபயோகப்படுத்த வேண்டி வரலாம். அப்பொழுது கருவி சுத்தமாக இருப்பது அவசியமாகும். பிரசவம் ஆகும்பொழுது [illegible] கிழிந்தாலும், அந்த பிரசவமான இடம் யோனியிலிருந்து வரும் [illegible] உள்ளதாக இருந்தாலும் அவசியம் சரியான முறையில் கருவிகளை சுத்தப்படுத்த வேண்டும். ஆகவே சாதாரணமாக மற்ற பிரசவங்களின் [illegible] அல்லது [illegible] உபயோகப்படுத்த கூடாது.

174 கருவின் உற்பத்தியும் வளர்ச்சியும்.

பெண்கள் வயிற்றில் [illegible] உண்டு. [illegible] வெளிப்படுகிறது. வீரியத்தில் இருக்கும் [illegible] அணுக்களில் ஒன்றும் [illegible] யோனியிலிருந்து கருப்பையை [illegible] அந்த கருப்பையில் இருக்கும் [illegible] புணர்ந்து ஒன்றாகவே, கர்ப்பம் ஆகிறது. [illegible] கரு கருப்பையின் [illegible] வளர்கிறது. [illegible] கருப்பையின் ரத்தக் குழாய்கள் [illegible] கரு வளர்ச்சிக்கு வேண்டிய [illegible] கொடுக்கிறது. [illegible] பிண்டமாக இருக்கும். நான்கு வாரத்திற்குள் [illegible] இருக்கும்.

இரண்டாம் மாதக் கடைசியில் ஓர் அங்குல நீளப் பிண்டமாக இருக்கும். [illegible] பட்டாணி போல் காணப்படும்.

மூன்றாம் மாதத்தில் பெரிய தலை காணப்படும். விரல்கள் [illegible]. உடல் உருவாகி இருக்கும். தொப்புள் கொடியும் [illegible] காணப்படும். இப்பொழுது கரு ஓர் [illegible] பருமனாக இருக்கும்.

நான்காம் மாதத்தில் சுமார் 5 முதல் 6 அங்குல நீளமாக இருக்கும். ஆண் பெண் குறிகள் காணப்படும்.

ஐந்தாம் மாதத்தில் சுமார் 9-10 அங்குல நீளம் இருக்கும். மயிர், நகம், ஆகியவைகள் [illegible] உண்டாகி இருக்கும்.

ஆறாம் மாதம் சுமார் 12-13 அங்குல நீளம் இருக்கும். [illegible] காணப்படும். [illegible] உயர்ந்திருக்கும்.

ஏழாம் மாதம் [illegible] கொழுப்பு உண்டாகி [illegible].

எட்டாம் மாதம் 15-16 அங்குல நீளமாகவும் எல்லா அவயவங்கள் உண்டாகியும் இருக்கும். இந்த மாதத்தில் பிறக்கும் சிசு நல்ல கவனிப்புடன் வளர்த்தால் உயிருடன் இருக்கும். [illegible] வளர்ந்து **ஒன்பதாம்** மாதக் கடைசியில் வெளிவரும். அப்பொழுது [illegible] அங்குலம் நீளமும், [illegible] எடை இருக்கும்.

175 கர்ப்ப காலக் கணக்கு

கர்ப்பகாலம் சாதாரணமாக இருநூற்றெண்பது நாட்கள் — அதாவது ஒன்பது மாதம் பத்து நாட்களாகும். [illegible] முதல் கணக்கிட வேண்டும். சுலபமான கணக்கு முறை [illegible] கணக்கிட்டு [illegible] ஒன்பது மாதம் பின் கணக்கிட்டு அதற்குப் பத்து நாட்கள் கூட்டினால், அதுவே பிரசவ காலமாகும். உதாரணமாக: ஜனவரி பத்து, கடைசி [illegible] [illegible] பத்துக்கு [illegible] மார்ச்சு பத்தாகிறது. பத்து நாள் கூட்டினால் மார்ச்சு 20 ஆகிறது. இது பிரசவ நாளாகும். கர்ப்பம் தரித்த நாளைக் குறிப்பாக [illegible] இவ்வாறு கணக்கிட்ட [illegible] சுமாராக [illegible] வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு வாரம் முந்தியோ பிந்தியோ பிரசவம் ஆகும்.

கர்ப்பத்தின் [illegible] கணக்காக [illegible]. [illegible] காலம் [illegible]

155

அல்லோபதியில் இன்றேல் கிடையாது. செயற்கையாக இருந்துவிட்ட காலுக்கு விடாய் தெரியும். இதற்கு மெய்து தாளாதும். இதற்கு இருபத்தைந்தே நாட்கள் இரு முறை ஆவதும் உண்டு. அவ்வாறு ஒருவருடைய விடாய் முறைக் கணக்கின்படி கர்ப்பகாலம் நீடித்தோ குறைந்தோ பிரசவம் ஆகுமென்று 30 நாள் கணக்குள்ளவர்களுக்கு 300 நாட்களிலும், 25 நாள் கணக்குள்ளவர்களுக்கு 250 நாட்களிலும் பிரசவம் ஆகலாம்.

176. கர்ப்பிணிகள் பராமரிப்பு

கர்ப்பிணிகளைப் பராமரிப்பவர்கள் அடியிற் கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

(1) உடை:- கர்ப்பிணிகளுடைய உடை சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்காய் இருக்கக் கூடாது. தினம் தோறும் துவைத்து, வெயிலில் காயவைத்து உலர்ந்ததாக இருக்க வேண்டும். இடுப்பில் இறுக்கமாகப் பட்டை வார்கள், இறுக்கிப் போடும் இறுக்கமான ரவிக்கை கூடாது. உடை மெல்லியதாகவும் தளர்த்தியாக இருக்கும் படியாகவும், இளம் சூரிய ஒளி பிரவேசித்து உடம்பின் மேல் படியாக வெளிச்சமாகவும் இருக்க வேண்டும். வெள்ளை உடுத்திக் கொண்டிருந்து அப்பொழுதும் இருக்கும் இடங்களில் வெளிச்சப் புகையின் இடம் காற்றோட்டமாக இருப்பதை உபயோகப் படுத்த வேண்டும்.

தாய்க்கு வயது கூடி வருவதால் இந்த மாதங்களில், இரண்டு அடி அகலமான வெள்ளைத் துணி கொண்டு கட்ட வேண்டும். புடவையை இறுக்கி வயிற்றில் கட்டி வருவது கூடாது. தாய்க்குத் தினம் இரவும் உண்டான இடம் அடுக்காக மெத்தை வழுக்கின் சுத்தமான தன்மைகள் இல்லாமலும் சுத்தத்தில் பார்த்துக் கொண்டு இருக்க. அதிலும் பட்டவைகளை எண்ணெய் தண்ணீரில் வேக வைத்து வெயிலில் காய வைத்து உபயோகப் படுத்த வேண்டும். தொற்றிய மாதத்தவர்கள் இவைகளுடையவர் புதிதாகத் தயாரித்து, ஆவியில் வைத்து இவைகளைக் கெடுக்காமல் செய்து வைத்திருக்க வேண்டும்.

(2) உணவு:- கர்ப்பிணியின் உணவு சத்துள்ளதாக இருக்க வேண்டும். தாய் உட்கொண்டு வயிற்றில் இருக்கும் சிசுவும் உண்டு வளர வேண்டும். தாய்க்கு வேண்டிய சத்தும் இருந்தாலும், இல்லா விட்டாலும், சிசு தனக்குத் தேவையானதைத் தாயினிடத்திலிருந்து எடுத்துக் கொண்டு விடும். ஆகையால் தாய்க்குக் கொடுக்கப் படும் உணவு வயிற்றிலுள்ள சிசுவுக்கும், பிரசவ கால இழப்புக்கும் தாங்குவதற்கும், அதன் மேல் பால் கொடுத்து வளர்ப்பதற்குமான சக்தி அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அது கர்ப்ப காலத்தில் பெண்கள் தாயார் வீட்டுக்கு வந்து உணவும் பெறும் வழக்கத்தின் பொருள் இதில் விளங்கும்.

கர்ப்பிணிக்கு அதிகம் கொடுக்கப்பட்ட உணவு போதிய அளவு இருப்பதோடு பட்டியல் படி, உயிர்ச்சத்துகள் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். பால், தயிர், மோர், நெய் இவைகள் அதிகம் சேர்க்க வேண்டும். காய்கறி, பழங்கள், கீரை வகைகள் சாப்பிட வேண்டும். இவைகளுடன், முளைக்க வைத்த பருப்பு உணவில் சேர்க்க வேண்டும். உணவில் அரிசி கைக்குத்தல் அரிசியும் பருப்பும் பழமும், பாதாம் பருப்பு, தக்காளிக்காய், வெண்டைக்காய், கொத்தவரை இவைகளை உபயோகப் படுத்த வேண்டும். வெயில் பட்டு வளரும் காய், பழ வகைகள் மிகவும் நல்லவை.

(3) பயிற்சி:- கர்ப்பிணிகள் ஓய்வது. வேலை செய்வது கூடாது என்ற அபிப்பிராயம் பிசகு. உடல் நலம் அவசியமானதாகவும் தினம் கொஞ்சம் வேலை ஏதாகிலும் செய்து கொண்டிருக்க வேண்டும். இப்படி செய்பவர்களுக்குப் பிரசவ காலத்தில் இடுப்பு வலி அதிகமாக இராது. வேலைகள் வீட்டு வேலைகள் செய்யத்தகுந்த அவ்வளவுக்கும், கைகளுக்கும், ஆரோக்கியத்திற்கும் வேண்டிய அளவு உழைப்பே அல்லாமல் இழுத்துக் கொண்டு போகும் படியான வேலை ஒன்றும் கூடாது.

(4) தோல் பாதுகாப்பு:- சாதாரண நிலையில் கவனிக்க வேண்டிய தோல் பாதுகாப்பு கர்ப்பிணிக்கு மிகவும் அவசியம். கர்ப்பிணிகளின் உடலின் மேல் சூரிய வெளிச்சம் நன்றாகப் படவேண்டும்

தினம் ஒரு முறையோ அல்லது இருமுறையோ உடலைத் தேய்த்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இருட்டு அறையில் காலங்கழிப்பதும், உடம்பில் அழுக்குப் படிய விடுவதும் கூடாது. எண்ணெய் தேய்த்துப் பழக்கமுள்ளவர்கள், வாரமொரு முறை அல்லது இரு முறை செய்து வரவேண்டும். தலைமயிரை எண்ணெய் தடவி வாரிப் பின்னவோ, முடியவோ வேண்டும். புருவம் இவைகளை போல மை போன்றவையும், மனதிற்கு இனியவையுமான பொருள்களை தெரிந்தால் உபயோகிக்க வேண்டும்.

(5) மலம் கழித்தல்:- தினந்தோறும் மலம் கழிக்க வேண்டும். கர்ப்ப காலத்தில் மலச்சிக்கல் மிகவும் கெடுதல், காய் கறி, கீரை உணவில் சேர்த்தால் மலச்சிக்கல் ஏற்படாது, வாழைப்பழம் போன்ற பழங்கள் மலங்கழிவதற்கு உதவியாகும். மலச்சிக்கலை நிவர்த்தி செய்ய, ஆமணக்கெண்ணெய் கடுக்காய் கஷாயம் போன்ற பேதி மருந்துகளைப் படுக்கப் போகும் முன் உபயோகிக்கலாம்.

உணவுக்குத் தண்ணீர் வேண்டிய அளவு குடிக்க வேண்டும். தாயின் உடலில் உண்டாகும் அசுத்தங்களோடு சிசுவின் உடலில் உண்டாகும் கழிவுகளும், தாயின் ரத்தத்தில் சேருகிறபடியால் அவற்றைக் கழிப்பதற்கு ரத்தத்தில் தண்ணீர் அதிகம் தேவையாகும். ஆகையால் எவ்வளவு தண்ணீர் உட்கொள்ள முடியுமோ அவ்வளவு குடிக்க வேண்டும். அபின் கஞ்சா, புகையிலை இவைகளை உபயோகப் படுத்தக் கூடாது.

(6) சிறுநீர்:- கர்ப்பப்பை வளர வளர சிறுநீர்ப் பையின் மீது அதிகமாக் கெடுவதற்கு இடம் கொடாது. ஆகையால் அடிக்கடி சிறுநீர் கழித்து விட வேண்டும். ~~[illegible]~~ மலமோ நீரோ கழிக்க அவசியம் ஏற்படும் போது அதை அடக்காமல் உடனே கழித்து விட வேண்டும். இதற்கான சௌகரியங்களைக் கர்ப்பிணிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டும். இருக்கும் நீர் சேர்ந்த அவையவங்களை நன்கு அலசிக் கொண்டு இருப்பதில் சேர்ந்திருக்கும் அழுக்கு முதலிய கழிய வேண்டிய பொருள்களைக் கவனமாக வெளியேற்றி விட ~~[illegible]~~ விடும். எந்தக் காரணத்தினாலாவது நீர் கழிக்க வேண்டிய நீர் குறையுமாகில் உடனே வைத்தியரைக் கொண்டு நீரைப் பரிசோதித்துக் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(7) மார்பு:- தோன்றப் போகும் சிசுவுக்கு உணவூட்டும் முலைக்காம்புகளைக் கவனிக்க வேண்டியதும் அவசியம். கர்ப்பிணிகள் தினம் இருமுறை சுத்தமான துணியை வெந்நீரில் நனைத்து முலைக்காம்புகளைத் தேய்த்து துடைத்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்கு முதல் கர்ப்பத்தில் முலைக்காம்புகள் நன்றாகத் திரண்டு முனையுடன் இரா. பிறக்கும் சிசுவாய் வைத்துப் பால் குடிக்க வேண்டுமானால் சிறந்த உறுதியாக முலைக்காம்பு இருக்க வேண்டும். பால் துவாரம் அடைபடாமல் சுத்தமாக இருக்க வேண்டும். சிசுவுக்கு ஊக்கப் பலம் கிடையாது. அதிக நேரம் பால் குடிக்காது. தாயை விட்டுக் கஷ்டப் படும். முலைக்காம்பைக் கர்ப்பகாலம் முதல் நன்கு இழுத்து உறுதியாகும்படி செய்து வர வேண்டும். மார்புக்கு எண்ணெய்த் தினந்தோறும் ஸ்நானம் செய்வதற்கு முன்பாகத் தடவித் தேய்ப்பது நல்லது.

(8) பிரயாணம்:- கர்ப்பிணிகளுக்கு வண்டிப் பிரயாணம் கூடாது. வில்வண்டிகளிலும் பிரயாணம் செய்வது உசிதம் அல்ல. கர்ப்பமாகி முதல் நான்கு மாதங்களில் அதிக அதிர்ச்சியால் கர்ப்பச் சிதைவு ஏற்படலாம். அதிலும் முன்னால் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டிருப்பவர்கள் பிரயாணம் செய்வது கூடவே கூடாது. பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால் 5, 6, 7வது மாதங்களில் தான் செய்ய வேண்டும். கடைசி இரண்டு மாதங்களில் பிரயாணமே கூடாது. அவசியம் பிரயாணம் செய்யும் பொழுது உடம்பு சௌகரியங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவப் படலம். கெர்ப்பம் - மேதுபிறப்புப் படலம்

1 உத்தாமணிச்சாறு = இருதுவான பிறகு கண்ணில் கட்டி மத்தித்து மேகவாயு - பிரசவம் - வீக்கம் இவைகளுக்கு மேலே பத்துப்போட இளம்பெண் பிள்ளைத்தில் விக்கம் நீங்குவதுடன் பிறவளையும் ஒழுங்குபடுத்தும்

(9) பொழுதுபோக்கு:— கர்ப்பிணிகள் காரியம் சோர்வோடு இருந்து இவைகள் முன்னேற்றத்தில் ஈடுபட வேண்டும். இப்பருவம் அதிகம் இல்லாதவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்வது நல்லது. இரவில் கண்விழித்து அலைவதும் விழிப்பதும் கூடாது. பிரசவம் சம்பந்தமான, நாடகம், சினிமா, போன்ற கூட்டம் உள்ள இடங்களுக்குப் போகக் கூடாது. அதனால் [illegible] உண்டாகும். கெட்ட வாயுவை உட்கொண்டால் அது கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்குக் கெடுதல் விளைவிக்கும். [illegible] இடங்களில் நெருக்கடிகள் ஏற்படலாம். இதுமட்டுமின்றி, கர்ப்பிணி அதிக எடை தூக்கவும் பளு தூக்கவும் கூடாது.

(10) மனநிலை:— கர்ப்பிணிகள் மனமகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். கோபம், துக்கம் அதிர்ச்சி, வெறுப்பு இவை ஏற்படும் இடம் நாடக்கூடாது. மனத்திற்கு இனிமையான கதைகள் புராணம், இதிகாசம் இவற்றைப் படிப்பதும் கேட்பதும் நல்லது. பயங்கரமான கதைகள், சம்பவங்கள் மேல் மனதைப் பற்றிய விஷயங்களை படிப்பதும் [illegible] பார்ப்பதும் அவ்விதம் பயமுறுத்தும் எந்த விஷயமும் கர்ப்பிணிகளுக்குக் கூடாது. வேறு பெண்கள் தங்களுடைய கர்ப்ப காலத்தில் பட்ட கஷ்டங்களின் கதைகளை அவர்கள் முன்னிலையில் சொல்லக் கூடாது. இவ்விதம் கர்ப்பிணிகளிடம் அன்பாகவும் கவனமாகவும் நடந்து கொள்ள வேண்டும். சுற்றமும் உறவினர்களும் துக்கங்களையும் கர்ப்பிணிக்குச் சொல்லி மனத்திற்குக் கலக்கம் உண்டாக்கக் கூடாது. மகளிர் கெட்ட இடங்களில் போகக் கூடாது. விசித்திரமான, அச்சமான இவைகள் காதில் விழக் கூடாது. ஆரோக்கிய எண்ணங்களைக் கொண்ட நூல்கள் படிக்கலாம். பொதுவாக, கர்ப்பிணிக்கு உண்டாகும் எண்ணங்களைப் பற்றிய புத்தகங்களையே தனியாக படிக்கக் கூடாது. ஆகவே இதைக் காலங்களில் அவர்கள் நல்ல அழகான நூல்களை அதில் உள்ள படங்களையும் படிக்க வேண்டும்.

(11) புணர்ச்சி:— கர்ப்பம் தரித்த பிறகு புருஷனுடன் சேர்க்கக் கூடாது. சேர்க்கைக்கு விதிவிலக்கு இல்லை. கர்ப்பிணிக்கு நல்லதல்ல. கர்ப்பத்துக்கும் பங்கம் ஏற்படும். புணர்ச்சியினால் கர்ப்பமானவுடன் ஸ்திரீகளுக்கு நின்று விடுகிறது. கட்டாயத்தினாலோ அறியாமையாலோ புணர்ந்தால் அதிக இரத்தப் போக்கும் ஏற்படும். பிறப்பு உறுப்புகள் சுத்தமாக நோயுறுதல் அல்லது இயற்கைப் பேறு காப்புகளைப் பற்றி கவலையாக முன்பு சொன்ன பலவிதத்திலும் சுற்றுப் பாது காப்புகளும் புணர்ச்சியால் கெட்டு விடும்.

(12) அபாயக் குறிகள்:— கர்ப்பிணியைப் பாதுகாக்கும் காலத்து அபாயக் குறிகளை வெளிப்படுத்த வேண்டியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவைகளைக் கண்டவுடன் காலதாமதம் இன்றித் தகுந்த சிகிச்சை உடனே செய்ய வேண்டும். அவைகளாவன.

(1) திரவம் தொடர்ந்து வெளிப்படுதல் நீர்க் கோர்வை (2) கடுமையான தலைவலி (3) பார்வைக் கோளாறு அல்லது கண்களில் பளீர் பளீர் என வெளிச்சம் காண்பது (4) முகமும் கையும் வீக்கம் (5) யோனியிலிருந்து ரத்தம் வெளிப்படுதல்.

181. பொது விஷயங்கள்

உடம்பில் வைத்தியர்களைக் கொண்டு கர்ப்பிணியுடைய பொது உடல் நிலையைப் பரிசோதனை செய்வது நல்லது. கர்ப்பிணியின் உயரத்திற்குத் தகுந்த எடை, சோகை இருதயம் இல்லாமல் பார்த்தல், ஆரோக்கியத்தில் இரத்த அழுத்தம், நாடிவேகம், சிறுநீர் இவைகளின் நிலைமை, மலச்சிக்கல், வாந்தி, பல் முதலிய நோய்கள் இல்லாமல் இருப்பது இவைகளைக் கவனிக்க வேண்டும்.

1 அழுக்கில் இலைகள் அல்லது அரைத்தது கொடுக்க விடாதசுரம் போம்
2. அருகீரை = சன்னிபாதம் — கருக்கல் — கபரோகம் — சுரம் — வாதநோய் போம்
3 இஞ்சியால் = சந்நிபாதசுரம் போம்.

4 பற்கள் மேல் பாசி படர்ந்திருத்தல், சொத்தைப் பல், பல் ஈறுகளில் சீழ் வடிதல், வாயின் துர்நாற்றம் இவைகள் கர்ப்பிணிகளுக்கு இருந்தால் கவனிக்க வேண்டும்.

விசேஷமாக க்ஷயரோகக் குறிகள் ஏதாவது ஒன்றும் வெளியில் தோன்றாமல் மறைந்திருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நோய் அதிகரித்து உயிருக்கு ஆபத்தாக முடியும். கர்ப்பிணிகளுக்குச் சிறுநீர்ப் பாதையில் நோய்கள், மூலக் கட்டிகள் இவைகள் இருந்தால் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

வெள்ளை, வெட்டை, மேகம் முதலிய நோய்கள் முன்பு இருந்திருந்தால் அவைகளுக்கான சிகிச்சைகளைச் செய்ய வேண்டும். முதல் கர்ப்பிணியாக இல்லாவிட்டால் முந்திய கர்ப்பங்கள், பிரசவங்கள், இவைகளில் ஏற்பட்ட சம்பவங்களை வைத்தியர் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

182. கர்ப்பத்தின் அறிகுறிகளும் தீர்மானமும்.

சாதாரணமாகக் கர்ப்பம் உண்டா இல்லையா என்று எளிதிலேயே தீர்மானித்துக் கொள்ளலாம். சில சமயங்களில் மயக்கமும் ஆவது உண்டு. கர்ப்பக் குறிகளில் இரண்டு விதம் உண்டு. ஒன்று கர்ப்பிணி ஸ்திரீ தானே அறியக் கூடிய அறிகுறிகள். இரண்டாவது, வைத்தியர் கண்டு பிடிக்கக் கூடியவை.

(1) ஒரு முறை கூடினவுடன் கர்ப்பம் தரித்திருந்தால், கர்ப்பிணிக்கு வயிறு கனமாகத் தெரியும். இந்தக் கன உணர்ச்சி கர்ப்பிணிக்கே அன்றி மற்றவர்களுக்குத் தெரியக் கூடியதன்று.

(2) மாதவிடாய் நின்று விடுவது:- இளவயதாக இருந்து ஆணும் பெண்ணும் ஆரோக்கியமாக இருந்து, சேர்ந்து வாழ்க்கையில் ஈடுபட்டு, சாதாரணமாக ஒழுங்காக வந்து கொண்டிருந்த மாதவிடாய் நின்று விட்டால் கர்ப்பமாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். சில சமயங்களில் கர்ப்பமான பிறகும் கூடச் சில மாதங்களுக்கு மாதா மாதம் சிறிது தீட்டு காணப்படலாம். இன்னும் சிலருக்கு பூர்ணமாக மறையாமல் இருக்கக் கூடும். சில சமயங்களில் உள்ள அவயவங்களின் நோயின் காரணமாகவும் மாதவிடாய் நின்று விடலாம். ஆகையால் இந்த ஒரு அறிகுறியை மட்டும் வைத்துக் கர்ப்பம் உண்டு, இல்லை என்று நிச்சயம் செய்ய முடியாது.

(3) உமிழ்நீர்ப் பெருக்கு:— முதல் நாலு மாதங்கள் வரையில் நீர் அதிகமாக ஊறும். அதை துப்பத் துப்ப அதிகமாக ஊறிக் கொண்டு போகும். ஆனால் சாதாரணமாகக் கூடப் பித்தம் அதிகமானாலும் அஜீரணம் இருந்தாலும் உமிழ்நீர் அதிகமாகக் கூடும்.

(4) மசக்கை (மயக்கம்) காலை வேளைகளில் வயிற்றுப் புரட்டலும், வாந்தி எடுக்கும் எண்ணமும், சில சமயங்களில் வாந்தியும் ஏற்படும். சாதாரணமாக, கர்ப்பம் இரண்டு மாதம் ஆனவுடன் மசக்கை ஆரம்பமாகும், சில சமயங்களில் அதற்கு முன்பே கூட இருக்க [illegible] கிடைக்கும். மேற்கண்ட குறிகள் அநேகமாய் ஒரே ஸ்திரீக்கு [illegible] அவைகளில் ஏதேனும் ஒன்று மட்டும் இருந்தால் கர்ப்பம் நிச்சயிக்கப் போதாது பல குறிகள் தோன்றினால் தான் கர்ப்பமென்று யூகிக்கலாம்.

32
151

(5) சிசு புரளல்:— வயிற்றில் சிசு புரளுவதும், உதைப்பதும் நாலாம் மாதங்களுக்கு மேல் தாயாரும் உணரப்படும். கர்ப்பிணியின் அடிவயிற்றில் கையை வைத்தால் கைக்கும் தெரியக் கூடும். முதல் கர்ப்பம் தரிப்பவர்களுக்கு இந்தக் குறி சுத்த, ஆறு மாதம் வரையில் தெரியாமல் இருக்கலாம். பல கர்ப்பமானவர்கள் இதை நாலில் நாலாம் மாதத்திலேயே தெரிந்து கொள்வார்கள். சிசு கர்ப்பத்தில் நீந்துவது போலவும், புரள்வது போலவும் உணர்ச்சி இருக்கும். பனிக்குடத்து நீரில் மூழ்கி கிடக்கும் சிசு கர்ப்பத்தில் இருப்பதால் அம்மாதிரி உணர்ச்சி ஏற்படுகிறது.

பிறரால் கண்டு பிடிக்கக் கூடிய குறிகள்:— 183

(1) மார்பிலும் (2) வயிற்றிலும் உண்டாகும் மாறுபாடுகள் (3) கருப்பை வளர்ந்து வருவது. (4) சிசுவின் இருதயத் துடிப்பு (5) புரளுதல் (6) கருப்பையின் தசைச் சுருக்கம்

மார்பு குறிகள்:— இரண்டாம் மாதம் முதல் முலை பெரிதாகும். இறுகிக் கெட்டியாகும். காம்புகள் கனத்து மேலெழும்பும். காம்புகளைச் சுற்றிலும், கரு நிறமுள்ள வட்டம் உண்டாகும். கர்ப்பம் வளர வளர இந்தக் கரு நிறத்தின் மேல் பரு முளை போன்று சுற்றி வெளுப்பாகவுள்ள வேர்க்குரு போன்ற புள்ளிகள் காணப்படும். முலைக் காம்புகளைச் சுற்றி மேல் பகுதியில், கெட்டியான வெள்ளை நிறமுள்ள நீர் (கொலஸ்ட்ரம்) துளிகள் வெளிவரும். ஐந்து (5) மாதத்திற்குப் பிறகு முலைக் காம்பைச் சுற்றியுள்ள கரு நிறம் மீண்டும் அகலமாகப் பரவும். ஆனால் முதலில் ஏற்பட்டிருக்கும் கரு நிறத்தைக் காட்டிலும் சற்று வெளுத்து இருக்கும்.

வயிற்றுக் குறிகள்:— கருப்பை இடை எலும்புக் குழியை விட்டு வெளியேறி வருவது மூன்று மாதத்திற்கு மேல் ஆகும். ஆகையால் அது வரையில் வயிறு பெரிதாகக் காணப்பட மாட்டாது.

நான்காம் மாதம்:— முன் புறம் இடை எலும்புக்கு மேல் அடிவயிற்றில் கருப்பை தொட்டுப் புலம் தட்டுப்படும்.

ஐந்தாம் மாதம்:— கருப்பை கொப்பூழுக்கு ஓர் அங்குலம் கீழ் வரையில் எழும்பியிருக்கும்.

ஆறாம் மாதம்:— கொப்பூழுக்குச் சரியாக இருக்கும்.

ஏழாம் மாதம்:— கொப்பூழுக்கு மேல் மூன்று விரற்கடை உயர்ந்திருக்கும்.

எட்டாம் மாதம்:— நெஞ்சுக் குழிக்கும் கொப்பூழுக்கும் மத்தியில் இருக்கும்.

ஒன்பதாம் மாதம்:— விலாப் புறம் எலும்புக் கூட்டினை ஒட்டி உயர்ந்திருக்கும்.

பத்தாம் மாதம்:— கருப்பை கீழே இறங்கி எட்டாம் மாதத்திய அளவிற்கு வந்துவிடும்.

ஐந்தாறு மாதங்களில் வயிற்றின் மேல் கையை வைத்துப் பார்த்தால் சிசுவின் உதைப்புகள் தென்படும். கையால் அடிவயிற்றைத் தடவினால் கருப்பைத் தசை இறுகிக் கொள்வது தென்படும்.

சிசுவின் இருதயம் துடிப்பதை ஐந்தாம் மாதக் கடைசியில் கேட்கலாம். காதைக் கர்ப்பிணியின் வயிற்றில் வைத்தாவது, அல்லது ஸ்டெதஸ்கோப்பைக் கொண்டாகிலும் அறியலாம். தாயின் இருதயத் துடிப்பைக் காட்டிலும் இருமடங்கு வேகமாக அடிக்கும்.

184 மாதவாரியாக வரும் அறிகுறிகளின் கணக்கு 184

மசக்கை முதல் மாதத்திலேயே ஏற்படக் கூடும். ஆறு மாதம் வரையில் இருக்கும். இதையும் ஓர் அறிகுறியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(1) **முதல் மாதம்:—** ருது காலம் நின்று விடுவதும், மசக்கை உண்டாவதும்

(2) **இரண்டாவது மாதம்:—** முலைகள் பருத்து முலைக் காம்புகள் கறுப்பாகும்

(3) மூன்றாவது மாதம்:- முலைக்காம்புகளில் ஊனீர் காண்பது.
(4) நான்காவது மாதம்:- கறுத்திருக்கும் காம்புகளைச் சுற்றியும் சிறு வேர்க்குரு போன்ற வெண் புள்ளிகள் தோன்றுவது.
(5) ஐந்தாம் மாதம்:- கருப்பையைக் கையால் தொட்டுப் பார்க்க முடியும்
(6) ஆறாம் மாதம்:- மார்பு முலைகளில் அதிகக் கறுப்பு நிறம் உண்டாகும்
(7) ஏழாம் மாதம்:- சிசு புரளுவது.
(8) எட்டாம் மாதம்:- சிசுவின் இருதயத் துடிப்பு
(9) ஒன்பதாம் மாதம்:- கருப்பையினுள் சிசு புரளுவதைக் கண்களால் பார்க்கக் கூடும்.

185. நிர்ணயப் பரிசோதனை

கர்ப்பக் குறிகள் தோன்றுவது போல் காணப்பட்டு ஏமாற்றம் தரத்தக்க சில நோய்கள் உண்டு.

அவையாவன:

(1) கருப்பைச் சதையினின்று வளரும் கட்டிகள்
(2) பீஜ மூலச் சுரப்பிகளில் உண்டாகும் கட்டிகள்.
(3) மூத்திரப் பையினின்று நீர் சரியாகக் கழியாமல் நின்று போய் அடி வயிற்றில் கருப்பையைப் போலப் பருத்துக் காணுதல்.
(4) இத்தகைய நிலைமைகளில் சில சமயம் கர்ப்பம் தரித்த மாதிரி தானும் எண்ணி, மற்றவர்களுக்கும் ஏமாற்றம் கொடுக்கக் கூடிய நிலை.

சதைக் கட்டி:- இந்தக் கட்டி உண்டாகிக் கருத் தரிக்காமல் கருத் தரித்த தோற்றம் காட்டுவதில், இதைக் கருவு தரிக்காமல் கருப்பதினின்று தெரிந்துக் கொள்ளலாம். தவிர, சதைக் கட்டியின் காரணமாக ரத்தப் பெருக்கு அதிகமாகும். சதைக் கட்டி முன்னும் முரடுமாகவும், அதன் வளர்ச்சி ஒரு கணக்கைப் பொருத்தும் இரா. கர்ப்பமாக இருக்கும் கருப்பை உறுதியாகவும் மாதக் கணக்கைப் போல உயர்ந்தும் வளர்ந்தும் வரும். கர்ப்பத்தின் நிச்சயமான குறிகளான, கருப்பை அசைவது, குழந்தை புரளுவது, சிசுவின் இருதயத் துடிப்பு என்பவை இரா.

பீஜ மூலச் சுரப்பியின் கட்டி:- இந்த நோய் கண்டு கர்ப்பிணிகளும் தோன்றுகின்றன. மாதவிடாய் வழக்கம் போல நடந்து கொண்டிருக்கும். பீஜ மூலச் சுரப்பியின் கட்டியின் காரணமாக வயிறு பருத்தால், இதில் ஒரு புறமாகத் தான் பருக்கும்.

நீர்ப்பை அடைப்பு:- இந்தச் சந்தேகத்தைச் சீக்கிரத்தில் தீர்த்துக் கொள்ளலாம். வைத்தியரைக் கொண்டு குழாய் வைத்து நீரை வடித்து விட்டால் வயிற்றின் பெருக்கம் குறைந்து விடும்.

சித்தக் கோளாறு: குழந்தை பெறுதல், அந்தக் கவலையுடன் இந்த நிலையும் சேர்ந்து கர்ப்பம் தரித்தது போல் ஒரு பொய் நிலை ஏற்படக் கூடும். ஆனால் இது சில காலத்திற்கு மேல் நீடித்திருக்காது. கர்ப்பத்தின் கணக்குப்படி சின்னங்கள் தோன்றாமல் போகவே, இந்தப் பொய் நிலை கலைந்து போகும்.

186. சிசுவின் நிலை

கர்ப்பிணிகளுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் கர்ப்பத்தில் இருக்கும் சிசு சரியாக வளர்ந்து கொண்டு வருகிறது என்கிற கவலை இருப்பது இயற்கை. வயிற்றில் சிசு புரண்டு கொண்டு, கருப்பை வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்குச் சந்தேகம் யாதொன்றும்

~~கலிக்கம். நாசிகாதூளம் - இவைகளை.~~

~~கண்ணிற்குளிக்கம் = குறிப்பு:- 37 பக்கம் No. 4 பார்க்கவும்.~~

யாதொன்றுமில்லை. இது எக்காரணத்தினாலாவது வயிற்றில் இறந்து போனால், அது வயிற்றில் கரைந்து அதனால் பிரசவம் நேரிடும். இறந்த சிசு உடனே வெளிவராமல் தங்கிவிடுவது அழுகிய கருச்சிதைவு. அதற்குக் குறி, யோனியிலிருந்து துர்நாற்றமுள்ள நீர் கசியும். குறிப்பிட்ட மாதத்திற்குத் தக்கபடி கருப்பையின் உயரத்தைப் பார்த்தவர்கள் அளந்து குறித்து வைத்து, பிறகு பரிசோதித்து அல்லது முப்பது நாளில் கருத்தப்படிக் கருப்பை உயராமல் நின்று விட்டதென்று நிச்சயமாய்க் கண்டாலும், கொஞ்ச நாளைக்குச் சிசுவின் துடிப்பு தெரிந்து, பிறகு தென்படாமல் நின்று விட்டாலும் உடனே வைத்தியர்களைக் கொண்டு சிசுவின் உயிர்க்கு இறந்து தப்பட்டிருக்கிறதா என்பதை முடிவு செய்வது நலம்.

கர்ப்ப காலத்தில் நேரும் சிறுதான சம்பவங்கள்.

சில சமயங்களில் கர்ப்பிணிகளுக்கு, முகம், கை, கால்கள், வீக்கம், காண்பது உண்டு. கால்களில் இருக்கும் ரத்த நாளங்கள் (வடிநீர் நாளம்) அகன்று, நோய்கள் உண்டு, முடிவில் கொண்டுவருவது போலக் காணப்படும்.

வீக்கம் கண்டால்:- உடனே வைத்தியரைக் கொண்டு மூத்திரத்தைப் பரிசோதனை செய்விக்க வேண்டும். சுத்தமான கண்ணாடிக் குப்பியில் மூத்திரத்தைச் சேகரித்து காய்ச்சினால் அந்த பாத்திரத்திலுள்ள நீர் திடமாய் மாறுவதைக் கவனிக்க வேண்டும். பால் போல் வெளுப்பாக மாறினால், அது நீரில் புரதம் இருக்கிறது என்பதற்குக் குறி. இதற்கு வைத்தியர் சொல்லுகிறபடி முறைப்படி கர்ப்பிணிகள் உடலைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கருப்பை வளர்வதனால்:- இடையிலுள்ள வடிநீர்களின் (நாளம்) அழுத்தப்படும் அதனால் ரத்தம் மேலே செல்லத் தடைப்பட்டுக் கால் வீக்கம் தோன்றலாம். இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனாலும் சில நோய் உள்ளவர்களுக்கு உபத்திரவம் அதிகமாகலாம். ஏழாவது முதல் மூன்று மாதங்களுக்கு அடிக்கடி இருக்கும், கருப்பை இடை எலும்புக் குழிக்குள் இருக்கும் மூன்று மாதங்களில் படிக்கப் படிக்க மூத்திரப் பையை அழுத்துவதினால் இந்தத் தொந்தரவு ஏற்படுகிறது. கருப்பை இடை எலும்பைத் தாண்டி மேல் வளரும் போது இது நின்று விடும்.

சிலருக்குக் கால் வீக்கம் கால் நெடுநேரம் அசைவில்லாமல் தொங்கவிட்டு அதிகரிக்கும். இப்படி இருப்பவர்கள் சில காலங்களுக்குப் படுக்கையில் இருக்க வேண்டும். கர்ப்பிணிகளுக்கு முக்கியமாக மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கவலைக்கு இடம் கொடுத்தால் ரத்த அழுத்தம் அதிகரித்துத் தொந்தரவுகள் ஏற்படும். கவலைக்குக் காரணம் ஏற்பட்டாலும் அதற்குச் சமாதானங்களைத் தேடிக் கொள்ள வேண்டும். ~~கவலை~~

மலச்சிக்கல் கர்ப்பிணிகளுக்குக் கூடாது. தினம் விடியற்காலை மலம் கழிக்க வேண்டும். இதற்குக் கடுக்காய்க் கஷாயம், நிலாவாரைக் கஷாயம் இவைகளை உண்டு மலச்சிக்கலை நீக்கிக் கொள்ளலாம். ஆமணக்கெண்ணெய் உபயோகிக்கலாம். இது மிக உத்தமமானதும் நல்லது. இதை உபயோகிப்பதில் பயப்பட வேண்டியதில்லை.

188 கர்ப்பிணி மயக்கம்

கர்ப்பிணிகளின் உடை: கர்ப்பம் தரித்த தாய் இலகுவான உடைகளைப் போடவேண்டும். வயிற்றிலுள்ள சிசுவின் சுகமான வளர்ச்சிக்கும் தாயின் நலம் கெடாமல் இருக்க வேண்டும். ஆகையால் தாயின் ஆகாரம், தூக்கம், தேக விளக்கம், உடை, இவை அதிக வேலை செய்ய வேண்டியவை ஆகின்றன. அதனால் கர்ப்பிணிகளின் தேகத்திலிருந்து அவ்வப்போது வெளிப்படுத்த வேண்டிய அசுத்தங்கள் சரியாகக் கழிக்கப் படாமல் தங்கிப் போய்ச் சில தொந்தரவுகள் உண்டாகலாம்

முக்கியமாக, கொட்டல், வாந்தி, மயக்கம், ஆகிய வேதனைகள் தோன்றும். இந்த உபத்திரவங்களுக்கு இரு விதமான சிகிச்சை செய்ய வேண்டும். ஒன்று, உடலில் சேரான அசுத்தங்களை நீக்கல். இரண்டாவது, இயற்கையாகத் தீங்கு உதிப்புகளுக்குப் பலம் தருவது. கர்ப்பிணிகளுக்குச் சுத்தமான காற்றோட்டம் அரையீரலின் வேலைக்கு உதவியாகும். முக்கியமாக இவர் படுக்கும் இடம் காற்றோட்டமாக இருக்க வேண்டும். அரையீரல் சரியாக வேலை செய்தால் உடம்பின் தங்கிய அசுத்தம் தானாக நீங்கி கொட்டல் முதலியவை குறையும்.

தோலின் வேலை வெளிப்படும் வேர்வை உடலில் தோன்றும் அசுத்தங்கள் நீக்குவதற்கு முக்கியமான வழிகளாகும். ஆகையால் இதை கவனிக்க வேண்டும். தினம் குளிப்பதோடு கூட, கொஞ்ச நாளும் வேர்வை [வரும்படி கூடியது நல்லது. அடிக்கடி குளிர் வேர்வை] மயிர்க் கண்களைத் திறக்கலாம். மலச்சிக்கல் இல்லாமல் தினம் தொந்தம் படியே பார்த்துக் கொள்ள வேண்டும். நீர் நன்றாக இறங்கி வருதற்குச் சுத்தமான தண்ணீர் ஏராளமாகக் குடிப்பதோடு, பார்லி அரிசி (வால் கோதுமை) ஒரு கைப்பிடி எடுத்து அரைப்படி தண்ணீரில் ஒரு மணி நேரம் கொதிக்க வைத்து அதில் கொஞ்சம் உப்பும் எலுமிச்சம் பழ ரசமும் கலந்து குடித்தால் மூத்திரம் நன்றாக வேலை செய்யும். ஆகாரத்தைச் சுலபச் ஜீரணமான அளவு உண்ண வேண்டும். உணவு அவசரமாக அடங்கக் கூடிய தாயும், புத்துப்பிள்ளைத்தாயும், பழவகைகள், கீரை, தேங்காய்ப் பால், மோர் முதலியவை அடங்கியதாயும் இருக்க வேண்டும். மயக்கம் காணுமென்று தோன்றினால் உடனே ஆகாரத்தை மாற்றிப் பால், கஞ்சி, பழரசம் இவை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்.

189 **அபாய மசக்கை.**

மசக்கை கர்ப்பத்தின் சாதாரண அறிகுறி ஆயினும், சில இடங்களில் மசக்கை அதிகரித்துக் கால வேளைகளில் மட்டும் இல்லாமல் வாந்தி நாள் முழுவதும் உபத்திரவிக்க ஆரம்பித்து விடும். தண்ணீர் கூடத் தங்காமல் வாந்தி எடுக்கும். இந்த நிலையில் சட்டினி தாகம் தோன்றுவதும் உடம்பு இளைத்துப் போய், நாக்கு வறண்டு, உடலின் சூடு அதிகரித்து விடும்.

சிகிச்சை: கர்ப்பிணி படுக்கையில் இருக்க வேண்டும். அதிக வெளிச்சமும், சத்தமும் இல்லாத அறையில் இருக்க வேண்டும். காலையில் வெறும் வயிற்றில் காப்படி தண்ணீரில் கொஞ்சம் அரை² ப்புப் கலந்து குடிக்க வேண்டும். அநேகமாக இதுவும் வாந்தி எடுக்கும். இதுதான் பெருகியும் வாந்தி கழிவுண்டாகும். கர்ப்பிணிக்கும் சுற்று ஆறுதலாக இருக்கும். உப்புப் பிசுபிசுப்பு ஜீரணிக்கும் படுக்கையில் படுத்துக் கொண்டே மெதுவாக மென்று தின்று விட்டு ஒருவாய் சுடுதண்ணீர் குடித்து விட்டுப் படுக்கையில் இருந்து விட்டால் தேவைப்படும் பசியும் வாந்தியும் குறையலாம். தேவைப்பட்டால் கொட்டில் அடங்கும். மருந்துகள் அதிக நேரம் தருவதில்லை. இவைகளுக்குக் கேட்காமல் போனால் அலட்சியம் செய்யாமல் வைத்தியர் உதவியை நாட வேண்டும்.

189 **கர்ப்பிணி இசிவு**

இந்த இசிவு கர்ப்பிணிகளுக்கு வந்தால் ஏழாவது மாதம் முதல் பத்தாவது மாதத்திற்குள் வரும் பாதகமான பிறகும் சில சமயங்களில் வரலாம். இந்த இசிவு வருவதற்கு முன்பாகச் சில குறிகள் காணப்படும்:

(1) கை, கால், முகம் வீக்கம், (2) மூத்திரக் குறைவும் அதில் மஞ்சள் நிறம் அதிகமாயிருப்பதும் (3) பகலும் இரவும் விடாமல் மயக்கம். (4) கண்பார்வைக் குறைவு அல்லது பளிச் பளிச் என்று காணப்படும் வெளிச்சம். (5) மேல் வயிற்றில் வலி (6) காரணம் ஒன்றும் இல்லாமல் மயக்கம் (7) தூக்கமின்மை (8) களைப்பு (9) கடுமையான் பொதுப் பேன்பேச்சு ~~10~~ (10) கொஞ்சம் காய்ச்சல்

எல்லாக் குறிகளும் அல்லது சில குறிகள் மாத்திரமாவது இசிவு வருவதற்கு சில நாட்களுக்கு முன்பாகவே தோன்றும். அவை தோன்றும் பொழுது சரியாகக் கவனித்து வைத்தியம் செய்தால் இசிவு வராமல் தடுத்து விடக் கூடும். இசிவு வந்த பிறகு வைத்தியம் செய்வது கடினம். மேற்கண்ட குறிகளில் சில காணப்படும் பொழுது மூத்திரத்தைப் பரிசோதனை செய்தால் அதில் அதிகமாகப் புரதம்

176
163

அதிகமாகப் பிறகும் கண்டால், அது அபாயக் குறி ஆகும். இந்த இசிவு அனேகமாக முதல் கர்ப்பிணிகளுக்குத் தான் அதிகமாக வருவதாக இருந்தாலும் மற்றவர்களுக்கு வர முடியாது என்பது இல்லை. கை, கால், முகம் இவை வீங்கி இருந்தால் அது கவனிக்க வேண்டிய விஷயமல்ல என்று எண்ணுவது தவறு. உடனே டாக்டரைச் சோதனை செய்யச் சொல்ல வேண்டும்.

சிகிச்சை:- இந்த இசிவுக்கு மூலகாரணம் கர்ப்பிணியின் ரத்தத்திலிருந்து அசுத்தப் பொருள்கள் சரியானபடி பிரிந்து வெளியாகாமல் இருப்பது. ஆகையால் மேற் சொன்னவைகளைக் கண்ட உடனே, இசிவு வருவதற்கு முன் ஆரம்பமே சொல்லியிருப்பது போல ரத்தத்தில் உள்ள நச்சுக்களை நீக்க வேண்டும். பேதிக்குக் கொடுத்துக் குடலையும் கழுவ வேண்டும். தாராளமாக தண்ணீர் [illegible] கொடுத்து, நீர் இறங்க வால் கொதுமை (பார்லி அரிசி) தண்ணீர், இளநீர் சோடாத் தண்ணீர் முதலியவற்றைக் கொடுத்து, நீர் நிறையப் பிரியும்படி செய்ய வேண்டும்.

உணவுக்கும் பழரசமும் காய்கறிகள் வேக வைத்த ரசமும். இவைதவிர வேறு ஒன்றும் கொடுக்கக் கூடாது. ஒரு வாரம் வரையில் இந்த ஆகாரம் கொடுக்க வேண்டும். நோய் குறைந்த பின்பு உணவை திடீரென்று அதிகப் படுத்தக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதிகப் படுத்த வேண்டும். அப்பொழுது கூடப் பழ ரசமும் காய்கறிகளும் ஆகாரத்தில் முக்கால் பங்கு இருக்க வேண்டும். இசிவு வரும் போல் இருந்தால் டாக்டர் வைத்திய உதவி இருக்கும் இடத்திற்குக் கர்ப்பிணியை தூக்கிப் போக வேண்டும். வண்டியில் ஏற்றிச் செல்வதால் அதிர்ச்சியால் இசிவு வந்துவிடும்.

இசிவு நோய் கண்ட கர்ப்பிணியைப் பற்றி கவனிக்க வேண்டிய விஷயங்கள்

(1) கர்ப்பிணியை வெளிச்சம் அதிகம் இல்லாத அறையில் மிருதுவான படுக்கையில் படுக்க வைக்க வேண்டும். தலையணை படுப்பது நலம். கட்டிலின் மேலாவது, படுக்கையின் மேலாவது படுக்க வைத்தால் இசிவு வரும் காலத்து நோயாளி கீழே விழுந்தாலும் விழுந்து விடக் கூடும்.

(2) மல்லாக்காக இல்லாமல், ஒருக்கு ஒரு பக்கங்களில் திரும்பிப் படுக்க வேண்டும்.

(3) இசிவு வரும் பொழுது நாக்கு பல் வரிசைக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டு காயப் படாமல் இருக்க வேண்டும். இதற்காகப் பல்லுக்கு இடையில் கரண்டிக் காம்பு அல்லது இதிய மரத்துண்டுகள் இவற்றைக் கொடுத்து, நாக்கு புண்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(4) இசிவு நிற்பதற்கும் சமயத்தில் **புரோமைடு** மருந்தும் பேதிப்பும் கொடுக்க வேண்டும்.

பொட்டாசியம் புரோமைட்   30 கிரெயின்

பேதிப்பு   1 அவுன்ஸ்

ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்க வேண்டும். வாய் வழியாகக் கொடுக்க முடியாவிட்டால் டாக்டர் மூலம் பேதியால் [illegible] கொடுக்க வேண்டும்.

5 தலையை மொட்டையடித்து ஐஸ் கட்டி வைக்க வேண்டும்.

6 இசிவு இருக்கும் பொழுது கர்ப்பிணிக்கு நினைவு இருக்காது. அப்பொழுது ஆகாரம் மருந்து ஒன்றும் கொடுக்கக் கூடாது. இசிவு வந்து விட்டு விட்டு வந்தால் உயிருக்கு ஆபத்து இதுவே. இசிவு அடிக்கடி வந்து மயக்கமும் விடாமல் இருந்தால், கர்ப்பத்தை எடுத்துக் கருவை வெளியாக்க வேண்டியும் இருக்கும். வாய் வழியாக மருந்துகள் கொடுக்க முடியாவிட்டால் டாக்டரிடம் இருக்கும் ஊசி மருந்துகளை உபயோகப் படுத்தலாம்.

192. ரத்தப் பெருக்கும் கரு விழுதலும்

கர்ப்பம் தரித்தபின் மாதவிலக்கு நின்று போகும். இதைப் பார்த்து சில மாதங்கள் வரையில் நடக்காது. கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாதங்களுக்குள் ரத்தப் பெருக்கு யோனியின் வழியாக ஏற்படுமானால் அது கவனிக்க வேண்டியது. இது கருச் சிதைவு ஆவதின் அறிகுறியாகும். கரு நாட்படுதல் கர்ப்பச் சிதைவு என்று கர்ப்பத்துக்கு இரண்டு வகையாகக் கூறப்படுகிறது. கர்ப்பச் சிதைவு கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் கருப்பையின் உள்ளே வளர்ந்து

நன்கு வளர்ந்து கெட்டிக்கொள்வதற்கு முன்பு சாதாரணமாக ஏற்படும். ஒரு மூன்று மாதங்களாகிய நாலு, ஐந்து, ஆறு மாதங்களில் கர்ப்பச் சிதைவு அபூர்வம். ஆறாவது மாதத்திற்கும் பிறகு கருச்சிதைவுகள் ஒரு மாதங்களைக் காட்டிலும் அதிகமான போதிலும், மேல் மூன்று மாதத்தளவு ஏற்படுவதில்லை. முதல் மூன்று மாதத்தில் கரு, உடல் விட்டுக் கழிந்து விட்டால் அதற்குக் கர்ப்பச் சிதைவு என்றும், பிறகு ஏற்பட்டால் அதற்குச் சிசுச் சிதைவு என்றும் பெயர்.

கர்ப்பச் சிதைவிற்குக் காரணம்: (1) ராங்கத்தி கேந்தி முதலிய மேக வியாதிகள் (2) தவறுதலோ வேண்டுமென்றோ சிசுச் சிதைவு உண்டாக்கும் மருந்து உட்கொள்ளல் (3) உடலின் மேல் அடிப்பட்டுக் கருப்பைக்குத் தாக்குதல் ஏற்படுதல். (4) மிதமிஞ்சிய இரத்த உறைப்பு (5) எதிர்பாராத சம்பவங்களால் திடீர் ஏற்படுகின்ற அதிர்ச்சிகள் (6) புணர்ச்சி (7) கருப்பை வழியில் இயல்பாக அமைப்பு இருத்தல். (8) கரு இறந்து சிதைந்து வளர்தல். மேற்கண்ட காரணங்களில் கரு உயிரிழந்தால் உடனே இரத்தப் பெருக்கு ஏற்பட்டு இறந்த கரு வெளியில் தள்ளப்படும்.

கர்ப்பிணியின் இரத்தப் பெருக்கில் இரண்டு விதங்கள் உண்டு:—

1 கர்ப்பச் சிதைவு ஏற்படாமல் அடைப்படக் கூடியது 2 தடுக்க முடியாத கர்ப்பச் சிதைவு. இரத்தப் பெருக்கு எதிர்த்துச் சிதைவு ஏற்படாமல் தடுக்கலாம். இதில் வலி குறைவாக இருக்கும். **சிகிச்சை:** (1) உடனே படுக்கையில் ஓய்வாக படுக்க வைக்க வேண்டும். இரத்தப் போக்கு நின்று ஒரு வாரம் வரை படுத்திருக்க வேண்டும். படுக்கையில் இருக்கும் காலத்தில் மனக்கவலை பயம், மலச்சிக்கல் அடையாமல் காப்பாற்ற வேண்டும் 2 குடல் கழுவுதல் உபயோகப் படுத்தி மலச்சிக்கலை நீக்க வேண்டும் 3 உணவு, பால், கஞ்சி, பழவகைகள், பார்லி கஞ்சி 4 நரம்புகளுக்கு ஓய்வு புரோமைட் மருந்து கொடுக்க வேண்டும். முப்பது கிரெய்ன் அளவில் கொடுக்கலாம்.

தவிர்க்க முடியாத சிதைவு:— கர்ப்பிணிகளுக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் வெளிவரும் அசுத்தமான இரத்தத்தையும் அதன் கூட வரும் தசைப் பிண்டங்களையும் கவனிக்க வேண்டும். இதற்காகச் சலவை செய்த வெளுப்பான துண்டுகளை மடித்து யோனித் துவாரத்தில் வைத்துக் கட்ட வேண்டும். நனைய நனைய எடுத்துப் பரிசோதனை செய்து இதர உள்ள துணிகளைக் கொண்டு மாற்ற வேண்டும். அழுக்கடைந்த பழம் புடவைகளையும், சாயப் புடவைகளையும், உபயோகப் படுத்தக் கூடாது.

குறிப்பு: (1) கருத்துண்டுகள் இரத்தத்துடன் கலந்திருந்தால் கர்ப்பத்தைக் காப்பாற்ற முடியாது. (2) காய்ச்சல் இருந்தால் கருப்பையில் நோயணுக்களின் சேர்ந்து ஏற்பட்டிருப்பதற்கு அடையாளம். (3) அதிகமான இரத்தப் பெருக்குடன் மேலே கண்ட நிலைகள் இருக்குமாயின் உடனே வைத்தியர்களைக் கொண்டு கருப்பையுள்ள சிதைந்த பிண்டங்களை அப்புறப் படுத்திச் சுத்தப் படுத்த வேண்டும்.

கருத் துண்டுகள் வெளியில் வராமலும், அழுக்கு மாத்திரம் வெளிப்பட்டுக் கொண்டு, துர்நாற்றம் நாற்றமெடுக்கும் இருக்குமாயின் கரு இறந்து விட்டது என்பது நிச்சயம்.

சாதாரணமான இரத்தப் பெருக்கு:— இரத்தப் பெருக்கின் பொழுது தோன்றுகின்ற யோனிக் குறைகள், கைகால் குளிர்ந்து, ஆகாட்டம் உண்டாகி, நாவறட்சி, வெளுப்பு, தாகம் முதலியவைகள் கண்டு விட்டால் எவ்விதத்திலும் இரத்தப் பெருக்கைத் தடுக்க வேண்டும். இதுவன்றி உயிரைக் கவனியாமல் கர்ப்பிணியைக் காப்பாற்ற வேண்டும். யோனித் துவாரத்தையும்; கருப்பையின் துவாரத்தையும் அடைக்க வேண்டும். இதற்குப் பயிற்சி பெற்ற வைத்தியருடைய உதவி வேண்டும்.

அவர் கையாளும் முறை:— முதலில் கர்ப்பிணியை இரத்தம் கழிக்கச் செய்ய வேண்டும் பிறகு மருத்துவர் கைகளை சோப் போட்டு இரண்டு தடவை நன்றாகத் தேய்த்துக் கழுவிக் கொள்ள வேண்டும்.

வளர்த்திருக்கும் நகங்களை வெட்டி நகத்து இடுக்கின் அழுக்கை இல்லாமல் செய்துக் கொண்டு கையில் கொஞ்சம் அயோடினைத் (Iodine) த் தடவிக் கொண்டு இரண்டு முன்விரல்களை வைத்துக் கொண்டு யோனியை அகற்றி, மற்றொரு கையால் இரண்டு விரலால் சுத்தம் செய்த வெள்ளைத் துணிகளைக் கருப்பையின் துவாரம் வரைக்கும் ஒவ்வொன்றாகத் தள்ளி அடைக்க வேண்டும். உட்செலுத்தும் துணியின் ஓரத்தை ஞாபகத்தில் வைக்க வேண்டும் அப்படி அடைக்கும் துணி ரத்தப் பெருக்கைத் தடுக்கக் கூடும். இருபத்து நான்கு (24) மணி நேரம் அடைத்திருந்த பிறகு உட்செலுத்தி இருக்கும் துணிகளைக் காக்காக எடுத்து அதில் வைத்த துணிகள் எல்லாம் வெளியாகி இருக்கின்றனவா என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டும். இரு முறை அடைத்தும் ரத்தம் பெருக்கு நிற்காவிடில், அடைத்த துணிகளை வெளியே எடுத்து விட்டு மற்றும் ஒரு முறை அடைக்க வேண்டும். கருப்பைத் துவாரத்தின் வரை அடைப்பதனால், கருப்பை சுருங்க ஆரம்பித்து ரத்தப் பெருக்கு நின்று விடும்.

இறப்பு ஏற்படாமல் மட்டமாக ரத்தப்பெருக்கு இருந்தால் அடைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் கர்ப்பச் சிதைவு ஏற்படும். கரு இறந்துபோய்ப் பெருக்குக் கண்டால் சிதைவு ஏற்படும். அடி வயிற்றில் அடைக்கக் கூடாது. அடைத்தால் அழுக்கு உள்ளே சேர்ந்து ஜுரம் ஏற்படும். அடி வயிற்றில் வலி ஆரம்பம் இருந்தால் அபின் கொடுக்கலாம், ஒரு டோஸ் அளவு கொடுக்கலாம்.

பிந்திச் சிதைவு:- அதாவது மூன்று மாதத்திற்கு மேல் ஏற்படும் சிதைவுக்குப் பிரசவ காலத்திய சிகிச்சை செய்ய வேண்டும்.

கர்ப்பத்தின் கடைசி மூன்று மாதத்தில் ரத்தப் பெருக்கு:—

கடைசி மூன்று மாதங்களில் ரத்தப் பெருக்கு நேர்வது அபூர்வம். சாதாரணமாக **நஞ்சு** அல்லது **உள்பம்** கர்ப்பப்பையின் மேற் பாகத்தில் அதன் சுவருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் இதன் மூலம் தாயின் ரத்தத்திலிருந்து சிசுவுக்கு வேண்டிய சத்து கொப்பூழ்க் கொடியின் வழியாகச் சிசுவின் ரத்தத்தில் சேருகிறது. தாயின் வயிற்றில் அடிபட்டாலும் இல்லை அதிர்ச்சி ஏற்பட்டாலும், அல்லது விஷக் காய்ச்சல் அதிக நாள் அடித்தாலும் பதிந்திருக்கும் **உள்பம்** பிரிய ஆரம்பிக்கும். அந்தச் சமயத்தில் ரத்தப் பெருக்கு உண்டாகும். பிரிய ஆரம்பித்து விட்டால் பிரசவ வலி ஆரம்பித்து விடும். அப்படிச் சிசுவும் சிறு மாதத்தில் வெளி வந்து விட்டாலும் கூட அது உயிர் பிழைத்திருக்கக் கூடும்.

விபரீதமாகச் சில சமயங்களில் நஞ்சுக் கொப்பூழும் இருக்க வேண்டிய இடம் விட்டுக் கருப்பையின் கீழ்ப் பாகத்தில் யோனி சம்பந்தமான துவாரத்தின் மேல் பதிந்து வளர்ந்து விடும். அப்படி இருந்தால் ~~சிசுவின் உயிருக்கு~~ அதற்கு **முன்னடைப்பு நஞ்சு** என்று பெயர். இப்படி இருந்தால் தாயின் உயிருக்கு ஆபத்தாக முடியும். இதினால் உண்டாகும் ரத்தப் பெருக்கை நிறுத்துவது தேர்ந்த வைத்தியர்களால் தான் முடியும். அப்படிப்பட்ட உதவியை உடனே தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பிரசவ அறையும் சாமக்கிரியையும் எழுதப்படவில்லை. 195

வீடுகளுக்குக் கூடப் பிரசவத்திற்கு சேகரிக்க வேண்டிய சாமக்கிரிகள்:—

1. உலர்ந்த சுத்தமான படுக்கை ~~2~~
2. சுத்தத் துணிகள் வெள்ளையாகச் சேகரித்து வெந்நீரில் வைத்துத் தோய்த்து, வெயிலில் காயவைத்து உலர்ந்த பிறகு நன்றாக மடித்து அவற்றில் கட்டி வைக்க வேண்டும்
3. மண்பாண்டங்கள்: கழுவுவதற்கும், தண்ணீர் அவிக்க கொதிக்க வைக்கிறதற்கும்
4. வாயகன்ற சட்டிகள்:- அழுக்கைப் போடுவதற்கும், கழிவு தண்ணீரைச் சேகரித்து அப்புறப் படுத்துவதற்கும்.
5. கொஞ்சம் அடுப்புக்கரி, அனல் உண்டாக்குவதற்கு.
6. கொப்பூழ்க் கொடி கட்டுவதற்கு சுத்தமான நூல்
7. சுத்தமான சீசாவில் கொதிக்க வைத்த தேங்காய் எண்ணெய்

8 ஒரு பெரிய கிண்ணம் எண்ணெய் வைத்துக் கொள்வதற்கு.

மருத்துவம் செய்பவர்கள் வைத்துக் கொள்ள வேண்டியவை:-

1. நன்றாக வெட்டும் கத்தரிக் கோல்
2. சிசுவின் கண்ணைச் சுத்தம் செய்வதற்காக போரிக் பாயில Boric Lotion மருந்து
3. போரிக் பாயிஸப் பொடி
4. சவுக்காரம்
5. உஷ்ணத் திராவகம்
6. பெண்களுக்கான மூத்திரக் குழல்
7. ஆசனக் குழாய்.

197. பிரசவம்

பத்து மாதங்கள் கழித்து ஆனவுடன் சிசு தாயை விட்டு அகன்று தன் வாழ்வைத் தனியாக நடத்த வேண்டிய காலம். இயற்கையமைப்பின் முறையில் காலத்திற்குத் தக்கபடி வேலைகளும், அவற்றைச் செய்வதற்கான சக்தியும் அந்த அந்த அவயவத்திற்கே ஏற்பட்டிருக்கின்றன. சிசுவை வெளியேற்றுவதற்கு அதை வெளியே தள்ளக் கூடிய சக்தி கருப்பைத் தசைகளுக்கும், தாயின் வயிற்றுத் தசைகளுக்கும் இருக்கிறது. நரம்புகளும், தசைகளும் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் இடுப்பு வலி தோன்றுகிறது. இந்த வலி ஏற்பட்டவுடன் அதிவேகமாய் தாயின் உடம்பிலுள்ள நரம்புகளும், பிரசவ வேலையில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய எல்லாத் தசைகளும் வேலை செய்ய வேண்டிய ஆரம்பிக்கின்றன. முதலில் இந்த வலி கொஞ்சம் விட்டு விட்டு வரும். கருப்பையின் கழுத்திலுள்ள துவாரத்தைப் பனிக்குட நீரின் அளவு பருத்துக் கொண்டு சிசுவின் தலை கீழே இறங்குகிறது. இது தான் **முதல் முயற்சி.** பிறகு பனிக்குடம் உடைந்து தண்ணீர் வெளிப்படுவதோடு சிசுவின் தலையும் யோனியின் வழியாய் வெளியாகிறது. இது பிரசவத்தின் **இரண்டாவது படி.** பிறகு சுமார் அரை மணி நேரத்திற்குள் நஞ்சும் கொப்பூழ்க் கொடியும் வெளிவருவதோடு பிரசவத்தின் கடைசிப் படி தீர்ந்து விடுகிறது.

பிரசவத்தின் **முதற்படி** பன்னிரண்டு, பதினெட்டு மணி நேரம் வரை ஆகும் இது முதற் பிரசவத்தில். பிறகு மறு பிரசவங்களில் ஆறு முதல் எட்டு வரை ஆகும்.

இரண்டாம் படி:- முதற் பிரசவம் - இரண்டு மணி, மற்றப் பிரசவம் - அரைமணி நேரம்

மூன்றாம் படி:- கால் மணி முதல் அரை மணி வரையில்

197. பிரசவம் நடத்தும் முறை

இடுப்பு வலி எடுத்தவுடன் பிரசவத்தின் முதற்படி ஆரம்பிக்கிறது. மருத்துவம் செய்கிறவர்கள் வலி பிரசவ வலியா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். முதற் பிரசவத்தில் தான் அதிகச் சந்தேகம் ஏற்படும். தாய்க்குப் பிரசவ வலிப் பழக்கம் கிடையாது. வயிற்றிலோ அல்லது குடலிலோ ஏற்படும் வலி எதுவானாலும் பிரசவ வலி என்று எண்ணுவது சகஜம். மலச் சிக்கல் இருந்தாலும் வயிற்று வலி உண்டாகலாம். அதன் சுழிவி விட்டுக் கொடுத்தால் இந்த வலி நின்று விடும். உண்மையான பிரசவ வலிக்கு இரண்டு அடையாளங்கள் உண்டு

(1) கீழ் வயிறு, முன் வயிறு, அடிவயிறு இவைகளைக் காட்டிலும் இடுப்பின் பின்புறம் வலி அதிகமாக இருக்கும்

(2) வலி விட்டு விட்டு வரும். அப்படி வரும் பொழுது வயிற்றைத் தடவிப் பார்த்தால் கருப்பை விறைத்துக் கல் போல இருக்கும். இதுவும் தவிர, யோனியிலிருந்து ரத்தமும் சளியும் கலந்த நீர் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படும். பிரசவத்திற்கு மருத்துவம் செய்யும் பொழுது இயற்கை முறையைத் தழுவி, அதற்குத் தொந்திரவு இல்லாமல் உதவி செய்ய வேண்டும்.

முதற் படியில் செய்ய வேண்டிய வேலை

(1) சிசுவின் தலை இறங்குவதற்கு, சிசுவுக்கு இயல்பாக உள்ள பாதையும் தொடை பிரசவத்திற்குச் சுலபமாக வழி இருக்கும் படி இடுப்பு வலியைத் பனிக்குடம் உடையும் வரையில்

167 (முதற்படி) கர்ப்பிணி படுத்திருக்காமல் அங்குமிங்கும் நடந்து கொண்டும் இருக்கலாம். பனிக்குடம் உடைந்தவுடன் படுக்கவும். ஆனால் களைத்துப் போகும் வரை நடக்கவிடக் கூடாது.

(2) சிறுநீர்ப்பை, மலக்குடல் மலம், நீர் தடை இல்லாமல் பார்க்க வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் எனிமா கொடுக்க வேண்டும். மணிக்கு ஒரு முறை நீர் கழிக்கும்படி தாயை வற்புறுத்த வேண்டும். எக்காரணத்தினாலாவது நீர் இறங்காமல் அடைபட்டால் ரப்பர் குழாயைச் செலுத்தி எடுத்து விட வேண்டும். இடுப்பு வலி கண்டவுடன் ஒரு ஆமணக்கு எண்ணெய் கொடுத்து விடுவது நலம். மலம் சுத்தமான பிறகு நடக்க விடக் கூடுவது நல்லது.

(3) தாயின் சக்தி குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பழரசமும் சூடான பாலும் கொடுக்கலாம். திடம் உள்ள ஆகாரம் இடுப்பு வலி எடுத்த பிறகு கொடுக்கக் கூடாது. முதல் பிரசவத்தில் இடுப்பு வலி எடுத்து நான்கு 24 மணி நேரத்திற்கு மேல் இருக்கும். ஆகையால் அந்தக் காலத்தில் திட உணவு கொடுக்கக் கூடாது.

(4) கர்ப்பிணி மனம் தளர்வு அடையாத படியும், உற்சாகத்துடன் இருக்கும்படியும் செய்ய வேண்டும். வழக்கமாகப் படித்து வந்த ராமாயணம், பாரதம், பாகவதம் இவை போன்ற கதைகளைக் கேட்கும்படி செய்யலாம். பிரசவத்தைப் பற்றிய சம்பவங்களைக் கர்ப்பிணி முன்னிலையில் பேசக் கூடாது. இன்னும் பயம் அடைபவர்களையும், அதிகமாகப் பேசுபவர்களையும் கர்ப்பிணியிடம் விடக் கூடாது. கூட உதவிக்கு இருப்பவர்களும் கவலை கொள்ளக் கூடாது.

(5) வலி இல்லாத சமயங்களில் ஓய்வு கொடுக்க வேண்டும், படுத்திருக்க வேண்டும்.

இரண்டாம் படி:— கருப்பை சிசுவின் தலையை இறக்கியவுடன் பனிக்குடம் உடைந்து நீர் வெளிவரும். உடனே வலி அதிகரிக்கும். கருப்பை சுருங்கி வரும் வலியும் வயிற்றுத் தசைகளும் வேலை செய்ய ஆரம்பிக்கும். கர்ப்பிணி மூச்சைப் பிடித்து முக்கி முக்கிச் சிசுவை வெளிப்படுத்த முயல்வாள். இந்தச் சமயத்தில் கர்ப்பிணி படுக்கையில் இருக்க வேண்டும். கூட இருப்பவர்கள் சுத்தமான கையால் பற்றிப் பிடித்துக் கொண்டு பிரசவ அறைக்கு அப்பால் கொடுக்க வைத்துத் தயார் படுத்த வேண்டும். இரண்டு மணி நேரத்துக்கு மேல் இந்நிலையில் நீடிக்கக் கூடாது. வலிக்கு வலி கொஞ்சம் கொஞ்சமாகச் சிசுவின் தலை யோனியில் இறங்கி வெளிவரும்.

இப்பொழுது கவனிக்க வேண்டியவை:— 200.

(1) கட்டில் கால்களின் தலைப்பக்கத்திலாவது கவனித்து … கொடுக்கவாவது, கயிறு அல்லது கெட்டியான துணியைக் கட்டி வைத்து வலி வரும் பொழுது தாயார் கர்ப்பிணியை அதைப் பிடித்துக் கொள்ளச் செய்து பலமாக முக்கினால் சிசு தள்ளப்பட்டு வெளிவர உதவியாக இருக்கும். அந்த சமயத்தில் சில பாதங்களையும் கட்டிலின் கால் பக்கத்திலாவது உதைத்துக் கொள்ள வேண்டும். வலி கண்டவுடன் மூச்சை எடுத்துக் கொண்டு அழுத்தி வலிக்கும் பலம் செலுத்திக் கொள்ள வேண்டும்.

(2) குழந்தையின் தலை சீக்கிரம் இறங்காமல் தாமதித்தால் சிறுநீர்ப்பை நிறைந்திருக்கிறதா என்று எடுத்து விட்டு கவனிக்கவும் வேண்டும்.

(3) கர்ப்பிணிக்கு வலி வந்து கொண்டிருக்கும் சமயத்தில் தொண்டை வறட்சியாக இருக்கும். சூடான பால் அல்லது காப்பி, ஒருவாய் அல்லது இரண்டு வாய் சாப்பிடக் கொடுக்கலாம்.

(4) சிசுவின் தலை வெளியே வரும் பொழுது வேகமாக வந்து தாயின் மலத்துவாரத்தி

மலத்துவாரத்தின் பக்கம் முட்டும். அப்பொழுது அந்த இடத்தைக் கையால் தாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு சில நேரத்தும் திரும்ப ஆசனம் பக்கம் பொழுது மருத்துவச்சி கைவிரல்களில் எண்ணெய் தடவிக் கொண்டு இருக்கும் காவல் பார்ப்பது வழக்கம். இது கூடாது. இயற்கையாகவே வேண்டிய இடைக்கும் வழியும் இருக்கிறபடியால், நாம் அனாவசியமாக, அசுத்தத்தில் சில உபயோகப்படுத்தினால் நோய் அணுக்களின் வரத்து ஏற்பட்டுப் பிறகு அநேக கஷ்டங்கள் ஏற்படும்.

(5) குழந்தையின் தலை வெளி வந்தவுடன் கொப்பூழ்க் கொடி மாலை போலச் சுற்றிக் கொண்டு வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு சுற்றிக் கொண்டிருந்தால் எடுத்து விட முடியுமானால் எடுத்து விட வேண்டும். அல்லது கத்தரியால் வெட்டிக் குழந்தையின் தொண்டை இறுக்காமல் வருமாறு தளர்த்தி விட வேண்டும்.

(6) தலை இருப்பவர் குழந்தையின் கண்களைத் துடைக்க வேண்டும். கொஞ்சம் பஞ்சை யாவது நல்ல வெளுப்பான சுத்தத் துணியையாவது வெந்நீரில் நனைத்துக் கண் இமைகளைத் துடைத்துக் கண்ணுக்குள் விரல் கொண்டு கொட்டி விழும்படி செய்ய வேண்டும். தாயின் யோனிப் பிரதேசத்தில் வெட்டை நோயின் விஷத்தால் ஏற்பட்டிருக்கிறதாவது இருந்திருந்தால் அது குழந்தையின் கண்களுக்கு அதிக அபாயம். இந்த நோய்த் தொற்று இருப்பது தாய்க்கே தெரியாமல் இருக்கலாம்; அல்லது வெட்கப்பட்டுப் பொறுத்தாக எண்ணிக் கொண்டிருக்கலாம். தாயின் உடலுக்கு எந்த வித வேதனையும் உண்டாக்காமல், பல நாட்கள் இருந்து வளர்ந்திருக்கலாம். அநேகம் குழந்தைகள் குருடாய்ப் பிறப்பது இந்தக் காரணத்தினால் தான் என்பது வைத்தியர்கள் அபிப்பிராயம். இதற்காகத் தான் மேற்கூறிய படி குழந்தையின் கண்ணை அலம்ப வேண்டியது அவசியம். கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டு இந்த முறையை மேற்கொண்டால், கண்ணுக்கு யாதொரு ஆபத்தும் இல்லாமல் போகும். பிரசவம் முடிந்ததும் கொப்பூழ்க் கொடியைக் கட்ட வேண்டும். கொப்பூழிலிருந்து இரண்டு அங்குலம் விட்டுக் கொடியை இறுக்கிக் கட்ட வேண்டும். கட்டுவதற்கு முன்பு அதில் ரத்தம் துடிப்பது நின்று விட்டதா என்று பார்க்க வேண்டும். துடிப்பது நின்ற பிறகு தான் கட்ட வேண்டும். சுமார் எட்டு அல்லது பத்து நிமிஷங்களுக்குள் நாடியின் சுற்றிலும் இருக்கும் சுத்தமான நூலைத் [illegible] அதற்கான துணியின் அப்புறம் மடித்து விட வேண்டும். [illegible] உபயோகம் [illegible] எடுத்து, பிறகு [illegible] போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். பிறகு வெயிலில் காய வைக்க வேண்டும். நாடாவால் (கொப்பூழ்க்) கொடியை இரண்டு இடங்களில் கட்ட வேண்டும். இரண்டு முன் சொல்லியபடி குழந்தையின் கொப்பூழிலிருந்து இரண்டு அங்குலம் தள்ளியும், மற்றொன்று தாயின் யோனிக்குச் சமீபத்திலும் கட்டி, குழந்தையின் வயிற்றுப் பக்கம் இருக்கும் கட்டிலிருந்து அரை அங்குலம் தள்ளிக் கொடியைக் கத்தரித்து விட வேண்டும்.

மூன்றாம் படி:— வெளிவந்த குழந்தையைத் தாய்க்குத் தொடையின் வாசலில் கொள்ள வேண்டும். கொப்பூழ்க் கொடியை வெட்டிய பிறகு குழந்தையை உதவியாளர் ஒருவரிடம் கொடுக்க வேண்டும். குழந்தை வெளிவந்தவுடன் தாய் களைத்து விடுவாள். இந்தச் சமயத்திலும் இனி நஞ்சு வெளிவரும் வரையிலும் மருத்துவம் பார்க்கிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நஞ்சு கருப்பையை விட்டுப் பிரியும் பொழுது ரத்தப் பெருக்கு ஏற்படக் கூடும். அதைத் தடுப்பதற்காகக் கருப்பையைச் சுருங்கச் செய்ய வேண்டும். இடது கையைத் தாயின் அடி வயிற்றின் மேல் வைத்துக் கருப்பையைத் தடவிக் கொடுத்து லேசாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்து பத்து அல்லது பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் நஞ்சு வெளிப்படும். யோனியிலிருந்து கொப்பூழ்க் கொடியில் கட்டி இருக்கும் கயிறும் வெளிவரும். நஞ்சு வெளிப்படும் நேரத்தை இந்தக் கயிறு வெளிவருவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். நஞ்சுக் கொடியைப் பிடித்து வெளியே இழுக்கக் கூடாது.

[illegible] வெளிவந்தவுடன் அதையும் கொடியையும் [illegible] சுத்தத் தண்ணீரில் போட்டு [illegible] பூராவும் வெளிவந்து விட்டதா என்று பரிசோதித்துத் தெரிந்துக் கொள்ள வேண்டும். பிறகு கையுறைகளைக் கொண்டு தாயின் இடுப்பு, தொடை, யோனியின் வெளிப்புறம் எல்லாவற்றையும் இரத்தம் இல்லாமல் துடைத்து விட்டு, தாயின் வயிற்றைச் சுற்றி [illegible] அகலமும், ஐந்து அடி நீளமும் உள்ள சுத்தமான துணியை நீளத்தில் இரண்டாக மடித்து இறுக்கிக் கட்ட வேண்டும். இப்படிக் கட்டா விட்டால் வயிறு தளர்ந்து பிறகு அநேகமாய் பெரிய நோய்களை உண்டு பண்ணும். யோனியினின்றும் வெளிப்படும் அழுக்காக [illegible] அதற்குச் சுத்தமான துணியை மடித்து வைத்துக் கட்ட வேண்டும். அது நனைய நனைய துணியை மாற்ற வேண்டும். முதல் நாள் ஆறு அல்லது ஏழு தடவை மாற்ற வேண்டியிருக்கும். மறுநாள் அவ்வளவு அடிக்கடி மாற்ற வேண்டியதில்லை. கர்ப்பிணியை மெல்லிய துணியால் போர்த்த வேண்டும். [illegible] படுக்கையில் இருக்கும் பொழுது வயிற்றில் [illegible] போலச் சில கட்டாமல் [illegible] உண்டாகாத வாறு [illegible] போதுமானது.

204 குழந்தையைப் பற்றிய கவனம்.

பிறந்த குழந்தையின் மேல் வெண்ணெய்ப் போன்ற பசை ஒட்டிக் கொண்டிருக்கும். இக் கருப்பையில் இருந்த பொழுது நீர் மேல் கிடக்கும் [illegible] தோல் கெட்டுப் போய் விடாமல் இருப்பதற்காக இயற்கையில் ஏற்பட்டதாகும். சோப்புப் போட்டுக் கழுவினால் இந்தப் பசைப் போகாது. நன்றாகக் காய்ச்சி ஆறின நல்லெண்ணெயை மேலெல்லாம் தடவி சிறிது நேரம் [illegible] மென்மையான [illegible] துணியைக் கொண்டு துடைத்தால் இந்தப் பசை நீங்கி விடும். குழந்தையை [illegible] கூடாது. எண்ணெயைக் கொண்டு பசையைப் போக்கின பின், சோப்பைக் கொஞ்சமாக உபயோகப்படுத்திக் குழந்தையை வெதுவெதுப்பான தண்ணீரில் வைத்துக் கழுவி, பிறகு உலர்ந்த மெல்லிய துணியால் துடைத்துப் படுக்க வேண்டும்.

204 தொப்புழ்க் கொடி

தொப்புழ்க் கொடி கட்டின முடிச்சிலிருந்து இரத்தம் வடியாமல் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். [illegible] அயோடின் திராவகம் (Iodine) தடவி பிறகு போரிக் பவுடர் போட வேண்டும்.

தினந்தோறும் தொப்புழ்க் கொடியை [illegible] துணியைக் கொண்டு குழந்தையின் வயிற்றைச் சுற்றி லேசாகக் கட்டி வைக்க வேண்டும். தினந்தோறும் குழந்தையைக் குளிப்பாட்டும் பொழுது தொப்புள் கொடியையும் கவனித்து, கட்டும் துணியை மாற்றி வர வேண்டும். ஒரு வாரத்திற்குள் கொடி காய்ந்து கழன்று விழுந்து விடும். குழந்தையின் மலம், மூத்திரம் கொண்டு தொப்புள் கொடி புண்ணுடன் சம்பந்தப் படக் கூடாது. குழந்தையின் மலமும் நீரும் படுக்கையில் [illegible] துணித் துண்டை [illegible] மடித்து வைத்து, அதில் நீர், மலம் இருந்தால் உடன் மாற்ற வேண்டும். அழுக்கடைந்த துணிகளைத் தண்ணீரில் வெள்ளாவியும் போட்டுக் கொதிக்க வைத்து வெயிலில் காய வைத்துப் பிறகு உபயோகப்படுத்த வேண்டும்.

204. பால் கொடுப்பது.

குழந்தையை சுத்தப் படுத்தியவுடன் தாயினிடத்தில் பால் குடிக்க வைக்க வேண்டும். பால் குடிக்க ஆரம்பித்தால் வயிற்றுக்குள் கருப்பை நன்றாகச் சுருங்கும். முலைக் காம்புகளைச் சுத்தப் படுத்தி, குழந்தை பால் குடித்த பிறகு போரிக் [illegible] கொண்டு சுத்தப் படுத்த வேண்டும். [illegible] தினங்களில் தாய் [illegible] முதலில் [illegible] கொடுப்பதினால், குழந்தையின் ஆரோக்கியத்திற்கு அதிகம், அதற்குள் உண்டாகும் [illegible] செய்ய வேண்டும். முதலில் தாயின் பால் பார்வைக்கு இது நன்றாக இராது. ஆனால் அதைக் குடித்தால் தான் குழந்தைக்கு மலம் நன்றாக வெளியாகும். குழந்தைக்கு வேறொன்றும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

205 பிரசவம் தாமதித்தல்

காலப்படி பிரசவமாகாதிருந்தால் அதனை தாமதப் படுவது என்று கண்டுகொள்ள வேண்டும். முன் கூறிய மூன்று படிகளில் (முதல் இரண்டாவது மூன்றாவது படி) எதிலேனும் காலக் கிரமப்படி நடைபெறா விட்டால் அதனை தாமதம் என்று கவனிக்க வேண்டும். ஒவ்வொரு படியிலும் கருப்பைத் தசைகளின் சக்திக் குறைவு அல்லது பிறப்பு உறுப்புக்களின் வழியாக குழந்தை செல்வதற்கு ஏதேனும் தடையுறல், தாமதத்திற்குக் காரணமாக இருக்கும். ஆகவே, தாமதத்திற்குக் காரணம் இவையும் பொருத்திருக்கலாம்.

பிரசவத்திற்கு முதல் படியில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணங்கள்: (1) கருப்பையின் சக்தி: கருப்பைத் தசைகளுக்குச் சுருங்கும் சக்தி மிகவும் குறைவாக இருக்கலாம் அல்லது விட்டு விட்டு தசைகள் சிறிது வெளிப்படுத்த சக்தியிழந்து களைத்து போகலாம். இப்படி ஏற்பட்டால் இடுப்பு வலி நின்றுவிடும். இந்த நிலைக்குக் கருப்பைச் சோர்வு என்று பெயர்

(2) பிரசவப் பாதை: சிசு இடுப்பும் பாதையின் தடை ஏற்படலாம். நல்ல வலி வந்துங் கூடச் சூலகவாய் போதிய அளவு திறக்காமல் இருக்கலாம். சூலகவாய்க் குழல் தளர்ந்து கொடுக்காமலும் இருக்கலாம். பனிக்குடம் காலத்திற்கு முந்தி உடைத்துக் கொண்டு விட்டால் சூலகவாய் திறப்பதற்கு அது உதவாமற் போகும். இதனால் பிரசவம் தாமதமாகலாம்.

(3) கருப்பை நிறைந்தும், வெளிவர வேண்டிய பொருள் தயாராக இல்லாதது தாமதத்திற்குக் காரணம் ஆகலாம். அதாவது பனிக்குடம் சரியாக உடைபடாமல் இருந்து விடுவது.

இரண்டாம் படியின் தாமதம்:- முதல் படி தாண்டி வந்த பிறகு தாமதத்தின் காரணங்கள்

(1) கருப்பைத் தசைக்கு வலி குன்றி போனால் சரியாகச் சுருங்காமல் சிசு வெளிப்படுவது தாமதிக்கும்.

(2) வயிற்றின் தசைகள் வேலை செய்யாமல் தாமதப் படலாம்.

(3) பிரசவப் பாதை சிசு வெளிப் படுவதற்குப் போதாமல் இருப்பது தாமதத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

(4) பிரசவப் பாதையின் அளவு சாதாரணமான அளவுக் குறையாமல் இருந்தாலும் சிசுவின் தலை ஒரு வேளை அளவுக்கு மிஞ்சிப் பெரிதாக இருக்கலாம்.

(5) மேற் சொல்லிய தவறுகள் இல்லாதிருந்தும், சிசுவின் தலை கருப்பையின் வாய்க்கு வந்து சேராமல் தவறிச் சிசுவின் உடல் கருப்பைக்குள் அமைந்திருத்தல் தாமதத்திற்குக் காரணமாய் இருக்கலாம். அப்படி வருவதில் பல விதங்கள் உண்டு.

(1.) தலை நேராக வராமல் மோவாய்க்கட்டை அல்லது நெற்றி வரலாம்.

(2) தோள் அல்லது இடுப்பு கருப்பை வாய்க்கு முன் நிற்கலாம். இவ்வாறு ஏற்பட்டால் இரண்டாம் படியில் தாமதம் ஏற்படலாம்.

மூன்றாம் படியில் தாமதங்கள்:- சூலுறை வெளிவரத் தாமதப் படலாம். அதற்குக் காரணங்களாவன:

(1) சிசுவை வெளிப் படுத்திய களைப்பினால் கருப்பை சுருங்காமல் நின்று விடலாம்

(2) கருப்பை மத்தியில் மட்டிலும் சுருங்கி மற்றப் பாகங்களில் சுருங்காமல் இருப்பது

(3) சூலுறை கருப்பையினின்றும் பிரியாமல் ஒட்டிக் கொண்டிருப்பது.

(4) கர்ப்பை அடங்கிடும், சூதகம் வெளிவராமல் இருப்பது.

(5) சூதகம் கர்ப்பையை விட்டு யோனியில் வந்து தங்கிவிடுவது.

பிரசவக் கோளாறுகளுக்குச் சிகிச்சை.

மேலே விவரமாக எல்லாவகைப் பிரசவக் கோளாறுகளின் காரணங்களும் எடுத்துச் சொல்லப்பட்டன. பிரசவத்தில் நடைபெற வேண்டிய பல படிகள் ஒழுங்காய் ஒன்றன் பின் ஒன்று சரியாக நிகழ்ந்தால் நாம் செய்ய வேண்டியது சாதாரண சுகாதார முறைப் பாதுகாப்புகளே. கோளாறு ஏற்பட்டால் அதனுடைய விவரத்தையும் காரணத்தையும் உணர்ந்து அறிய வேண்டியது செவிலியர்களுக்கு அவசியம். அறிந்த பின் ஏது உபாயம் உண்டு, தேர்ச்சி பெற்ற வைத்தியர்களின் உதவியைப் பெற வேண்டியது எந்த சமயம், எந்த வைத்தியர் உதவியின்றித் தாங்களே சமாளிக்க முடியும், அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். முக்கியமான பல சிகிச்சைகள் செவிலியர்களின் அதிகாரத்தையுடைய மருத்துவர்களால் செய்யப்பட வேண்டியவை இவை கடா

இடுப்பு வலி எடுத்துப் பனிக்குடம் உடையாமல் தாமதமாகி வலியும் நின்று விட்டால் அதைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. கர்ப்பிணியைக் கொஞ்ச நேரம் அசையாமல் படுத்திருக்கச் சொல்லிச் சூடான பால் அல்லது காப்பி கொடுத்துச் சிறிது நேரம் தூங்க விட்டால் மறுபடி வலி வந்து பிரசவமாகும்.

பனிக்குடப் பை உடையாமல் யோனியின் துவாரத்தில் தள்ளிக் கொண்டு வெகு நேரம் தாமதப்பட்டால் அதைக் கத்தரிக்கோல் அல்லது விரலால் குத்தி விட்டால் தண்ணீர் வெளியாகிச் சிசு சுலபமாக இறங்கும். பனிக்குடம் உடைந்து பிறகு வலி நின்று விட்டால் அபாயம். உடனே தேர்ந்த வைத்திய உதவியைக் கொண்டு வர வேண்டும்.

தாமதத்திற்குக் காரணம், குறுகிய வாயில், சிசு கோணலாக வந்து கொண்டிருக்கலாம். சிசு வெளிவராமல் வேறு அவயவங்கள் முதலில் வெளிப்பட்டால் பிரசவத்திற்குத் தேர்ந்த வைத்தியர்களின் உதவி அவசியம். இதைத் தெரிந்துள்ள ஆயுதங்களை உபயோகிக்க வேண்டி வரும்.

மூன்றாம் படித் தாமதம்:- முன் கூறியபடி கருப்பை அடங்காவிட்டால் சூதகம் வெளிவராமல் இருக்கும். அதற்குக் கையால் அடிவயிற்றில் கருப்பையை நன்றாகப் பிடித்துக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யக் கருப்பை அடங்கி இறுகுவது கைக்கு நன்றாகத் தெரியும். கொடியைக் கயிற்றினால் கட்டியிருக்கும் இடம் யோனித் துவாரத்திலிருந்து வெளிவந்து முடிந்து விட்டால் அதைப் பார்த்து நஞ்சு யோனியில் தங்கியிருப்பதை அறியலாம். கையைச் சுத்தம் செய்து கொண்டு யோனியிலிருந்து நஞ்சை எடுத்து விடலாம். நஞ்சு யோனித் துவாரத்திற்கு மேல் கருப்பையில் ஒட்டிக் கொண்டிருந்தால் அதை வைத்தியர்களைக் கொண்டு எடுக்கச் செய்ய வேண்டும்.

சூதகம் வெளிப்படுவதற்கு முன்பும் பின்பும் ரத்தப் பெருக்கு:-

பிரசவமாகிச் சூதகம் வெளிவராமல் ரத்தப் பெருக்கு ஏற்பட்டால் வயிற்றின்மேல் கையை வைத்துக் கருப்பை இருக்கும் இடத்தின் மேற்பாகத்தில் இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சிறிது நேரம் பிடித்திருந்தால் சூதகம் பிரிந்து வெளிவரும். அதோடு ரத்தப் பெருக்கு நின்று விடும். சூதகம் வெளிவந்த பிறகும் கூடக் கருப்பையைச் சிறிது அடக்கிக் கொடுக்க வேண்டும்.

மூன்றாம் படியின் சில வேளைகளில் பிறகு சூதகமும் கொடியும் கருப்பையில் தங்கியிருப்பது. பக்கம் 210.

நஞ்சு வெளிவந்ததும் இரத்தப் பெருக்கு ஏற்படுமானால் :—
உடனே வைத்தியர் உதவியை நாட வேண்டும். கருப்பையைக் கையினால் இறுகப் பற்றிக் கொண்டால் கொஞ்ச நேரத்தில் இரத்தப் பெருக்கு நிற்கலாம்.
வைத்தியர்கள் சிகிச்சை செய்யும் முறை :—
கையைச் சுத்தம் செய்து வலது கையை யோனிக்குள் விட்டு, கையை முஷ்டி கொண்டு கருப்பையை மேலே தள்ளி, இடதுகையை அடிவயிற்றின் மேல் வைத்து, கருப்பையைக் கீழே தள்ளி அழுத்தினால் இரண்டு கைகளுக்கும் நடுவில் கருப்பை அகப்பட்டு இரத்தப் பெருக்கு நிற்கும். அதிக இரத்தப் பெருக்கு இருந்தால் பிட்யூடரின் மருந்தை ஊசிக் குழாய் கொண்டு குத்தி ஏற்றி இருக்கலாம், பெருக்கு சாதாரணமாக இருந்து களைப்பாக இருந்தால் ஒரு பைண்டு உப்பு நீர் ஊசி குத்திச் செலுத்த வேண்டும். தாகத்திற்கும் அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

இது மாதுபாடாக இருக்கிறவர்கள் பிரசவம் பார்த்திருந்தால் தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு இதனை வெளிப்படுத்தலாமே தவிர மற்றவர்கள் ஒன்றும் செய்யக் கூடாது.

அடிக்கட்டு (பெரினியம்) யோனித்துவாரம் கிழிதல் :—
குழந்தை தலை இறங்கும் போது வேகமாக வந்து யோனித்துவாரத்தின் பின்பக்கம் மோதும். துவாரம் அகன்று, கீழ்ப் பக்கத்தில் மலத்துவாரத்திற்கும் யோனிக்கும் உள்ள தசை கிழிந்து போவது உண்டு. அப்படி நேர்ந்தால் வைத்தியர்கள் நஞ்சு வெளிப்பட்டவுடன் கிழிந்த இடத்தை முதலில் பட்டு நூல் உபயோகித்துத் தைத்து விடுவார்கள். மருத்துவப்படி பிரசவம் சரியாக நடந்து, இம்மாதிரி தசை கிழிபட்டுப் போனால், அதற்கு உடனடியாக சிகிச்சை செய்துக் கொள்ள வேண்டும். அப்படியே விட்டு விடக் கூடாது.

பிரசவத்துக்குப் பின் சிசு உயிர்ப்பும் தொடக்கமும் :— (212)
பிறந்த குழந்தையின் நுரையீரல் வேலை செய்வதற்கு அடையாளம், பிறந்தவுடன் அழும்; அதாமல் இருந்தால் மூச்சு விடுகிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். உயிர்ப்பு காணாவிட்டால் உடனே கவனிக்க வேண்டும்.

மூச்சுத் தொடங்காமல் இருப்பதற்குக் காரணங்கள் :—
1 சிசு பிரசவ அவஸ்தையினால் களைத்துப் போயிருக்கலாம்.

2 யோனியில் இருக்கும் பொழுது ஏதாவது காரணத்தினாலாவது சிசு மூச்சுவிட ஆரம்பித்து விட்டால் தொண்டைக்குள் வழும்பு புகுந்து, அடைத்து விடும்.

மூச்சடைப்பு இரு வகை : (1) வெள்ளை மூச்சடைப்பு (2) நீல மூச்சடைப்பு.
மூச்சு ஆரம்பிக்கா விட்டால் சிசு நீல நிறமாகி விடும். பின்பு சிகிச்சை இல்லாமல் நாளும் வெளுத்துப் போகும். ஆகையால் வெள்ளை மூச்சடைப்பு நீலத்தைக் காட்டிலும் கவலைக்கிடமானது.

சிகிச்சை :— (1) முதலில் தொப்புள் கொடியை உடனே கட்டி அறுத்து விட வேண்டும். அறுத்துக் கொண்டிருக்கும்போதும் அதற்காகத் தாமதிக்கக் கூடாது.

2 பஞ்சினாலாவது சுத்தமான துணியினாலாவது சிசுவின் வாயையும் தொண்டையையும் கவனித்து துடைத்துச் சுத்தப்படுத்த வேண்டும். வேறு எதை செய்வதானாலும், இதை உடனே செய்து விட வேண்டும்.

3 சிசுவின் முகத்தின் மேல் குளிர்ந்த தண்ணீரை விசிறி மூச்சுத் தூண்டலாம்.

முதுகிலும் நெஞ்சுப்பாகத்திலும் அழுத்திப் பார்க்கலாம். அதனால் உயிர்ப்பு ஆரம்பிக்கலாம். சொட்டு தண்ணீரில் ஒரு துணியை நனைத்து அதனால் பின்புறம் இடுப்புக்கு மேல் அழுத்தி தட்டலாம். இந்த முறைகளில் பயன் உண்டாகாவிடில் உயிர்ப்புத் தூண்டல் முறைப்படி செய்ய வேண்டும்.

(4) ஒரு சட்டியில் பொறுக்கும் சூடான வெந்நீரை வைத்துக் குழந்தையை வாய், மூக்கில் நீர் போகாமல் அமிழ்த்த வேண்டும். வெள்ளை மூச்சடைப்பாக இருந்தால் குழந்தையை வெந்நீரிலேயே வைத்துக் கொண்டு உயிர்ப்புத் தூண்டுதல் செய்ய வேண்டும். நீல மூச்சடைப்பாக இருந்தால் அல்லது வெள்ளை நிறம் மாறி நீலமானால் அந்த நிலையில் மாற்றி மாற்றி வெந்நீரிலும் சொட்டு தண்ணீரிலும் அமிழ்த்த வேண்டும். வெந்நீர் அதிக சூடாக இருக்கக் கூடாது.

(5) மூச்சு உயிர்ப்புச் செய்யும் விதம் அடியில் விவரிக்கப்படும். மூச்சு உயிர்ப்புச் செய்யும் பொழுது குழந்தையை சிசுவை வெந்நீரில் வைக்க வேண்டும். இல்லாவிடில் சிசுவின் உடல் சூடு குறைந்து விடும். மூச்சு உயிர்ப்புச் செய்வதை அலுத்துப் போய் விட்டு விடக்கூடாது. ஒரு மணி நேரம் வரை செய்த பிறகு கூட மூச்சு ஏற்பட்டுச் சிசு உயிர் பிழைத்திருக்கிறது. ஆகையால் ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரமாகிலும் உயிர்ப்புத் தூண்டல் செய்ய வேண்டும்.

2/3. மூச்சு உயிர்ப்புச் செய்யும் விதம்.

மாற்றி மாற்றி நெஞ்சைக் குறுக்கியும் அகற்றியும் செய்ய வேண்டும். இரண்டு கைகளைப் பரப்பி வைத்துக் கொண்டு அதன் மேல் சிசுவை வைத்துக் கொள்ள வேண்டும், பிடரிக்குக் கீழ் ஒரு கையையும் இடுப்புக்குக் கீழ் ஒரு கையையும் வைத்துக் கொண்டு, சிசுவின் தலை, கைகள் கால்கள் பின் புறமாக மாறு வளைத்தால் மார்பு அகன்று காற்று உள்ளிழுக்கும். (படுக்கையிலோ) மடக்கிய கால்களை நேராக வைத்துக் கொண்டு இடுப்பை மேல் தூக்கி அடிவயிற்றின் மேல் தலை படும்படி செய்து, மார்பு குறுகும்படி செய்ய வேண்டும். இதில் நுரையீரலில் இருக்கும் காற்று வெளிப்படும். இந்த முறையில் நிமிஷத்திற்குப் பன்னிரண்டு தடவையாகிலும் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையும் இம்மாதிரி செய்து பிறகு வெந்நீரில் சிசுவை அமிழ்த்த வேண்டும். பிறகு மறுபடியும் உயிர்ப்புத் தூண்டல் ஆரம்பிக்க வேண்டும்.

2/5 பிரசவித்த தாயின் பாதுகாப்பு.

ஓய்வு :- படுக்கையில் பத்து நாட்களுக்கு இருக்க வேண்டும். [illegible], பாப்பு, உறுப்புக் [illegible] கருப்பை சுருங்கவும் [illegible] ஒரே நிலையில் பல நாட்களில் வாங்கி [illegible] வேண்டும் அப்படி மாற்றும் பொழுது யோனியின் வெளிப்பாகங்களை ஜெப்பிலிப் போட்டுக் காய்ச்சின வெந்நீரைக் கொண்டு சுத்தப்படுத்தி மறுபடியும் காய்ந்த உலர்ந்த வெது துணிகளை வைத்துக் கட்ட வேண்டும். குழந்தை பிறந்து ஆறு அல்லது எட்டு மணி நேரத்திற்குள் தாய்க்கு நீர் போய் விடும். அப்படி நீர் போகா விட்டால் அடிவயிற்றில் துணியைக் கொண்டு வெந்நீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதில் நீர் இறங்கும். வழக்கமான முதல் மலம் கழிய வேண்டும். அப்படி இல்லா விட்டால் கடுக்காய்க் கஷாயம் மூன்றாம் நாள் கொடுக்க வேண்டும். அதிகம் பேதியாகாமல் இருக்கும்படியான அளவு கொடுத்தால் போதுமானது. (மூன்று கடுக்காய் போதும்)

உணவு :- முதல் மூன்று நாட்களுக்குப் பால், கஞ்சி, காபி, பார்லி அரிசிக் கஞ்சி பத்தியம் கொடுக்க வேண்டும். மூன்று நாட்களுக்குப் பிறகு அரிசிச் சாதம், ரசம் போன்ற லேசான ஆகாரம் கொடுக்க வேண்டும். பால், நெய், பழங்கள் இவைகளும் சேர்த்துக் கொள்ள வேண்டும். காரம் அதிகம் கொடுக்கக் கூடாது. அதிகக் காரம் கொடுப்பதால் குழந்தைக்கு அஜீரணம் ஏற்படுவது என்ற எண்ணம் [illegible]. ஆகாரம் சுலபமாக ஜீரணிக்கக் கூடியதாக இருப்பதற்காக, உப்பு, மிளகு, சீரகம், புளி இவைகளை சேர்க்கலாமே தவிர

தவிர அதிகமான மிளகாய்க் காரம் சேர்க்கக் கூடாது. சில தாய்மார்களுக்குப் பால் சுரந்தும் ஒத்துக் கொள்ளுகிறதில்லை. அவர்களுக்கு மோர் கொடுக்க வேண்டும். தண்ணீர் ஏராளமாகத் தாகத்திற்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டும். தண்ணீர் கொடுத்தால் அதனால் நீர்க் கட்டுமென நினைத்து தண்ணீர் கொடுக்காமல் பிரசவித்தவர்களுக்குத் துன்பத்தை உண்டு பண்ணி விடுவது வழக்கம். தண்ணீர் அதிகம் கொடுத்தால் வயிற்றில் நீர் பெருத்து விடும் என்றும் எண்ணம் கொண்டு அறியாமையால் நன்மை செய்வதாக எண்ணி மோசம் போய் விடுகிறார்கள். பிரசவ காலத்தில் உடலை விட்டு நீரும் ரத்தமும் அதிகமாக வெளிவருவதால், வறட்சி ஏற்படும். அந்த வறட்சியைத் தீர்க்க அளவு தண்ணீரைக் காய்ச்சி, சுத்தமான பாலையும் போட்டு ஆற வைத்துக் குடிக்கப் பிறகு கொடுக்கலாம். மேலும் சுத்தமான தண்ணீர் நிறையக் குடிப்பதனால் ரத்தம் நன்கு ஓடிச் சுத்தப் படும். நோயணுக்கள் தங்க இடம் தராது.

வெற்றிலை பாக்கு உபயோகிப்பது நமது நாட்டின் வழக்கம். தண்ணீர் கொடாமல் வெற்றிலைச் சாற்றை உட்கொண்டு தாகத்தை அடக்க வேண்டும் என்பார்கள். இது எக்காலமும் தாகத்தை அடக்காது. வாயிலிருந்து உமிழ் நீரைச் சுரக்கச் செய்து கொண்டு தான் வெற்றிலைச் சாறு உண்டாகிறது. ஆகவே உடம்பு நீரும் ரத்தத்திலிருந்து உண்டாவதால் வெற்றிலையின் காரணமாக அதிகம் வறட்சி ஏற்படுகிறது. வெற்றிலைப் போட்டுக் கொள்ளும் வழக்கம் நல்லது. ஒரு நாளைக்கு ஆகாரம் கொடுத்த பிறகு இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்கலாம். புகையிலை உபயோகிக்கக்கூடாது. வெள்ளைச் சுண்ணாம்பு, காசுக்கட்டி, சீவல் என்றும் இரண்டு பாகமாக எழுதவில்லை.

அழுக்கு:— முதல் சில நாள்களுக்கு ஜோராக வந்து கொண்டிருக்கும். ~~நாளடைவில்~~ முதல் ஐந்து அல்லது ஆறு நாட்கள் வரை ரத்தம் வந்து கொண்டிருக்கும். நாளடைவில் குறைந்து பழுப்பு நிறம் மாறி வெளிராகவும், பிறகு ஊனும் சளியும் கலந்ததுமாக வந்து கொண்டிருக்கும். இது மொத்தம் சுமார் ஆறு வாரங்கள் ஆகும்.

மருந்து:— பிரசவமானவர்கள் எல்லோரும் காய மருந்து லேகியம் சாப்பிட வேண்டும் என்கிற அநாவசியமான வழக்கம் நம் நாட்டில் உண்டு. இதை விட விபரீதமான அபிப்ராயம் ஒன்று பரவி வருகிறது. நாட்டு மருந்து இல்லா விட்டால், பிராந்தி கொடுக்க வேண்டுமென்பது. இது பெரிய தவறு. வைத்தியர்கள் கொடுக்கச் சொன்னாலொழியக் கொடுக்கக் கூடாது. கஸ்தூரி கொடுக்கும் வழக்கத்தில் [illegible] இல்லை. சாதாரண சுகப் பிரசவத்திற்குப் பத்தியமான மருந்து ஒன்றும் வேண்டியதில்லை. உடலில் வேறு நோய் ஒன்றும் இல்லாமல் இருப்பவர்களுக்கு இதுவரை சொல்லி வந்த சிகிச்சையே போதும். மற்ற வியாதிகள் இருந்தால் அவை பிரசவத்திற்குப் பிறகு அதிகப்படும். உதாரணமாக க்ஷய ரோகம் உள்ளடங்கி இருந்து வெளிப்படையாகத் தெரியாமல் இருந்தால் இந்தக் காலத்தில் வெளியிலும் அதிகரித்துக் கொண்டும் தோன்றும். அப்பொழுது க்ஷய ரோகத்திற்கு வைத்தியம் செய்ய வேண்டும். பிரசவ மருந்துகள் என்ற மருந்துகள் மருந்துவர்களாலும், மற்றவர்களாலும் விற்கப்பட்டு வருகின்றன. தேர்ந்த வைத்தியர்களின் யோசனையின்றி மருந்துகளை வாங்கிச் சாப்பிடக் கூடாது. இவை தேவையில்லை.

216. **பிரசவித்த பிறகு ஏற்படும் சிக்கல்கள் (ரத்தப் பெருக்கு, காரணங்கள்)**

(1) தாய் படுக்கையில் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் எழுந்து நடமாடுவது.

(2) கருப்பையின் சுருக்கத்தன்மை கெட்டுப் போயிருப்பது

(3) பிரசவ காலத்தில் உறைந்த ரத்தம் கருப்பையில் தங்கி விடுவது.

(4) குறிப்பிட்ட காலத்திற்குத் தக்கபடி கருப்பை சுருங்காவிட்டால் ரத்தம் வெளிப்படலாம்

5 அதிகத் தாமதமாகப் பிரசவம் நடந்து கருப்பை ஜீரணித்து போய்ச் சுருங்காமல் இருப்பதால் ரத்தப் பெருக்கு காணலாம்.

6 கர்ப்பத்திற்கு முன்பே இருந்துள்ள வியாதியாலும் உண்டாகலாம்.

7 பிரசவ காலத்தில் அழுத்தத்தில் நஞ்சு தங்கியிருப்பதால் ரத்தம் வந்து கொண்டிருக்கலாம்.

ரத்தப் பெருக்கை எவ்வழியிலும் நிறுத்த வேண்டும். கருப்பையில் இருக்கும் உறைந்த ரத்தக் கட்டிகளையும் இடையிலிருக்கும் நஞ்சுகளையும் நீக்கிச் சுத்தம் பண்ண வேண்டும். டாக்டர் வைத்தியர்களைக் கொண்டு இதைச் செய்ய வேண்டும். மறைவிடத்தில் நஞ்சு இருந்திருந்தால் ஆழத்தில் அதற்குப்படி மருந்து போட்டுக் கட்ட வேண்டும்.

218. பிரசவித்தப் பிறகு காய்ச்சல்

கடும் பிரசவத்திற்குப் பிறகு காய்ச்சல் இருக்கக் கூடாது. அப்படி இருந்தாலும் சாதாரணமாக 100° டிகிரிக்கு மேல் (உஷ்ணமானி மூலம்) இருந்தால் அதன் காரணத்தை உடனே ஆராய்ந்து கொள்ள வேண்டும். மூன்றாவது அல்லது நான்காவது நாள் மடிப் பிரசவத்திற்குப் பின் கருப்பை பால் கட்டு (மடிவீக்கம்) வந்தால் காய்ச்சல் ஏற்படலாம். இந்தக் காரணமில்லாமல் காய்ச்சல் அதிகமாக இருந்தால் நோய் அணுக்கள் மூலம் கருப்பையில் தொற்று ஏற்பட்டிருக்க வேண்டும். நோய் அணுக்கள் பல வழிகளாகக் கருப்பையைச் சேரும். பிரசவ சமயத்தில் உதவி செய்பவர்கள் கையை கழுவிச் சுத்தம் செய்யாமலும், அசுத்தமான கருவிகளை உபயோகிப்பதாலும், அழுக்கு படிந்த துணிகளை உபயோகப்படுத்துவதாலும், நஞ்சு கொடுக்க வேப்பிலை கன்றினைக் கொண்டு யோனியின் வெளிப்புறங்களை சரியான படி சுத்தம் செய்யாமல் இருப்பதாலும் ஏற்படக்கூடும். கருப்பையின் ரத்தக் கட்டி அழுகுவதாலும் காய்ச்சல் வரக்கூடும். இந்தக் காய்ச்சலுக்கு **உதரச் சிக்கல்** என்று சொல்வது வழக்கம். இதில் கூறிய பாதுகாப்புகள் எல்லாம் நோய் அணுக்கள் பிரசவகாலத்தில் சேராமல் இருப்பதற்காகவே சொல்லப்படுகின்றன. அந்த முறைகளை கையாளாமல் தவறு ஏற்பட்டாலும், பிரசவ சமயத்தில் ஆயுதங்கள் இல்லாமலும் இருந்து ஏற்பட்டுக் காய்ச்சல் வரக்கூடும்.

சிகிச்சை:– காய்ச்சல் வந்தவுடனே மாடுகள் தின்னாமல் கூட சோர்வாக இருப்பது விரைவாகவோ அல்லது மெதுவாகவோ தொடக்க வேண்டும். நீர் (மூத்திரம்) பின்பக்க இலகுவாக செய்வதற்கு உண்ணீர், காபி, பார்லி அரிசிக் கஞ்சி முதலியவை கொடுக்க வேண்டும். டெட்டாலைக் கொண்டு யோனியையும், கருப்பையையும், வேப்பிலை கொதிநீர் கொண்டு கழுவ வேண்டும். மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை நடத்த வேண்டும்; அல்லது அருகில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் கொண்டு போய் விட்டு மருத்துவம் செய்ய வேண்டும்.

மார்பில் பால் கட்டி வருதல் அதன் கஷ்டங்களும்:–

தேக்கத் தாய்ப்பாலால் மார்பில் கட்டுப்படும். முலைக்காம்பு நன்றாக உறிஞ்சப்படா விட்டால் தேக்கத் தேக்கக் கட்டுப்படும். முலைக்காம்பு சுத்தமாக இல்லாமல் பால் துவாரங்கள் அடைப்பட்டுப் பால் வராமல் இருக்கலாம். இதனால், தேக்கத்தால், பால் கறந்த பிறகு முலைக்காம்பை நன்றாக தண்ணீர் கொண்டு அலம்பிச் சுத்தமாக வைக்காவிட்டால் நோய் அணுக்கள் மேற்பரப்பின் முலைகளில் சேர்வதால் வீங்கிக் காய்ச்சல் கொடுக்கும்.

இவை வராமல் தடுப்பதற்கு, பஞ்சைக் கொதிக்க வைத்த தண்ணீரில் நனைத்துக் கொண்டு பால் கறப்பதற்கு முன்பாக முலைக்காம்பைச் சுத்தப் படுத்திப் பிறகு பால் கறக்க வேண்டும். கறந்த பிறகும் அதே மாதிரி அலம்ப வேண்டும். தேக்கத்திற்கு தேவையான பருக்கு மேல் இருந்தால் அதை முலைப் பம்பு வைத்து எடுத்துவிட வேண்டும். முலைக்காம்பு சுத்தமாக இல்லாவிட்டால் அதைக் காரமாக்கப் (Spirit) பஞ்சில் நனைத்துச் சுத்தம் செய்ய

சுத்தம் செய்ய வேண்டும். பால் கட்டியில் சுடுதண்ணீர் வைத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சீழ் பிடிக்காமல் இருக்கும்படி செய்ய முயல வேண்டும். கடைசியாகச் சீழ் பிடித்து விட்டால், அதற்குத் தேவையான கத்தி வைத்தியம் செய்ய வேண்டும்.

குழந்தை பிறந்த முதல் நாளும் பிறகும் தேக உஷ்ணம்:

பிறந்த குழந்தைக்கு 99.8 (F) உஷ்ணமானியால் காணக்கூடியதாயிருக்கும். எந்த வயது வந்தவர்களைக் காட்டிலும் 1/4 டிகிரி அதிகமாக இருக்கும். சில சமயங்களில் குழந்தை பிறந்து கர்ப்பாசயத்திலிருந்து அதன் உடன் குறைந்து விடும். வெளிவரும் வரையில் தாயின் கர்ப்பப்பையில் தாயின் சூடு உள்ளது போல இருந்ததினால் வெளிவந்த உடன் அப்பொழுது வெளியில் இருக்கும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடி சரிசெய்து கொள்ளச் செய்யும். அப்படிக் குறைந்தால் சில நிமிஷங்களில் குழந்தையை நனைத்தால் 90 (F) டிகிரி வரையில் கூட அப்படியே நின்றுவிடும்.

மூச்சு விடுதலும் நாடியும்:– (220.)

பிறந்தவுடன் மூச்சு 30 தடவையிலிருந்து 60 தடவை வரையிலிருக்கும்.

நாடி —	முதல் இரண்டு மாதங்களுக்கு நிமிஷத்திற்கு	137
"	மூன்றாம் மாதம் முதல் ஆறுமாதங்களுக்கு	128
"	ஏழாம் மாதம் முதல் பன்னிரண்டு மாதம் வரை	120
"	ஐந்து வயதில்	100
"	பத்து வயது ஆண்	80
"	பத்து வயது பெண்	90

காய்ச்சலின் மானியால் மேலும் ஒரு டிகிரி ஏறினால் நாடி நிமிஷத்திற்கு நான்கு தடவை அதிகம் அடிக்கும். ஆனால் பால்யர்களுக்கு ஒரு டிகிரி ஏறினால் நாடி பத்து அதிகமாக அடிக்கும்.

மலம்:– முதல் இரண்டு நாட்களுக்குச் சிவப்புப் பச்சை, கறுப்பு கலந்த கருப்பு மலம் வெளிப்படும். மூன்றாம் நாள் முதல் குழந்தைக்கு எப்பொழுதும் போல மலம் நாளொன்றுக்கு மூன்று தடவை போகும். இதனால் பிறந்த இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவுடன் பிறக்கிறது. ஆகையால் அதற்கு அதிகம் உணவு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த இரண்டு நாட்களுக்கும் தாயின் முலையிலிருந்து குடிக்கத் தேவைப்படுவதில்லை. ஆனால் இதனால் கொழுப்பான மஞ்சள் போன்ற சுத்த கொலஸ்ட்ரம் என்று பெயருள்ளது கிடைக்கும். அதை குழந்தை குடிக்க வேண்டும். இருந்தால் குடலில் இருக்கும் மலம் வெளியாகும். குடலில் இரண்டு நாள் உணவு இருப்பதால் சர்க்கரைத் தண்ணீர் கொடுத்துப் பேதியாக்கக் கூடாது. மூன்றாம் நாள் முதல் தாய்ப் பால் ஊட்டுவது ஆரம்பமாகிறது.

மூத்திரம்:– நான் நாளுக்குக் குறைந்தது இரவும் பகலும் நீர் இறங்கும். முதல் சில நாட்களுக்கு மொத்தம் நீர் இரண்டு அவுன்ஸ் இருக்கலாம். ஏழாவது நாளன்று மொத்தம் நீர் பத்து அவுன்ஸ் போகும்.

எடை, பலம்-உயரம்:– நல்ல வளர்ச்சியுள்ள சிசு பிறக்கும் பொழுது, ஆறு பவுண்டு முதல் எட்டு பவுண்டு வரையில் எடை இருக்கும். முதல் வாரத்தில் எடை அதிகரிப்பதில்லை. பிறகு வாரத்திற்குச் சுமார் நான்கு அவுன்ஸ் வீதம் எடை அதிகரிக்கிறது.

வயசு	நீளம்	எடை
பிறக்கும் பொழுது.	19 அங்குலம்	7 பவுண்டு
3 நாட்களுக்குப் பிறகு	20 "	8 "
2 மாதங்களுக்குப் பிறகு	21 "	10 "

வயது	நீளம்	எடை
3 மாதங்களின் முடிவு	22 அங்குலம்	12 பவுண்டு
4 "	23 "	13 "
5 "	23 "	14 "
6 "	24 "	15 "
7 "	24 "	16 "
8 "	25 "	17 "
9 "	25 "	18 "
10 "	26 "	19 "
11 "	26 "	19 "
12 "	27 "	20 "

எடை:— குழந்தை வயிற்றுப்போக்கில்லாமல் வளர்ச்சியடைந்தால் பத்து மாதங்களுக்குள் மூன்று பங்கும். தாய் அடிக்கடி குழந்தையை நிறுத்துப் பார்க்கக் கூடாது. ஒவ்வொரு வாரமாவது ஒருதரம் மாதத்தில் இருமுறையாவது நிறுக்கலாம். அவைகளின் முக்கியமானது காலையில் ஒழுங்காக அறிய [illegible] பலம் ஏற்படாமல் இருப்பது. அவசியப்பட்ட இடத்தில் வைத்தியர் கூறிய ஆலோசனைப் பெறவும். அப்படி வளர்ந்து வராமல் போக இருக்கக்கூடாது. ஆகையால் குழந்தை உடல்நிலையில் கவனிக்கப்பட வேண்டும், டல் காக்க வேண்டும்.

உச்சிக்குழி மூடுதல்:— குழந்தைக்கு உச்சியில் இரண்டு இடங்களில் குழி இருக்கும். அவ்விடங்களில் மண்டை எலும்புகள் கூடாமல் இருக்கும். முன் உச்சியில் பெரிய குழியும், பின் உச்சியில் சற்றுச் சிறிய குழியும் இருக்கும். முன்குழியில் துடிப்பைக் காணலாம். ரத்தக்குழாய்கள் அடிப்பது தெரியும். சொத்தை [illegible] இரண்டு மாதங்களில் மூடிவிடும். பின்குழி ஆறுமாதமும் முன்குழி பதினெட்டு மாதமும் ஆகும். கணைச்சூடு போன்ற நோய்களால் எலும்பு வளர்ச்சி குறைவதால் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு மூன்று வயது வரையிலும் உச்சிக்குழி மூடாமல் இருக்கும்.

அழுகை:— குழந்தை அழுவது (சத்தமாக) இயற்கை. அதைக் கண்டு பயப்பட வேண்டியது இல்லை. பசியினாலோ, எறும்பு கடித்ததாலோ அழுகிறது என்று நினைப்பது தவறு. குழந்தை காரணமில்லாமல் அழுதால் [illegible] குழந்தை அழுவதில் ஒன்று கவனிக்க வேண்டும். அதனால் மேலும், பெற்றோர்கள் பயப்பட வேண்டியது இல்லை குழந்தை அழுவது. அதனால் சுவாசப்பைகள் விரிவடைந்து நன்றாக வேலை செய்கின்றன. அழும்போது நுரையீரலுக்குப் பலம் உண்டாகி, உடல் நன்கு வளர்ச்சி அடைகிறது.

உணவு:— பிறந்த குழந்தைக்கு ஏற்ற உணவு தாயின் பால். இதன் பின்பு தாய்ப்பால் அதிகம் சுரக்காவிட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தைக்குப் பால் கொடுப்பதற்கு முன்பாகத் தாயின் முலைக்காம்புகள் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால் முன்பு சொன்ன முறைப்படி அவைகளைப் பக்குவப்படுத்த வேண்டும். முதல் நாளைக்கு ஆறு மணி நேரத்திற்கு ஒருதடவை வெந்நீர் [illegible] பிறகு இரண்டு [illegible] குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். இரண்டாம் நாள் முதல் நான்கு மணி நேரத்திற்கு ஒருதடவை கொடுக்க வேண்டும். இரவு பத்து மணிமுதல் விடியற்காலை வரை ஒரே ஒருதடவை தான் கொடுக்க வேண்டும். [illegible] பின்பற்றுவதில்லை. குழந்தை கத்தும் போதெல்லாம் [illegible] தாய்ப்பால் கொடுக்க வேண்டியது என்று நினைக்கிறார்கள்.

223. **குழந்தை கத்துவது எல்லாம் பசிக்காக என நினைப்பது தவறு.** 178

அநேக காரணங்களை ஒட்டிக் கத்தும்.

1 இயற்கையாகக் கத்துவது.

2 அதிக வெப்பத்தினாலாவது அல்லது குளிர்ச்சியினாலாவது கத்தலாம்.

3 குழந்தைக்கு அணியும் மேலும் போடப் படுகின்ற துணி மடிப்புகள் உறுத்தலாம் இரவில் [illegible] மற்றவர்களுக்கு உண்டாகிறதும் குழந்தைகளுக்கு ஏற்படும் உண்டு.

4. அதிகமாகப் பால் குடித்து வயிறு உப்புசமாகி வலி உண்டாகி அதனால் கத்தும்.

5. மலம் சரிவரக் கழியாததனால் கத்தும்.

கத்துவது என்பது குழந்தையின் [illegible] பாஷை. ஆதலால் கத்துதலை நன்றாகத் தாயும் மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். குழந்தைக்குத் தேவையான பாலைக் காட்டிலும் தாயினிடத்து அதிகப் பால் உண்டாகிறது. இது இயற்கையினுடைய முன்னேற்பாடு. அதை அறியாமல் பால் இருக்கட்டும் கொடுக்கக் கூடாது. அதிகப் பாலை எப்பொழுதும் குழந்தைகள் கக்கி விடும். இது ஒழுங்காக இருக்க வேண்டுமானால் குழந்தை பருவம் உள்ளவர்களால் வளர்க்கப் பட வேண்டும்.

நம்மைப் போலவே குழந்தைக்கும் தாகம் உண்டு. கோடைக் காலத்தில் அதிகமாக இருக்கும். தேவையான தண்ணீர் கொடுக்க வேண்டும். சுத்த நீர் கிடைக்காவிட்டால் அதற்கு சொந்தமாக காய்ச்சி ஆறவைத்துக் கொடுக்க வேண்டும். பால் கொடுக்க வேண்டிய நேரத்தைத் தவிர மற்ற வேளைகளில் கண்டதை எதுவும் ஆகாரம் கொடுக்கக் கூடாது.

இதன் [illegible] ஒழுங்காக [illegible] தடவை தவிர போதுமானது. தாய்ப்பால் [illegible] நேரம் வரை ஒரு தடவையில் கொடுக்கலாம்.

கொடுக்கக் கூடிய பால் அளவு :- ஒரு பவுண்டு எடைக்கு ஒரு நாளைக்கு 1½ அவுன்ஸ் வீதம். ஒரு குழந்தை எட்டு பவுண்டு இருக்குமானால் ஒரு நாளைக்குத் தாய்ப்பால் பன்னிரண்டு அவுன்ஸ் தேவை. **ஆறு வேளைக் கணக்கு.**

வயிற்றின் மேல் கணக்கு :- குழந்தைக்கு எவ்வளவு மாதமோ அவ்வளவு அவுன்ஸும் அதோடு ஓர் அவுன்ஸ் அதிகமாகவும் ஒவ்வொரு தடவையும் கொடுக்க வேண்டும் **உதாரணமாக** மூன்று மாதத்துக் குழந்தைக்கு **ஒரு தடவைக்கு நாலு அவுன்ஸ்** பால் கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு **ஆறு தடவை** கொடுக்க வேண்டும்

தாய்ப் பாலுக்கு மாற்று :- ஏதாவது ஒரு காரணத்தால் தாய்ப்பால் கொடுக்கக் கூடாத நிலைமையில் இருந்தால் அதற்கு மாற்று அதே வயதுள்ள குழந்தையின் தாய் [illegible] கொடுக்கப் பட வேண்டும்.

மாற்றுத் தாயின் தகுதிகள் :-

(1) நல்ல உடல் நிலையுள்ளவளாகவும், க்ஷயம், சொறி, சிரங்கு, புண், மேகவியாதி முதலியவை இல்லாமலும் இருக்க வேண்டும்.

(2) அதே மாதமுள்ள குழந்தை இருப்பவளாக இருக்க வேண்டும்.

(3) சுத்தமான [illegible] சுத்தமான பழக்க வழக்கங்களும் உள்ளவளாக இருக்க வேண்டும்.

179

4. தொட்டியிலேயே உண்டு அங்கேயே தங்கியிருக்க வேண்டும்

5 தினமும் பால் இருப்பவராகவும் இருக்க வேண்டும். இரண்டு குழந்தைகளைக் காப் பாற்ற வேண்டியவராக இருப்பதால் இரட்டைக் குணங்கள் இருக்க வேண்டியது அவசியம்

இக்காலத்தில் தாயின் பால் கொடுக்காவிட்டால் பசுவின் பாலை விட உயர்ந்ததும், சத்து அப்படியே கொடுக்கக் கூடியதும் தாயின் பாலைப் போலக் கிடைப்பது மாறாது கடும்புப் பால் அது நாட்டில் குழந்தையைத் தீண்டக் கூடாத பொருளாகக் கருதுவதோடு அதை உபயோகப் படுத்தும் வழக்கம் கூட அதிகம் போதிய இல்லை. ஆகையால் கடும்புப் பால் கொடுப்பதற்கு மக்கள் இஷ்டப்பட மாட்டார்கள். ஆனாலும் கிடைத்தால் சுத்தமான கடும்புப் பாலைப் போல உயர்ந்தது வேறு ஒன்றும் இல்லை.

கடும்புப் பால் கிடைக்காவிட்டால் பசுவின் பால் கொடுக்கலாம். பசுவின் பாலைச் சுத்தமான தண்ணீருடன் கலந்து இனிப்புச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பின் கண்டபடி கால அட்டவணையின் படிக் கொடுக்க வேண்டும்.

பாலும் தண்ணீரும்

வயசு		சர்க்கரைச் சேர் நாள் ஒன்றுக்கு	நாள் ஒன்றுக்கு
பிறந்த 3	ஆவது நாள்	12 அவுன்ஸ்	அஞ்சு வேளைகளில் கொடுக்க வேண்டும்
4	ஆவது நாள்	14 அவுன்ஸ்	"
5	"	15 "	"
17	"	17 "	"
மாத முடிவில் ஒரு மாதத்தில்		24 "	"
2	"	25 "	"
3	"	27 "	"
4	"	30 "	"
5	"	30 "	"
6	"	30 " இனி இரண்டில் ஒரு பங்கு தண்ணீர் கலக்க வேண்டும்	

பாலையும் தண்ணீரையும் சர்க்கரையும் சேர்த்துக் கொதிக்க வைத்துக் கொண்டு உடல் சூட்டிற்குத் தக்கபடி ஆற வைத்துக் கொடுக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு தடவை பால் கொடுக்கும் போதும் ஒரு டீஸ்பூன் அளவு காய்ச்சி ஆறிய தண்ணீர் கொடுக்க வேண்டும். குழந்தையின் சரும வளர்ச்சிக்கும், பசுவின் பால் சுலபமாக ஜீரணமாவதற்கும் இத்தண்ணீர் உதவியாக இருக்கும். பால் கொடுக்கும் பாத்திரம், காம்பு, பால் குப்பி, சொப்பு இவைகளை ஒவ்வொரு தடவையும் கொதிக்க வைத்துச் சுத்தம் செய்து வைக்க வேண்டும். உபயோகப் படுத்து முன்பும் சுத்தம் செய்து உபயோகிக்க வேண்டும். பாலும் நல்ல இளம் கன்றுள்ள பசுவின் பாலாக இருக்க வேண்டும். குழந்தைக்குக் கதகதப் பால் கொடுக்கக் கூடாது. மேலும் குழந்தையின் பால் ஜீரணம் கெட்டு கபம் கட்டும். பேதி காய்ச்சல் வரும். இதை மாந்தம் என்று சொல்வார்கள். மாந்தத்திற்கு இரண்டு காரணங்கள் உண்டு

1 அன்னையைத் தொட்டு, வாசல்படி, வெளி முற்றம் முதலிய இடங்களில் சூடான வெந்நீரை ஊற்று வைத்தும் கூட விட்டுப் புகை போர்வை போர்த்தியும் கொட்டுகின்றது தானாகி விடுவது விட்டு கூட்டுவது.

2 குழந்தைக்குக் கதகதப் பாலைப் புகட்டுவது.

அன்னையை ஆய்க்கும் காலத்தில் வரை இன்னாமலும் அதிக்கூடான தண்ணீரை வேறு கொண்டு ஊற்றுவதனால் செய்வதாகவும் இருக்க வேண்டும்.

பசியுள்ள குழந்தைகளுக்குப் பால் இனிப்பாக இருந்தால் மகிழ்ச்சியுடன் குடிக்கும். இதைத் தாய்மார்கள் அறியும்படி சொல்ல வேண்டும்.

தாய்ப்பால் இல்லாத குழந்தைக்குப் பசுவின் பாலுக்குப் பதிலாக ஆட்டுப்பால் கொடுக்கலாம். இருப்பினும் பசுவின் பால் போலத் தண்ணீர் கலந்து காய்ச்சி, அன்றன்று தண்ணீர் கலந்து கொடுக்கலாம். இம்மாதிரி டப்பாப் பால் கொடுத்து வளர்க்கும் குழந்தைகளுக்குத் தாயின் பாலின் அளவு உயர்ச் சொந்த வைப்பதில் போய் விடுகிறது. இதற்காகக் குழந்தைகளுக்குப் பழ (பச்சை) ரசம் கீரைச் சாறு முதலியவை கொடுக்க வேண்டும். ஆரஞ்சுப் பழ ரசம், தக்காளிப் பழ ரசம் இவைகளைக் கொடுக்கலாம். தோலுரித்த பழங்கள் கிடைக்காவிட்டால், முள்ளங்கி கீரைச் சாறு அல்லது இதர கீரைச் சாறு கொடுத்தால் போதுமானது.

குழந்தையைத் தினசரி குளிப்பாட்ட வேண்டும். சுடுதண்ணீரைக் காட்டிலும், வெயிலில் வைத்த இளஞ்சூடான தண்ணீர் உபயோகிப்பது நலம். எண்ணெய் தேய்ப்பது நல்ல பழக்கம். தேய்த்துச் சிறிது நேரம் வெயிலில் இருந்து பிறகு ஸ்நானம் செய்விக்க வேண்டும். வாரத்துக்கு ஒரு முறையாவது செய்ய வேண்டும். ஆறு மாதத்திற்குப் பிறகு கோடை காலத்தில் குளிர்ந்த தண்ணீரிலும், குளிர்காலத்தில் வெந்நீரிலும் ஸ்நானம் செய்விப்பது நலம். வாரத்திற்கு ஒரு முறையாவது வேப்பிலையைக் காய்ச்சின தண்ணீரை விட்டு ஸ்நானம் செய்விக்க வேண்டும். இதனால் சரும சம்பந்தமான கரப்பான் முதலிய நோய்கள் வராமல் இருக்கும்.

காற்று வெளிச்சமுள்ள இடத்தில் குழந்தை படுத்திருக்க வேண்டும். இருட்டு அறைகளில் குழந்தையை வைத்திருக்கக் கூடாது. காலை மாலை வேளைகளில் இளவெயில் குழந்தையின் மேல் படுவது நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும். குழந்தையின் உடை லேசானதாகவும் தளர்ச்சியானதாகவும் இருக்க வேண்டும். குளிர் காலங்களில் மேலே சூடான மெல்லிய கம்பளித் துணிகளை உபயோகிக்க வேண்டும். வெக்கை அதிகமாக இருக்கும் கோடைக் காலத்தில் குழந்தையை மூடாமல் இருக்க வேண்டும்.

பால் புட்டி, புட்டிப்பால் இவைகள் விரும்பப்படவில்லை.

பால் மறப்பது:— எவ்வளவு காலம் தாய்ப்பால் கொடுப்பது என்பதைப் பற்றி நம் நாட்டினர் அதிகக் கவலை எடுத்துக் கொள்வதில்லை. குறிப்பிட்ட காலம் வரையில் தான் கொடுக்க வேண்டும் என்று கணக்கு இருக்கிறது. அதை அறியாமல் மறு கர்ப்பம் ஆகும் வரையிலும், சில வேளைகளில் மறு குழந்தை பிறக்கும் வரையிலும் கூடச் சில தாய்மார்கள் பால் கொடுக்கிறார்கள். இது மிகவும் தவறு. பால் கொடுப்பதை நிறுத்த ஓர் அளவு யாரும் வேண்டுமென்று இருந்தால் பல சமயத்திற்கு ஒரு ஒன்பது மாதம் வரையில் கொடுப்பது ஏற்ற வயது என்று கொள்ளலாம். மாதக் கணக்கில் பார்க்கும் பொழுது ஆறு மாதங்களிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் பால் கொடுப்பதை நிறுத்த வேண்டும். அதாவது மாதத்தில் குழந்தைக்கு மாவுப் பொருள் (starch) ஜீரணிக்கும் சக்தி உண்டாகிறது. அப்பொழுது கஞ்சி, பார்லிக் கஞ்சி இவைகளில் ஒன்றில் பால் கலந்து இனிப்புச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பல் முளைக்க ஆரம்பமானதும் தாய்ப்பால் கொடுப்பதை எவ்வகையிலும் நிறுத்தி விட வேண்டும்.

பல் முளைப்பது:— குழந்தைக்கு ஆறு மாதம் முதல் பல் வெளிவர ஆரம்பமாகிறது. இதற்குப் பால் பல் என்று பெயர். மூன்று வயது வரையில் முளைக்கும். இவை மொத்தம் இரு வரிசையும் சேர்ந்து இருபது பற்கள். பிறகு ஆறு வயதிற்கு மேல் இருக்கும் நிரந்தரமான பற்கள் வெளிவர ஆரம்பமான

சாதாரணமான பற்களால் இடித்து மேலே தள்ளப்பட்டு விழுந்த பின் இவ்விடப் பகுதியை வயது வரையில் பெற்றுக்கொண்டு பற்கள் வளர்ந்து விடுகின்றன

229. பால் பற்கள் புறப்படும் முறை

6 வது - மாதத்தில்	அடிவரிசை நடுமத்தியப் பற்கள்	2
7-8 - வது மாதத்தில்	மேல்வரிசை " பற்கள்	2
9 ஆவது "	முன் பற்களுக்குப் பக்கத்தில் "	2
10 ஆவது "	அடிவரிசை பற்களுக்கு பக்கத்தில் "	2
12 ஆவது "	" கடைவாய்ப் பற்கள் "	2
14 ஆவது "	மேல் வரிசை "	2
16 - 20 ஆவது "	அடியிலும் மேலும் கூர்மையான நாய்ப் பற்கள்	4
20 - 30 ஆவது "	அடியிலும் மேலும் கடைவாய் பற்கள்	4

30 மாதக் கடைசியில் 20 பற்களும் புறப்பட்டு விடும். அநேகமாக மேலே குறிய திட்டப்படிப் பெரும்பான்மையான குழந்தைகளுக்குப் பல் புறப்படுகிறது. சில குழந்தைகளுக்குச் சில மாதங்கள் முன் பின்னாகப் புறப்படலாம். பல் புறப்படும் காலத்தில் குழந்தைகளுக்குப் பேதியாகும். ~~[illegible]~~ பல் புறப்படும் காலத்தில் குழந்தைகளுக்கு ஈறுகளில் வலி வீக்கம் ஏற்படும். குழந்தை வாயைக் கடிக்கும். இந்தக் காலத்தில் உணவு கொடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் அழாமல் இருப்பதற்காக ரப்பர் சூப்பிகளைக் கொடுப்பது பழக்கமாயுள்ளது (ஈறு) வீங்கி வீக்கமுள்ள குழந்தைகள் இவைகளை வெகு இன்பமாய்க் கடிக்கின்றன. மேலும் ரப்பர் எப்பொழுதும் வாயில் ஊறிக் கொண்டிருப்பதும் கெடுதல். இந்த வழக்கம் இல்லாமலிருப்பது நலம். நோயுள்ள சில தாய்மார்கள் வாயால் [illegible] குழந்தைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் படி வைப்பது வழக்கம். இது எப்பொழுதுமே கெடுதல் இல்லாவிட்டாலும் கெட்டபழக்கம் உண்டாகும். கண்ட சுத்தமாக இராது. பால் அருந்த வாயில் வைத்துக் கொண்டிருப்பதால் பால் வாசனை இருந்து கொண்டே இருக்கும் அதற்காக ஈக்கள் வந்து அதில் உட்காரும். அதைக் கவனியாமல் மறுபடியும் குழந்தை வாயில் வைத்தால் அநேக நோய்கள் வருவதற்குக் காரணமாகும். மற்றும் சில குழந்தைகள் விரல்களை வாயில் வைத்துச் சூப்பிக் கொண்டிருக்கப் பழகி விடுகின்றன. குழந்தைகளுக்கு விரல்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரியாது. இந்தச் சூப்புவதற்குச் சொல்லிக் கொடுக்கும் [illegible] உண்டு. அது மட்டுமல்லாமல் விரல் சூப்பும் பழக்கம் வெகு நாட்களுக்குக் குழந்தைக்கு விடாது. சாதாரணமான பற்கள் வரும் முறை கெட்டுப் பழக்கம் மாறும். இதனால் மேல் முகம் முன் வந்து, உதட்டுக்கு வெளியே பல் வரும். முகம் அழகு கெட்டுப் போவதுடன் வாயால் மூச்சு விடும் பழக்கமும் ஏற்படும். ஈறு வீக்கமிருந்தால் தாய் தன் விரலைச் சுத்தம் செய்து கொண்டு ஈறுகளைத் தடவிக் கொடுக்க வேண்டும்

தூக்கம்:— குழந்தை பிறந்த முதல் நாளும் மற்றொன்று நாட்களிலும் அநேகமாகத் தூங்கிக் கொண்டிருக்கும். கர்ப்பத்தில் மாதக்கணக்கில் தூங்கியிருந்த சிசு பிறந்தவுடன் இரண்டு நாள் ஆகாரம் இல்லாமல் இருப்பதினால் தூங்கிக் கொண்டிருக்கும். எப்பொழுதும் தூங்குவதும் அதற்குச் சகஜமாகக் கொள்ளும். முதல் சில வாரங்களுக்கு இருபத்து நான்கு மணி நேரத்தில் அநேகமாய் இருபத்திரண்டு மணி நேரம் தூங்கிக் கொண்டிருக்கும். குழந்தை வளர வளரத் தூக்கம் குறைந்து கொண்டு போகும்.

230. தூக்கத்தின் திட்டம்

182 பக்கம் முன்பக்கம் பார்க்கவும்

அது அடைப்பட்டு விடுவதால் உள்ளிருக்கும் மலம் வெளியே வெளியேறிப் போகாமல் தங்கி அன்னங்கள் அதிகரித்து அழற்சியை உண்டாக்கிப் புண் சீழ் பிடித்துக் கட்டியாகி உள்ளேயே அல்லது வயிற்றுக்கு வெளியேயோ உடைந்து சீழ் வெளிப்படும். உள்ளே உடைந்து விட்டால் உயிர் பிழைப்பது அரிது.

இந்த நோய்க்குக் காரணம் இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அன்னங்களால் உண்டாகிறது என்று நிச்சயமா சொல்லலாம். அது நோய் உண்டான பின்பு அதிகரித்து அழுகி, சீழ் பிடிக்க வழியை உண்டு பண்ணுகிறது. மலச்சிக்கல் எப்பொழுதும் உள்ளவர்களுக்கு இந்த நோய் வரக்கூடும். மாமிசம் உண்பவர்களுக்கு அதிகமாக உண்டாகிறது. இது கற்கள், பழ விதைகள், கிருமிகள், மலத்துண்டுகள் இவையெல்லாம் சேர்த்துக் கொண்டு நோய்க்குக் காரணமாகலாம். காயப்பட்ட அதிர்ச்சியும் உடையவர்களுக்கு வரலாம்.

அநேகமாய் இந்த நோய் திடீரெனப் பொறுக்கமுடியாத வலியுடன் துவங்கும். வலி அடிவயிற்றின் வலது பாகத்தில் வலது இடுப்பெலும்பு முனைக்கும் தொப்புளுக்கும் மத்தியில் உண்டாகும். அந்த இடத்தைக் கையால் தொட்டாலும், உடம்பைப் பக்கங்களில் திருப்பினாலும் பொறுக்கமுடியாத வலி எடுக்கும். இருந்து தேய்த்து விட்டாலுங்கூட வலி தாங்கமுடியாது, காய்ச்சல், வாந்தி, மலச்சிக்கல், தலைவலி, தூக்கமின்மை இவைகளெல்லாம் ஆரம்பிக்கும். வலிக்கும் இடத்தில் மெதுவாகக் கையை வைத்துப் பார்த்தால் வீக்கம் காணக் கூடும்.

சிகிச்சை:- படுக்கையை விட்டு எக்காரணத்திற்காகவும் எழுந்திருக்கக் கூடாது. பேதிக்குக் கொடுக்கக் கூடாது. வலியும் வீக்கமும் அதிகமானால் தேர்ந்த சஸ்திர வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டும். இல்லாவிடில் இந்த

சிலருக்கு இந்த நோய் இவ்வாறு தீவிரமாக ஆரம்பிப்பதில்லை. வயிற்றில் வலி, மலச்சிக்கல், வயிற்று உப்புசம் இவைகளோடு மூன்று நான்கு நாட்கள் கழித்த பிறகு ஜுரம் வரும். பிறகு மரணம் நேரிடுவதோ அல்லது சில மாதங்களுக்குப் பிறகோ மறுபடியும் அதே இடத்தில் வலி காண்பதும் மறுபடி தணிவதும் மாறி மாறி வருடங்கள் கழிந்தாலும் கழியலாம். இவ்வாறு வயிற்றிற்குள் சீழ் பிடித்துக் கட்டியாகி வயிற்றிற்குள்ளே வலையின் (Peritoneum) உடைந்து ரணம் உண்டாக்கலாம்.

படுக்கையாய் இருக்கவேண்டியது முதல் சிகிச்சை.

ஜுரம் உடன் கருவியினால் டூஷ் சுத்தம் செய்ய வேண்டும். வலி அகன்ற பிறகு கூட நான்கு வாரங்களுக்குப் படுக்கையில் இருக்க வேண்டும். உடம்பையும் அசையாமல் வைத்து அடிவயிற்றில் பற்றுப் போட வேண்டும். பின்னர் வாலிஸினேட் கொடுத்தால் துன்பங்களின் கொடுமை சற்றுக் குறையும். மருத்தரப் பால் வெண்ணெய் எடுத்த மோர், பழரசம் இவைகளோடு பழச் சர்க்கரை Glucose சேர்த்துக் கொடுக்கலாம். ஜுரம் பட்ட அது-க்குப் பால், கஞ்சி, மோர் இவையன்றி உணவு கூடாது. கலோமெல் Calomel 1/4 கிரெயின் நாள் ஒன்றுக்கு 4-6 தடவை வரை கொடுத்துப் பிறகு கடுக்காய்த்தூள் கொடுத்து மலத்தை வெளியாக்க வேண்டும். கறிகாய், பருப்பு முதலிய சமிக்கக் கூடியவை இரண்டும் உணவாகக் கொடுக்கக் கூடாது. இந்த வலி அடிக்கடி வருமானால் சஸ்த்ர வைத்தியர்களிடம் நோயாளியை அனுப்பி விட வேண்டும்.

மருந்து முறை:— உள்ளிப்பூண்டு ரஸம் 1/2 டிராம் 30 சொட்டு துன்பங்களின் விருத்தியை நீக்க.

கலோமெல் 1/4 கிரெயின், சோடா 5 கிரெயின் ஒரு பொட்டலம். ஒரு நாளைக்கு நான்கு முதல் ஆறு பொட்டலம் வரையில்

ஊமத்தை ஒரு பலம் எடை, வசநாபி ஒரு பலம் எடை
இரண்டும் அரைத்து வயிற்றிற்குப் பற்றுப் போட வேண்டும்
பிஸ்மத் சாலிஸிலேட் 10 கிரேன் எடை, சோடா 10 கிரேன் எடை ஒரு பொட்டலம். ஒரு நாளுக்கு மூன்று வேளை.

18 குடல் அடைப்பு (Intestinal obstruction) 284

குடல் அடைப்பு பல காரணங்களால் உண்டாகலாம்.

1 மலம் இறுகிக் கட்டியாகிக் குடலால் தள்ள முடியாமல் அடைத்து விடுவது

2. மற்ற அவயவங்களில் கட்டி முதலியவை உண்டாகி, குடல் தொளையை வெளியிலிருந்து அழுத்தி அடைப்பது

3. குடலில் வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களால் புண் உண்டாகிப் பிறகு ஆறுந் தழும்பு உண்டாகி அது சுருங்கிக் குடல் அடைத்து விடுவது

4 குடலிலேயே கட்டிகள் (New growths) முதலியன உண்டாவது

5 குடல் பிதுக்கத்தினால் (Hernia) அடைப்பட்டுப் போவது

6. குடல் முறுக்கிக் கொண்டு தொளை அடைத்து விடுவது.

7. குடல் தொளை ஒன்றுக்குள் ஒன்றாகச் செருகி அடைத்துவிடுவது (Intussusception)

குறிகள்:— திடீரென்றே அல்லது காலடைவிலோ மலம் வெளியாகாமல் நின்று விடுவது. வலி, வயிற்று உப்புசம், பசியின்மை, வாந்தி, வாந்தி எடுக்கும் பொழுது முதலில் உண்ட உணவு வெளிப்பட்டுப் பிறகு சில நேரமோ காட்களோ கழிந்து மலம் வாய் வழியாக வெளியாவது. கடைசியாகச் சோர்வு, பலவீனம், வேர்வை, நாடி தேய்ந்து வாட்டியுடன் மரணம் நேரிடுவது. இதற்கு மருந்தின் மருத்துவம் உபயோகமில்லை. தேர்ந்த ரண வைத்தியர்களை உடனே கூப்பிட்டு மருத்துவம் செய்யச் சொல்ல வேண்டும். இவ்வாறு ஆக உயிருக்கு ஆபத்து அதிகம். கடுத்திருந்தால் குடல் கழியாதும் அவயவங்களின் விவரம் விட்டும் அடைத்திருக்கும் இடத்தை தெரிப்படுத்த வேண்டும்.

44
19

வபை அழற்சி (Peritonitis)

வபை என்பது மெல்லிய ஜவ்வு, வயிற்றினுள் இருக்கும் எல்லா அவயவங்களையும் மூடிக் கொண்டு வயிற்றுச் சுவரின் உட்புறத்திலும் படிந்துள்ளது. அதனின்று நெய் போன்ற சுரப்பு சுரந்து ஈரப்பசை, குடல் போன்ற அவயவங்கள் உராயும் போது வழுவழுப்பாக இருக்கும்படி செய்கிறது. மேலும் அதில் நிணநீர் செல் (Lymphocytes) ஏராளமாக இருப்பதால் நோய் அணுக்கள் அணுகாமல் காப்பாற்றுகிறது

காரணங்கள்:— 1. வெளியிலிருந்து கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டுக் காயம் ஏற்படுவது.

2. வயிற்றினுள் உள்ளிருக்கும் அவயவங்களில் அழற்சி ஏற்பட்டு அதனின்று வபைக்குப் பரவுவது. அந்த அவயவங்களில் புண் போன்ற காரணங்களால் துவாரம் உண்டாகி அதனின்று வபையில் நோய அணுக்கள் பரவுவது

3 குடலில் க்ஷய ரோகம்

4. டைபாய்டு அல்லது பித்த வாத சன்னி பாதக் காய்ச்சலால் குடல் புண்ணாகித் துவாரம் உண்டாவது

5 அதிர்ச்சியால் உண்டாகும் புண்ணால் குடலில் துவாரம் உண்டாகி விடுவது

6. இரைப்பைப் புண், கட்டி, இவைகளால் துவாரம் விழுந்து விடுவது

7. கல்லீரலில் சீழ் பிடித்து உடைவது

8 குடல் வால் சீழ் பிடித்து உடைவது

9. பித்த நீர்ப்பையில் துவாரம் உண்டாவது

10 சிறுநீர்ப்பை, அண்டகோசம், கருப்பை முதலியவைகளில் அழற்சி உண்டாகி, அவற்றை மூடியிருக்கும் வபைக்குப் பரவுவது

குறிகள்:— பொறுக்க முடியாத வயிற்றுவலி. கையால் தொடுவதுங்கூட வலியை அதிகமாக்கும். வயிற்று உப்புசம், வாயு பந்தம் மலபந்தம், வாயின் துர்நாற்றம், அடிக்கடி தாகம், பசியின்மை, தாகம், புரட்டல், வாந்தி, காய்ச்சல் 104° 105° வரையில், கைநாடி

சேதமாகவும் மலக்குறைவாகவும் இருப்பது, சிறுநீர்க் குறைவு

சிகிச்சை:- இதற்குக் கருவி மருத்துவருடைய கவனிப்புத் தேவை

பொதுக் குறிப்புகள்:- கருவி மருத்துவம் செய்யவேண்டிய காலம் தாண்டி விட்டால் உயிர் போய்விடும். தற்காலிகமாக மருத்துவம் செய்யலாம். நோயாளி படுக்கையில் இருக்கவேண்டும். வாய்வழியாக உணவு ஒன்றும் கொடுக்கக் கூடாது. உப்பு நீர் ரத்தக் குழாய் மூலம் செலுத்தித் தாகத்தைத் தணித்துப் பலத்தைக் கொடுக்கலாம்.

அழுத்தி கடுமையாக இருந்தால் இதற்கு கருவியை உபயோகப்படுத்தலாம். வயிற்றின் மேல் போரிக் பௌடர் கொதிக்கும் தண்ணீரில் கலந்து கம்பளித் துணியை அதில் நனைத்துப் பிழிந்து சூடான ஒத்தடம் கொடுக்கலாம். கருவி மருத்துவர் கிடைக்கும் வரையில் கலோமல் 1/4 கிரெய்ன், சோடா 10 கிரெய்ன் ஒரு பொட்டலம் செய்து ஒரு நாளைக்கு 6 முதல் 8 வேளை கொடுக்கலாம். பலவீனமான நாடி ஏற்படும் வரை அழுத்திக்கும் கருப்பையை அயோடின் லோஷன் செய்து யோனி மேலாகக் கழுவவேண்டும். படிகார கந்தி 30 கிரெய்ன் முதல் 60 கிரெய்ன் வரையில் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்கலாம்.

குடற் புழுக்கள் (Intestinal Worms) 286

நான்கு வகை:- 1 நாக்குப் பூச்சி (Round worms) 2 நூல் பூச்சி (Thread worms). 3 நாடாப் பூச்சி (Tape worms) 4 கொக்கிப் பூச்சி (Hook worms)

நாக்குப் பூச்சி:- ஆறு அங்குலம் முதல் பன்னிரண்டு அங்குலம் வரையில் நீளமாக இருக்கும். தனியாகவும் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தும் இருக்கும். மருந்து கொடுத்து வெளியாக்கும் பொழுது பத்து பன்னிரண்டு பூச்சிகள் சேர்ந்து உருண்டையாக

வெளிப்படும். குடலில் பெண் பூச்சி முட்டை யிடுகிறது மலத்தோடு முட்டைகள் வெளியாகின்றன. இந்த முட்டைகள் வெகு நாட்களுக்கு உயிரோடு இருக்கும். தண்ணீர் மூலமாக மறுபடியும் வயிற்றுக்குள் சென்று மறுபடியும் பூச்சியாகிறது. ஆறு குளம் இவற்றின் கரைகள் மலத்தினால் அசுத்தம் செய்யப்படுகின்றன. அந்தத் தண்ணீரில் ஸ்நானம் செய்வது, வாய் கொப்பளிப்பது தண்ணீரைக் குடிப்பது முதலிய உபயோகத்தினால் இந்தப் பூச்சியின் முட்டைகள் வயிற்றினுள் சென்று குடலில் வளருகின்றன.

குறிகள்:— இதுவென்று குறிப்பிட்ட குறிகள் இல்லை. வயிற்றிலிருந்து சாமான்யமாக பூச்சிகள் மலத்தில் சில சமயம் வெளியாகலாம். சில சமயம் குடலிலிருந்து இரைப்பைக்கு வந்து அங்கிருந்து தொண்டைக்கு ஏறி, வாய், மூக்கு இவற்றின் வழியாக வெளிவருவதும் உண்டு. வாந்தியின் மூலமும் வாயிலிருந்து வெளிவரலாம். வாயில் விஷகாரணம் ஒன்றும் இல்லாமல் அதிகமான உமிழ்நீர்ச் சுரப்பு, பசியின்மை, சில சமயம் காரணம் இல்லாமல் அதிகப் பசி, வயிற்று வீக்கம், உடல் இளைத்தல், இரவில் தூக்கத்தில் பற்களை நெரித்தல், தூக்கத்தில் அறியாமல் மூத்திரம் இறங்குதல் இவை எல்லா விதமான குடற் பூச்சிகளுக்கும் உள்ள குறிகள். சில சமயம் இந்தப் பூச்சிக் கல்லீரலில் சென்று. அங்கே பித்தப் பைக் குழாயை அடைத்துக் கொண்டு மஞ்சள் காமாலையை உண்டாக்கலாம். மலத்துவாரத்தில் அரிப்பை உண்டாக்கும்.

சிகிச்சை:— எல்லா வயிற்றுப் பூச்சிகளுக்கும் முறை ஒன்றுதான் முதல் மருந்தைக் கொடுத்துப் பிறகு பேதிக் கொடுத்தால் பூச்சிகள் வெளியாகும். பூச்சிகள் எல்லாம் வெளியாகும்வரையில், சிலநாட்கள் விட்டுவிட்டு எவ்வளவு தடவை வேண்டுமோ அவ்வளவு தரம் கொடுக்கவேண்டும்.

இவை பட்டினியிருந்து பசுக்கும் போதும் முன்னதாக ஸான்டோனின் (Santonine) 2 கிரெயின், கலோமல் இரு கிரெயின் சேர்த்துச் சர்க்கரையில் கலந்து கொடுக்கவேண்டும். மறுநாள் காலையில் விளக்கெண்ணெயோ அல்லது பேதி உப்போ கொடுக்க வேண்டும்.

தைமால் 15-30 கிரெயின் காலையில் கொடுத்து மூன்று மணி நேரத்திற்குப் பிறகு பேதி உப்புக் கொடுக்க வேண்டும். பேதியுப்புக்குப் பதிலாய்க் கடுக்காய் மூன்று அல்லது நான்கு படுக்கப் போகும் பொழுது புசிக்க மருந்துடன் சாப்பிட்டால் நாக்குப் பூச்சி மறுநாள் காலையில் வெளியாகும்.

நாடாப் பூச்சி:- வெண்மையாகவும் தட்டையாகவும் நாடாக்கள் போல் மடித்து மடித்துச் சுருண்டும், பல அடி நீளமுள்ளவையாகவும் இருக்கும். இவை துண்டு துண்டாக வெளிப்படும். இப்பூச்சிக்குத் தலையும், அதன் வாயில் கொக்கியும் இருக்கும். இந்தக் கொக்கியால் குடலின் சுவரில் மாட்டிக் கொண்டு வளரும். மேலும் வளர்ந்த உடன் துண்டு துண்டாக மலத்துடன் வெளிவரும். இத்துண்டுகளில் முட்டை ஏராளமாக இருக்கும். இம்முட்டைகள் வளர்ந்து சிறு புழுக்களாகும். மிருகங்களால் புல் பூண்டு முதலியவை மேயும் பொழுது இந்த முட்டைகள் அவைகளுடைய வயிற்றில் சென்று அங்கிருந்து அவைகளின் தசைகளுக்குச் சென்று அங்கே தங்கியிருக்கும். பிறகு அந்த மிருகங்கள் கொல்லப்பட்டு மாம்ச உணவாக மனிதர்களால் உண்ணப்பட்டு அவர்கள் குடலில் சென்று அங்கே வளருகிறது.

நன்கு வேகாத மாம்சத்தை உண்பதால், மனிதர்களுக்கு இந்த வியாதி உண்டாகிறது. காரணமில்லாமல் அதிக பசி, பலவீனம், களைப்பு, சில சமயத்தில் வயிற்றுப் போக்கு, மற்றும் சில சமயத்தில் மலச்சிக்கல், ஜுரம், மூக்கு துவாரத்தில் அரிப்பு, அதிக உமிழ்நீர் சுரத்தல், தலைவலி, வயிற்றுவலி, இருமல், தலை சுற்றல் பலக்குறைவு காணப்படலாம். அநேகமாய் ஒரு குறியும் தெரியாமலே இருந்து வரும். பூச்சியின் உடல் துண்டுகளை மலத்தில் பார்த்த பிறகுதான் இந்த நோய் தெரியவரும்.

சிகிச்சை:— இதன் தாள் பட்டினியாக இருந்து மறுநாள் பேதி வயிற்றில் மருந்தை சேர்ப்பது, காலை வேளையில், இதன் பின் சரியாக கலந்து சாப்பிட வேண்டும். பின் பேதிக்கு கொடுத்தால் பூச்சி வெளியாகும். இத்துடன் ஒரு Turpentine 2-4 துளி எடுத்து சமமான ஆமணக்கெண்ணெயுடன் சேர்த்துக் கொடுத்தாலும் பூச்சி வெளியாகும்.

நூல்பூச்சி:— இது 1/2 அங்குல நீளமுள்ளதும் வெண்மையானதாகவும் இருக்கும். பெண்கள் இருந்து கொண்டு மலத்துவாரத்தின் சமீபத்தில் முட்டையிட தூண்டும். இந்த முட்டைகள் உதிர்வதால், மலத்துடன் கூடவும் வெளியே வருவதும் உண்டு, இதனால், இரவில் படுக்கையில் மேலும் அரிப்பு அதிகமாக ஏற்பட்டு தொந்தரவு செய்கிறது. மலத்துவாரத்தின் அருகே அரிப்பும், தூக்கமின்மையும் ஏற்படும். இதனால் குழந்தைகளுக்கு அடிக்கடி நோய் ஏற்படும். அதனால் இளைத்துப் போவதும் உண்டு.

சிகிச்சை:— அடிக்கடி பேதிக்கு சாப்பிடுவதால் இதன் உபத்திரவம் சில நாட்களுக்கு இல்லாமல் இருக்கும். அரிப்பு அதிகமாக இருந்தால் வேப்பிலைத் தண்ணீரில் உப்பைக் கரைத்து மலத்துவாரத்தில் இடம் கழுவினால் மேலும் தொந்தரவு பூச்சிகள் இறந்து வெளியாகும். சில சமயத்தில் பூச்சிகள் ஏராளமாக இந்த மலத்துவாரத்தினின்று வெளியாகி அந்தப் புறங்களில் தங்கியிருக்கும். பெண்களின் யோனித்துவாரத்தில் இந்த அரிப்பும் மற்றும் தொல்லைகளும் உண்டாக்கும்.

கொக்கிப்பூச்சி:— இது அங்குல நீளமுள்ளதாகவும், தலைப்பகுதியில் கொக்கி போலவும் இருக்கும். சற்றுச் சிவப்பு நிறமாக இருப்பதால் மற்றப் பூச்சிகளைப் போல் கண்ணுக்குத் தெளிவாகத் தெரியாது. குடலின் சுவரில், தன் கொக்கியால் பற்றிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சி வாழுகின்றன. இதனால் நோயாளி எளிதாக, உடலின் இரத்தக் குறைவினால் சோகையும், இளைப்பும், களைப்பும் ஏற்படுகின்றன. வேலை செய்வதற்கு வேண்டிய பலம் இல்லாததால் எடுத்த வேலையை செய்ய முடியாமல் போகும். மலத்துடன் இதன் முட்டைகள் ஏராளமாக வெளிப்படும். இவை வெறும் பாதங்களுடன் நடப்பவர்கள் காலில் ஒட்டிக் கொண்டு, துளைத்துக் கொண்டு, தோலுக்குள் புகுந்து இரத்தத்துடன் சேர்ந்து குடலுக்குப் போய் அங்கு வளருகிறது.

சிகிச்சை:— ஆமணக்கு 15-30 நெல்லெடை வரையில் முதலில் பேதிக்குக் கொடுத்து, பேதியான பிறகு தேனும் வசம்பும் கலந்து கொடுக்க வேண்டும். மூன்று வேளை இதைத் தந்த பிறகு மறுபடியும் பேதிக்குச் சாப்பிட வேண்டும். பேதிக்குப் பின் ஆமணக்கு சேர்த்து இதை மருந்தாகவும் கொடுக்கலாம். ஆயினும் இவ்வாறு இருக்காது இந்த மருந்து இரண்டு மூன்று தடவை திரும்பத் திரும்பக் கொடுக்க வேண்டியிருக்கும்.

நரம்புச் சிலந்தி:— (Guinea worm) இது நூல் போன்ற ஒரு புழு. இது இருக்கும் பொழுது கேணி, குட்டை, ஊருணி முதலிய அசுத்தமான தண்ணீரில் வசிக்கும். அந்தத் தண்ணீரை மனிதர்கள் குடிக்கும் பொழுது இரைப்பைக்குச் சென்று அங்கிருந்து பல இடங்களுக்குப் பரவிக் கடைசியாக உடலின் கீழ்ப்பாகமாகிய பாதம், கீழ்க்கால், தொடை முதலிய இடங்களில் சிறிய கொப்புளங்களாகக் கிளம்பி உடைத்துக் கொண்டு அந்தப் புண்ணின் மத்தியில் இந்தப் புழுவின் வெள்ளை நூல் நீட்டிக் கொண்டிருக்கும். இந்தப் புழு 1/5 அங்குலம் விட்ட அகலமும் (breadth) மூன்றடி நீளமும் உள்ளது. இது பெண் இரைப்பையில் சென்ற பிறகு தோலின் அடிப் பாகத்திற்கு வருவதற்குச் சுமார் ஒரு வருஷம் ஆகிறது. தொட்டால் அடியில் அரிப்பு இருக்கும். பிறகு சிலந்தி புறப்படும். காய்ச்சல், மயக்கம், வாந்தி, பேதி இவைகளும் உண்டாகலாம். சிலந்தி முள்ளை நீக்கப் பக்கங்களில் பரவி அழுகிப் புண்ணாக்கும். இந்தப் புழு சிலந்தி மெல்லமாக வெளிவரும் வரையில் இருக்கும் வெளியாது.

சிகிச்சை:— சிலந்தி உடைந்த பிறகு நரம்பை ஒரு குச்சியில் மெதுவாகத் தினசரி கொஞ்சம் கொஞ்சமாகச் சுற்றிக் கொண்டு வர வேண்டும். நரம்பு முழுவதும் வருவதற்குள் அறுந்து விடாமல் ஜாக்கிரதையாகச் சுற்ற வேண்டும். குச்சியில் சுற்றியிருக்கும் பாகம் காயாமல் ஈரமாக வைத்திருக்க வேண்டும். சுற்றின நரம்பைப் படிகாரத் தண்ணீரில் (Alum Water) நனைத்து ஒரு துணியை அதன் மேல் வைத்துக் கட்ட வேண்டும். வாழைக் கொழுந்தைத் தண்ணீரில் நனைத்து நரம்பு வரும் புண்ணின் மேல் வைத்துக் கட்டி வந்தால் நரம்பு சீக்கிரம் தளர்ந்து வெளியாகும்.

குழந்தையின் சுரம் போது தண்ணீரை நீக்கிவிட்டு மேல் வாந்தி
க் கொண்டே காற்றில் நெஞ்சு அடைபடாமல் வெளி வரும். வரும் போது நெஞ்சு
உள்ளிழுத்துக் கொள்ளும் அதற்கு பட்டால் பாக்கியுள்ள நெஞ்சு உள்ளிழுத்துக்
கொள்ளும். கபத்திலாவது அல்லது வேறு இடத்திலாவது மறுபடியும் பெரும் இசி
த்தியாக, நரம்புகள் முதலிய இழிவுடன் புறப்படும். அப்பொழுது அதைக் கிழிப்
பூச்சியை எடுத்து விட வேண்டும்.

21 வாந்தி பேதி (காலரா – Cholera) 290.

இது கொம்மா (Comma) என்று சொல்லப்படும் நுண்ணுயிரால் உண்டாகும் நோய் என்றும், இதுவும் மாறுதல் இல்லாத கிருமிகளாலும் தோன்றும் டாக்டர் கோச்சர் என்பவர் இந்த நோயைப் பற்றிப் பின் வருமாறு கூறியிருக்கிறார்.

திடீரென வலியில்லாத ஏராளமான வாந்தி பேதியுடன் வெகு சீக்கிரத்தில் ரத்தம் நீர்த்து, மலம் மாறி, அரிசிக்கஞ்சி போன்ற கழிப்புடன் கையில் நாடி ஒடுங்கி, வெளுத்து, பஞ்சடைத்த கண்களுடன், உடல் குளிர்ந்து, முகம் சுருங்கி, கால்கள் இழுப்பு உண்டாகி (Cramps), இது நீர்க் கழிப்பு நிற்கும் எல்லாம் இவ் மனித நோய்களுக்குள் ஒன்றாகும். இந்த நோயாளியை ஒரு தரம் பார்த்தால் மறக்க முடியாது. அபூர்வமாகச் சில நேரங்களில் குடலை வழியாகப் போக்கும், அழுகின பொருள் (Ptomaine poisoning) இவை இரண்டும் காலராவைப் போலத் தோன்றுமே தவிர வேறு ஒரு நோய்க்கும் இந்தச் சின்னங்கள் கிடையா.

இந்த நோய்க்குப் பிறப்பிடம் வங்காளம். கங்கை நதியிலேயே வாசம் செய்து கொண்டு, மற்ற இடங்களுக்கும் மக்களுடன் அவ்வப்பொழுது பரவுகிறது. கொம்மாவைப் போல வளைந்து காணப் படுவதால் இதற்குக் கொம்மா நுண்ணுயிர் என்று பெயர். இது தொற்று நோய். குடி தண்ணீர் மூலம் பரவுகிறது. கொம்மா நுண்ணுயிர் நோயாளியின் வாந்தி, மலம், இவைகளில் ஏராளமாக வெளியாகும். துணிகள், ஈக்கள்

தண்ணீர் இவைகளின் மேலும் உட்கார்ந்த ஈக்களால் மனிதர்களுக்கு ஏற்ற
காலத்தில் பரவும். இந்நோயை எப்போதும் சென்று கேட்டால் பரவி, சுகாதாரம் இல்லாத
மக்கள் தொகை நிறைந்த பிரதேசத்தில் அதை பெருக்கிக் கொண்டு அதிகரித்துக் கொண்டே
இருந்தும் விடுகிறது.

இந்த நோய் உடம்பில் உள்ளில் வந்த உடன், சில தினங்களைக்
கொண்டு கட்டங்களில் சென்ற தேகம் நிறைந்து வைத்து விடும். இந்த
நோய் மூன்று நிலைகள் உடையது.

1. முதல் நிலை — சாதாரண வயிற்றுப் போக்கு போல் ஆரம்பிப்பது
2. இரண்டாம் நிலை — வாந்தியும் பேதியும் களைப்பும்
3. எதிர்ச்செயல் நிலை — (Reaction stage)

முதல் நிலை :— சாதாரண வயிற்றுப் போக்கைப் போல ஆரம்பிக்கும். ஊரில் வாந்தி பேதி நடமாட்டம் இருந்தால் எவ்வித வயிற்றுப்போக்கும் காலரா என்று கருத வேண்டும். காலரா வயிற்றுப் போக்கில் தான் ஆரம்பிக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. இரண்டாம் அங்கத்தின் லக்ஷணங்களுடன் உடனே ஆரம்பிக்கலாம் ஆரம்பிக்கும். வயிற்றுப் போக்கு மாதிரி ஆரம்பிக்கும் பொழுது முதல் போக்கும் மலத்தில் பித்தம் இருக்கும். நீர் இறங்குவது இன்றும் நின்று போகாது. ஆனால் சிறுநீர் குறைந்து விடும்.

இரண்டாம் நிலை :— அபரிமிதமான பேதியும், களைப்பும், வாந்தியும் அவ்வாறே. மலத்தில் பித்தக் கலப்பு இருக்காது. மலமும் வாந்தியும் வெளுப்பாக கஞ்சி அரிசித் தண்ணீர் மாதிரி இருக்கும். மலத்தை ஒரு கண்ணாடி டம்ளரில் ~~[illegible]~~ கொஞ்ச நேரம் வைத்திருந்தால், மேலே தண்ணீர் தெளிந்தும், அடியில் தண்ணீர் கீழே அரிசி கஞ்சி போல் வண்டல் கருத்துக் கொண்டதாகக் காணப்படும். வாந்தி கலப்பாகவும், ஏராளமாக அம், அரிசி கஞ்சித் தண்ணீர் மாதிரியும் இருக்கும். முதல் தடவை வாந்தியில் சாப்பிட்ட பதார்த்தம், உணவின் பகுதிகள் இருந்தாலும் மறுதடவையில் இருக்கிறாது.

வாந்தி வரும் வேகத்தில் மூக்கு வாய் இருவழியாகவும் வெளிவரும். பேதியின் கழிச்சல் நிற்காமல் நடைபெறும். சாதாரணமான வயிற்றுப்போக்குப் போல இருந்து பிறகு மலம் அரிசிக் கழுநீர் மாதிரி இருக்கும். மலம் தண்ணீரா இருப்பதால் குடந் தண்ணீர் நிரம்பிய ஒரு பானையைத் திறந்து விட்டால் தண்ணீர் எவ்வாறு ஊற்றுமோ அது போலக் கொட்டும். இவ்வாறு இருவழியாக வாயின் மூலமாகவும், மலத்துவாரத்தின் மூலமாகவும் போவதால் உடலிலுள்ள தண்ணீர் சிறிதளவு குறைந்து விடுகிறது. அதனால் அடக்க முடியாத தாகமும் வறட்சியும் உண்டாகின்றன. இந்தச் சமயத்தில் தண்ணீர் கொடுத்தால் மறுபடியும் வாந்தி பேதி அதிகமாகும் என்ற பயத்தால் தண்ணீர் கொடுப்பதற்குச் சுற்றியிருப்பவர்கள் பயப்படுவார்கள். இப்படிச் செய்வது தவறு. தண்ணீர் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் வெளியாகும் கொந்தளிப்பும் உடன் சேர்ந்து, தாகவறட்சியைச் சற்றுத் தணிக்கும், தசைகளில் தண்ணீர் குறைந்து இசிவுகள் (cramps) உண்டாகும். இரத்தம் இறுகி ஓட்டம் குறைந்து, நாடித் துடிப்பு குறைவாக இருக்கும். தேகமும் உதடும் நீல நிறமாகக் காணப்படும். உடல் வெளியில் குளிர்ந்து விடும். ஆனால் உடலினுள் அதிகக் காய்ச்சல் இருக்கும். அனல்மானியைக் கொண்டு பார்த்தால் வெளியில் 95° அல்லது 96° இருக்கும். நாடி அறவே குறைந்து கடைசியில் மறைந்து விடும். இரத்தம் இறுகிப் போவதால் அதன் ஒப்புச் செறிவு (Specific gravity) 1050 இலிருந்து 1064 அல்லது அதற்கு மேலும் அதிகரிக்கும்.

காலரா நுண்மங்கள் வாந்தி பேதி உண்டாக்குவதைத் தவிர ஒரு நச்சுத்தன்மையும் உண்டு பண்ணுகிறது. அது இதயம், உடல் இழைகளின் மேலும் இரத்தத்தின் சேர்ந்து இருதயத்தைப் பலவீனப்படுத்தி இரத்த ஓட்டத்தைக் குறைத்து உயிருக்கு ஆபத்தை உண்டு பண்ணுகிறது. இரத்த அழுத்தக் குறைவினால் சிறுநீரகத்தி (Kidneys)க்குப் போகும் இரத்தம் குறைந்து, நீர் பிரிவது குறைந்து, கடைசியில் நின்று விடுகிறது. இதற்குப் பிறகுதான் மீட்சி தான எதிர்த்தாக்கு நிலை (Reaction stage) உண்டாகிறது.

3. எதிர்தாக்கு நிலை:— காலரா எதிர்தாக்கம் — அதிர்ப்பு (Reaction) சொல்வதாவது, உயிர் போகாமல் இருந்தால் மறுபடியும் அதிர்ப்பு (Reaction) உண்டாகும். கொஞ்சம் கொஞ்சமாக வாந்தி குறைந்து குடிக்கும் தண்ணீர் வயிற்றில் தங்கும். மூத்திரமும் பித்தம் கூடி காணப்படும். இதனுடைய சதம் கூடி, ஒப்புக் கனம் (Specific gravity) குறையும். உட்காய்ச்சலும் சரிய ஆரம்பிக்கும். இந்த வேளையில் சில ஆபத்துக்கள் உண்டு. இருதயம் பரிபாலனம் நின்றுவிட்டால் அந்த சமயம் உதரத்தில் வந்து சேர்வது ஏற்படும். படர்ந்து வரும் உட்காய்ச்சல் வெளியில் அதிர்ந்து மூளையும் உற்றும் அதிகரித்து உயிருக்கு சேதம் வந்தாலும் வரக்கூடும்.

சிகிச்சை:— இந்த நோய்க்கு மருந்துகள் மிகவும் சொற்பமே. தாகத்தை அடக்க வாய்க்கு சுத்தமான குளிர்ந்த தண்ணீர், சோடாத்தண்ணீர், இளநீர் கொடுக்கலாம். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஒரு வாய்க்கு மேல் குடிக்காது அடக்கிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தாலுங்கூட வாந்தி எடுக்கும். ஆனாலும் ஒரு வாய்த் தண்ணீர் உட்சென்றால் ஒரு நிமிஷத்திற்கு அது உடலில் இருக்கும் சேர்ந்துவிடும். வாந்தி எடுத்தாலுங்கூட உடலில் இருக்கும் உஷ்ணம் குறையும் இருக்கும். பனிக்கட்டித் (Ice) துண்டுகளை வாயில் அடக்கிக் கொள்ளலாம். அது உள்ளே இருக்கும் உள் அனலுக்கு இதமாக இருக்கும். வாந்தியைக் குறைக்கும்.

மருந்து ஒன்றே ஒன்று தான் உபயோகமுள்ளது. அது கலோமெல் 1/4 கிரெயின் வீதம் கால் மணிக்கு ஒரு தரம் இரண்டு மூன்று மணி நேரத்திற்குக் கொடுக்க வேண்டும். அதிகமாய் இருந்தால் மலம் பச்சை நிறமாக மாறுவதுமாகி விடும். அப்படி மாறிவிட்டால் மீண்டும் ஒரு மணிநேரம் இந்தக் கலோமெல் மலம் முற்றும் மாறும் வரையில் கொடுக்க வேண்டும். கலோமெல் காலரா கிருமிகளைக் கொன்று விடும். மேலும் இறந்து போன துண்டுகளைக் கொன்று விடும். மேலும் புழு வெளியாக்கிப் பித்தநீர் சுரக்கும்படி செய்யும். பித்தநீர் சுரந்தால் இந்த நோயின் வேகம் குறையும் துண்டுகள் இறந்து வெளிப்பட்டாலும், சாதாரண நீர் உடலில் விட்டுப்

உடலில் வற்றிப்போனதால் ரத்தம் கெட்டி, ஒப்புச் செறிவு (Specific gravity) அதிகப்படுகிறது. இதனால் உயிருக்குச் சேதம் ஏற்படும். இழந்த நீர் மறுபடி நிறையாது. குறைந்து போன நீருக்குத் தக்கபடி நீரை உடனே செலுத்தியாக வேண்டும். அதற்கு உப்பு நீர் (Saline) அவசியம் தேவை. இந்த உப்பு நீர் உடனே செலுத்தினால் இதனால் ரத்தம் கெட்டி, ரத்த அழுத்தமும் (Blood pressure) குறையும் என்பது வெகு காலமாக மருத்துவ முறையில் தெரிந்து கையாண்டு வந்திருக்கிறார்கள். உப்பு நீர் தோலுக்கு அடியிலும், மலத்துவாரத்தின் மூலமும் கொடுத்தால், வாந்தியும் பேதியும் ஆனவுடன் இந்த உப்பு நீரைக் கொடுத்து வாயால் குடிக்கச் செய்து, சோர்வு அதிகமாகி வந்தது. இக்காலத்திற்கு முன்பு இந்த நோயால் மரிப்பவர் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள். இந்த உப்பு நீர் முறையால் நூற்றுக்கு 51 ஆக மரிப்பவர் தொகை குறைந்தது. 1908-ஆம் வருஷத்தில் டாக்டர் ரோஜர்ஸ் (Sir Rogers) என்பவர் இந்த உப்பு நீர் மருத்துவ முறையைச் சற்று மாற்றினார். இதுவரையில் உப்பு நீர் தயாரிப்பதற்கு ஒரு பைண்ட் (one pint - இருபது அவுன்ஸ்) கொதிக்க வைக்கும் தண்ணீரில் 90 கிரெய்ன் (1½ டிராம்) உப்புச் சேர்த்து வந்தார்கள். டாக்டர் ரோஜர்ஸ் ஒரு பைண்ட் தண்ணீருக்கு 120 கிரெய்ன் (2 டிராம்) உப்பைச் சேர்த்து ரத்தக் குழாயில் செலுத்தினதின் பேரில் மரண விகிதம் மிகவும் குறைந்து நூற்றுக்கு 25 பேர் இறக்கும் எண்ணிக்கை வந்தது. இந்த உப்பு நீரை மூன்று வழிகளில் உடலுக்குள் செலுத்தலாம்.

1. தோலுக்கு அடியில் ஊசி மூலமாக (Subcutaneous)
2. குடலுக்குள் - மலத்துவாரத்தின் வழியாக டூஷ் கருவியைக் கொண்டு (Rectal)
3. ரத்தக் குழாய் வழியே ஊசியின் மூலமாக (Intravenous)

(1.) தோலுக்கு அடியில் கொடுப்பது நல்ல முறையல்ல. சில ரத்தக் குழாய்கள் தெரியாமல் சரியில்லாதவர்களுக்கும், சிறு குழந்தைகளுக்கும் மட்டும் இந்த முறை உதவும். இந்த முறையில் 1½ பைண்டுக்கு மேல் கொடுக்கக்கூடாது.

ஆனால் ஒரு சமயத்தில் 8 அவுன்ஸ் அளவே தேவையாக இருக்கும்.

(2) குடலின் மருத்துவத்தின் வழியாகக் கொடுப்பது: இதற்கு 90 கிரேன் அளவு உப்பு ஒரு பைண்ட் தண்ணீரோடு ஓர் அவுன்ஸ் பழச் சர்க்கரை (Glucose) சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

(3) வடிவாய்ச் சிரை மூலம் கொடுப்பது தான் நல்ல பலனைக் கொடுக்கக் கூடியது. 120 கிரேன் அளவு உப்பு, ஒரு பைண்ட் கொதிக்க வைத்த தண்ணீர் 4 கிரேன் அளவு கால்சியம் குளோரைட் (Calcium Chloride) சேர்த்து தயாரிக்க வேண்டும்.

கைகால் இழுப்புகள் (Cramps) ஏற்பட்டிருந்தால் உடனே உப்பு நீர் வடி சிரை மூலம் அவசியம் கொடுக்க வேண்டும். இந்த முறையில் செய்யும் போது கவனிக்க வேண்டும்.

தாப பரிமாணம்: (உஷ்ணம் - Temperature) எவ்வளவு என்பது தெரிய வேண்டும். அதேபோல் மருத்துவத்திலும் தாப நிலையை அனுமான மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். காலராவில் உடல் குளிர்ந்திருப்பது போல வெளியில் காணப்பட்டாலும், உள்ளே தாபம் அதிகமாக இருக்கும். மருத்துவத்தின் வழியாகப் பார்த்து, தாபம் 100 டிகிரிக்கு மேல் இருக்குமானால் உப்பு நீரைத் தண்ணீரில் வைத்து தண்ணீர்க் குளிர்ந்த பிறகு வடிகுழாயில் ஏற்ற வேண்டும். உப்பு நீரை ஏற்றுவதாலேயே காய்ச்சல் ஏற்படும். ஆகையால் காய்ச்சலை அதிகப்படுத்தாமல் காத்துக் கொள்ள வேண்டும். ஆனால் மனிதனை உபயோகித்து உடலின் தாப நிலையை அறிந்து கொள்ளாமல் உவர் நீர் மருத்துவம் செய்வது தவறு.

ஒப்புக் கனதி:- (Specific gravity) ரத்தத்தின் ஒப்புக் கனதி எவ்வளவு இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும். கிடைக்க கூடுமானால் இதற்கு சோதனை செய்ய வேண்டும். கிளிசரின் (Glycerin) தண்ணீர் கலந்து ஒப்புக் கனதி மானி மூலம் ஐந்து கண்ணாடிக் கிண்ணங்களில் 1056, 1058, 1060, 1062, 1064 ஒப்புக் கனதி இருக்கும்படியாகக் கலந்து கொள்ள வேண்டும். நோயாளியின் விரலை காய்ச்சி ஆறின ஊசியால் குத்தி, வெளிவரும் ரத்தத்தை ஒவ்வொரு சொட்டாக இந்தக்

56A

இரத்தச் சோதனைகளில் ஒன்றன் பின் ஒன்றாக வடிய விட்டுப் பார்க்க வேண்டும். ரத்தம் மிதந்தால் அதற்கு உப்புச் செறிவு குறைவு. ரத்தம் கீழே அமிழ்ந்து விட்டால் உப்புச் செறிவு அதிகம். மேலே மிதக்காமலும், கீழே போகாமலும் எந்த சோதனையில் ரத்தம் இருக்கிறதோ அந்த உப்புச் செறிவுதான் அந்த நோயாளியின் ரத்தத்திலுள்ளது.

1062 – 1064 வரையில் இருந்தால் 2-3 பைண்ட் உப்பு நீர் கொடுக்க வேண்டும்.

1064 மேல் இருந்தால் 3-4 பைண்ட்

1060 – 1062 – 1½ பைண்ட் – 2 வரையில்.

1058 – 1060 – 1-2 பைண்ட்

மேற்கூறிய முறைகள் பயனிக்க முடியாமற் போனால் நோயாளியின் நாடித் துடிப்பு ரத்தத்தை எடுத்துப் பார்க்கும் பொழுது கறுப்பாகவும், கெட்டியாக வும், இருதயம் பலவீனமாகவும் காணப்பட்டால் உடனே உப்பு நீர் கொடுக்க வேண்டும். வடிகுழாய் மூலம் உப்பு நீர் ஏற்றும் பொழுது சிறுநீர் உண்டானால் உடனே நிறுத்தி விட வேண்டும். தேவையான நீர் வாய் வழியாகவாவது தொடர்ந்து அடி யல் கொடுக்க வேண்டும். ரத்த அழுத்தம் எவ்வளவு இருக்கிறது என்பதை யும் கவனிப்பது நலம்.

இருதய பலக்குறைவு 296.

வெள்ளை மதுபானத்தில் செய்து 60 கிரெய்ன் பால் கலந்து தேனில் கலந்துக் கொடுக்கவும். டிஜிடலின் (digitalin) 1/100 கிரெய்ன் ஊசி மூலம், அட்ரோபின் ஸல்பேட் (Atropine Sulphate) 1/100 கிரெய்ன் உப்பு நீர் ஏற்றின பிறகு கைகால் பலப்படாவிட்டால் அட்ரோபின் ஊசிமூலம் கொடுக்கலாம்

சிறுநீர் அடைப்பு:— (Suppression) இது மூன்றும் நிலையில் ஏற்படும் விபரீதம். சிறுநீர் உற்பத்தி நின்று விடுகிறது. இப்படி 24 மணி நேரம் மூத்திர உற்பத்தி நின்று விடுவாரின் உயிர் போவது நிச்சயம். மெதுவாக இருந்துச் சுத்தத்தோடு வர ஆரம்பிக்கும். தாபக் குறைவு, ஆரோட்டம்

இவைகளும் இருக்கும். இந்தச் சமயத்தில் மலமும் கட்டிவிடும். சிறுநீர் கட்டும் குறிகள் காணப்படும் பொழுது உடனே மலம் போவதற்காக ஓர் அவுன்ஸ் ஆமணக்கு எண்ணெய் கொடுக்க வேண்டும். மலம் போகும் வரையில் அடிக்கடி கொடுக்க வேண்டும். இந்தச் சமயத்தில் உப்பு நீரைப் பிகாரகக் காரணி (Alkali) படி பெராயின் செலுத்த வேண்டும்.

காரநீர் செய்யும் விதம் 297

உப்பு Sodium chloride 90 கிரெய்ன்

சோடா Sodii bi carb 160 கிரெய்ன்

கொதிக்க வைத்த தண்ணீர் ஒரு பைண்ட் (20 அவுன்ஸ்)

காலராவில் அபினி :- அபினி ஒரு காலத்தில் உபயோகப்படுத்தி வந்தார்கள். இப்பொழுது அது தவறு என்பதைக் கண்டு அதன் உபயோகத்தை நிறுத்தி விட்டார்கள். **அபினைக் கொடுக்கக் கூடாது.** **கயோலின்** (Kaolin) சீனக்களிமண் இது காலரா விஷத்தை விழுங்கிவிடும். களிமண்ணும் இதுவும் மாற்றுமருந்தாகக் கொடுக்கலாம்.

கயோலின் 20 அவுன்ஸ், தண்ணீர் 20 அவுன்ஸ் கலந்து குலுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் ஓர் அவுன்ஸ் வீதம் அரைமணிக்கு ஒரு தரம் கொடுக்க வேண்டும். ஆறுமணி நேரத்திற்கு எட்டுத் தடவை. பிறகு ஒரு மணி நேரத்திற்கு மூன்று தடவை, பிறகு இரண்டு மணி நேரத்திற்கு ஓர் அவுன்ஸ் வீதம் கயோலின் கொடுத்து பிறகு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஓர் அவுன்ஸ் ஆமணக்கு எண்ணெய் கொடுக்க வேண்டும். மேற்கூறிய மருந்துடன் தொடர்ந்து உப்புநீர் ஊட்டச் செலுத்தும் முறையையும் மேற்கொள்ளலாம். சீனக் களிமண் கிடைக்காத இடத்தில் கெட்டிக் களிமண்ணைத் தண்ணீரில் நன்றாகக் கரைத்து, மண்ணும் மணலும் கீழே தங்கும்படி விட்டு விட்டு, மேல் இருக்கும் தண்ணீரை இறுத்துப் பிறகு வெயிலில் காய வைத்தால் மிருதுவான களிமண் கிடைக்கும். அதை மேற்கூறியபடி உபயோகப்படுத்தலாம்.

காலராவின் உணவு:— கொதிக்க வைத்துக் குளிர்ந்த தண்ணீர் ஒன்றே போதுமானது. நோயின் வேகம் குறைந்த பிறகு இளநீர் பார்லி அரிசித் தண்ணீர் இவைக் கொடுக்க வேண்டும். மலம் உருவாக வெளிவரத் தொடங்கி விட்டால் மோர், மோர்க்கஞ்சி, பிறகு குழைந்த சோறு இவை கொடுக்க வேண்டும்.

விக்கல்:— (Hiccough) இந்த நோய் வந்து ஒன்றும் நாள் விக்கல் ஏற்படலாம். விக்கல் வந்தால் தொல்லை அதிகம். குளோரோடைன் 1/4 கிரெய்ன் சோடா 10 கிரெய்ன் கால் மணிக்கு ஒரு தரம், பனிக்கட்டித் தூள் கொடுத்து பிறகு பேதி உப்பு கொடுத்துப் பேதியாக வேண்டும். இதிலும் நிற்கா விட்டால் thymol, தெவிட்டிய கரைசல் (Saturated Solution) செய்து அதில் பாதரசக் கந்தகம் 20 கிரெய்ன் கலந்து கொடுக்க வேண்டும். மேல் வயிற்றில் கடுகு பிளாஸ்திரி கால் மணி நேரத்திற்குப் போட வேண்டும். இவைகளில் ஒன்றும் பயன்படாவிட்டால் மார்பியா 1/4 கிரெய்ன், அட்ரோபின் 1/100 கிரெய்ன் ஊசியின் மூலம் கொடுக்கலாம்.

காலரா பரவாமல் தடுக்கும் முறை:— கோம்மா நுண்ணங்கள் இவைத் தண்ணீரில் வெகு நாட்களுக்கு உயிரோடு இருக்கும். 60° சூட்டில் இறந்துவிடும். இவை வெயிலில் காய்ந்தாலும் இறந்துவிடும். நோயாளியின் மலம், மூத்திரம், வாந்தி இவைகளையும், துணி, படுக்கை இவைகளையும், கொதிக்கும் தண்ணீரில் தனித்தனியாகக் கொதிக்க வைத்துத் ~~தண்ணீர்~~ துணி படுக்கைகளை வெயிலில் ஒரு நாள் முழுவதும் காய வைக்க வேண்டும். மலத்தை நெருப்பில் கொண்டு போய் எரித்து அல்லது ஆழக் குழி வெட்டிப் புதைத்து விட வேண்டும். கிணறு, குளங்கள், ஆறுகள் இவைகளுக்குச் சமீபத்தில் புதைக்கக் கூடாது. அவைகளில் மலத்தைக் கொட்டி விடக் கூடாது. கொதிக்க வைத்த பின்பு ஈக்கள் மொய்க்கும்படி விடக்கூடாது. மீதியிருக்கின்ற உணவு, தண்ணீர் இவற்றை மூடி வைக்க வேண்டும். இந்தக் காலங்களில் வேக வைக்காமல் ஒன்றும் உண்ணக் கூடாது. இந்த நோயாளியைக் காப்பவர்கள் தங்கள் வயிற்றைக் காலியாக வைக்கக் கூடாது. வயிற்றில் உணவு இருந்தால் புளிக்காடி (Gastric Juice) எப்பொழுதும் அங்கு இருக்கும். கோம்மா

நீரும் வியர்வையுடன் அக்கினிமந்தம், பித்தவாயு, சூதகவாய்வு, உஷ்ணவாயு 231 / 578
நீராணி, சன்னி, உதரமேகம், வாந்திபேதி இவைபோம். இக்கஷாயத்தை

அன்ன பேதி செந்தூரம்.

மான் கொம்பு கல்லில் உரைத்து அதைப்பு 10 எருவில் புடம். தேனில் வழங்க வியாதிகள் தீரும்.

பனங்கற்கண்டு கற்பம்.

குடிநீரில் அரைத்து படி சேர்த்து 3 நாள் ஊறி அப்படியே ½ ஆழாக்கு புடம் பட்டதும் வயிற்றுவலி தீரும்.

பித்தப் பிப்பிலி கற்பம் இது மேல் கூறியதுபோல்:

இவை யாவற்றுக்கும் விரைவு இன்றி, பசுவின் நெய் இவைகளையும் உருக்கி பாத்திரத்தில் பால் பருத்தி விட்டு நன்றாய் ½ ஆழாக்கு புடம் திப்பிலி பலம் 1, திப்பிலி மூலம், சீரகம், சுக்கு, மிளகு, கடுக்காய், ஏலம், லவங்கம், ஜாதிக்காய், ஜாதி, வகைக்கு பலம் ¼ இவைகளை சூரணம் செய்து சர்க்கரை பலம் ½ கூட்டி தேங்காய்ப்பால் விட்டுப் பாகமாக்கி சேர்த்து பாகமான பின் அன்னம் உட்கொள்ளுமுன் வைத்து சாப்பிடவும்.

குடற்புண்களுக்கு மருந்தும் சோமனிதக்கக் காசப் பொடி

திப்பிலி, ஜாதிக்காய், லவங்கம், ஏலம், ஏலம், ஜாதிபத்திரி, கிராம்பு, பலாப்பிஞ்சு, கருந்துளசி, பேரரத்தை, மதுரம், வால்மிளகு, கார்போகரிசி, வசம்பு வகைக்கு வராகன் 1 இவைகளை இளவறுப்பாக வறுத்து சூரணம் செய்து திரிகடிப்பிரமாணம் தேன் நெய் பாலிலும் கொடுத்துவர மாந்த மனுகளும் நீங்கும்.

கற்றாழைச் சூட்டுக்கு தேத்தான் எண்ணெய்

கற்றாழைக் கிழங்கு படி 1 வல்லாரை சாறு படி ½, நல்லெண்ணெய் பலம் 2 இவைகளை சேர்த்து காய்ச்சி வடித்து சர்க்கரை கொஞ்சம் சேர்த்து கொடுத்துவரவும். தேகம் குளிர்ந்து சூடு நீங்கிப்போகும்

பெருஞ்சூட்டுக்கு சீதளம் மேல் தைலத்துக்கு

உத்தாமணியின் புடமிட்ட கிழங்கு பலம் 1, நல்லெண்ணெய் பலம் ¼ இவைகளையும் சேர்த்து பாகமாய் காய்ச்சி வடித்து பாகமாக்கி [illegible] பாவனைகளில்

இரத்தப் பித்த வாதத்துக்கு எண்ணெய்

புங்கெண்ணெய் பலம் 6, பொன்னாங்கண்ணி, கழற்சிப்பருப்பு, முருங்கைப்பட்டை வகைக்கு பிடி 1, காய்ச்சி வடித்து உடம்பில் தடவி எண்ணெயை உப்பில் அரைத்த புளியங்காய் இன்றி அரைத்துக் கொடுத்துவர தீரும்.

58 மான்கொம்பு, கற்பூர சிலாசத்து, கல்நார், செந்துக்கள்
பற்பக்கட்டு.

இவ்விதைப் பொருள்களை சிறு துண்டுகளாக நெருப்பிலிட்டு வைத்து
நீரும் மோரும் ஒவ்வொரு [illegible] வைத்து [illegible] செய்துக் கொள்ள.
கற்பூர சிலாசத்தை கல்வாழைப்பால் [illegible] ஊறி [illegible]
[illegible] இலையை அரைத்து அதற்குள் வைத்து மண்சீலை செய்யவும்
செந்துக்கள்ளை [illegible] இலையையரைத்து அதற்குள் வைத்து மண்சீலை
செய்து கொண்டு 1 1/2 முழ நீளம் [illegible] 2 [illegible]
[illegible] சேர்க்காமல் [illegible] [illegible] படாமல்
வைத்து புடமிட்டு எடுத்து [illegible] காளைகளாகக் [illegible]
[illegible] வெள்ளையாய் 2 [illegible] காளைகளாகக் [illegible]
வும். [illegible] இலையை அரைத்து அதில் வைத்து சீலை
மண் செய்யவும். [illegible] வியாதிகள். [illegible], வெப்பம், நீர் [illegible]
[illegible], நீர் [illegible], நீர் [illegible] [illegible]. இவை போன்ற வெப்
பத்தினால் வரும். இன்னும் பல வியாதிகளும் வெள்ளையும் நீங்கும். பத்தியம்
இல்லாதிருந்து புசிக்கவும்.

[illegible] செம்பம்.

[illegible] பலம் 1, கஸ்தூரி பலம் 1/2, வெள்ளைக் காசுக்கட்டி வி 1
[illegible] சிறு [illegible] செய்து [illegible]
வி 3, [illegible] 7 [illegible] செய்து
[illegible] 2 [illegible]
[illegible] வைத்து [illegible] 2 [illegible], [illegible] 4 [illegible]
[illegible] பற்பமாக இருக்கும். இதை [illegible]
[illegible] வைத்து [illegible] தேனில்
குழைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். 5 [illegible]
[illegible] செய்து அதில் 2 [illegible] உள்ளுக்குப் புகட்டவும்.
[illegible] [illegible]
[illegible] [illegible].

விஷ்ணு சக்கரம்.

[illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible]
பழச்சாறு அரைப்பு 4-6 - சாமம். [illegible], தேன் [illegible]
[illegible]. [illegible], பக்கத்தில், [illegible], [illegible] 1 3
[illegible]. [illegible] 1/4 [illegible] சேர்த்து அரைத்
துக் கொள்ளலாம். ([illegible] வி 1 ஆகவிருந்தால் 1/4 [illegible]
சேர்த்துக் கொள்ளலாம்)

[illegible]

[illegible] அக்கினி குமாரன். [illegible] 481.

அற்புத மாத்திரை

[illegible], [illegible], [illegible], [illegible], வெள்ளைப்பூண்டு, காயம். [illegible], [illegible]
[illegible] பழச்சாறு [illegible] 4 சாமம் அரைக்கவும்
[illegible] 2 வேளை. (மாத்திரை [illegible])

பூரபற்பம் · போகர் தியாகராஜ போகர்

பூரம் 10, லிங்கம் 4, ரசசெந்தூரம் 1, ரசம் 1, வீரம் 1, அயம் 5
சேர்த்து 2 சாமம் அரைப்பு [illegible] 2 சாமம் எரிப்பு

பூரபற்பம்

பூரம் 1, சீனம் 5 [illegible] 1 [illegible] போகர்

ரசக்கட்டு

ரசம் 2, செந்தூரம் 1, [illegible] அரைப்பு [illegible]
[illegible] 4 சாமம் [illegible]
20 [illegible] புடம் போட்டு [illegible] 25 [illegible] அப்படியே [illegible]
புடம் போடவும். 3 [illegible] அப்படியே வைத்து
30 [illegible] புடம் போடவும். [illegible]
[illegible]. [illegible] 1/8 வீரம் சேர்த்தும் போடலாம். போகர்

வீர மெழுகு. போகர்

வீரம் வ 1, பூரம் வ 1, லிங்கம் வ 1, [illegible] வ 3, [illegible] வ 3
[illegible] வ 3. வெள்ளைப்பூண்டு [illegible] 4 சாமம் அரைப்பு [illegible] 1 [illegible]
[illegible] அரைப்பு.

அண்ட வீர மெழுகு போகர்

வீரம் வ 1/8, [illegible] வ 1/8. [illegible] 1/8 [illegible]
[illegible]
[illegible] 3 [illegible] வேளை
[illegible]

கருக்கரச செந்தூரம்

ரசம் [illegible] செந்தூரம் வ 5, [illegible] வ 1 போகர்

சித்திர எண்ணெய்.

வெங்காயம், உள்ளி, வெங்காரம், காட்டாமணக்குப்பால், கடுக்காய், [illegible]
கஞ்சிகாரம், திப்பிலி, [illegible] 1 [illegible] 7,
உள்ளிச்சாறு, கடுக்காய்ப்பூ [illegible] எண்ணெய். தேங்காய்ப்பால் [illegible] 8, வேலிப்
பருத்திச்சாறு [illegible] 8,

60 காலரா நுண்ணுயிர்கள் புளிக்காடியில் இறந்து விடும். குடிக்கும் தண்ணீரில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் போட வேண்டும். குடிக்கும் பாத்திரங்களையும் உண்ணும் தட்டு முதலியவற்றையும் கொதிக்கும் தண்ணீரில் கழுவிப் பிறகு வெய்யிலில் காய வைக்க வேண்டும். கண்டிப்பாக இந்த நோய் வந்தவுடன் தனித்திருக்கவும், ஊரிலிருந்தும், அல்லது இந்த நோய் பரவியிருக்கும் இடத்திற்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், நோய் இல்லாத மற்றவர்கள் இந்நோய்க்குத் தடை ஊசி (preventive inoculation) போட்டுக் கொள்ள வேண்டும்.

22 299

மந்த வாதக் காய்ச்சல் = சன்னிபாதம் = அல்லது டைபாயிட் (Typhoid Fever)

இது ஒரு தொற்று நோய். டைபாயிடு நுண்ணுயிர்களால் உண்டாகிறது. உணவுக் குழாய் பகுதி இது குடலில் தங்கி அங்கிருந்து விஷத்தை உண்டு பண்ணுகிறது. இது குடலில் புண் உண்டாக, அதில் ரத்தக் கசிவு சில வேளைகளில் துவாரமும் உண்டாக்கி விடும். கொதிக்கும் தண்ணீரில் இந்த நுண்ணுயிர்கள் இறந்து விடும். வெளியே உயிருடன் இருக்கும் நுண்ணுயிர்கள் பல நாள் வரையில் தண்ணீரில் உயிருடன் இருக்கும். வெய்யிலில் இறக்கிறதில்லை. அழுக்கு, தூசி முதலியவற்றுடன் கலந்து பரவுகிறது. மலம் மலம் ஒட்டியுள்ள துணி, படுக்கை, ஈக்கள் இவைகளால் ஒருவரிடமிருந்து ஒருவர் பரவும். அங்கிருந்தே குடி தண்ணீரிலும் பரவும். அந்தத் தண்ணீரைக் குடிப்பதில் நோய் பரவுகிறது. டைபாயிட் விஷம் பரவியிருக்கும் தண்ணீரைக் கொண்டு பாத்திரங்களைக் கழுவுவதாலும், அந்தப் பாத்திரங்களில் உணவு முதலியவற்றை உண்பதினாலும் நோய் உண்டாகும். அவற்றில் பால் முதலியவை வைப்பதாலும் அதைக் குடிப்பவர்களுக்குப் பரவும்.

சிலருக்கு இந்த நுண்ணுயிர்கள் அவர்களைப் பாதிக்காமல், அவர்களுடைய மலத்தில் மட்டும் காணப்படும். அவர்களுக்கு டைபாயிட் கிருமியை வளர்ப்பவர்கள் (typhoid Carriers) என்று பெயர். இவர்கள் பால், தயிர், வெண்ணெய் இவை விற்பனையாகும் தொழிலிலும், சமையல் செய்யும் இடங்களில் வேலை செய்பவர்களாயும் இருந்தால் அவர்களே இந்த நோய் பரவுவதற்குக் காரணமாவார்கள்.

நுண்ணுயிர்கள் உடலில் நுழைந்து, நோய்க்குரிய குறிகள் வெளியே காணும் வரையில் உள்ள இடைக்காலத்திற்கு மறைந்திருக்கும் பொழுது (Incubation Period) என்று பெயர். ஒவ்வொரு தொற்று நோய்க்கும் இந்தக் கால அளவு உண்டு. இந்தக் காய்ச்சலுக்கு அடைப் பொழுது சாதாரணமாக 10 முதல் 14 நாட்கள் வரை. இந்த நோய் கண்டதின் முதல் அடையாளம் காய்ச்சல். அந்திப் பொழுதில் அதிகமாகி, காலைப் பொழுதில் குறைந்தும் அப்படியே படிப்படியாக உயர்ந்தும் இறங்கியும் ஒரு நாளும் முற்றும் விடாமலும், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகும்.

முதல் வாரத்தில் 103° வரையில் ஏறும். நாடி 100 இலிருந்து 120 வரையில் இருக்கும். நாக்கு நடுவில் மஞ்சள் படர்ந்து, ஓரங்கள் சிவந்திருக்கும். இந்த வாரக் கடைசியில் பேதி ஆரம்பிக்கும். சில வேளைகளில் மலச்சிக்கல் இருந்தாலும் இருக்கலாம். வயிற்றிலும் மார்பிலும் சிவப்பான புள்ளிகள் காணப்படும்.

இரண்டாம் வாரம்:— காய்ச்சல் அதிகப்பட்டு, அந்திப் பொழுதில் 103° முதல் 105 வரையில் உயரும். காலையில் குறையும். நோயாளி மிகவும் பலவீனமடைவான். வயிற்று உப்புசம், ஞாபகமறதி, பேதி இவை உண்டாகும். மலம் துர்நாற்றம் உள்ளதாக இருக்கும். அடிவயிற்றில் வலி இருக்கும்.

மூன்றாம் வாரம்:— கவலைக்கு இடமானதாக இருக்கும். பலவீனம் அதிகரித்து, நோயாளி செயலற்றவனாக இருப்பான். பேதியும், வயிற்று உப்புசமும் நீங்கா. காய்ச்சல் சற்றுக் குறைந்திருந்தாலும் மற்ற குறிகள் அதிகமாக இருக்கும். மயக்கமும், புத்தி மாறாட்டமும் உண்டாகும். நாக்குக் கருநிறமடைந்து உலர்ந்து விடும். நாடி பலம் குறைந்து விடும். இந்த நிலையில் உயிர் நீங்கக் கூடும். இல்லையேல் குணமடையத் துவங்கும்

நான்காம் வாரம்:— நோயினிறுதி நேரம். குணங்கள் காணப்படும். நாக்குச் சுத்தப்படும். காய்ச்சலும் ஏறியது போலவே படிப்படியாகக் குறையும். சில வேளைகளில் மலேரியா (குளிர்க்காய்ச்சல்) இருக்கும் இடங்களில் இரண்டு நோயும் சேர்ந்து உபத்திரவம் செய்யும். நோய் இது என்பதைப் பற்றி சந்தேகம் ஏற்படுமாயின் டைபாய்ட் காய்ச்சல் என எண்ணி உடனே மருத்துவ முறையை மேற்கொள்ள வேண்டும்.

சிகிச்சை:— இந்த நோய்க்குத் தனி மருந்து ஏதும் இல்லை. நுண்மங்களின் சேதத்தைக் குறைப்பதும், நோயாளியின் பலம் குன்றாமல் காப்பாற்றுவதும் மருத்துவ முறை. நுண்மங்களின் பெருக்கத்தை ஒடுக்குவதற்குத் தகுந்த கிருமி கொல்லிகளை (bactericides) கொடுக்க வேண்டும். பலம் குறையாமல் இருப்பதற்குச் செய்ய வேண்டிய முறைகளாவது

சுமார் நான்கு வாரத்திற்குப் போதப் படுக்கையாய் வைத்து, அநேகமாகப் பட்டினிப் போட்டு வைக்க வேண்டியது. இந்த நோய்க்குப் பலம் குன்றாமல் எப்படி இருக்கக்கூடும்? இந்தக் காய்ச்சலுக்குத் தொடர்ந்து இருக்கும். இடம் குடல் என்னும் இரைப்பை முதலிய உணவைச் சகிக்கும் அவயவமெல்லாம் சரிவர செய்யாது. ஆகையால் சத்தை உற்பத்தி செய்து பலத்தைக் குன்றாமல் காப்பாற்றும் உணவைக் கொடுக்க வேண்டியது முடியாது. அப்படிக் கொடுத்தால் நோய் அதிகப்படும்.

வாய் வழியாக நச்சுக் கொல்லிகள் கொடுக்க வேண்டும். காலோமெல் ¼ கிரெயின் அளவுள்ளதை ஒரு நாளும் கொடுக்க வேண்டும். இதே மாதிரி தினந்தோறும் நோயாளியின் நிலைமையைக் கவனித்துக் கொண்டு கொடுக்க வேண்டும். இது உடலில் இருக்கும் விஷத்தைக் கொல்லவோ அவற்றை மலத்தோடு வெளிப்படுத்தும். முதல் வாரத்திற்கு அப்புறம் காலோமெல் கொடுக்கக் கூடாது. சோடா 2 கிரெயின் வீதம் ஒரு நாளைக்கு மூன்று, நான்கு வேளை கொடுக்கலாம். தைமால், உள்ளிப்பூண்டு ரசம் இரண்டும் கொடுக்கலாம். அயோடினும் வடிநீராய் [illegible] அல்லது தோலுக்கு அடியிலாவது ஊசி மூலம் வாரத்திற்கு இரு முறை கொடுக்க வேண்டும். வெள்ளை மற்றும் பட்டைத் தூள் அல்லது டிஞ்சர் [illegible] கொடுக்கலாம். இரண்டும் இருதயத்திற்குப் பலம் கொடுக்கக் கூடியவை.

தினம் ஒரு முறை வெந்நீரைக் கொண்டு உடலைத் துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும். குடிப்பதற்கு ஏராளமான தண்ணீர் கொடுக்க வேண்டும். குறைந்தது நாளொன்றுக்குக் குடிநீர் என்பது 80 அவுன்ஸ்க்குக் குறையக் கூடாது. படுக்கையாக இருக்க வேண்டும். நோயாளியை ஓர் இடம் விட்டு மற்றோர் இடம் மாற்றக் கூடாது.

ரத்தப் பெருக்கு: குடலிலுள்ள புண்களிலிருந்து ரத்தம் பெருகலாம். இது அபாயகரமானது. ஒன்று அல்லது இரண்டு, கிரெயின் அபின் தண்ணீரில் கலந்துக் கொடுக்க வேண்டும். கற்பூரத்தைலம் (Oil of Turpentine ஐந்து சொட்டுத் தண்ணீரில் போட்டுக் கொடுக்க வேண்டும். கால்சியம் லாக்டேட் (Calcium Lactate) 20 கிரெயின் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வேண்டும். பழச்சர்க்கரை (Glucose) ஒரு பைண்ட் தண்ணீரில் கலந்து நோய் கண்டது முதல் அடிக்கடி கொடுப்பது நலம்

குடலில் துவாரம் விழுதல்:— புண் குடலைத் தின்று துவாரம் உண்டாக்கலாம். இது ஏற்பட்டால் பிழைப்பது அரிது. பொறுக்க முடியாத வலியும் திடீரென்று காய்ச்சல் கீழே இறங்கியும். உடல் சோர்வு உண்டாவதும்

இவற்றின் பிறகு உடனே டாக்டரைக் கொண்டு கருவி மருத்துவம் செய்ய வேண்டும். இல்லையானால் அவள் கொதிக்க வேண்டும்.

பேதி: முதல் வாரத்தில் கொடுக்கும் காலோமெல் மருந்தே போதுமானது. இரண்டாவது வாரத்தில் கட்டுப்படாத பேதியானால் பிஸ்மத் ஸாலிஸிலேட் 10 கிரெய்ன் உபயோகமாக இருக்கும்.

படுக்கைப் புண்:— இருபது நாள் படுக்கையாக இருக்க வேண்டியதாலும் நோயாளியின் ரத்த ஓட்டம், பலம் இவை மிகக் குறைந்து விடுவதாலும் உடலின் பாரம் எங்கு அதிகமாக அழுத்திக் கொண்டிருக்கிறதோ அங்கே புண் உண்டாகலாம். அப்படி அழுத்திக் கொண்டிருக்கும் இடங்களைத் தினமும் சோப் போட்டுக் கழுவித் தண்ணீர் விட்டுக் கழுவி பிறகு ஸ்பிரிட் (?) மேலே தடவி, அதன் மேல் போரிக் பவுடர் தடவ வேண்டும்.

பேதியும் காய்ச்சலும் நின்ற பிறகும் இரண்டு வாரங்கள் வரையில் தண்ணீர் மயமான ஆகாரந்தான் கொடுக்க வேண்டும். நோயாளி பசியினால் எந்த உணவும் உட்கொள்ளப் போதுமான தைரியம் ஆவலுள்ளவனாக இருப்பான். எனினும் இதைத் தடுத்தே ஆக வேண்டும். இல்லாவிடில் செய்தவனின் நோய் திரும்பிக் கொள்ளும்.

இருதயத்தின் பலக்குறைவு அதிகமாக இருக்கும். இதைத் தடுக்கப் பழச் சர்க்கரை (Glucose) நூற்றுக்கு 12½ சதவிகிதம் தண்ணீரில் கரைத்து 10 C.C. வீதம் நோயாளியின் ஊசி மூலம் செலுத்த வேண்டும். பெரும்பாலும் Paratyphoid என்ற சனிக் காய்ச்சல், இந்த டைபாயிட் காய்ச்சலைப் போல வருவதால் அதற்கும் சனிக் காய்ச்சலுக்கான சிகிச்சை செய்து வர வேண்டும்.

தாப பரிமாணம் (High Temparature) 302

அதிக சுரம் ஏற்படுவதும் கெடுதல். அதைக் குறைத்து வைக்க வேண்டிய யத்தனங்கள் செய்ய வேண்டும். தினம் இருமுறை தண்ணீரால் உடலை

64 உடலை துடைத்துக் கொடுக்க வேண்டும். காய்ச்சல் இருக்கும்
பொழுது எச்சரிக்கையாக பார்க்க வேண்டும். நோயாளி படுக்
கப்படாத வரைக்கும் 103 டிகிரிக்கு மேல் படுக்கப்படாமல் காக்க
வேண்டியது அவசியம். படுக்கப்படு நிலைக்கு உட்கார்ந்து நோயாளி
கொட்டக் கட்டிக்கொண்டு தண்ணீரில் துணியை நனைத்துத் துடைத்து
நோயாளி மேல் படுக்கையும் துணிகளையும் மாற்றி போட வேண்டும்.

சுத்தம்:— நோயாளியின் வாயை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். பல்
ஈறுகளை கிருமி நீக்கம் செய்து வாயில் துர்நாற்றம் இல்லாமல் காக்க வே
ண்டும். ஈறு கெட்டுப் போகாத கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய
வேண்டும். மலம் கழிக்க வேண்டிய அத்தகைய கருவியால் பாத்திரத்தைத்
தரைக்கு வேண்டும். அப்படித் தாங்க முடியாவிட்டால் கொடுக்க
மருந்து கொடுக்க வேண்டும். நீராவிப்பிடிப்பதால் குணமாகக்கூடிய
கொட்டிப் புகைக்க வேண்டும்.

உணவு:— நீர் மயமான ஆகாரத்தைத் தவிர வேறு ஒன்றும்
கொடுக்கக் கூடாது. நீர் ஆகாரத்திலும் உணவு அதிகம் இருக்கக்
கூடாது. பால் கொடுக்கக் கூடாது பாலை காய்ச்சி வடிகட்டின நீர்
Whey மிகவும் நல்லது உணவு. வெந்நீர் சுத்தமாக கொடுக்கலாம்
இளநீர் கொடுக்கலாம். பார்லி அரிசிக் கஞ்சியை தண்ணீர் அதிகமாக
விட்டு, பால் சேர்க்காமல் பழச் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

93 கல்லீரல் வேலை (Function of the Liver.) 303

கல்லீரல் நமது உடலிலுள்ள சுரப்பிகளிலெல்லாம் பெரியது
Biggest gland அதற்கு நான்கு பகுதி உண்டு. இதன்
வலப்புறம் வயிற்றுப் பக்கத்தில் விலா எலும்புகளால் பெரும்பகுதி மூடப்
பெற்று. அதற்கு ஒரு அங்குலம் கட்டும் விலா கூட்டின் வெளியில் நீண்டு
இருக்கும். இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் இவைகளிலிருந்து உறிஞ்சி
வரும் (போர்டல்) வாயிலாய் இருதய Hepatic veins வழியாக

கல்லீரலுக்கு வருகிறது. அங்கும் இரத்தம் உயிரணுக்களால் கொண்டு வரப்பட்ட உணவுச்சத்துக்களை ரத்தத்திற்கு வேண்டிய உயர்ச்சத்துக்களாக மாற்றுகிறது. உடலுக்கு எப்பொழுதும் சர்க்கரை தேவை. உணவில் கிழங்கை starch என்று சொல்லப்படும் சத்து உடலில் சர்க்கரையாக மாறுகிறது உண்ணும் பொழுது தான் ரத்தத்தில் சர்க்கரை அதிகமாகவும் மற்ற வேளைகளில் குறைவாகவும் இருக்கிறது. ஆனால் உடலுக்கு எப்பொழுதும் தேவையாக இருக்கும் சர்க்கரை உணவு உண்டவுடன் ஏராளமாகக் கல்லீரலுக்கு வருகிறபடியால் தேவையானது போக அதிகம் இருப்பதைக் கல்லீரலிலுள்ள உயிரணுக்கள் கிளைகோஜன் (Glycogen) என்கிற கரையாத சர்க்கரையாக மாற்றி தன்னுள் வைத்துக் கொண்டு உணவில்லாத வேளைகளில் உடலுக்கு தேவையான சர்க்கரையாக மாற்றிச் சுரக்கவும் செய்து கொண்டிருக்கிறது. கல்லீரல் சரியாக வேலை செய்யாவிட்டால் சர்க்கரை சேமிக்கப்படாமல் ரத்தத்தில் ஏராளமாக சேர்ந்து சிறுநீர்ப் பாதையின் (Kidneys) மூத்திரத்தோடு வெளியாகி விடும். அப்பொழுது நீர் இழிவு diabetes என்னும் நோய் உண்டாகிறது.

மேலும் கல்லீரல் உயிர் அணுக்கள் மண்ணீரலிலிருந்து வரும் பாய்க்குழாய் (Hepatic viens) வழியாகக் கொண்டு வரப்பட்ட இறந்துபோன செவ்வணுக்களை (Red Blood Corpuscles) ஆதாரமாகக் கொண்டு, ~~உணவில் வரும் வேளைகளில் உடலுக்குத் தேவையான~~ பித்தநீரை Bile உண்டுபண்ணுகிறது. இந்தப் பித்தநீர், உணவு குடலில் போகும் பொழுது, உணவின் கொழுப்பு சம்பந்தமானவைகளைச் சீக்க உபயோகமாகிறது. உணவு குடலில் இல்லாத பொழுது, பித்தநீர்ப்பை (Gall bladder) யில் இந்தப் பித்தநீர் சேமித்து வைத்து, வேண்டும் பொழுது கொடுக்கிறது. பித்தநீர் குடலில் செல்லாதபடி தடைதடைப்பட்டுவிட்டால் பித்த நீர் ரத்தத்தில் கலந்து மஞ்சள் காமாலை என்னும் (Jaundice) நோய் தோன்றுகிறது.

24 மண்ணீரல் வேலை (Function of the Spleen) 304

இது கருநீலமான அவயவம். வட்டமானது. நீளம் 5 அங்குல நீளமுள்ளது. இடது பக்கத்தில் விலாவெலும்பின் கீழ் புறத்தில் உள்ளது. நுண்ணிய வலை போலக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த [illegible] போன்ற சத்துப் பதார்த்தம் நிறைந்திருக்கிறது. உடம்பு உள்ளே [illegible] வந்து [illegible] மண்ணீரல் [illegible] மருத்துவ [illegible] ஆகி விடுகிறது. இதுதான் [illegible] மருத்துவம், [illegible] இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் Lymphocytes உற்பத்தியாகும் இடங்களில் மண்ணீரலும் ஒன்று. செவ்வணுக்கள் (Red Corpuscles) அழிக்கப்பட்டும், புதியவைகள் உண்டாக்கப் படுகின்றன. இது உடலின் [illegible]. இந்த [illegible] அழிந்து [illegible] தான் [illegible] அடைகின்றன. இந்த [illegible] இருந்து போகும் செவ்வணுக்கள் கல்லீரலுக்கு [illegible] (Hepatic veins) மூலம் சென்று, அங்கே பித்த நீராக மாறுகிறது. மலேரியா காய்ச்சல் நோய் உண்டானால் அதன் [illegible] வெள்ளை அணுக்கள் அதிகம் தேவை [illegible] உடலில் [illegible] அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. [illegible] நோயாளிக்கு மண்ணீரல் பெருத்தும் [illegible], வயிற்றின் இடது புறத்தில் [illegible] கையால் தொட்டுப் பார்க்கக் கூடியதாகிப் [illegible]. இதற்குக் காய்ச்சல் கட்டி என்று சொல்வது வழக்கம்.

25 306 பித்தக் கற்கள் (Bile Stones)

பித்தப் பையில் சிறு கற்கள் உண்டாகும். கற்கள் [illegible] உள்ளனவாக இருக்கும். சில பெரியனவாகவும் [illegible]

இவ் அளவும் இருக்கும். ஒரு சமயத்தில் ஒரே கல்லை மட்டிலும் பார்க்கவும் இருக்கும். சில பலவாக இருக்கும் மற்றவை அநேகமாகவும் கொட்டையாகவும் இருக்கும். சிறிய துக்களாக இருக்கும் அவை ஒன்றோடொன்று உரைந்து உருண்டையாகி வரும். இவை உண்டாவதற்கு வேண்டிய காரணம்: பித்தப்பையை அழற்சி. இந்த அழற்சி ஏற்பட்டவுடன் பித்தநீர் அதிலுள்ள சுவர் பையின் உட்பகுதி இறுகி விடுகிறது மற்றும் வேறு காரணங்களாலும் பித்தநீர் தடைப்பட்டு நிற்குமாயின் இந்த நோய் உண்டாகும்.

இந்தக் கற்கள் பெண்மக்களுக்கு ஆண்மக்களைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகம் உண்டாகிறது. அதிலும் நாற்பது முதல் அறுபது வயதுக்குள் அதிகமாக உண்டாகிறது. பருமனான உடலுள்ளவர்கள் அதிகம் உண்டாவதற்கு டும். அதிக உடல் உழைப்பு இல்லாதவர்களுக்கும் இந்தக் கற்கள் உண்டாகலாம். இருதய நோய், கல்லீரல் நோய், பித்தநீர் வழி நோயால் காய்ச்சல் நோய்களாலும் சதைக் கட்டிகளாலும் அடைப்பு உண்டாகிப் பித்தம் தங்கி விடுவது, இதனாலும் கற்கள் உண்டாகும்.

யாதோர் உபத்திரவத்தையும் கொடுக்காமல் சிறிய கற்கள் பித்தப்பையில் வெகு காலம் தங்கியிருக்கும் கற்களுக்கு வெளியேறும் செயற்கைக்கு உரிய இசிவு வலி உண்டாவதற்கு முன்பு சில குறிகள் தெளிவுபவர்களுக்குத் தெரியலாம். உணவு உண்ட பிறகு வயிற்றில் கனமாகவும் உப்புசமாகவும் இருக்கும். இவை ஏப்பம் விடுவதாலும், வாந்தி எடுப்பதாலும் குறைந்து விடும். இப் பாதிப்பு சிலகாலம் சென்ற பிறகு திடீரென்று இசிவு போன்ற வலி உண்டாகி பொறுக்க முடியாமல் இருக்கும். வயிற்றின் மேல் மடக்கி அழுத்துவதின் வலி குறைக்கிறது. உண்டு. பித்தப் பையில் இருக்கும் கற்கள் சில சமயங்களில் அங்கிருந்து இடம் பெயர்ந்து வரும். இது நாளத்தில் இறங்கி அதனுள் அடைப்பட்டுக் கொண்டால் இசிவு வலி உண்டாகும்

68

இந்த வலி வலது விலாப்புறத்தில் மார்புக்காம்புக்கு அதன் கீழே இருக்கும். அங்கிருந்து வலது தோள் பட்டை முதுகின் வலது பக்கம் இவை களிலும் பாயும். கல்லீரல் கனத்துப் பருத்துக் கையால் தொட்டாலும் வலி தெரியும். இந்த வலி வரும் பொழுது முகம் வெளுத்து, நாக்கு வறண்டு [illegible], தெளிவு [illegible] உண்டாகும். சூடு டெம்பரேச்சர் 102°, 103° வரையில், சாதாரண இவை இருக்கும். அதைத் தொடர்ந்து [illegible] [illegible] அல்லது பித்தப்பைக் கற்கள் [illegible] சேர்ந்து [illegible] வலி [illegible] கின்ற [illegible]. அதைப்படி [illegible] பார்த்தால் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இவை எல்லாம் அடுத்து அடுத்துக் காணப்படும்.

சிகிச்சை:- [illegible]. [illegible] [illegible] [illegible] செய்வது. மற்றொன்று [illegible] இல்லாத நேரத்தில் செய்ய வேண்டியது. [illegible] இருக்கும் பொழுது நோயாளியை படுக்கையில் [illegible] செய்ய வேண்டும். [illegible] நீர் உபயோகமானது. [illegible] [illegible] பித்தநீர்க் [illegible] [illegible] சேர்ந்து வரும். போரிக் லோஷனைத் தொட்டு துணியில் போட்டுக் கல்லீரலின் மேல் ஒத்தடம் போட வேண்டும். அரிசி மாவு, ஆளிவிதை மாவு களிமண் இவற்றைச் [illegible] போட்டுக் கல்லீரலின் மேல் ஒத்தடம் போட வேண்டும். [illegible] வைத்துக் கொண்டு, வலி இருக்கும் இடத்தில் வைத்துக் கட்டலாம். கற்பூரத்தைலம் (oil of turpentine) [illegible] [illegible] தேய்க்கலாம். [illegible] சல்பேட் 20 கிரெயின், சோடா 60 கிரெயின் ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து அடிக்கடி கொடுக்க வேண்டும். சோடா [illegible] 15 கிரெயின், சோடா [illegible] 15 கிரெயின் இவைகளைச் சேர்த்து ஒரு டோஸாக மூன்று வேளை கொடுத்தால், பித்தநீர் இளகி, கற்கள் வெளிப்படும். இவற்றிலும் வலி குறையாவிடில் அபின் ½ கிரெயின் கொடுக்க வேண்டும். ஆனால் அவன் பித்தநீர் ஊற்றை

அடிக்கும். அதற்காகக் காரத் (Alkaline) தண்ணீர் (சோடாக் கலந்த தண்ணீர்) ஏராளமாகக் கொடுக்க வேண்டும். ஊசி மூலம் மார்பியா Morphia (Morphine Hydrochloride) 1/4 கிரெயின் அவசியப்பட்டால் கொடுக்கலாம்.

வலி நின்று மறுபடி திரும்பாமலிருப்பதற்கும் ரத்தம் உண்டாவதைத் தடுப்பதற்கும் மருந்து வகை செய்ய வேண்டும். கலோமெல் 1/4 கிரெயின் இரண்டு மணிக்கு ஒருமுறை கொடுக்கவும். எமிடின் ஹைட்ரோ க்ளோரைட் (emetine hydrochloride) 1/2 கிரெயின் ஒருநாள் விட்டு ஒருநாள் மூன்று முறை ஊசியின் மூலம் செலுத்த வேண்டும். தண்ணீர் ஏராளமாகக் குடிக்க வேண்டும். கலோமெல் கொடுத்த மறுநாள் பேதியாவதற்குப் பேதி உப்பு (Magnesium Sulphate) இரண்டு ட்ராம் கொடுக்க வேண்டும். சிறுநீரக ஸாலிஸிலேட், சோடா, சிட்ரேட், பொட்டாஷ் சிட்ரேட் இவை உபயோகமானவை. நோயின் [illegible] அதிகம் சேர்க்க வேண்டும். இந்த மருந்துகளில் பயன்படாவிட்டால் [illegible] மருத்துவர்களைக் கொண்டு கற்களை எடுத்து விட வேண்டும்.

மருந்து முறை 307

1 எமிடின் ஊசி 1/2 கிரெயின் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மொத்தம் மூன்று கிரெயின் வரையில் (ஆறு ஊசி)

2 பொட்டாஷ் ஸாலிஸிலேட் 10 கிரெயின்
சோடா 20 கிரெயின்
பேதி உப்பு (Mag sulph) 1 ட்ராம் (ஒரு டீஸ்பூன்)
ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வேளை

3 சோடா ஸாலிஸிலேட் 15 கிரெயின்
சோடா Sodii bicarb 15 கிரெயின்
} ஒரு பொட்டலம் ஒரு நாளைக்கு நான்கு வேளை.

4 கலோமெல் 1/4 கிரெயின்
சோடா 5 கிரெயின்
} ஒரு வேளை வலி இருக்கும் பொழுது மணிக்கு ஒருதரம் எட்டு வேளைக்கு

5 சிட்ரேட் 15 கிரெயின்
பொட்டாஷ் சிட்ரேட் 15 கிரெயின்
} ஒரு வேளை ஒரு நாளைக்கு நான்கு வேளை வலி இல்லாத காலத்தில் கொடுக்க வேண்டும்.

70
26

காமாலை — மஞ்சள் காமாலை (Jaundice) 308

பித்தநீர் குடலில் போகாமல் ரத்தத்துடன் சேர்ந்து விட்டால் மஞ்சள் நிறம் ரத்தத்தில் காணப்படுகிறது. இந்த நிறம் கண்ணிலும் தோலிலும் நன்றாகத் தோன்றும். காமாலை கண்டால், இதற்குக் காரணம் யாதென்று கண்டு பிடிக்க வேண்டும். பித்தநீர்த் தடை பல காரணங்களால் ஏற்படும்.

1. பித்தக் குழாயின் உட்புறத்திலுள்ள சளி சவ்வு வீக்கம் உண்டாகி வீங்கி அடைத்துக் கொள்வது. (Inflammation of bile ducts)
2. பித்தக் கற்கள் வந்து அடைத்துக் கொள்வது
3. பித்தக் குழாயில் புண் உண்டாகி, ஆறின பிறகு தழும்பு சுருங்கி துவாரம் அடைத்து விடுவது
4. பித்தக் குழாய்க்கு அக்கம் பக்கத்திலுள்ள அவயவங்களில் சதைக் கட்டிகள் முதலியன புறப்பட்டுக் குழாயை அழுத்தி அடைத்து விடுவது
5. கல்லீரலிலிருந்து கிளம்பும் சிறிய பித்தக் குழாய்கள், கொள்ளைக் காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல், விஷக் காய்ச்சல், பித்தப்பாண்டு ரோகம், பாம்புக் கடி இவைகளால் உண்டாகும் நச்சுக்களால் (விஷங்களால்) பித்த ஊறாது நின்று விடுவது.
6. மேக ரோகங்களில் கல்லீரல் முதலிய அவயவங்களுக்கு நோய் கண்டு காமாலை உண்டாகலாம்

அடையாளங்கள்: தோலும், கண்களில் வெள்ளை விழியும், மஞ்சள் நிறமாக இருப்பது. தோலில் அரிப்பு, மஞ்சள் நிறமான வேர்வை, அதிக மஞ்சள் நிறமுள்ள மூத்திரம், வெண்மை மலம், தள்ளாட்டம். நாடி எண்ணிக்கைக் குறைவு தள்ளாமை தூக்கமின்மை

சிகிச்சை:— பித்தப்பைக் கற்களுக்குச் செய்வது போலச் செய்ய வேண்டும். கடுக்காய், பேதிஉப்பு, கலோமெல், ஸாலிஸிலேட், [illegible], உள்ளிப் பூண்டு, நிலவேம்பு, உலர்ந்த வகையில் வீட்டமின் ஸி, கீரை வகைகள் உபயோகமாக இருக்கும். தண்ணீர் ஏராளமாகக் குடிக்க வேண்டும். ஸோடா ஸாலிஸிலேட் இரண்டும் [illegible]. தண்ணீரில் கலந்து குடிக்க

கொடுக்கவேண்டும். வெண்ணெய் தயிர் மோர், பால் முதலியவற்றை (Whey) இவற்றை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் நீராகாரம் கவனித்து வரவேண்டும். மேகரோகம் (Syphilis) இருந்தால் அவற்றை; புண்களையும் சீக்கிரமாகக் இவை குணமாக்கவேண்டும். பத்தியத்தில் இல்லாததால் உடலில் சர்க்கரை அதிகமா வதால் கச்சக் கொழுப்பு கொடுத்துத் தடுக்க வேண்டும். இதற்கு முதலில் உள்ளிப்பூண்டு இரண்டும் உபயோகமானால் உடன் அரிப்பு நிற்கும். தண்ணீரில் சோடா உப்பைக் கரைத்துத் தெய்த்துக் குளிக்கவேண்டும். சொறிக் கட்டிகள் உண்டானால் இருக்கும் உடம்பிலிருக்கும் குறைய மருத்துவர்களிடம் கொண்டு மருத்துவம் செய்யவேண்டும்.

இவை கொடுக்கப்படும் ... மிகக் குறைவாய் மருந்துகள் இல்லாமலே குணமாகி விடும். இருந்தாலும் 1/20 கிரெய்ன் கலோமெல், 2 கிரெய்ன் சோடாவுடன் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வேண்டும். உடம்பில் கொப்புளங்கள் புண்களிருந்து நோய்க் கிருமிகளால் சீழ் வந்தால் அந்தப் புண்களைச் சுத்தம் செய்து அயோடோபாரம் அயோடோபாரம் தடவிக் கட்ட வேண்டும்.

உணவு :- பால் நெய் வெண்ணெய் முதலிய :- சுலபமாகச் சமிக்கக் கூடிய உணவு கொடுக்கலாம். ஆலிவ் ஆயில் (Olive oil) உள்ளுக்குக் கொடுத்தால் நல்லது உண்டு. நீராகாரம் மிகவும் பக்குவமாகக் குடிப்பதும் நீர் அருந்தல்

மருந்து முறை :— 309

(1) கலோமெல் 1/4 கிரெய்ன், சோடா 10 கிரெய்ன் — ஒரு பொட்டலம்; ஒரு நாளைக்கு மூன்று வேளை

(2) கிலோரேட் 15 கிரெய்ன், அமோனியம் குளோரைடு 20 கிரெய்ன் — ஒரு நாளைக்கு இரண்டு வேளை

(3) சோடா 10 கிரெய்ன், சாலிசிலேட் 10 கிரெய்ன் — ஒரு பொட்டலம்; ஒரு நாளைக்கு 3 வேளை

ஒரு நாளைக்கு மூன்று பொட்டலம்.

(4) காலையில் Hexamine 10 கிரெய்ன் ஒரு பொட்டலம். ஒரு நாளைக்கு 3 வேளை

(5) கடுக்காய் 1-2 காய்கள்
வெடி உப்பு 2 டிராம்கள் } இவைகளைத் தண்ணீரில் காய்ச்சிக் கொடுக்க
இதனுடன் அமிர்தாரிஷ்டம் 1/2 தேக்கரண்டி வீதம்

27. **கல்லீரலின் ரத்தத் தேக்கம் (Congestion of Liver)** 310

சாதாரணமாக இருக்க வேண்டிய ரத்தத்திற்கு மேல் அதிகமாகக் கல்லீரலில் ரத்தம் அதிகம் தேங்குவதற்கு தேக்கம் என்று பெயர். உணவு உண்ட பிறகு சிறிது நேரத்திற்கு அப்படி ரத்தத் தேக்கம் உண்டாகும். ஆனால் அது சிறிது நேரத்தில் நீங்கி விடும். அதனால் நோய் உண்டாவதில்லை. நோய் உண்டாக்கக் கூடிய தேக்கம் பின்வரும் காரணங்களால் ஏற்படும்.

1. எப்பொழுதும் ருசியின் ஆசையால் அதிகமாக உண்ணும் வழக்கம்
2. நெடுநாளைக்கு கள், சாராயம் முதலிய போதை வஸ்துக்களைக் குடிப்பது
3. மிகு வேகக் காரம் மிகுந்த பண்டங்கள். இவைகளால் ரத்தத் தேக்கம் ஏற்படும்.
4. மலேரியாக் காய்ச்சல் (முறைக் காய்ச்சல்) கருங்காய்ச்சல் kala azar போன்ற விஷக் காய்ச்சல்கள்
5. வயிற்றில் அஜீரணம், வயிற்றுப் புண், இரைப்பை சம்பந்தமான நோய்களால் கல்லீரலில் ரத்தத் தேக்கம் உண்டாகும்
6. பெண்களுக்கு மாதந்தோறும் வர வேண்டிய இரத்தப் போக்கு நின்று விட்டால்
7. இருதயம், நுரையீரல் இவைகளின் பல நோய்களின் காரணமாக ரத்த ஓட்டம் தடைப்பட்டு கீழ்ப் பெரு சிரையில் (கீழ் பெருநாளம்) (Inferior Vena Cava) தேக்கம் உண்டாகி, அதனால் கல்லீரலில் தேக்கம் உண்டாகும். கல்லீரல் மிகவும் பருத்து வலது விலா எலும்பு வரையிலும் வந்து வயிற்றின் வலப்புறம் பெருத்து, வீக்கம் என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்படும்.

குறிகள்:- உணவுக்குப் பிறகு, கல்லீரல் பெருத்தல், பெருத்தின் கனம், வீக்கம், வலி, வலது தோள் பட்டையில் வலி, வயிற்று அஜீரணம் அடையாளமாக ஏப்பம், புளிப்பு, பசியின்மையும், நாக்கு அழுக்கடைந்து, மலம் வெளுப்பாக இருக்கும். இதற்கெல்லாம் **பித்தாதிக்கம் (Biliousness)** என்பது பொதுவான பெயர்

சிகிச்சை:- சரியாக் கூடுமானவரை இருக்கும் உணவு குறைப்பது

காசம், புளி இவை யல்லாத உணவு உட்கொள்ளலாம். கல்லீரல் இருக்கும் இடத்தில் சூடு ஒத்தடம், கற்பூரத்தைலம் போட வேண்டும் [illegible] மேலே தடவுக. கலோமெல் 1/4 கிரெயின், ஜலாப் 3 கிரெயின் ஒரு வேளைக்கு, நான்கு வேளை. பாதி எண்ணெய் [illegible], பேதி உப்பு கொடுத்து மலச்சிக்கலை நீக்குவது. இஞ்சி, [illegible] பட்டையும் கரையும் Kurichi கொண்டும் கொடுக்கலாம். [illegible] படுக்கவும், ஜுரமும் போதும் நிற்க வேண்டியது. இந்த நோய், துணையில் நோய்களால் ஏற்படும் இக்கண் அதற்கேற்ற நோய்களுக்கு செய்ய வேண்டிய சிகிச்சை செய்யவேண்டும்.

28 ## கல்லீரல் அழற்சி (Inflammation of the Liver) 311

கல்லீரல் உயிரணுக்கள், நோய்ந்து இணைப்புத் திசு tissue பெருத்து விடும். இது அழற்சியினால் ஏற்படும் வீக்கம். இணைப்புத் திசு பெருத்துவிட்டால் ரத்தக் குழாய்கள் அழுத்தப்பட்டு, உயிரணுக்கள் கரைந்து, அதனின்று அபாய நிலை ஏற்படுகிறது. மலேரியா போன்ற இசிவுக் காய்ச்சல் அடிக்கடி வருவதாலும் சாராயம் [illegible] குடிப்பதும் பழக்கத்தினாலும் அடிக்கடி [illegible] உயிருக்கு ஆபத்தாக முடிகிறது.

குறிகள்:— முதல் கல்லீரலின் நோய்க்குறிக்கு உண்டாவது சோர்வு, வலி, கல்லீரல் கனம், தோள்பட்டை வலி, குமட்டல், வாந்தி, பொருமல், அஜீரணம் [illegible] போட்ட போட்ட அதிகமாக வரும். [illegible] உண்டாகும் அழற்சியில் கல்லீரல் பருத்து, பாதி இறுகி, ரத்த ஓட்டம் தடைப்பட்டு, காமாலை, [illegible] இவை உண்டாகும். மேக ரோகங்களும் இதற்கு காரணமாக உண்டாகும்

சிகிச்சை:— காமாலைக்குச் செய்வது போலச் செய்ய வேண்டும். மேக ரோகங்களுக்கு மருந்துகள் செய்ய வேண்டும். குடியை நிறுத்த வேண்டும்.

74

கல்லீரல் [illegible] (Liver abscess) 312

கல்லீரலில் [illegible] ஏற்படுவதும் இதில் அடங்கும் [illegible] இது [illegible] [illegible] கொண்டதாகவும் இருக்கலாம். [illegible], வயிற்றுப் புண் [illegible] [illegible], பித்த கற்கள், [illegible] [illegible] [illegible] உண்டாகிறது

குறிகள்: நோய்க்கள், கல்லீரலில் [illegible], வலி, வீக்கம் [illegible] [illegible]

சிகிச்சை: [illegible] மருத்துவம் [illegible] [illegible] உட்கொள்ள [illegible] [illegible] [illegible] இருக்கலாம். [illegible] [illegible] வயிற்றின் [illegible] அறுவை உண்டாக்கி, [illegible]. மருந்து, [illegible], பித்த கற்கள், [illegible] [illegible] செய்வதுபோல

சிறுநீர்ப் பாதையும் அதின் நோய்களும். [illegible] //

313 **Kidneys and their function & diseases:— 313**

சிறு நீர்ப் பாதை (kidneys) என்பது முதுகுத்தண்டின் Spinal Cord இரு புறங்களில் இருக்கும் இரண்டு அவயவங்கள். இவை அவரை விதை போல், 2 1/2 அங்குல அகலமும் [illegible] அங்குலம் பருமனும் உள்ளவை. உயர் அணுக்கள் ஆக்ஸிஜனும், ஆகாரமும் உடலின் எப் பொருளும் கடந்து கொள்வதைப் போல் உயர் நிலை பெறுகின்றது. [illegible] மேல் பாகத்தின் ரத்தத்தில் [illegible] [illegible] [illegible] போகும். [illegible] ரத்தத்திலேயே கலந்து கொண்டு நுரையீரல் [illegible] [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] சிறு நீர்ப் பாதை மூலம் அழிக்கப்பட்ட [illegible] [illegible] முதலிய வற்றையும் வெளியேற்றுகிறது.

சிறுநீர்ப் பாதையின் உட்புறம் குழாய்களும், வெளிப்புறம் [illegible] [illegible]. [illegible] இருக்கும் உட்புறத்தில் [illegible] [illegible] மூலம் ரத்தம் உட் சென்று, வடிகட்டி மூலம் வெளியாகிறது. அவ்வி[illegible] சிறு நீர்க் குழாயும் வெளி வருகிறது

சற்று வெண்மையாக, [illegible] அங்குலம் [illegible] [illegible]

மூத்திரப் பையில் சிறுநீர் படிப்படியாய் வந்து சேர்கிறது. மூத்திரப் பை அடிவயிற்றின் உட்புறம் இருக்கிறது. இது குறித்த அளவு மூத்திரக் குழாய் வழியாய் வரும் மூத்திரத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு பை நிரம்பியவுடன் மூத்திரப் புறவழியாக (urethra) வெளிவருகிறது. சாதாரணமாக இது அடைபட்டு மூத்திரம் மூத்திரப் பையில் தங்கியிருக்கும். மூத்திரப் புறவழி புறப்படும் இடத்தில் ஒரு சுருக்குத் தசை (Sphincter) இருக்கிறது. மூத்திரப்பை நிரம்பியவுடன் சுருக்குத் தசை தளர்ந்து மூத்திரம் வெளிவருகிறது.

மூத்திரம்: நாளொன்றுக்கு ஒரு மனிதன் சராசரி மூன்று பைண்ட் மூத்திரம் கழிக்கிறான். பெண் பிள்ளைகளுக்குச் சற்றுக் குறைவு. வேர்வை அதிகமான கோடைக் காலத்தில் மூத்திரம் குறைவுபடும். குளிர்ந்து வேர்வை இல்லாத காலத்தில் மூத்திரம் அதிகம் போகும். நோய்களில் சிறுநீர்ப் பாதிப்பின் பல அடுக்கு வெளிய வியாதிகளில் மூத்திரம் குறைந்து வரும். மூத்திரம் வெண்ணிறமான மஞ்சள், புதிதாக அகப்பட்ட வைக்கோல் நிறம் என்பதாகச் சொல்லுவது வழக்கம்.

சில சமயங்களில், வியாதி யில்லாத காலத்தில் கூட மூத்திரம் சற்றுக் கலங்கலாகவும், சளியுடனும் இருக்கும். சிறுநீர்ப் பாதையும், மூத்திரப் பையும் நோயுற்றிருக்கும் அப்பொழுது மூத்திரத்தில் சளி அதிகமாகக் காணப்படும். மூத்திர நீரில் கலந்திருக்கும் பல உப்புகள் அடர்ந்து பெரிதாகக் காணப்படும். மூத்திரத்தை அதிக நேரம் ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தால் அடிப்பாகம் கலங்கியிருக்கும். நெடி பாதிக்கும் கொஞ்சம் இருக்கும். நீர்த்தன்மை உண்டாகும்.

மூத்திரத்தின் ஒப்புக் கனம் (Specific gravity) 1015 முதல் 1025 வரையில் இருக்கும். தண்ணீர் அதிகம் குடிப்பவன் ஒப்புக் கனம் குறைவாயிருக்கும். தண்ணீர்க் குறைந்தால் ஒப்புக் கனம் அதிகமாகும். மூத்திரம் சற்றுப் புளிப்புள்ளது (slightly acid) அதிக நேரம் வைத்திருந்தால் காரமாக (alkaline) மாறுகிறது.

மூத்திரக் கற்கள் — கிரிச்சு (Renal Colic) 314

யாதொரு உபத்திரவமும் இல்லாமல் மூத்திரக் கற்கள் வெளியாகலாம். சில சமயங்களில் எரிச்சல் மட்டும் நீர் இறங்கும் பொழுது உண்டாகலாம். சில சமயங்களில் இந்த கற்கள் பெருங்கற்களாக மாறி இருநீர்ப்பாதையின் வழியாக மூத்திரப் பையில் இறங்கலாம். அப்பொழுது பொறுக்க முடியாத வலியை உண்டாக்கும். அதற்கு இருநீர்ப்பாதையில் [struck-through text] கிரிச்சு (Renal Colic) என்று பெயர். இந்தக் கற்கள் யூரிக் ஆசிட், யூரேட்ஸ் ஆக்ஸலேட்ஸ் இவற்றால் ஆனவை. பாஸ்பேட் (Phosphatic) கற்கள் நீர்ப்பையில் உண்டாகும். மூத்திரத்தில் புளிப்புச் சத்து acidity அதிகம் இருந்தால் யூரிக் ஆசிட் கற்கள் உண்டாகலாம். காரச் சத்து (alkalinity) அதிகமாக இருந்தால் ஆக்ஸலேட் கற்கள் உண்டாகலாம். மூத்திரக் குழியில் அகப்பட்டுக் கொள்ளுகின்ற கற்கள் நீர்ப்பைக்குள் வரும் பொழுது வலி உண்டாகிறது.

குறிகள்:— இடுப்பிலும் முதுகிலும் பொறுக்க முடியாத வலி உண்டாகும். உடலை ஆட்டினாலும், நகர்ந்தாலும், நடந்தாலும், வலி அதிகரிக்கும். எந்த இருநீர்ப்பாதையில் [struck-through text] இந்த அடைப்பு ஏற்படுகிறதோ அந்த இடத்தின் மேல் தொட்டால் வலி அதிகரிக்கும். ஒரு சமயம் இருநீர்ப்பாதையின் அசைவும் ஏற்படும். இதனால் உண்டாகும் வலி விதைகளுக்குப் பரவிக் காணப்படும். வலி விட்டு விட்டு வரும். கடைசியாக மூத்திரப் பையில் கல் இறங்கி விட்டால் வலி நின்று விடும். வலி வரும் பொழுது பொறுக்க முடியாது.

நோயாளியின் முகம் வெளுத்து, நாடி பலம் குறைந்து, வேர்வை உண்டாகி, பேச்சு அடக்கி விட வேண்டியும், காய்ச்சலும் இல்லாமல் ஏற்படும். அடிக்கடியும் வாந்தியும் உண்டாகும். வலியின் போது கற்களின் உராய்வைப் பொறுத்திருக்கும். மூத்திரத்தின் இரத்தம் கலந்து வெளியாகும்.

பதிந்து அங்குள்ள சிறுநீர்க்குழாயின் வழியாகக் கீழே இறங்குவதால் நிரம்பவும் சிறுநீர்ப் பாதைக்குக் கீறல் ஏற்பட்டதால் வலியும் அங்கே ஏற்படும் புண் உண்டாகி ரத்தம், சீழ், வெண்கரு (albumin) இவை இவை சிறுநீரில் காணப்படும்

சிகிச்சை:— இரண்டு விதம் செய்ய வேண்டும்.

1. வலியை உடனே நிறுத்திக் கற்கள் மூத்திரக் குழாய் வழியாகச் சீக்கிரம் கீழே இறங்கச் செய்வது

2. வலி இல்லாத வேளைகளில் கற்கள் உண்டாகாமல் தடுக்கும் முறைகளைக் கைப்பற்றுவது.

வலியை நிறுத்த:— 2 கிரெய்ன் அபின் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் 1/4 கிரெய்ன் மார்பியா (Morphine Hydrochloride) ஊசிமூலம் கொடுக்க வேண்டும். வலி அதிகம் இல்லாவிட்டால் ஒரு ஊசி போதுமானது. பொறுக்க முடியாமல் இருந்தால் இரண்டு அல்லது மூன்று ஊசிகள் போட்டுப் போட வேண்டியிருக்கும். சூடான தண்ணீரில் 60 கிரெய்ன் சோடா உப்பைக் கலந்து வலி இருக்கும் பொழுதும், அதற்குப் பிறகும் குடிக்கக் கொடுக்க வேண்டும். தொட்டியில் சுடுதண்ணீர் வைத்து அதில் நோயாளியை இடுப்பு மூழ்கும்படி ஒரு தொட்டியில் அமிழ்த்திருக்கும்படி பத்து நிமிஷம் உட்கார வைக்க வேண்டும். (Sitz bath) சுடுதண்ணீர் வைத்துக் கெட்டில் கருவி மூலம் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

2. வலி இல்லாத வேளைகளில் காய், கனி, பழம். இவைகளை உணவுடன் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். சோடா உப்பு 30 கிரெய்ன் வெந்நீர் பருத் தண்ணீரில் கலந்து தினம் காலையிலும் மாலையிலும் குடிக்க வேண்டும். உணவு நேரம் மாற்றி வைத்துக் கொள்ள வேண்டும். உண்ணும் உணவை ஒரு தடவைக்கு இரண்டு வேளையாகப் பிரித்து உண்ண வேண்டும். தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும். எண்ணெய் தேய்த்துக் கொண்டும், வெயிலில் உடலைக் காயவைத்தும் Sun bath உடல் பயிற்சிகள் இவைகளைச் செய்ய வேண்டும்.

குணமாகாவிட்டால் சத்திர மருத்துவம் செய்ய வேண்டும். யூரிக் ஆசிட் (uric acid) கற்கள் இருந்தால் மூத்திரத்தைக் காரமுள்ளதாக (alkaline) மாறும்படி செய்ய வேண்டும்.

78

அதற்காகக் கொடுக்க வேண்டும். 30 கிரெய்ன் சோடா பைகார்ப் தண்ணீரில் கரைத்து நாள்தோறும் கொடுக்க வேண்டும். எமடின் (Emetin Hydrochloride) 1/2 கிரெய்ன் ஒரு நாள் விட்டு ஒருநாள் மொத்தம் 3 கிரெய்ன், வாயையும் ஊசி மூலம் கொடுத்து, சோடாவும் கொடுத்து வந்தால், ஆசிட் ஜுரம் உண்டாகாது.

மூத்திரத்தில் சீழ் (Pus in the urine). 316

இது பல காரணங்களால் உண்டாகலாம்.

1. சிறுநீரகப் பாதையின் கற்களால் புண் உண்டாகி அதன் சீழ் மூத்திரத்தில் கலந்து வரலாம்
2. சிறுநீரகப் பாதையில் க்ஷய ரோகம் உண்டாவதால் (tubercle of the Kidneys) ஏற்படலாம்.
3. வெள்ளை, மேகம், போன்ற நோய்கள் மூத்திரப் புறவழியிலிருந்து மேலேறி மூத்திர அவயவங்களில் பரவுகிறதாலும் உண்டாகலாம்

சிகிச்சை:— காரணத்திற்குத் தக்கபடி செய்ய வேண்டும்.

மூத்திரப்பை அழற்சி. (Cystitis) 316

அநேகமாய் இது தொற்று கிருமிகளால் உண்டாகிறது. வெள்ளை மேக நுண்ணுயிர்களாலும், கோலன் நுண்ணுயிர்களாலும் (Colon bacilli) உண்டாகிறது. மேலே இருக்கும் சிறுநீரகப் பாதையிலும், கீழே இருக்கும் மூத்திரப் புறவழி (urethra)யிலும் உண்டாகும். நோய்க் கிருமிகளால் தொற்று ஏற்படுகிறது.

குறிகள்:— மூத்திரப்பையின் வலி, அடிக்கடி நீர் இறங்குதல், இறங்கும் போது எரிச்சல் உண்டாதல், காய்ச்சலும் இருக்கும். மூத்திரம் புளிப்பு acidity அதிகரித்துக் காரம், சீழ், சளி, ரத்தம் இவை கலந்து இருக்கும்

சிகிச்சை:— தண்ணீர் ஏராளமாகக் கொடுக்க வேண்டும். பார்லி அரிசிக் கஞ்சி, தண்ணீரில் பொட்டாசியம் சைட்ரேட் இருபதிலிருந்து முப்பது கிரெய்ன் (Pottasium citrate) கலந்து ஒருநாளைக்கு மூன்று நாலு

ரவம் கொடுக்க வேண்டும். வலி அதிகம் இருந்தால், அபின், மார்பியா இவைகளை கொடுக்க வேண்டும். எனிமா கொடுத்துக் கழிக்க வேண்டும் பிறகு அரிசிக் கஞ்சியை அவனுக்கு எனிமாக் கொடுத்தால் வலி நிற்கும். பால் கஞ்சி, பழரசம் இவை உணவு.

மூத்திரத்தில் ரத்தம் — காரணங்கள் 317

1. சிறுநீரப் பாதை, மூத்திரப்பை அல்லது மூத்திரப்புறவழி இவைகளின் எந்தவித காயங்களினால் ரத்தம் இந்த அவயவங்களிலிருந்து வந்து மூத்திரத்தோடு கலந்திருக்கும்.
2. மேற்கூறிய இடங்களில் கற்கள் உண்டாகி, புண்ணாகி அதனின்றும் ரத்தம் வெளிப்படலாம்.
3. மேற்கூறிய அவயவங்களின் அழற்சி
4. அசாதாரண கட்டி (tumours) இந்த அவயவங்களிலும், மூத்திரக்காய்களிலும் (Prostrate) உண்டாகும்.
5. மேலே கூறியுள்ள அவயவங்களின் க்ஷயரோகம்.
6. கடுமையான மலேரியா காய்ச்சல், பெரியம்மைக் (வைசூரி) காய்ச்சல் இவைகளால் ரத்தக் கசிவு ஏற்படலாம்

சிகிச்சை:— கற்களினால் ரத்தம் வருமானால் அதற்கேற்ற தண்ணீரில் எலுமிச்சம் பழரசம் கலந்து அடிக்கடி குடிக்கக் கொடுக்க வேண்டும். வலி அதிகம் இருந்தால் அபின் இல்லாவிட்டால் மார்பியா ஊசி, மலத்தைக் கழிக்க எனிமா அல்லது பேதி மருந்துகள் உபயோகிக்க வேண்டும். வலி காய்ச்சல் இவைகளைத் தக்கபடி முறையைக் கையாள வேண்டும். கால்சியம் ரத்தப் பெருக்கை நிறுத்த நல்ல மருந்து. கால்சியம் லாக்டேட் (Calcium Lactate) ஒருவேளைக்கு ஒன்று வேளை வீதம் தேவையான கொடுத்து பிறகு இவை உண்டாக்க வைத்துக் கொள்ள வேண்டும். 5 முதல் 10 சி.சி. வீதம் கால்சியம் குளோரைட் (Calcium Chloride) கொதிக்க வைத்த தண்ணீரில் கலந்து நாளத்தின் (intravenous) வழியாக ஊசி போட்டுத் தொடர்ந்து நாளில் கொடுத்தால் ரத்தம் வருவது நின்று விடும். காரமான (alkaline) சோடாத் தண்ணீர் குடிப்பதற்கு ஏராளமாகக் கொடுக்க வேண்டும். **முக்கியமாக** இவர் காரமான உணவு அல்லது.

318 வெண்கரு இறக்கம் (Albuminuria) 318

சாதாரண காலங்களில் மூத்திரத்தில் வெண்கரு albumin வெளியாகாது. காணப்படமாட்டாது. சில நோய்களில் வெண்கரு albumin வெளியாகும். அப்பொழுது அதற்கு வெண்கரு இறக்கம் Albuminuria என்று பெயர். வெண்கருவை மூத்திரத்தில் இப்படிக் கண்டுபிடிப்பது சுலபம். காலைக்கழிக்கும் சுத்த மூத்திரத்தை ஓர் ஆய் குழாயின் test tube கால் பாகம் எடுத்துக் கொள்ள வேண்டும். மூத்திரம் கலங்கியிருந்தால் அதை காகித வடிகட்டியில் வடிகட்டிப் பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும். சாராய விளக்கின் (Spirit) மீது நீரின் மேற்பாகத்தைக் காய்ச்ச வேண்டும். கொதிக்கும் பாகம் கலங்கலாக யாதொரு மாறுதலும் இல்லாமலிருக்குமானால் அதில் வெண்கரு சம்பந்தம் இல்லை. அப்படியின்றி கொதித்த பாகம் கலங்கி வெண்கரு திரையாகக் காணப்பட்டால், அதில் ஒரு சொட்டு அல்லது ஆஸிட் acetic acid சேர்க்க வேண்டும். சேர்த்த பிறகும் கலக்கம் அப்படியே இருந்தால் அந்த நீரில் வெண்கரு இருக்கிறது என்று முடிவு செய்யலாம்.

சாதாரணமாக [illegible] உண்டானாலும் வெண்கரு மூத்திரத்தில் வெளியாகலாம். இது தற்காலிகமாக ஏற்படுவதால் உணவை மாற்றினால் அது மறைந்து விடும். உணவில் புரதங்களை (Protein) குறைத்து, [illegible] வகைகளும் பருப்பு வகைகளும் சேர்த்தால் போதுமானது. [illegible] உபயோகிக்க வேண்டும். [illegible] வெண்கரு இறக்கம் [illegible]. [illegible] நோய்கள் வந்து அதன் காரணமாக வெண்கரு மூத்திரத்தில் [illegible] அப்பொழுது [illegible] உண்டாகும். ஆகையால் அதை [illegible] வேண்டும். ஆகாரத்தில் நியமம், ஸ்நானம், உடம்பு பிடித்தல், எண்ணெய் தேய்த்து [illegible] நீர் [illegible] செய்துவர வேண்டும்.

319 மூத்திரப் பிண்டி அழற்சி (Brights Disease) 319

இந்த அழற்சி பல காரணங்களால் உண்டாகக் கூடும்.

1. [illegible]
2. [illegible] உடம்பு [illegible]
3. [illegible]
4. மேக வியாதி (Syphilis)
5. கள், சாராயம் அருந்தல்
6. உள்ளுக்கு காரமான மருந்துகள்.

குறிகள்:— குளிர் காய்ச்சல், இடுப்பில் வலி, வாந்தி, தலைவலி, மலச்சிக்கல், [illegible] அதிக காய்ச்சல் 100-103 டிகிரி வரையில். சில சமயங்களில் கால், வயிறு [illegible] மூத்திரம் [illegible] வெண்கரு [illegible]. [illegible] (renal tissues) [illegible] (blood cells) காணப்படும். [illegible] உண்டாகலாம். [illegible] மூத்திரத்தில் [illegible] உடனே [illegible]

சிகிச்சை:— நோயுற்ற [illegible] வேண்டும். [illegible] புளி, காரம், எண்ணெய் [illegible] வேண்டும். பால் [illegible] வேண்டும். [illegible] 1½ படி பால் போதுமானது. [illegible] வேண்டும். [illegible] மிகவும் நல்லது. [illegible] உபயோகமாகும் [illegible] வேண்டும். [illegible] வேண்டும்

[illegible] 1ம் பக்கம்

184

இதுவுமல்லாமல் போட்டாஸியம் பர்மாங்கனேட் அல்லது துரிசு கலந்த தண்ணீரையும் உபயோகப்படுத்தலாம். இதற்காகவும் ஒரு பைன்ட் தண்ணீருக்கு ஒரு டிராம் கலக்க வேண்டும். போட்டாஸியம் பர்மாங்கனேட் ஒரு பைன்ட் தண்ணீருக்கு எட்டு கிரெயின் சேர்க்க வேண்டும் துரிசு ஒரு அவுன்ஸ் தண்ணீருக்கு ஐந்து கிரெயின் வீதம் சேர்க்க வேண்டும். உடம்பின் பலம் அதிகரிப்பதற்கேற்ற உபாயங்களைச் செய்ய வேண்டும். உயிர்ச்சத்துக்கள் (Vitamins) உணவில் நிறைய இருக்க வேண்டும். அஜீரணம், மலச்சிக்கல், பல்லில் சீழ்வடிதல் முதலியவைகள் இருந்தால் கவனித்து அவற்றிற்குத் தேவையான சிகிச்சை முறைகளைச் செய்ய வேண்டும். இரும்பு கலந்த மருந்துகள் மிக்க நலம் தரும். [illegible] ஊசியின் மூலம் வாரம் இருமுறை குத்தி மருந்தாகக் கொடுப்பதும் பலன் கொடுக்கும்.

426. சூதகவலி (Dysmenorrhoea)

ருதுகாலங்களில் உண்டாகும் வலிக்குச் சூதகவலி என்று பெயர். மூன்று விதமான வலிகள் உண்டு (1) நரம்புகள் சம்பந்தமாக உண்டாகும் வலி (2) அழற்சியினால் உண்டாவது (3) சவ்வு வெளியாவதால் உண்டாகும் வலி.

(1) **நரம்பு சம்பந்தமான வலி:-** ருதுவாகும் அடையாளங்கள் வெளிப்படுவதற்கு இரண்டு மணி நேரம் முன்பாக உண்டாகும் வலி இது; பொதுவாக கடுமையானதாக இருக்கும். வாந்தி எடுக்கும். மயக்கம் வந்து களைப்பு ஏற்படும். வலி அடிவயிற்றில் அதிகமாக இருக்கும்.

(2) **அழற்சியினால் உண்டாவது:-** இந்த வகை வலியானது விடாமல் மந்த வலியாக இருக்கும். வலி லேசாக இடையின் பின் புறத்திலும், தொடை, கால், அடிவயிறு இவைகளிலும் இருக்கும். வலி கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி அழுக்கு வெளியானவுடன் குறைய ஆரம்பிக்கும். இது ருதுவாவதற்கு இரண்டு நாள் முந்தியே ஆரம்பித்து, ருதுகாலம் முழுதும் மூன்று நாள் வரையில் கூட இருப்பது உண்டு. மொத்தம் வலி ஒரு வாரத்திற்குத் தொடர்ச்சியாக இருக்கும்.

(3) **சவ்வு வெளியாவது:-** இது அபூர்வம். பொதுவாக கடுமையான வலி உண்டாகி, பின் சவ்வு வெளியானவுடன் நின்று விடும்.

வலி அதிகமாக இருந்தால் லேசான காய்ச்சல் இருக்கும். அழற்சியால் உண்டாகும் வலியில் காய்ச்சல் ஏற்படக்கூடும். இந்த அழற்சி கருப்பை, கருப்பைக் குழாய்கள், அண்டகோசம் வரையில் இருக்கலாம். இதில் நோயாளிகளின் களைப்பும் இருக்கலாம். இதற்கு மூன்று காரணங்கள் முக்கியமாக உண்டு.

(1) அழுக்கு வெளிவருவதற்குத் தடை. இது கருப்பை புரண்டு அல்லது மடிந்து, அல்லது சாய்ந்திருப்பதால் உண்டாகும்.

(2) கருப்பையின் துவாரம், மிக சிறியதாக இருப்பதாலோ அல்லது அழற்சி, புண் முதலியவைகளால் சுருங்கி, தடிப்பு உண்டாகி, துவாரம் அடைத்து இருப்பதாலோ உண்டாகலாம்.

(3) ருது காலத்தில் கருப்பை சுருங்கும்போது அதன் அதிர்ச்சியால் நரம்புகளில் வலி உண்டாகிறது.

மருத்துவம்:- காரணத்திற்குத் தக்கபடி செய்ய வேண்டும். இந்த நோய் அதிகமாகச்

(5) சிகிச்சை செய்பவர்கள், உதவியாளர்கள் இவர்களுடைய உடை, கைகள், சுத்தமாக இருக்கவேண்டும். கைகளைச் சவுக்காரம், எரிதுகாரம் இவைகளால் சுத்தம் செய்துகொண்டு தக்கக் கொல்லிகள் கரைத்த வெந்நீரில் கையைக் கொஞ்சநேரம் ஊறவைத்துப் பிறகு காயங்களைத் தொட்டு வேலை செய்யவேண்டும்.

மேற்கூறிய பாதுகாப்புகளைக் கவனித்து வேலை செய்தால் உயிருக்குக் கேடுவரா வண்ணம் சிகிச்சை பலனடையும்.

129 தொற்று நீக்கிகள்

(1) கொதிக்கும் தண்ணீர்

(2) சூரிய கிரணங்கள். ஜன்னல்கள் கதவுகள் வெயில் உள்ளேவரும் வண்ணம் பட்டால் நோய்க் கிருமிகள் அழிந்து விடும்.

(3) அயோடின் திராவகம், சிறந்த கொப்பளக் கொல்லி நீரில் வேகமாகக் கரைந்து மஞ்சள் நிறம் அடர்ப்பமாக தோன்றும் திராவகம் காயத்துக் காயம் கழுவுவதற்கு மருந்து நீராக உபயோகப் படுத்தலாம்.

(4) பச்சை வேப்பிலையைக் கொதிக்க வைத்த தண்ணீரும் நல்லது.

(5) போரிக் காடித் தூளும், அது கரைத்த திராவகமும். கொதிக்க வைத்த வெந்நீரும்.

இயற்கை தீர்ப்பு ஏற்படாமல் அசுத்தத்தின் காரணமாகச் சீழ்பிடித்து விட்ட புண் சொறி சமாக ஆறாது மேலே வந்து தடிப்பு ஏற்படும். இதை இன்பெக்ஷன் அல்லது இயற்கை தீர்ப்பு எனச் சொல்லலாம். இந்த காயத்தில் நோயணுக்கள் இடம் பெற்று விட்டால், காயத்தில் வீக்கம் வலி, உடலில் காய்ச்சல் ஆகியவை ஏற்படும். தகுந்த சிகிச்சையின் காரணத்தாலோ அல்லது தேக வன்மையாலோ அந்த நோயணுக்களைப் போக்குவதற்காகவே புண்ணில் சீழ் பிடிக்கிறது. சீழ் என்பது நோய்க் கிருமிகளுக்கும் ஆகாது. சீழ் சிறிது சிறிதாக நோய்க் கிருமிகள் செத்து விடும். காயம் ஆற ஆற வீக்கம் வடிந்து புண் சிவப்பாக மாறி, இறந்து போன தசைகள் முதலியவைகளெல்லாம் அடியோடு வெளி வந்து பிறகு காயம் ஆறிவிடும்.

நோய்க் கிருமிகளால் தீண்டப்பட்டால் உடனே அவற்றை எதிர்த்து உடலைக் காப்பாற்றுவதற்காக ரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் அந்த இடத்திற்கு வந்து சேருகின்றன. இவையும் ரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களும் ஆகும். இவைகளுக்கும் நோய்க் கிருமிகளுக்கும் சண்டை நடந்து வெப்பக் கொதிப்பு உண்டாகி, வீக்கம் முதலிய அறிகுறிகள் காணப்படுகின்றன. வெள்ளை அணுக்களும் நோய்க் கிருமிகளும் நடந்த போரில் சிறு அணுக்கள் மாண்டு போகின்றன. நோய்க் கிருமிகள் உடலில் உண்டாக்கிய நச்சுப் பொருட்கள், மாண்ட நோய்க் கிருமிகள் முதலியவைகளோடு சேர்ந்து சீழாக மாறுகிறது. இந்தச் சீழ் உடலில் தங்கக் கூடாது. தங்கினால் பல வகைத் தொல்லைகள் உண்டாக்கும். புண்ணுக்குத் தக்கக் கொல்லிகள் மூலம் தினசரி சுத்தம் செய்து கட்டு கட்டினால் சிவப்பான புதிய தசை தோன்றிப் படிப்படியாக, புண் ஆறித் தழும்பாகும்.

அத்தியாயம் 8

168 கர்ப்பம் — பிரசவம் — சிசு வளர்ப்பு — சிசுசுத்தம்